

புது வரவு
என்.சீதாலெட்சுமி

# புது வரவு

Share your novels and comments @ http://www.tamilbooks.veeserve.com/mybb/

Click on the red rectangle around chapter number 1.

## 1

"சண்முக கந்தனும் மோகனக் கண்ணனும்
ஒரு முகமாய் தரும் அருள் ஒன்றே!
மோகனக் கண்ணனும் சண்முக கந்தனும்
ஒரு முகமாய் தரும் அருள் ஒன்றே!

சிவனார் கண் பொறியில் வந்துதித்த சரவணன்
சிக்கல் சிங்கார வேலனாம் ஆறுமுகன்
சிறைதனில் அவதரித்த ஸ்ரீ கிருஷ்ணன்
சின்னிக் கிருஷ்ணனாய் தோன்றும் குருவாயூரப்பன்"

"நித்யஸ்ரீ மகாதேவனின் கணீர் குரல் கணினி வழியாக கசிந்து வந்த அதே வேளையில் அனுஜா என்ற

கானக் குயிலும் நித்யஸ்ரீயைப் பின்பற்ற முயன்று தோற்றும் ஜெயித்தும் கொண்டிருந்தாள்.

''அஜு", கிளம்பு! லேப்டாப்பை மூடிவை. நேத்து வாங்கிட்டு வந்த ஜூஸ்பெர்ரி பாக்கெட் எடுத்து ஸ்நாக் பாக்ல வை. குட்டி ரூம் பால்கனி கதவை சாத்து. காஸ் ஆப் பண்ணு. துப்பட்டா எடுத்து போடு. எழுந்திரு அஜு"... சொல்லிட்டே இருக்கேன். இன்னும் லேப்டாப்ல என்ன பண்ணிட்டு இருக்கே!'' என அவளது கணவன் பிறப்பித்த ஏழு எட்டு ஆணைகளையும், ஏழு சுவரங் களின் சங்கமத்தில் தொலைத்த அனுஜா, ''பாவா, எவ்வளவு அழகா பாடியிருக்காங்க பாருங்களேன்! எனக்குப் பிடிச்ச முருகனையும், கிருஷ்ணனையும் ஒரே பாட்டில புகழ்ந்துட்டாங்க... வேற யாருமே இப்படி பாடினதில்லை தெரியுமா?'' என நூறாவது முறையாக, அந்த பாட்டின் பெருமையை கணவனுக்கு எடுத்துரைத் தாள்.

''சரி, சரி. இந்த பாட்டை கார்ல போகும்போது திரும்பவும் கேட்கலாம். ஆபீஸ்க்கு நேரம் ஆகிடுச்சு அஜு".... ப்ளீஸ்... எழுந்து வாடா'' எனக் கெஞ்சாத குறையாக அவள் கைப்பிடித்து எழுப்பினான் அவளது மணாளன், நிஷாந்த்.

''ம்ம். இதோ மு'டியப் போகுது. இன்னும் ஒரே நிமிஷம் தான்... முடிஞ்சதும் மூடிவச்சிட்டு ஓடி வந்துடுறேன். ப்ளீஸ் பாவா'' என்ற அனுஜாவை, நிஷாந்தின் பத்து வினாடி மௌனம் ஏதோ செய்துவிட, அவசர அவசரமாய் மடிகணினியை மூடிவைத்துவிட்டு, அவன் இட்ட கட்டளைகளுள் நிறைவேற்றப்படாமலிருந்த ரெண்டை மட்டும் செய்தவள் கணவனைத் தேடினாள்.



அவர்களது இரண்டு படுக்கையறை வீட்டிலிருக்கும் சின்னப் படுக்கையறையை ஒட்டியுள்ள சிறு முகப்பின் கதவை மூடிக்கொண்டிருந்த நிஷாந்தை நெருங்கியவள், அவன் பின்பக்கம் சென்று அவனை உரசியவாறே ''போகலாமா? நான் ரெடி!'' என்றாள் மெதுகுரலில்.

மாந்தளிர் வண்ணத்தில் மேலுடையும், அடர் குங்கும வண்ணத்தில் கீழ் சட்டையும், குங்கும வண்ணமும் - மாந்தளிர் நிறமும் சமபங்கில் கலந்த மெல்லிய மேல் துணியுமென எழில் பாவையாய் நின்றிருந்த அனுஜா வின் மேனியே இளந்தளிராய் தான் மிளிர்ந்து கொண் டிருந்தது.

மலரத்துடிக்கும் ஆப்பிள் மரத்தின் தளிர் போன்ற கண்கள், மொட்டாய் இருந்தாலும் நுனியில் சிவந்திருக் கும் தாமரை மொட்டு போன்ற சின்ன மூக்கு, மலர்ந்தும் மலராத ரோஜா மலர் போலிருந்த கன்னங்கள், முழுதாய் மலர்ந்து சுகமான சுவை தரும் மாதுளம் கனி போன்ற உதடுகள், மாதுளை முத்துக்களைத் தோற்கடிக்கும் வண்ணம் முத்து முத்தாய் பூத்திருந்த பச்சரிசி பற்கள் - என அவளது மேனியே பார்ப்பவருக்கு ஓர் சுகமான சுகம் தந்தது; கண்கொண்டு பார்ப்பவருக்கே குளுமையான அழகாய் காட்சிதரும் தேவதை - கட்டியவன் கண் ணுக்கு மின்ன மாட்டாளா? அதுவும் திருமணம் முடிந்து ஆறு மாதமே ஆனா இந்த நிலையில்!

அருகில் நின்றிருந்தவளின் அழகில் மயங்கியிருந் தவன், அவளது நெருக்கத்தில் கிறங்கி ''நான் ரெடி இல்லை'' என்ற முணுமுணுப்புடன் மனைவியை சிறை செய்தான் - கைகளுக்குள்.

''ம்ம். பாவா! என்ன இது? காலையில... அதுவும் ஆபீஸ் கிளம்பும் போது... இன்னைக்கு உங்க டி.எம் வராங்க இல்லை... ஏதோ ப்ரோபோசல் மீட்டிங் இருக் குன்னு சொன்னீங்களே.... வாங்க பாவா'' - சொல்ல வந்த விஷயத்திற்கு மாறாய் அனுஜாவின் குரல் குழைந்து குறைந்திருந்தது.

சரியாக பத்து நிமிஷத்தில் சுதாரித்து விலகிய நிஷாந்த், லேசாய் கசங்கியிருந்த சட்டையை அழுத்தி சரி செய்து கொண்டு, ''கொஞ்சம் தள்ளியே நடந்து வா'' என்ற சொல்லுக்கு மாறாய் மனைவியின் கையைப் பிடித்து அழுத்தியவாறே, அவர்களது வாகனம் நிற்கும் இடத்திற்குச் சென்றான், அவன். ஒரு கையில் மனைவி, மறு கையில் மடிகணினி என அவன் நடக்க; ஒரு கையில் கணவன், மறு கையில் கைப்பை மற்றும் நொறுக்குத் தீனி அடங்கிய சிறு பை சகிதம் அவனைப் பின் தொடர்ந்தாள் மனைவி.

தன் மனைவிக்கு இணையாய் மிளிர்ந்த நிஸ்ஸான் மைக்ராவை பெருமையுடன் பார்த்துவிட்டு, அதனுள் ஏறியவன் தன் கையிலிருந்து நழுவியிருந்த மனைவி இன்னமும் வண்டியினுள் ஏறவில்லை என்பதை உணர்ந்து, சுற்று முற்றும் பார்த்தான். 'ரேவேந்த்துடன் வம்பளந்து கொண்டிருக்கிறாளா?' என்று அவனது எண்ணத்தைப் பொய்யாக்காமல், அனுஜா அங்கே தான் நின்று கொண்டிருந்தாள்.

''யு... சீட்! இன்னைக்கு சாயங்காலம் கண்டிப்பா சொல்லணும். ரெண்டு நாளா என்னை ஏமாத்திட்டே இருக்கே... ஆபீஸ் போயிட்டு வந்து உன்னை வச்சுக் கிறேன். போடா'' என அவனிடம் சண்டையிட்டுக் கொண்டிருந்தவளை ''அனுஜா'' என்ற நிஷாந்தின் பொறுமையற்ற அழைப்பு வேகமாய் கலைக்க ''அச்சோ, நல்லா திட்டு வாங்கப் போறேன். உன்கிட்ட பேசறதை... அதுவும் வேலைக்குப் போற நேரத்தில உன்கிட்ட பேசுறதை பார்த்துட்டாங்களா... இன்னைக்கு ஒரே மண்டகப்படி தான்! நல்லா மாட்டிக்கிட்டேன். எல்லாம் உன்னால தான். இன்னைக்கு வேலை முடிஞ்சு வந்ததும் உன்னைப் பேசிக்கறேன்... நிஷாந்த் இன்னைக்கு லேட்டா தான் வருவாங்க... அதனால முன்னாடி வந்து உனக்கு டின் தான்'' என மற்றவனை மிரட்டியவாறே காரினுள் ஏறி அமர்ந்தாள் அனுஜா.



''எப்போ பார்த்தாலும் அவனோட என்ன வாய் அரட்டை?'' எனக் கடிந்த நிஷாந்த், அந்த கடுப்பிற்கு நேர்மாறாய் மிக மிக கவனத்துடனே வண்டியை, தங்கள் குடியிருப்பு வளாகத்திலிருந்து வெளியே எடுத்தான்.

''சும்மா தான். அவனைப் பார்த்தாலே வம்பு செய் யணும் போலிருக்கு'' என வெள்ளையாய் சிரித்த மனைவியின் சிரிப்பில் நிஷாந்தின் கவனம் காரிலிருந்து கைம்பாவைக்கு இடம் பெயர்ந்தது. ஒன்றும் சொல் லாமல், அவளது ஆரஞ்சு சுளை கன்னங்களை நிமிண்டி விட்டவன் ''பாப்பாடா அஜுகுட்டி.... நீ!'' என்றான் மெத்து மெத்தென இருந்த சுளைகளை மூடிக்கொள்ளும் முரடான தோலின் கதகதப்புடன்.

அவனது அந்த பாராட்டிற்கு ஒரு வெட்கச் சிரிப்பைப் பரிசாக கொடுத்தவளின் கைகள், ஒலியுணர் சாதனத் தினுள் நித்யஸ்ரீ மகாதேவனின் இசைத்திரட்டைப் பொருத்தின. மீண்டும் ஒரு முறை அவரது கணீர் குரலில் கார்த்திகையை மாதமாய் கொண்ட

மகேசப்புதல்வனும், மார்கழியை மாதமாய் கொண்டு எழுந்தருளும் மகேசனின் மைத்துனனும் வஞ்சனையில்லாமல் துதிக்கப்பட்டதை நெஞ்சுருக கேட்டுவிட்டு, அடுத்ததாய் அவள் போட்ட பாட்டு - ''கரிகாலன் காலைப் போல கருத்திருக்குது குழலு''!!

அவளது மாறுபட்ட ரசனைகளை எண்ணி வியந்து கொண்டிருந்த நிஷாந்த், அதை வாய் விட்டும் கேட்டான் ''கண்ணனும் கந்தனும்ன்னு ஒரு நிமிஷம் உருகோ உருகுன்னு உருகித் தள்றே. ஆனா மறு நிமிஷமே பாஸ்ட் பீட்ல ஒரு டூயட் பாட்டு... என்னதான் இருக்கும் உன் மனசுக்குள்ள?'' என அவன் வியக்க,

''அப்பாவைப் பிடிக்கும் என்பதற்காக உங்களைப் பிடிக்கலைன்னு இல்லையே! எனக்கு ரெண்டு பேரையும் ரொம்ப ரொம்ப பிடிக்கும். அது மாதிரி தான், இதுவும்!'' என சிரித்துக் கொண்டே ஓர் பெரிய விஷயத்தை மொழிந்தாள் அந்த புது மனைவி. ஆனால் தான் சொன்னதைப் பெரிய விஷயமென அவள் எண்ணியிருக்கவே மாட்டாள் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. அவன் கேட்ட கேள்விக்கு ஓர் பதில் - உதாரணத்துடன் கூடிய பதில், அவ்வளவே! அதற்காக எதிரே இருப்போர் மனதைப் புண்படுத்தும் வண்ணம் ஓர் வார்த்தை கூட வாயில் வராது. என்ன தான் அவர்கள் தன்னை புண்படுத்தியிருந்தாலும், அவர்களின் வார்த்தைகளுக்கு இவளே ஓர் காரணம் தேடி, அவர்களை நியாயப்படுத்தி விடுவாள். புரிதல் குணம் மிக அதிகமாய் வைக்கப்பட்டு விட்டதோ என்று நிஷாந்தை சில சமயம் வியக்கவும், பல சமயம் வருந்தவும் வைத்திருக்கிறாள், அவனின் காதல் மனைவி!



நகரத்தைத் தாண்டி நாற்பது கிலோமீட்டர் தொலைவிலிருக்கும் அவர்களது அலுவலகத்தை நோக்கி வண்டியைச் செலுத்திக் கொண்டிருந்த நிஷாந்த், சுங்க சாலையைக் கடக்கும் வரை தன் கவனத்தை அங்கே இங்கே திருப்பவில்லை. சுங்க சாலையில் பயணம் செய்வதற்கான கட்டணத்தைச் செலுத்தியபின்னரும், ஓர் பத்து நிமிட இடைவேளையின் பின்னரே மனைவியின் புறம் அவன் கவனம் திரும்ப, எப்போதும் போல் அவனது எதிர்பார்ப்பை வீணாக்காமல் அனுஜா தூங்கிப் போயிருந்தாள்.

ஆனால், எப்போதும் செய்வது போல் அவள் கூந்தலை வருடிக் கொடுத்து அவளது தூக்கத்தை ஆதரிக்காமல் லேசாய் விளையாடிப் பார்க்கத் தோன்றவே, அனுஜாவின் மெல்லிடையில் கைவைத்து அவளுக்குக் குறுகுறுப்பு மூட்டினான். ''என்ன பாவா...'' என்ற சிணுங்கலுடன் அவன் மனைவியும் விழித்துக்கொண்டாள்.

''என்ன தூக்கம்?'' என அவளின் கன்னங்களைக் கிள்ளி தூக்கத்தை முழுதாய் விரட்டியவன் ''நைட் ரெண்டு மணி வரைக்கும் டபுள் ஷிப்ட் பார்த்திட்டு நானே பிரிஸ்க்கா இருக்கேன். உனக்கென்ன தூக்கம்? எழுந்திரு!'' என்றான் கண்களைச் சிமிட்டியவாறே. ''நீங்க மட்டும் தனியா பார்த்தமாதிரி பில்ட் அப் தாங்கலைடா சாமி'' என அவளும் அதே கண் சிமிட்டலுடன்.

''உன்னை 'பாப்பா' ன்னு கூப்பிட்டதை இப்போ வாபஸ் வாங்கிக்கிறேன். போடி!'' என்ற கணவனின் சிரிப்பில், ''இப்போ எதுக்கு எழுப்பினீங்க? எனக்குத் தூக்கம் தூக்கமா வருதே!'' என அவள் சிணுங்க, அவன்

தான் நொறுங்கிப்போனான் - சில் சில்லாய்! காதலெனும் கண்ணாடியில் மனைவியின் சிரிப்பு எனும் தூண்டில் பலமாய் விழும் போது நொறுங்கத்தானே செய்வான்!

''நான் மட்டும் தூக்கம் முழிச்சு கார் ஓட்டிட்டு வரணுமா? நீ ஜாலியா தூங்குவியா? வா.... வந்து கார் ஓட்டு'' என்ற நிஷாந்த், வாகனத்தின் வேகத்தைக் குறைத்து, இடது புறமாய் ஒதுக்கினான். அதற்குப் பதிலாய் ''அச்சச்சோ. நான் மாட்டேன்பா. ரோடுல எவ்வளவு காரு.... எம்மாம் பெரிய லாரி... பஸ் எல்லாம் கூட போகுது... அதுவும் சர் சர்ருன்னு... ஹய்யோ நான் மாட்டேன்பா'' என்றுரைத்த அனுஜாவின் குரலில் மருந்திற்கும் விளையாட்டில்லை, வண்டிக் கணக்காய் பயமே பொழிந்து கொண்டிருந்தது.

''ரோடுல கார், பஸ் எல்லாம் போகாம... நண்டும் நரியுமா போகும்? வண்டி ஓட்றவன் எல்லாம் மனுஷனில்லையா என்ன? அடி பிச்சிடுவேன் ராஸ்கல்! மரியாதையா காரை எடு'' என்ற அதட்டலுடன் ஓட்டுனர் இருக்கையிலிருந்து இறங்கினான்.

''ம்ம். ப்ளீஸ் நிஷு! எனக்கு ரொம்ப ரொம்ப பயமா இருக்கு. ஆபீஸ் போனதும்... அங்க வேணும்னா ரயில்வே ஸ்டேஷன் போற ரோடுல ஓட்டுறேன். ப்ளீஸ் பாவா! என் செல்ல நிஷு தானே!' எனக்கு நிஜமாவே ரொம்ப பயம்'' எனக் கண்ணை விரித்து அவனிடம் மன்றாடியவளின் கண்களில் நிஜமாகவே பயம் இருந்தது. அதற்கு அறிகுறியாய் கண்களும் லேசாய் கலங்கிவிட்டன. அரண்டு மிரண்டு போயிருந்ததற்கு



மூல காரணம் - வண்டி ஓட்டுவதற்குப் பயந்து மட்டுமல்ல, நிஷாந்த் ஒன்றை நினைத்து விட்டால் அதை சாதிக்காமல் விடமாட்டான் என்பதால் தான் அந்த கண்ணீர்.

''பயம்..... பயம்ன்னு ஓட்டாமலே இருந்தா எப்போ தான் இந்த பயம் போறது? ஒழுங்கு மரியாதையா வண்டியை எடு. ம்ம் நகர்ந்து உட்கார்'' என ஆணை பிறப்பித்தான் கணவன். அவனது ஆணைக்கு இசையாமல், அமர்ந்திருந்த இருக்கையை அழுத்திப் பிடித்துக் கொண்டு ''ம்ஹூம்ம் மாட்டேன்'' என அங்கேயே அமர்ந்திருந்தாள் மனைவி.

''இன்னைக்கு நீ தான் வண்டியை எடுக்கற. நீயா எடுக்கிறவரைக்கும் நாம இங்க தான் இருக்கப்போறோம்'' என்ற நிஷாந்த், வாகனத்தின் பின் கதவைத் திறந்து, பின் இருக்கையில் அமர்ந்து விட்டான்.

''ஹய்யோ என்ன பாவா... ஆபீஸ் லேட் ஆகுது பாருங்க... வண்டியை எடுங்களேன்! எல்லாரும் நம்மளையே பார்க்கிறாங்க. என் சொல்ல நிஷு தானே! வாங்க போகலாம்.... உங்களுக்கு டி.எம் கூட மீட்டிங் இருக்கில்ல.... அதுக்கு சீக்கிரம் போய் தயார் பண்ண வேண்டாமா?

''நீங்க வேலை விஷயமா வெளிநாடு போகும் போது, நானே தனியா கார் எடுத்துப் பழகணும்ன்னு நீங்க நினைக்கிறது எனக்குப் புரியுது. சீக்கிரமே கத்துக்கிறேன்... ஆனா, இப்போ வேண்டாமே!

''உங்களுக்கு இந்த காரை எவ்வளவு பிடிக்கும்... அதை கொண்டு போய் நான் எங்கேயாவது முட்டிட்டா? உங்களுக்கு எவ்வளவு வருத்தமா இருக்கும்... வேணாம்

பாவா!'' - இப்படியாக அவனைக் கரைக்கவென அனுஜா பேசிக்கொண்டே செல்ல, நிஷாந்த் எதற்குமே பதில் பேசவில்லை.

ஆனால், ''எனக்கு நிஜமாலுமே பயம் தான். நான் பொய் சொல்லலை. ஆளில்லாத இடத்தில ஓட்டிப் பார்த்திட்டு அப்புறம் எடுக்கலாமா? ஒரு பத்து நாள் ஓட்டலாம்..... அப்புறம் நானே ஓட்டுறேன் பாருங் களேன். இன்னைக்கு மட்டும் விட்டுடுங்க பாவா'' என்ற அனுஜாவின் கொஞ்சலுக்கு ''போன ரெண்டு வாரமா நாம என்ன பண்ணிட்டு இருந்தோம்னு நினைச்சே? கார் தானே ஓட்டிப் பழகினோம்? இல்லை ஏரோ பிளேனா?'' என்றான் நிஷாந்த் கோபமாக,

''அது... அது... இன்னொரு பத்து நாள்.... ம்ம் இல்ல... அஞ்சே நாள்.... மூணு நாள்.... ம்ம்... இரண்டு... சரி... அட்லீஸ்ட் ஒரு நாள்.... ப்ளீஸ்ஸ்ஸ்'' என்ற அளவிற்கு இறங்கி வந்தவள்,

''பாவா, ஓட்டத் தெரியாம ஓட்டி நான் பாட்டுக்கு எங்கேயாவது முட்டிட்டா.... ஐயோ! உங்களுக்கு வேற நான் ஒரே பொண்டாட்டி! உபரியா வேறாள் கூட இல்ல... பாவம் தானே பாவா நீங்க? நாம வேற ஒருத்த வங்களை தயார் பண்ணிட்டு கார் ஓட்டலாம். என்ன நான் சொல்றது?'' எனக் கலங்கியிருந்த கண்களையும் மீறி குறும்பில் அவனை வீழ்த்தியவளின் காதுகளை மிதமாய் முறுக்கியவன் ''உனக்கெல்லாம் யாருடி லைசென்ஸ் கொடுத்தாங்க? பணம் கொடுத்து வாங் கிட்டீங்களோ? இல்ல பிரேக் இன்ஸ்பெக்டர் உனக்கு உறவா?'' என்றான் சிரிப்புடன்.



''ஹையா எப்படி கண்டு பிடிச்சீங்க?'' என அவள் துள்ள, ''பணம் கொடுத்தீங்களா?'' என்றான் நிஷாந்த் ஒரு மாதிரி குரலில். ஆனால் அவனின் குரலைக் கவ னிக்காத அனுஜாவோ ''பிரேக் இன்ஸ்பெக்டர் இருக்கார் இல்ல.... அவர் எங்க சித்தப்பாவோட மச்சினனோட சகலையோட தம்பி. ரோடு டெஸ்ட்டுக்கு சின்ன அண் ணன் தான் கூட்டிப் போச்சா.... கூடவே அப்பா பேரைச் சொன்னதும்... உடனே லைசென்ஸ் கொடுத்துட்டாங்க. ஒரே ஒரு வாட்டி, வண்டியை நேர் கோட்டில ஓட்டிக் காட்டினேன்.

அவ்வளவு தான்! யாரும் கூட இல்லாம வண்டியை எடுக்கக் கூடாதுன்னு சொல்லி லைசென்ஸ் கொடுத் துட்டார் அந்த மாமா. அச்சோ பேரை மறந்து போயிட் டேனே... ஹ்ம்ம் ஜானகிராமனோ... வெங்கட்ராமனோ... ஏதோ ஒண்ணு! காலேஜ் செகண்ட் இயர்லேயே வாங்கிட்டேனாக்கும்'' என நில்லாமல் பெருமை பேசினாள்.

''வாங்கின லைசென்ஸை ஆயுத பூஜை நேரத்தில பூஜை பண்றதுக்கும், ட்ரெயின்-ல ஈ-டிக்கெட் செக் பண்ணும் போது கொடுக்கிறதுக்கு மட்டும் உபயோகப் படுத்து. அசந்து மறந்து காரை மட்டும் எடுத்து ஓட்டி டாதே!'' என அவளைத் திட்டியபோதும், வண்டியை அலுவலகம் நோக்கிச் செலுத்தினான்.

''இப்போ நான் ஈ-டிக்கெட் செக் பண்றதுக்கு கூட உபயோகப்படுத்துறது இல்லை. அதான் நீங்க வரீங்களே!'' எனச் சிரித்தவள், தனக்குப் பிடித்த பாட்டு ஒன்றை ஓடவிட்டுவிட்டு, மீண்டும் உறங்கிப் போனாள்.

அலுவலக வளாகம் வந்தது கூட தெரியாமல் உறங்கும் மனைவியின் புறம் திரும்பியவனின் முகம் கனிந்தது. எத்தனை உறவுகள்! எவ்வளவு அன்பு! காட்டாற்று வெள்ளம் போல் பொங்கிப் பெருகிய பாசம்! - எல்லாவற்றையும் விட்டுவிட்டு.... ச்சே தேவையில்லாமல் அவளிடம் கடுமை காட்டி விட்டோமோ? எனத் தன் மீதே கோபம் கொண்டு, அந்த கோபத்தின் விளைவாய் கைகளுக்குள் மென்மையைப் பொருத்தி, மனைவியை எழுப்பினான்.

அவள் எழுந்ததும், இருவருமாக அலுவலக வளாகத்தினுள் இருக்கும் உணவு விடுதிக்குள் புகுந்தனர். தனக்குப் பிடித்தமான ''இடியாப்பம் - ஸ்டு'' வையே அனுஜா இங்கும் அங்கும் குதறி வைத்து விட்டு, நிஷாந்திடமிருந்து வசவு விழுமே என முழித்துக் கொண்டிருக்க, நிஷாந்தோ தன் உணவை முடித்து அதன் தொடர்ச்சியாய் ஓர் ஹார்லிக்ஸையும் அருந்தி முடித்திருந்தான்.

கார் ஒட்டாததற்கே கோபப்பட்டவன், உணவை வீணாக்கினால் பெரும் கோபம் கொள்வான் என்பது அவளுக்குத் தெரியும். வேண்டும் என்கிற அளவு உணவைத் தான் வாங்க வேண்டும், வாங்கித் தட்டில் வைத்ததை எந்த ஒரு காரணம் கொண்டு வீணாக்கக் கூடாது என்பது அவனின் மீறப்படாத கொள்கைகளுள் ஒன்று. அதை அவனும் சரி, அவனுக்கு நெருக்கமானவர்களும் கடைபிடிக்க வேண்டும் என்பதை அவன் எதிர்பார்ப்பது அவள் அறிந்ததே என்றாலும் - மீதமிருந்த ஒரு இடியாப்பத்தின் சிக்கல்களை ஆராய்ந்து கொண்டே அமர்ந்திருந்தாள். அவள் முன்னே மாதுளைச் சாறு நிரம்பிய கண்ணாடி குவளையை வைத்த நிஷாந்த்,



''ம்ம். என்ன ஆராய்ச்சி? சீக்கிரம் சாப்பிட்டு முடி. ஆன்சைட் காலுக்கு நேரம் ஆகலையா?'' என அவளை விரட்டினான்.

''உங்களுக்குக் கூட ஆன்சைட் இருக்கா பாவா?'' என அவள் வியக்க, ''உனக்கு சொன்னேன் - டி'' என்றான் அவன் சிரிப்புடன். ''ம்ம், ஆமா! கிரண் சீக்கிரமே தூங்கிப் போய்டுறார். போய் கால் பண்ணணும்'' என்ற அனுஜா, வேறு வழியின்றி உணவை மிச்சம் வைக்காமல் விழுங்கி விட்டு எழுந்து கொண்டாள்.

''லஞ்ச் போகும் போது பின்ங்க் பண்ணட்டா.... பாவா? இன்னைக்கு வேற யாரு கூடவும் சாப்பிடப் போறீங்களா?'' என்றவளிடம், ''தெரியலைடா அஜு". ஒரு பன்னிரெண்டரை மணிக்கா சொல்றேன்'' என்றவன் மனைவியிடம் விடை பெற்று, ஐந்து கட்டிடங்கள் கொண்ட அந்த அலுவலகத்தில் தன் வேலையிடம் அமைந்திருக்கும் மூன்றாம் கட்டிடத்தின் புறம் திரும்பினான். அவன் கொடுக்கப் போகும் பறையேற்றத்திற்கு பிரசன்டேஷனுக்கு வாழ்த்துக் கூறி விடைபெற்ற அனுஜாவும், தன் வேலையிடம் அமைத்திருக்கும் ஐந்தாம் கட்டிடத்தின் புறம் நடையை கட்டினாள்.

அவரவர் வேலையிடத்தை அவர்கள் அடையும் முன்னர் அவர்களின் வேலை பற்றி தெரிந்து கொண்டு விடுவோம் - ஓர் புகழ்பெற்ற மென்பொருள் நிறுவனத்தில் வேலை செய்யும் இருவருள் கணவன் விற்றுமுதல் சேல்ஸ் பிரிவிலும், மனைவி மென்பொருள் சோதனையிடும் பிரிவிலும் உள்ளனர். அவரவர் வேலை இடத்தை வைத்தே அவர்களின் வேலைச்சுமையை கணித்துவிட முடியும் என்றாலும், நிஷாந்தின் வேலை அவனது

கவனத்தையும் நேரத்தையும் மிக மிக அதிகமாய் எடுத்துக்கொள்ளும். அதற்கு நேர் மாறாய் - அனுஜாவின் வேலையோ ஒன்பது முதல் ஐந்து வரை என்ற அக்மார்க் அலுவலக வேலை. அதையே இருவரும் விரும்பியதாலும், இருவருக்கும் வேலை ஓர் சுமையாய் இருக்கவில்லை - இன்றுவரை!

வேலையை சுமையாய் இல்லாமல் சுவையாய் அனுபவித்தே செய்த இருவரும் தத்தம் வேலையில் மூழ்கிவிட, சரியாக பன்னிரெண்டு மணி முப்பது நிமிடங்களுக்கு, நிஷாந்தின் மடிகணினிக்கு உள் அலுவலக இணைய தொடர் மின் அரட்டையின் (Office Communicator) வாயிலாக ''பாவா'' என்ற அழைப்பை அனுப்பினாள் அனுஜா.

அனுஜா சரவணப்பாண்டியன் பெயரில் வந்த மின் அரட்டை சாளரத்தில் ''அஜு, எனக்கு வேலையிருக்கு. கொஞ்ச நேரம் கொடு'' என அடித்தவனின் கவனத்தை மீண்டும் முப்பது நிமிடத்தில் களைத்தாள் அவனின் மனைவி. அவளது ''நிஷாந்த்'' என்ற அழைப்பிற்குப் பதிலாய், ''இன்னொரு பத்து நிமிஷம் ப்ளீஸ்'' என்றான் அவன். அவன் கேட்ட பத்து நிமிடத்திற்கும் மேலாய் மற்றொரு பத்து நிமிடங்களைக் கொடுத்தவள், அவனின் வேலையில் இடைவெட்ட, நிஷாந்த் தரணிதரனின் மடிகணினியிலிருந்து ''நீ லஞ்ச்சுக்குப் போ. நான் கணா (கணபதியின் சுருக்கம்) கூட போறேன்'' என்ற பதில் பிறந்தது.

''ஹோ ஒகே. ஒண்ணு ஒண்ணு கேட்டுட்டு போய்டுறேன்'' என அனுமதி கேட்ட நிஷாந்திடம் அனுஜா கேட்டது ''இன்னைக்கு நான் சிக்கன் பிரியாணி



சாப்பிடவா? ப்ளீஸ்'' என்றது தான். அதில் சிரித்த நிஷாந்தின் மனம் உருகவும் செய்தது ''உனக்குப் பிடிச்சதை சாப்பிடு. ஆனா, வீணாக்காம சாப்பிடு'' என்றதோடு அனுமதி கொடுத்தான். ''தேங்க்ஸ் பாவா'' என அடித்தவள், மீண்டும் அவனைத் தொந்தரவு செய்தது மாலை ஐந்து மணியளவில் தான்.

''நான் கிளம்ப ஏழு மணி ஆகும், அஜு! நீ ஆபீஸ் பஸ்ல போ'' என்றவனிடம் ''நான் வேணும்னா வெயிட் பண்ணட்டா?'' என்று மட்டும் கேட்டவளிடம் அவன் மறுத்துவிட, அலுவலகப் பேருந்தில் கிளம்பி வீடு வந்து சேர்ந்தாள், அனுஜா.

மனைவியை சீக்கிரமே அனுப்பிவிட்டு எட்டரை மணியளவில் வீடு வந்த சேர்ந்த நிஷாந்தை, அழுது சிவந்த கண்களுடன் அவள் வரவேற்க, தான் இல்லாத இரண்டு மணி நேரத்தில் என்ன நடந்திருக்கும் என்பதை ஊகித்தவன், மனைவியை ஆரத்தழுவிக்கொண்டான்.

## 2

கண்களில் கண்ணீர் ஓடிய அறிகுறியுடன் அவனை எதிர்கொண்ட மனைவியின் முகம் நிமிர்த்திப் பார்த்த நிஷாந்த், அவளை நெஞ்சோடு அணைத்தவாறே வீட்டினுள் நுழைந்து, நடுநாயகமாய் வீற்றிருந்த மெது நாற்காலியில் அமர்ந்து, முதுகை வருடிக் கொடுத்தான்.

''யாருக்கு போன் பண்ணினே?'' என அவன் கேட்க, ''சின்ன அண்ணனுக்கு'' என்ற அனுஜாவின் குரலில் தேம்பல் குடிவந்தது. ''அவருக்குத் தான் அதிகமா கோபம் வருமில்ல. அப்புறம் எதுக்குடா? கொஞ்சம் பொறுக்கக்கூடாதா? ரொம்ப திட்டிட்டாரா குட்டி?'' என்று உருகிய நிஷாந்தின் கைகள் மனைவியைத் தன்னுடன் இறுக்கிக்கொண்டன.

''திட்டினா கூட பரவாயில்லை. பேசவே இல்லை. போனை கட் பண்ணிட்டே இருந்தாங்க'' என அனுஜா மொழிந்தபோது, ஒரொரு அழைப்பை மைத்துனன் எடுக்காத போதும் மனைவி இங்கே எப்படி வருந்தியிருப்பாள் என்பது நிஷாந்திற்குப் புரிந்தது. இவ்வளவு வேதனையும் தான் அவளுடன் வீட்டிற்கு வந்திருந்தால் நிகழ்ந்தே இருக்காதே.... வேலை இருக்கும் பட்சத்தில் அவளை அலுவலகத்திலேயே காத்திருக்கச் சொல்லியிருக்கலாமோ எனவும் தோன்றி அவனையும் வருந்த வைத்தது.

தானும் கூட சேர்ந்து வருந்தினால், தன் அருமை மனைவி இன்னமும் நோவாளே என்ற எண்ணத்தில் தன் வருத்தத்திலிருந்து மீண்டும் வந்த நிஷாந்த், ''அழக்கூடாது அஜு! நீ அழறதால உங்க சின்ன அண்ணன் போனை எடுக்கப்போறாரா என்ன? அப்படியேதும் நடக்க வாய்ப்பிருக்குன்னா நானும் உன் கூட அழட்டுமா? அழுகை எதுக்குமே தீர்வு கிடையாது கண்ணம்மா. என் செல்ல அஜு தானே! கண்ணைத் துடை'' என்றான் அன்பும் கண்டிப்புமாக.

''ம்ம். நான் போன் பண்ணப் பண்ண கட் பண்ணிட்டே இருந்தாங்களா... அப்புறம் கடைசியா போனை



எடுத்து ''மண்டையில புத்தி கித்தி ஏதாவது இருக்கா... இல்லை வெறும் களிமண்ணு தானா? பேசப்பிடிக்காம தானே போனை எடுக்காம இருக்கோம். அப்புறம் என்ன நொட்டு.... நொட்டுன்னுட்டு'' அப்படின்னு பயங்கரமா திட்டிட்டாங்க பாவா. இது நாள் வரைக்கும், அண்ணன் என்னை வஞ்சதே இல்லை தெரியுமா? இன்னைக்கு கண்டமேனிக்கு பேசிட்டாங்க'' என்ற அனுஜாவின் குரலில் வருத்தம் இருந்த போதும், கணவனின் சொல்படி கண்ணீர் நின்றிருந்தது.

''ஹே, இப்போ தானே உங்க அண்ணன் பேசவே இல்லைன்னு சொன்னே? ஆனா, எத்தனை வார்த்தை பேசியிருக்காங்க பாரு.... இதே ஒரு நல்ல சகுனம் தான்டா. எல்லாம் சீக்கிரமே சரியாகிடும்'' என்ற நிஷாந்தின் வார்த்தைகளில் உற்சாகம் குடிவந்தது போல் தோன்றினாலும், மனம் முழுதும் ''சரியாகிவிட வேண்டும், கடவுளே!'' என்ற வேண்டுதல் மட்டுமே நிரம்பியிருந்தது.

அவனின் வார்த்தைகளை நம்பி ''பேசிடுவாங்களா பாவா?'' எனக் கண்களில் ஏக்கத்துடன் கேட்ட மனைவியின் முகத்தை அழுந்த துடைத்து, ''கண்டிப்பா! என் அஜுகிட்ட பேசாம யாராலாவது இருக்க முடியுமா?!'' என்ற கேள்வியிலேயே அவளைத் தேற்றி, தெளிய வைத்தான்.

மனைவி சற்றே தெளிந்துவிட்டாள் என்பது புரிந்தவுடன், ''அஜுக்கு டீ வேணுமா? பாவா போட்டுத் தரவா?'' என்றவாறே எழுந்தான் கணவன். ''ம்ம். சரி'' என்ற ஆமோதிப்புடன் அவனை ஒட்டி நடந்த அனுஜா,

அவன் தேநீர் போட்டு முடிக்கும் வரை, அவனை விட்டு இங்கே அங்கே நகரவில்லை. அவளது மனநிலை உணர்ந்தவனாய், நிஷாந்தும் விலக்கவில்லை. ஒருவழியாக, தேநீர் அருந்திமுடித்தபோது அனுஜா இயல்பு நிலைக்கு வந்திருந்தாள் என்பது ''நிஷு, நைட்டுக்கு தேங்காய் சட்னியும், தோசையும் செய்யலாமா? வரும் போதே தோசை மாவு வாங்கிட்டு வந்துட்டேன்...'' என்ற உற்சாகக் கேள்வியில் புரிந்தது.

''தோசையா? நேத்து மாதிரி சப்பாத்தி செய்யலாமாடா'' என நிஷாந்த் கண் சிமிட்ட, ''ம்ம். போங்க.... நீங்க என்னை கேலி செய்றீங்க'' என முகத்தைத் திருப்பிக் கொண்டது அந்த உற்சாகப்பந்து. ''அச்சோ, என் அஜுவை கேலி செய்வேனா? நேத்து நாம ரெண்டு பேரும் என்ன அழகா சப்பாத்தி சாப்பிட்டோம்... அப்படியொரு ஆசையில கேட்டா.... கோபப்படுறியே'' என்ற கணவனோ, அவளது இடுப்பில் குறுகுறுப்பு மூட்டி, அவளது கவனத்தைத் தன் புறம் திருப்பினான்.

கல்யாணமாகி இந்த ஆறு மாதங்களில், இரவு உணவை மட்டுமே தம்பதியர் இருவரும் வீட்டில் உண்டு வந்தனர் எனலாம். அப்படி உண்ணும் உணவைக் கூட, நிஷாந்த் வந்து தான் திட்டம் செய்ய வேண்டும். அனுஜா வெறும் எடுபிடி தான். சப்பாத்தி என்றால் - நிஷாந்த் தான் மாவு பிசைந்து வைப்பான் - உருட்டுவதும் இடுவதும் மட்டுமே அனுஜாவின் வேலை - அடுப்பில் போட்டு எடுப்பது கூட நிஷாந்த் தான். தோசை எனும் பட்சத்தில், தோசை மாவை வெளியே வாங்கிவந்து தோசை ஊற்றிக்கொள்வார்கள். அதிலும் தொட்டுக்கொள்வதற்கு சட்னியோ, சாம்பாரோ



நிஷாந்தின் கைவண்ணத்தில் தான் தயாராகும். ஒரோர் நாளும் அவன் செய்வதை கர்மசிரத்தையுடன் குறித்துக் கொள்ளும் அனுஜா. அடுத்த நாளே அதை செய்தால் கூட அதில் அவளுக்கு ஆயிரத்திற்கும் மேல் சந்தேகங்கள் ஆறாய் ஓடிவந்துவிடும். அதனாலேயே, நிஷாந்த் அவளை சமைக்க அனுமதிப்பதில்லை. அவனுக்கும் முடியாத பட்சத்தில், பக்கத்தில் இருக்கும் மெஸ் அவர்களுக்கு உணவு வழங்கும் அன்னப்பாத்திரம் ஆனது!

ஆனால், இவையெல்லாம் (அதாவது நிஷாந்த் சமைப்பதும், உணவகத்திலிருந்து வாங்கி உண்பதும்) அனுஜா என்ற குடும்பத்தலைவிக்கு ஓர் இழுக்கை ஏற்படுத்திவிட, நேற்று அவளாகவே மாவு பிசைந்து, சப்பாத்தி இட்டது தான் அங்கே வில்லங்கத்தை ஏற்படுத்திவிட்டது.

நேற்றும் வேலை நிமித்தமாக தாமதமாய் (இன்றளவு இல்லாவிட்டாலும் ஓர் ஒரு மணிநேரத்தாமதம்) வந்த போது, ''பாவா, நானே மாவு பிணைந்து... நானே சப்பாத்தி இட்டு.... நானே கல்லில் போட்டு எடுத்துட்டேனே! சூப்பர் ஸாப்ட்டா இருக்கே.... வாங்க வாங்க சாப்பிடலாம்'' என அவன் கைப்பிடித்து அழைத்துச் சென்றவளின் உற்சாகத்தைக் கட்டுக்குள் கொண்டு வந்து, ''ஆஹா அஜுவே இத்தனை வேலை செஞ்சுட்டாளா? சூப்பர்! அதுக்கு ஒரு சின்னப் பாராட்டு'' என்ற நிஷாந்த் தன் ''பாராட்டை'' நிறைவு செய்ய ஒரு மணி நேரமாகிப் போனது.

''ம்ம். போங்க பாவா. எனக்கு இப்போ பயங்கரமா பசிக்குது. ஆனா குளிக்கணும்'' எனச் சின்னப்பிள்ளையாய் காலை உதைத்துக் கொண்டு குளியலறை புகுந்த

அனுஜா, வெளியே வந்தபோது நிஷாந்தும் புது உடையில் மனைவியின் கைமணத்தை ருசிக்க வெகு ஆவலாய் உணவுமேசையின் முன்னே அமர்ந்திருந் தான்.

அவனின் உற்சாகம் அவளையும் தொற்றிக்கொள்ள, ஆசை ஆசையாய் கணவனுக்குப் பரிமாறியவள், தனக்கும் எடுத்துக்கொண்டு அவன் அருகே அமர, ஒரு சப்பாத்தியை பிய்த்தது தான் தாமதம் - எங்கே பிய்ப்பது - உடைக்கத்தான் வேண்டியிருந்தது. அப்போது அனுஜா முழித்த முழியை நிஷாந்த் இந்த நிமிடம் வரை மறக்கவில்லை. அதிலும் ''போடும் போது அழகா பிய்க்க வந்தது பாவா! பாருங்களேன்... எத்தனை சப்பாத்தியை பிச்சுப் பார்த்தேன் தெரியுமா?'' என அவள் பரிதாபமாய் விளக்கம் கொடுத்தபோது, ''பரவாயில்லைடா அஜு சூடான பாலை ஊத்தி ஊறவச்சு சாப்பிடலாம்.... ஸாப்ட் ஆகிடும்'' எனக்கூறி, சப்பாத்தியை கூழ் போலாக்கி, மனைவிக்கும் கொடுத்து தானும் உண்டு முடித்தான்.

இன்றும் சப்பாத்தி கூழ் உண்பதற்கு அவன் காத் திருக்க, மனைவியோ முன் ஜாக்கிரதையாக தோசை மாவு வாங்கி வந்து, அதிலும் தேங்காய் சட்னி அரைக்க கணவனைத் தேடிக் கொண்டிருந்தாள் எனவும் சற்று முன்னர் அவள் சோர்ந்திருந்ததை சரிகட்ட இது தான் தருணம் என்றெண்ணிய நிஷாந்த், நேற்று அவள் செய்த சப்பாத்தியை 'புகழோ புகழ்' எனப் புகழ்ந்து தள்ள, அங்கே கேலியும் கிண்டலும், சீண்டலும் சிணுங் கலும், உற்சாகமும் உணவும், காதலும் தேடலும் என சந்தோஷமே ஜோடி போட்டு நிறைந்திருந்தது.



இன்றும் அதே உற்சாகத்துடன், ஆனால் நன்றாக வார்க்கப்பட்ட தோசையுடன் உணவை முடித்தவர்கள் நிம்மதியாய் உறங்கியும் போயினர். அந்த வாரம் முழுதும் புதிதாய் வேறெந்த சறுக்கலோ முன்னேற்றமோ இல்லாமல் தெளிந்த நீரோடையாய் வாழ்க்கை செல்ல, அனுஜா அவளது குடும்பத்தினர் ஒவ்வொருவரின் எண்ணிற்கும் தினம் தினம் முயன்று, அவர்கள் நிரா கரிக்கையில் லேசாய் சோர்வதும் மாறாமல் நடந்து கொண்டிருந்தது. முக்கியமாக, அனுஜா - அந்த வாரம் முழுதும் தான் கார் ஓட்டாமலிருக்குமாறு பார்த்துக் கொண்டாள் என்பது குறிப்பிட வேண்டிய விஷயம்.

அடுத்த வாரத்தின் முதல் நாட்களில் நிஷாந்திற்கு முக்கியமான வாடிக்கையாளர் சந்திப்பு ஒன்று நடந்தேற, அவனது மூன்று வேளை உணவும் வெளியிடத்தில் என்றே ஆனது. வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கு இந்திய உணவு பற்றி பறைசாற்றுவதற்கென பெரிய பெரிய உணவகங்களுக்கு அவர்களை அழைத்துச் செல்லுமாறு, அலுவலக நிர்வாகம் கூறியிருக்க, நிஷாந் தும் அதன் படி கேட்டதில் வாடிக்கையாள பெருந் தகைகள் மகிழ்ந்தது ஒரு புறமிருக்க, இரண்டாம் நாள் மாலை வீடு திரும்பிய நிஷாந்த் அன்று முழுதும் உண்ட உணவு முழுதையும் ஒரே தவணையில் வாந்தி செய் தான்.

அன்றிரவு உணவிற்கு அவன் வரமாட்டான் என்ப தால், அலுவலகத்திலிருந்தே பரோட்டா - குருமா பார்சல் வாங்கிவந்திருந்த அனுஜா, அவன் வருவதற்கு முன்னரே அதை உண்டும் முடித்திருந்தாள். உணவை வீணாக்கக்கூடாது என்பதோடு அதை நேரத்திற்குச்

சாப்பிட்டு விட வேண்டும் என்பதும் நிஷாந்தின் கட்டளை - அரை மணி நேரத் தாமதத்தைக் கூட முகச்சுளிப்புடன் எதிர்கொள்வான் என்பதை அறிந்த மனைவியோ ஒழுங்கு மரியாதையாக ஒன்பது மணிக்கே உணவை முடித்துவிட்டு, கணவனின் வருகைக்காக காத்திருந்தாள்.

வீட்டினுள் நுழையும் போதே, முகத்தில் ஓர் சங்கடத் துடன் நுழைந்தவன், தன்னிடம் ஓடி வந்த மனைவியை விலக்கிவிட்டு குளியலறைக்குள் புகுந்த மறுவினாடி, குடலைப் பிரட்டிக் கொண்டு உண்டது முழுதையும் வாந்தி செய்துவிட, அனுஜா பதறிப் போனாள்.

கல்யாணமாகி இத்தனை நாட்களில் நோயென்று அவன் படுக்கையில் விழுந்ததில்லை எனலாம் - நேரத்திற்கு உணவு, உடலைக் கட்டுக்கோப்பாய் வைத்துக் கொள்ள உடற்பயிற்சி, செய்யும் வேலையை பிடித்து செய்வதால் அதன் மேல் ஏற்பட்ட பிடிப்பு, இரவு நேரங்களில் தூங்கும் முன்னர் செய்யும் அரை மணிநேரத் தியானம், வார இறுதிகளில் விளையாடும் கூடைப்பந்து, அவ்வப்போது நடக்கும் நீச்சல், அதற்கும் மேலாய் அவனை சந்தோஷத்தில் மூழ்க வைத்து முத்துக்குளிக்க வைக்கும் மனைவி என அவனின் உடலும் மனமும் நன்றாகவே - மிக நன்றாகவே இயங் கிக்கொண்டிருந்தது.

அனுஜாவிற்குத் தான் ஏதாவது உடம்பைப் படுத்தும் - அதுவும் வெகு சில சமயங்களில் - வெகு அபூர்வமாய் நிஷாந்தின் கட்டளைகளை அவர் மீறும்போது தான், குச்சிமிட்டாய், குல்பி, சோன்பப்டி, ஐஸ்கிரீம் - இல்லை வெறும் ஐஸ்கட்டியில் கலர் தண்ணி, பீச்சில் விற்கும்



மீன், சோளம் - என்ன கண்டதையும் உண்பதாலும், சரியாக உடற்பயிற்சி செய்யாத காரணத்தாலும் வரும் உடல் உபாதைகளை கண்டிக்கும் நிஷாந்த், அதற்காக அவள் உடல் சுகமின்றி படுத்திருக்கும் போது ''நான் சொன்னதை கேட்டால் இப்படி ஆகியிருக்குமா?'' எனக் குத்திக் காட்டாமல் அவளை ஓர் தாயைப் போல் பார்த்துக்கொள்வான். கண்டிப்பும் வெகு நேர்த்தியாய் அளவாய் இருக்கும் - ''இனிமேல் உனக்கு ஐஸ்கிரீம் சாப்பிடணும் போலிருந்தா.... ஏதாவது ஒரு நல்ல கடையில போய் சாப்பிடலாம் அஜு. இப்படி ரோட் சைடு கடையில வாங்கிச் சாப்பிட்டு உடம்பைக் கெடுத் துக்கக்கூடாது'' என அழுத்தமாய் அவன் சொல்லும் போது, தலையை உருட்டி ஆமோதிக்கும் மங்கையாள், உடம்பு சரியான இரண்டாம் நாளே ரோட்டில் குல்பி விற்றுக்கொண்டு போனால் கணவனை கெஞ்சுதலாய் பார்ப்பாளே பார்க்கலாம் - கணவனுக்கு உருகிவிடும். இப்படி கட்டளையும், கவனிப்பும், மீறலும், உருகலுமாய் சென்று கொண்டிருந்த அவர்களின் வாழ்வில் நிஷாந் திற்கு உடம்பு முடியாமல் போனது ஓர் பெரிய தாக் கத்தை உண்டு செய்தது.

''பாவா'' என்ற அழைப்போடு குளியலறைக்குள் நுழைந்த அனுஜா, நிஷாந்தின் தலையைத் தாங்கிக் கொள்ள, அவனுக்கு மேலும்மேலும் குமட்டியது. ஓர் பத்து நிமிடப் போராட்டத்திற்குப் பின்னர், குளியலறை சுவரில் சாய்ந்து கொண்ட நிஷாந்த், ''எனக்கு ஒரு டம்ளர் சுடு தண்ணி எடுத்துட்டு வா'' என மனைவியை அனுப்பிவைத்தான். சிட்டாய் பறந்து செல்வனே அக்கட்டளையை மனைவி நிறைவேற்ற, சூடாய்

தண்ணீர் உள்ளே சென்றதும் நிஷாந்தின் குமட்டல்கள் குறைந்து ஓர் நிலைக்கு வர, மெல்ல படுக்கையறை நோக்கி நடந்தவனைப் பின் தொடர்ந்த அனுஜா ''என்ன பாவா பண்ணுது?'' என்றாள் மெல்ல, கண்களில் நீர் எட்டிப் பார்த்துவிட்டது.

''ஒண்ணுமில்லைடா. வெளியில சாப்பிட்டது ஒத்துக் கலை போல. தூங்கினா சரியாகிடும்'' என்றதோடு படுக் கையில் விழுந்தவனுக்கு உடை மாற்ற கூட உடம்பில் வலு இருக்கவில்லை.

கட்டிலின் அருகே சென்று மண்டியிட்டு அமர்ந்த அனுஜா ''சாப்பிடலையே பாவா?'' என்றாள் அவன் தலையை வருடியவாறே, ''வேணாம்டா'' என்றவனின் கண்கள் மூடிக்கொள்ள எத்தனித்த வேளையில், சட் டென விழிப்பு பெற்று ''நீ சாப்பிட்டே தானே?'' என்றான் அக்கறையுடன்.

அந்த நிலையிலும் அவனது அக்கறையில் மனம் கசிந்து ''ம்ம்'' என்ற அனுஜாவின் மனதில்தான் உடல் சுகமில்லாமல் இருக்கும் போது ஓர் தாய் போல் தாங்கும் அவனின் கனிவு நினைவு வந்து, அவன் சுகமில்லாமல் இருக்கும் போது அவனுக்கென்று தான் எதுவுமே செய்யாத ஓர் எண்ணம் எழுந்து - அவளை வாட்டியது. அந்த எண்ணத்தின் பிரதிபலிப்பாய், வெறும் வயிற் றோடு படுத்துவிட்ட கணவனுக்குப் பால் கலந்து எடுத்து வந்தவள், அவனின் நெற்றியில் இதழ் பொருத்தி எழுப்பினாள்.

அவள் கையிலிருந்த பால் டம்ளரை ஓர் நன்றி யுரைப்புடன் வாங்கிக்கொண்டவன், ஒரே மடக்கில்



அதை குடித்துவிட்டு மீண்டும் படுக்கையில் விழுந் தான். ஆனால், விழுந்த வேகத்தில் எழுந்தவன் குடித்த பாலை வாந்தி செய்துவிட்டு, மீண்டும் துவண்டு படுத் துக்கொண்டான். அதில் மேலும் அரண்டு போனாள் இல்லத்தரசியாள். பாலை அருந்திய உடனேயே படுத்ததால் தான், குமட்டி விட்டதோ என்றெண்ணிய அனுஜா மீண்டும் ஒரு முறை முயல - இந்த முறை பத்து நிமிடத்திற்கு மேலாய் அவனைப் பிடித்துவைத்திருந்த போதும் நிஷாந்தின் உடம்பில் அந்த பால் தங்கவில்லை.

''பாவா, டாக்டர்கிட்ட போயிட்டு வந்திடலாமா? எனக்கு ரொம்ப பயமா இருக்கு?'' என மனைவி அழு குரலில் அவசரப்படுத்த, ''தூங்கி எழுந்தா சரியாகிடும் அஜு, நீயும் வந்து படு.... நாளைக்கு ஆபீஸ் போகணும். ம்ம் வா'' என அவளை இழுத்துத் தன் பக்கத்தில் படுக்க வைத்துக்கொண்டவனின் கண்களில் இரண்டே நொடி களில் தூக்கத்திற்குப் பறந்து சென்றுவிட்டன.

அவனைப் பின்பற்றி அனுஜாவும் தூங்கிவிட, நள்ளிரவு தாண்டி விடியலை நெருங்கும் வேளையில் அவளது தூக்கம் மெல்ல கலைந்தது. ஆனால் அவளது தூக்கம் கலைக்கப்பட்டதின் காரணம் தான் அவளுக்குப் பெரும் அதிர்வை ஏற்படுத்தியது - நிஷாந்தின் உடல் அனலாய் கொதிக்க, அவன் உடம்பை முறுக்கியவாறே சுருண்டு படுத்திருந்தான்.

இது நாள் வரை, தானே ஓர் குழந்தையாய் இருந்த வளுக்கு, கணவனின் ஒவ்வாமை பெரும் தவிப்பாய் தான் இருந்தது. தாய், தந்தை மட்டுமின்றி சித்தப்பாக்கள், சித்திகள், அத்தைமார், மாமன்மார், அண்ணன்மார்,

தம்பிமார், அண்ணியார்கள் என அனைவருக்குமே அவள் ஓர் குழந்தை தான்; சொல்லப்போனால் ''பச்சப்புள்ள ராசா அது.... சடக்குன்னு மேலுக்கு ஏதாவது வந்திடும்...'' என்ற அடைமொழிக்கு ஆளாகும் ஒரே ஆள் அவள் தான்! அவளுக்கு உடம்பிற்கு முடியாமல் போகும் வேளைகளில் வீடே அல்லோலப்படும் அளவிற்கு அவள் அங்கே செல்லம் - மொத்த குடும்பத்திற்கும் வாய்த்த ஒரே பெண் வாரிசு அல்லவா?! திருமணத்திற்கு முன்னர் தான் இப்படியெல்லாம் திருமணம் முடிந்ததும் நிஷாந்தின் கண்மணி தான் அவள்.

கண்ணுக்குள் வைத்து அடைகாத்தவன், இப்போது உடம்பில் வலுவின்றி துவண்டிருப்பதைப் பார்க்கப் பார்க்க வருத்தமாய் இருந்ததே ஒழிய, அவனுக்கு என்ன வைத்தியம் பார்ப்பது என்று அந்த குழந்தைக்குத் தெரியவில்லை.

தூக்கம் முழித்து எழுந்தவள், அவனருகே அமர்ந்தவாறே கைகால்களைப் பிடித்துவிடுவது, தலையை வருடுவது, முன் நெற்றியைத் தாண்டி வழிந்த அவனது கூந்தலை மீண்டும் மீண்டும் ஒதுக்குவது, கழுத்தில் கை வைத்து குறையாத காய்ச்சலை ''குறைந்து விட்டதா... குறைந்து விட்டதா'' எனக் கணக்கிடுவது, அடித்து அடித்து ஓய்ந்து போன பக்கத்துக்கு மருத்துவமனை (சிறு கிளினிக்) எண்ணிற்கு மீண்டும் மீண்டும் முயல்வது என்றிருந்தவளுக்கு, அவனது வேதனையை சற்றும் குறைக்கமுடியவில்லையே எனக் கவலையாக இருந்தது. அவளது கவலைக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வண்ணம், விடியலும் வர, நிஷாந்தும் லேசாய் கண் திறந்தான்.



''பாவா, மெதுவா எழுந்துக்கோங்க. நான் போய் ஒரு ஆட்டோ பிடிச்சிட்டு வந்துடுறேன். பக்கத்தில இருக்க ஹாஸ்பிடல் போயிட்டு வந்துடலாம்'' என்றவள், ''இல்ல அஜூ....'' என மறுக்க வாயெடுத்தவனை, சிறு கெஞ்சல் பார்வையில் அடக்கிவிட்டு, கீழே விரைந்தாள். குடியிருப்பு வளாகத்தை விட்டு சற்று தள்ளியிருக்கும் ஆட்டோ ஸ்டாண்ட்டின் பக்கம் திரும்பியவளை, குடியிருப்பு காவலாளி இடைமறித்து என்னவென்று கேட்டதில் சற்று தொலைவு நடப்பது மிச்சப்பட்டு, அவனே சென்று ஆட்டோ பிடித்து வந்தான்.

ஆட்டோ வருவதற்குள், மேலே சென்று நிஷாந்தை அழைத்து வந்து விடலாம் என்று திரும்பியவளின் கண்களில் அவர்களது கார் பட்டு - 'நிஷூ, எவ்வளவு தடவை படிச்சு படிச்சு சொன்னாங்க... கார் ஓட்டக்கத்துக்கோன்னு. அவங்க சொல்லும்போதெல்லாம் நல்லா டிமிக்கி கொடுத்திட்டு... இப்போ ஓர் அவசரத்திற்கு கூட ஆட்டோல போக வேண்டியிருக்கு. திமிரு அஜூ உனக்கு! உன் நல்லதுக்குத் தானே சொல்றாங்க... கேட்டா என்னவாம்? நிஷூக்கு சரியானதும், ஒழுங்கு மரியாதையா கார் எடுத்துப் பழகணும்' என உள்ளுக்குள் குளுரைத்தவள், மின் தூக்கியின் வாயிலாக நிஷாந்தை கீழே கூட்டி வந்தாள்.

மருத்துவரிடம் காட்டிவிட்டு வந்தால், அவர் ஓர் ஐந்து மாத்திரையும், மூன்று வேளைக்கும் சேர்த்து ஓர் பெரிய பத்திய சாப்பாட்டு பட்டியலும் எனக் கொடுத்தனுப்ப, இத்தனை மாத்திரைகளை நிஷாந்த் விழுங்க வேண்டுமே என்ற மலைப்பு ஒரு புறமும், பத்திய சாப்பாடை எப்படி செய்வது என்ற கேள்வி ஒரு புறமும் அனுஜாவைக் குடைந்தன.

அவளது மனமறிந்தவன் போல், ''டாக்டர் சொல்றதையெல்லாம் செய்யணும்ன்னு எதுவுமில்லை குட்டி. பாலும், பிரட்டும் மட்டும் போதும். நான் பார்த்துக்கிறேன்... நீ கவலைப்படாதே'' என நிஷாந்த் தன்னைப் பார்த்துக்கொள்வதாக கூறியபோதும், அனுஜாவால் நிம்மதியாக இருக்க முடியவில்லை.

எப்போதும் உற்சாகத்துடன், முகத்தில் தெளிவுடன் வலம் வரும் கணவன் சோர்ந்து படுத்திருப்பதைக் கண்ட மனைவியோ, மருத்துவரின் ஆலோசனைப்படி பத்திய உணவுகளைச் செய்ய நினைத்தாள்.

காலை உணவிற்கு, அவர் கொடுக்கச் சொன்ன இட்லி மற்றும் பாலிற்கு வழியில்லாமல் பிரட் மட்டும் அவனுக்கு உணவாகக் கொடுத்தவள், அவன் ஒரோர் மாத்திரையாக விழுங்க விழுங்க - என்னவோ தானே அவற்றை விழுங்குவது போல் முகத்தை அஷ்டகோணலாக்கி அவனைப் பார்த்திருந்தாள். ''நான் தானேடா மாத்திரை சாப்பிடுறேன். நீ எதுக்கு இப்படி எட்டு ஊருக்கு முகத்தை நீட்டி வச்சிருக்கே? ம்ம்... முகத்தை சிரிச்ச மாதிரி வச்சுக்கோடி கன்னுக்குட்டி'' எனக் கொஞ்சியவனின் குரலில் சோர்விருக்கவே, ''சும்மா விளையாடாம படுங்க பாவா'' என அலுத்துக்கொண்ட அனுஜாவிற்கு, மதியச்சாப்பாட்டைப் பற்றிய கவலை பெரும் கவலையாய் ஆட்டிப்படைத்தது.

மருத்துவரின் பட்டியல்படி கஞ்சி தயாரிக்க, அவள் யோசித்த யோசனை இருக்கே? அம்மா கஞ்சி செய்வாங்களே? எப்படி செய்வாங்க? சாதத்தில தான்... ஆனா, சாதத்தை வடிச்சு செய்யணுமா.... இல்லை சாதத்தை குழைவா வடிச்சு அதையே கஞ்சி ஆக்கிடணுமா?



ஆனா, சாதம் வைக்க ரைஸ் குக்கர் தானே இருக்கு? பானை இல்லையே? பெரிய பாத்திரத்தில் வைக்கலாமா? அந்த பாத்திரத்தை எப்படி கவிழ்ப்பது? அம்மா கிளிப் போடுவாங்களே? அது இல்லையே? வாங்கிட்டு வந்திடலாமா? ஆனா.... என்ன அரிசில வைக்கிறது? வயிறு வலிக்கும் போது ரசம் ஊத்தி கஞ்சி செய்யணுமா? இல்லை தயிரா? ஒரு வேளை மோரோ? - ஆயிரத்திற்கும் மேற்பட்ட கேள்விகளுள் தன்னை தொலைத்திருந்த அனுஜா, மேலும் மண்டையை உடைத்துக் கொள்ளாமல், தங்கள் வீட்டின் எதிர் வீட்டிலிருக்கும் குடும்பத்தலைவியிடம் சந்தேகம் கேட்கச் சென்றாள்.

ஆனால், அவருக்கோ அவளின் சந்தேகங்களைத் தீர்ப்பதை விட, அவளது வாழ்வைப் பற்றிய கேள்விகளிலேயே கவனம் சென்று கொண்டிருக்க, ''உங்க அம்மாக்கு ஒரு போன் போட்டு கேட்டிருக்கலாமே? ஒரு வேளை அம்மா தவறிட்டாங்களா? அப்போ மாமி யாரைக் கேளும்மா.... இப்படி அப்பப்போ பேசிக்கணும். இல்லைன்னா பொண்ணு திமிர் பிடிச்சவன்னு சொல்லிடுவாங்க ம்ம். அவங்களோட ஏதும் மனஸ்தாபமா?'' ''அண்ணன் - தம்பி யாரும் இல்லையா?'' - என அவர் கேட்ட கேள்விகளுக்குத் தன் சந்தேகங்களே மேல் என்று தோன்றுவிட, அனுஜா எப்படிடா தப்பிக்கப் போகிறோம் என எண்ணியது தான் தாமதம் ''அனுஜா'' என்ற நிஷாந்தின் குரல் அமிர்தமாய் அவள் செவியில் பாய்ந்து, ''அவர் கூப்டுறார்'' என்ற சொல்லோடு அங்கிருந்து பறக்க வைத்தது.

''அவங்களோட என்னம்மா பேச்சு?'' என அவன் கேட்டதும், ''கஞ்சி எப்படி செய்றதுன்னு கேட்கப்

போனேன் பாவா. நீங்களே சொல்லிடுறீங்களா? நான் செய்துடுறேன்'' என்றவளிடம் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், பிடிவாதமாய் கஞ்சி செய்ய ஆயத்தமாகி விட்டாள்.

நிஷாந்தின் யோசனைப்படி அரிசியை மிக்சியில் ஒரு சுத்து போட எண்ணியவள், கூடுதலாய் இரண்டு முறை போட்டு விட, அரிசி குருனையாவதற்குப் பதிலாக மாவாகிப் போனது. ''ப்ச்'' என்ற சொல்லோடு, மீண்டும் அரிசியை மிக்சியில் இட்டவள், இந்த முறை ஒழுங்காக அரைத்து எடுத்து, கஞ்சி என்ற பேருக்கு ஏற்றார் போல் ஓர் பதார்த்தத்தை செய்து முடித்து விட்டாள்.

கணவனை எழுப்பி, தான் தயாரித்த உணவைக் கொடுத்தப்போது அவனது ''சூப்பர்டா, அஜு'' என்ற ஒற்றை வார்த்தை அவளை மகிழ்ச்சிப்படுத்திய போதும், ''அம்மா கஞ்சி காய்ச்சிக்கொடுக்கும் போது ஒரு பருப்பு துவையல் செய்வா... ம்ம்... அமிர்தமா இருக்குமாக்கும்'' எனக் காய்ச்சலின் தீவிரத்தில் அவன் ஏதோ சொல்லி விட, அனுஜாவிற்கு சங்கடமாகிப் போனது.

தன்னால் தான் அவனுக்கு இத்தனை கஷ்டம் என்ற எண்ணத்தில், கணவன் உறங்கிக்கொண்டிருக்கும் போது அவனது கைப்பேசியிலிருந்து ''ஸ்வீட் ஹோம்'' என்றிருந்த எண்ணை அழுத்தியவள், அந்தப் பக்கம் ஓர் அழுத்தமான பெண் குரல் கேட்டதும் ''அம்மா, நான் உங்க பையன் நிஷாந்தோட மனைவி...'' அனுஜா அந்த வாக்கியத்தைக் கூட முடிக்கவில்லை. அதற்குள் ''நிஷாந்த் என்ற பெயரில் எனக்கு பசங்க யாருமே இல்லையே?



தப்பு நம்பர்'' என்ற சொல்லோடு அழைப்புத் துண்டிக்கப்பட்டது.

சட்டென கண்ணில் பொங்கிய நீரை சுண்டிவிட்டபடி, மீண்டும் அந்த எண்ணை அவள் அழைக்க, அழைப்பு எடுக்கப்பட்டு, அவளது ''அம்மா, ப்ளீஸ்.... வச்சுடாதீங்க. உங்க பையனுக்கு உடம்பு முடியல...'' என ஆரம்பிக்க, ''பிள்ளையே இல்லைங்கிறேன். வை போனை'' என்ற குரலில் பெரும் கோபமிருந்தது.

## 3

''எனக்கு நிஷாந்த் என்ற பையனே இல்லை'' என நிஷாந்தின் தாயார் பத்மாவதி சொன்னதும், அனுஜாவிற்கு - தன்னால், தன் காதலால் தான் கணவன் தாயின் பாசத்தையும் அரவணைப்பையும் தொலைத்துவிட்டு நிற்கிறான் என்ற எண்ணம் இன்னும் அழுத்தமாய் விழுந்தது.

அதை எப்படியாவது சரி செய்ய வேண்டும் என மனம் உந்தினாலும், எப்படி, எங்கே என்ன மாதிரி சரி செய்வது என்று தான் தெரியவில்லை. இன்று, நேற்றல்லா, கடந்த ஆறு மாதங்களாய் இதே யோசனை தான் - நிஷாந்தின் தாயார் மற்றும் அவனது குடும்பத்தாரை எப்படி அணுகுவது என்ற யோசனை தான். ஒரே ஊரில் இருந்தால் கூட பரவாயில்லை, அவர்கள் இருப்பதோ நாட்டின் தலை நகரத்தில் அல்லவா!

மாமனார் - மாமியாரை சமாதானம் செய்யும் வேலையை விட, உடம்பு முடியாமல் படுத்திருக்கும் கணவனைக் கவனிப்பது முக்கியமானதாய் போய்விட, கணவனின் புறம் திரும்பினாள் அனுஜா. அசந்து உறங்கிக் கொண்டிருந்தவனை காதலுடன் நோக்கி விட்டு, அவன் உண்டு முடித்து வைத்திருந்த பாத்திரங்களை அடுக்களைக்கு எடுத்துச் சென்றவள், அங்கே இரைந்திருந்த பொருட்களைப் பார்த்து ஓர் ஆயாசப் பெருமூச்சு விட்டவாறே அவற்றை ஒழுங்கு செய்தாள். ஒழுங்கு செய்வதற்கு தான் எடுத்துக்கொண்ட ஒரு மணி நேரத்தை எண்ணியெண்ணி, தனக்கு ஓர் குடும்பத்தை நடத்தும் தகுதி சிறிதுமில்லையோ என்ற எண்ணம் மனதை வாட்டி வதக்கியது.

சமைக்கத் தெரியவில்லை, அடுக்களையை ஒழுங்காக வைத்துக்கொள்ளத் தெரியவில்லை, கணவனின் உடல் நலத்தைப் பராமரிக்கத் தெரியவில்லை, வாங்கும் சம்பளத்தைக் கூட நிர்வாகம் செய்யத் தெரியவில்லை, வீட்டுப் பராமரிப்பைக் கூட கணவனிடம் தள்ளிவிட்டு ஓர் குழந்தையாய் இருக்கிறோம். வீட்டுப் பராமரிப்பு என்ன வீட்டுப் பராமரிப்பு... தன் பராமரிப்பையே அவனின் கையில் கொடுத்துவிட்டு ஓர் ராணியைப் போல் அவனின் கவனத்தைத் தன் பால் வைத்துக் கொள்கிறோம் என்ற குற்ற உணர்வு மிகவுற, இனிமேல் ஓர் பொறுப்பான பெண்ணாக நடந்துகொள்ள வேண்டும் என்ற தீர்மானத்திற்கு வெகு விரைவில் வந்து சேர்ந்தாள் அனுஜா.

எடுத்த தீர்மானத்தின் முதல் படியாய், நிஷாந்த் உறங்கிய நேரம் முழுதும் மடிகணினியின் முன்னே



அமர்ந்தும், சில மணி நேரங்கள் தன் நெருங்கிய தோழியருள் மணமான தோழி - கவிதாவிடம் பேசியும் பல விஷயங்களைத் திரட்டினாள். மாலை ஐந்து மணி வாக்கில் முழித்த நிஷாந்திற்கு, ஹார்லிக்ஸ் கலந்து கொடுத்தவளின் முகத்திலிருந்த தீவிரத்தைப் பார்த்த கணவனோ, அவளின் கைகளை அழுத்தி ''எனக்கு சீக்கிரமே சரியாகிடும் அஜுமா. கவலைப்படாம இரு!'' என்றான் அன்புடன்.

அப்போதும் அவள் முகம் தெளியாமல் இருக்கவே, ''ஆமா, ரேவ்வந்த் ஸ்கூல்-ல இருந்து வந்திருப்பானே? அவன் கூட விளையாடப்போகலையா? வேணும்னா அவனையும், ரேகாவையும் இங்கே கூட்டிட்டு வாயேன் குட்டி... எனக்கும் கொஞ்ச நேரம் பொழுது போகும்'' என்றான் அவள் கவனத்தைத் திருப்பும் முயற்சியாக.

''நான் என்ன சின்னப் பிள்ளையா? அவங்களோட விளையாடுறதுக்கு? போங்க பாவா.... எனக்கே ஒரே வருத்தமா இருக்கு'' என்ற அனுஜாவைத் தன் அருகே அமரவைத்துக்கொண்டவன், ''எதுக்கு வருத்தம்? எனக்கு உடம்பு சரியில்லாம போனதாலா? ரெண்டு நாள் வெளிய சாப்பிட்டது.... அது தான் உடம்பை படுத்திடுச்சு... இதெல்லாம் சகஜம் அஜுகண்ணா. மனுஷ உடம்புடா.... நோயே வரக்கூடாதுன்னா எப்படி? பெருசா எதுவுமே இல்லைடா.... வயிற்றுக்கு ஒப்பாத உணவை அதுவே வெளியே தள்ளிடுச்சு அவ்வளவு தான். அதுக்கு ஏற்ற மெதுவான உணவு கொடுத்ததும், அதுவும் அஜுகையால சமைச்சதைக் கொடுத்ததும், என் அஜு குட்டி மாதிரி எவ்வளவு அழகா சொன்னது கேட்குது பாரு. அஜு மாதிரியே அதுவும் சமத்தாகிடுச்சு.

சோ அஜூவும் சமத்தாகிடுங்க'' என்றான் சிறு சிரிப்புடன்.

அவனது சமாதானத்தில் அமைதியடையாமல் ''ப்ச்'' என்ற ஒற்றை சொல்லோடு அவனின் தோளில் சாய்ந்து கொண்ட அனுஜாவின் தோள்களை அழுத்திக்கொடுத்து ''போ! போய் ரேவ்வந்தை கூட்டிட்டு வா'' என்றான் கட்டளை போல்.

''போங்க பாவா.... நான் அவங்களோட விளையாட மாட்டேன். அப்படி விளையாடித் தான் எனக்குப் பொறுப்பே இல்லாம போய்டுச்சு'' என்ற அனுஜா அகலாமலிருக்க, ''குழந்தைகளோட விளையாடினா பொறுப்பில்லைன்னு யாரு சொன்னா? நீயா கண்டதையும் கற்பனை செய்துக்காதே அனு! அப்புறம் ரொம்ப ரொம்ப முக்கியமான விஷயம் - வாழ்க்கையில எதையுமே ஒரு நல்ல கண்ணோட்டத்தோட பார்க்கிற மனசு உனக்கு.... எனக்கு ரொம்ப பிடிச்சதும் இது தான். அதனால, கண்டதையும் கற்பனை செய்து அதை கலங்க வச்சுக்காதே! நிஷூக்காக ப்ளீஸ்'' என்ற அவனின் தீவிரமான குரலில் அனுஜாவிற்கு என்ன தோன்றியதோ, அவனின் மடியில் படுத்துக்கொண்டு சற்று நேரம் அமைதியாக இருந்தாள். பின்னர் என்ன தோன்றியதோ, தங்கள் வீடிருக்கும் கட்டிடத்திற்கு அடுத்த கட்டிடத்தில் உள்ள ஐந்து வயது ரேவ்வந்த் மற்றும் அவனது மூன்று வயது தங்கை ரேகாவையும் வீட்டிற்கு அழைத்து வந்து, ஒரு மணி நேரம் விளையாடினாள்.

சிறு குழந்தைகளுடன் இருந்தது மனதிலிருந்த பாரங்களை இறக்கி வைத்துவிட, ஓர் தெளிவுடனே இரவு



உணவை முடித்த தம்பதியர் இருவரும் அடுத்து வந்த இரண்டு நாட்களும் பணிக்குச் செல்லவில்லை. இரண்டாம் நாள் காலை அலுவலுக்குத் தயாரான நிஷாந்தை, ''இன்னைக்கு மட்டும் போக வேண்டாம், பாவா. ப்ளீஸ்! என்னோட திருப்திக்காக'' எனப் பிடித்து வைத்தாள். ஆனால் அவனை ஏனடா வீட்டில் பிடித்து வைத்தோம் என்று அனுஜா (செல்லமாக) நொந்து கொள்ளும் அளவிற்கு, சுகமின்றி படுத்த நாட்களுக்கு ஈடாய் நிறைய காரியங்களைச் சாதித்துக்கொண்டான், கணவனெனும் கள்வன்!!

அடுத்து வந்த இரு நாட்களும் மனவருத்தங்கள் ஏதுமின்றி செல்வதாக எண்ணிய நிஷாந்திற்கு கூட, மனைவி மனதிற்குள்ளே மறுகிக்கொண்டிருக்கிறாள் என்பது புரியாமல் போனது விந்தை தான்!

அடுத்த வாரத்தின் முதல் நாளில், நிஷாந்த் எழுவதற்கு முன்னரே அவனை ஒட்டிப்படுத்திருந்த மனைவியாள் விழித்திருந்தாள். விழித்ததோடு நில்லாமல், தலைக்கு ஊற்றிக்கொண்டு, ஈரத்துண்டுடன் அடுப்பின் முன்னே நின்றிருந்தவளைப் பார்க்க நிஷாந்திற்குப் பெரும் வியப்பு! இருக்காதா பின்னே? திருமணமாகி இத்தனை நாட்களில் நிஷாந்திற்கு முன்னர் அனுஜா விழித்திருக்கும் திருநாள் இன்று தானே? இதற்கு முன்னரெல்லாம், ''அஜூ, ஆபீஸ் லேட் ஆகிடுச்சு... எழுந்திரு... குளி... கிளம்பு'' என்று ஒவ்வொன்றுக்கும் தார்குச்சி போட வேண்டுமே?! தன் வியப்பிலிருந்து வெளிவராமலே ''ஹே அஜூ! இத்தனை காலையில எதுக்கு எழுந்தே? எழுந்தது தான் எழுந்தே.... என்னைக் கொஞ்சச சசசசம்.... கவனிச்சிருக்கலாம் இல்லை. அதை

விட்டுட்டு இங்க.... அதுவும் கிச்சன்ல உனக்கு என்னடி வேலை?'' என்றான் கணவன், அவளது இடுப்பை வளைத்து, தோளில் முகம் புதைத்தவாறே.

''ஷ், எனக்கு நிறைய வேலையிருக்கு. நீங்க முதல்ல இங்கிருந்து கிளம்புங்க. போங்க... ஜிம்முக்கு போயிட்டு வாங்க. சொல்றதை கேளுங்க'' என அவனைப் பிடித்து விலக்கி, சமையலறை வாயிலைத் தாண்டி அவனை இருத்திவிட்டு வந்தாள்.

''அது தான் என்ன வேலைன்னு கேட்கிறேன்? சமைக்கப் போறியா? தேவையில்லாம வேலையை இழுத்துக்காதே அஜு...'' - மனைவியின் திடீர் சமையலுக்கு ஏற்ற காரணத்தைக் கண்டுபிடித்து, அவளை சமாதானம் செய்ய முற்பட்டவனை ''பாவா, இத்தனை நாள் நீங்க சொல்றதை நான் கேட்டேன் தானே? இன்னைக்கு மட்டும் நான் சொல்றதை நீங்க கேளுங்க. ம்ம்'' என என்றுமில்லா கட்டளையுடன் உடற்பயிற்சி கூடத்திற்கு அனுப்பி வைத்தாள். அவனின் அன்பு மனைவி.

தினமும் அரை மணி முதல் முக்கால் மணி நேரம் வரை செய்யும் உடற்பயிற்சியை இருபதே நிமிடத்தில் முடித்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்தவன், ''அஜு, நானும் ஹெல்ப் பண்றேன்டா'' என மனைவியிடம் போய் நிற்க, அவளோ அவனின் கையில் துண்டைக் கொடுத்து ''போய் குளிச்சிட்டு வாங்க. ராகி கஞ்சி குடிக்கிறீங்களா? இல்லை குளிச்சிட்டு வந்து.... ஒண்ணா சாப்பிட்டுடுறீங்களா?'' என்றாளே பார்க்கலாம், ''அஜு, உனக்கு என்னாச்சுடா? யாரும் ஏதும் சொல்லிட்டாங்களா?'' எனப் பதறிப் போனான் கணவன்.



''யாரு என்ன சொல்வாங்க? அதெல்லாம் ஒண்ணுமில்லை.... இந்தாங்க இந்த கஞ்சியைக் குடிச்சிடுங்க'' என அவன் கையில், ஓர் பெரிய கோப்பை நிறைய ராகிக்கஞ்சியைத் திணித்துவிட்டு, நறுக்கி வைத்திருந்த புடலங்காயை குக்கருக்குள் போடுவதில் மும்முரமாகி விட்டாள். அவன் மேலும் ஏதோ பேச வர, மனைவியின் கையிலிருந்த சமையல் குறிப்பு புத்தகம் அவனின் வாயை அடைத்தது. புடலங்காயை குக்கரில் போட்டதும், மளிகை சாமான்கள் இருக்கும் அலமாரியைத் திறந்து, அதில் பாசிப்பருப்பு டப்பாவை அவள் எடுத்த போது தான், அந்த அலமாரியிலிருந்து எல்லா பொருட்களின் மீதும் அதனதன் பெயர்கள் எழுதி ஒட்டியிருப்பது நிஷாந்தின் கண்ணில் பட்டது.

கையிலிருந்த பானம் உள்ளே செல்ல செல்ல - மனைவியின் கண்கள் சமையல் புத்தகத்தில் ஒரு முறையும், பருப்பை அளந்து போடுவதில் ஒரு முறையும் என மாறி மாறி அலை பாய்ந்ததில் வியந்து, பச்சை மிளகாயை இரண்டாக வகுந்து போடுவதில் அவள் பட்ட சிரமத்தில் பயணித்து... மிளகாய் வெட்டிய கையை தெரியாமல் கண்ணில் வைத்துவிட்டு ''ஸ்ஸ்'' என அவள் துடித்ததில் துடித்து, மஞ்சள் பொடியை சற்றே அதிகமாய் போட்டுவிட்டு, அதிகமாய் போன தூளைக் கைகளால் எடுத்து, கையிலிருந்த தூளை எப்படி துடைப்பது என்று தெரியாமல் சில நிமிடம் முழித்து, பின்னர் தன் உடையிலேயே துடைத்துவிட்டு சமையலுக்குள் அவள் புகுந்ததில் சிரித்து, குக்கரை அடுப்பில் ஏற்றி, மூடியிட்டு மூடியவள், அதன் தலை மீது வெயிட்டைப் போட்டு, ஹப்பாடா என நிமிர்ந்ததில்

நிம்மதியுற்று: ஆனால் நிமிர்ந்த சில வினாடிகளிலேயே தலையில் அடித்துக்கொண்டு குக்கரை மீண்டும் திறந்தவள் அதில் தண்ணீர் ஊற்றி மூடியதும் செல்லமாய் அவளைக் கொண்டாடி;- இப்படியாய் மனைவி சமையல் செய்யும் அழகை சமையலறைக்கதவில் சாய்ந்தவாறே பார்த்திருந்தான் நிஷாந்த்.

உள்மனசு உறுத்த சட்டென திரும்பிப் பார்த்த அனுஜாவிற்கு வெட்கம் மிகுந்துவிட, ''என்ன பாவா? கஞ்சி நல்லா இல்லையா? பிடிக்கலைன்னா வச்சிடுங்க... பரவாயில்லை'' என்றாள் வெட்கத்தை வெல்லும் முயற்சியாய்.

''கஞ்சியும் நல்லா இருக்கு. அதை போட்ட என் பொண்டாட்டியும் நல்லா இருக்கா...'' என அவன் சிரிக்க, ''நிஜமாகவே நல்லா இருக்கா? இல்ல சும்மா சொல்றீங்களா?'' என்ற அனுஜாவிற்கு அவனின் வார்த்தைகளில் நம்பிக்கை வரவில்லை.

''நிஜம் தான்டி. என் பொண்டாட்டி... சூப்பரோ சூப்பர்!'' என அவன் கண் சிமிட்ட, ''விளையாடாதீங்க பாவா! கஞ்சி எப்படி இருக்கு? உங்களுக்குப் பிடிக்கலைன்னா மாத்திடலாம்'' என்றாள் தீவிரமாக. அவளது கேள்வியில் வியந்து ''மாத்துறதா? நீ செஞ்ச கஞ்சி மாவை எங்க போய் மாத்துறது?'' என நிஷாந்த் வினவவும், ''நான் கஞ்சி மாவு செய்தேனா? எனக்கு கூட்டும் குழம்புமே தகினதோம் போடுது... இதில எங்க கஞ்சி மாவு அரைக்கிறது... கலாய்க்காதீங்க பாவா. நம்ம எப்பவும் சாமான் வாங்குற சூப்பர் மார்க்கெட்ல, ஒரு ஆன்ட்டி வீட்டில செய்ற பொடி... ஊறுகாய்... பேஸ்ட் எல்



லாம் விக்கிறாங்க. அவங்ககிட்ட வாங்கிட்டு வந்தேன்'' என உண்மையை ஒத்துக்கொண்டாள்.

இது நாள் வரை, சூப்பர் மார்க்கெட்டுக்கு வந்தால், நிஷாந்தின் பின்னாலேயே சுத்தி வரும் அனுஜாவிற்கு தானாக எதையும் எடுக்கத் தெரியாது. வீட்டிற்கு என்றாலும் சரி, அவளுக்கு என்றாலும் சரி, நண்பர்களுக்கு வாங்குவதாய் இருந்தாலும் சரி - நிஷாந்தின் அபிப்ராயம் கேட்காமல் அவள் பொருள் வாங்கியதே இல்லை எனலாம். இப்போது, அவளாக சென்று வீட்டிற்குத் தேவையானதை வாங்கி வந்திருக்கிறாள் என்றால் ஏதோ பெரிதாக நடந்து விட்டது என நிஷாந்தின் மனம் கூவியது! ஆனால், அதை தெளிவுபடுத்திக் கொள்ளும் நேரம் இதுவல்ல என்ற எண்ணம் அவனைக் குளியலறைக்குள் புக வைத்தபோதும், நெஞ்சில் மனைவியின் மாற்றங்கள் குறித்து கணக்கிட்டுக் கொண்டே இருந்தன.

திருமணமாகி இந்த ஆறு மாதங்களில் முதல் நான்கு மாதங்கள் - சிங்கப்பூர் எனும் எழில் பூமியில் சொர்க்கமாய் கழிந்துவிட, கடந்த இரண்டு மாதங்களாய் நடந்தேறும் சென்னை குடித்தனத்தில் பாதி நாட்கள் வீட்டை ஒழுங்கு செய்வதிலும், அதற்குப் பொருட்கள் வாங்குவதிலும் கழிந்துவிட, சென்ற ஒரு மாதமாய் தான் இயல்பு வாழ்க்கை வாழ்கின்றனர் தம்பதியர்.

திருமணம் நடந்த புதிதில், தனக்கு சமையல் தெரியவில்லையே என அனுஜா வருத்தம் கொள்ளாத விகிதம் - சிங்கப்பூரில் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த தங்குமிடம் சகல வசதிகளும் கொண்ட தனி வீடு போன்றது.

ஓர் பெரிய வீட்டிற்குள் சிறு சிறு குடில்கள் போல் அமைக்கப்பட்டிருந்த நிறுவனத்தின் விருந்தினர் மாளிகையிலேயே அவர்கள் தங்கிவிட, அங்கிருந்த சமையல் பிரிவிலிருந்தே எல்லா வேளை உணவுகளும் வரும்படி நிஷாந்த் பார்த்துக்கொண்டான். ஓர் புத்தம் புது வாடிக்கையாளரை - அதுவும் அவர்களது நிறுவனம் கால் பதித்திராத ஓர் துறையிலிருக்கும் ஓர் முக்கிய வாடிக்கையாளரின் கவனத்தைத் தங்கள் நிறுவனத்தின் பக்கம் திருப்பும் விற்றுமுதல் வேலையில் நிஷாந்த் ஈடுப்பட்டிருந்ததால், நிறுவனமும் அவனது தேவைகளைக் குறைவின்றியே கவனித்தது.

சிங்கப்பூரிலிருந்து திரும்பிய பின்னரும் அனுஜாவிற்கு சமையலின் மீது அவ்வளவு நாட்டமிருந்ததில்லை. தங்களது உணவு தேவைகளுள் பாதிக்கு மேற்பட்டதை அலுவலக உணவு விடுதி தீர்த்துவைத்துவிட்டதும் அதற்கொரு காரணமோ என எண்ணினான் நிஷாந்த்.

சில சமயம், இரவு உணவு அவன் கை பக்குவத்தில் தயாராகும் போது ''நீங்களே எல்லாம் செய்றீங்களே பாவா'' என வருத்தம் கொள்பவள், அவனுக்கு சிறு சிறு உதவிகள் செய்வாளே ஒழிய, பெரிதாய் ''நானே செய்கிறேன்'' என இறங்கியதில்லை. ஒரு தடவை அப்படி இறங்கியதில் உணவு படு சொதப்பலாய் முடிந்துவிட, அனுஜாவிற்கு சமைக்கும் ஆசை அத்துடன் அற்று போயிருக்கும் என்றே அவன் எண்ணியிருக்க, இப்போது சமையல்கட்டின் ராணியாய் அவள் சுழல்வதைப் பார்க்க ஒரு புறம் சிரிப்பாகவும், மறுபுறம் என்ன காரணத்தால்



இப்படி அவளை வருத்திக்கொள்கிறாளோ எனக் கவலையாகவும் இருந்தது.

குளித்து முடித்து வெளியே வந்தவன், உடை மாற்றிக் கொண்டு வரவேற்பறைக்குள் நுழைந்தபோது, உணவு மேசையின் மீது உணவுப் பொருட்கள் அணிவகுத்துக் காத்திருந்தன. அனுஜாவைத் தேடினால், பால்கனியில் கட்டியிருந்த ஊஞ்சலில் அமர்ந்து, மேலிருந்த மின் விசிறியை படு வேகமாய் சுழலவிட்டவாறே, வேர்வை படிந்த முகத்தைத் துடைத்துக் கொண்டிருந்தாள். ''அஜு'' என்ற அவனது அழைப்பில் துள்ளி எழுந்தவள், ''வந்துட்டீங்களா பாவா? சாப்பிடலாமா?'' எனக் கேட்கவும், ''காலை டிபனுமா செய்தே?'' என்றான் நிஷாந்த் வருத்தமாக.

''தோசை தான், பாவா! நேத்தே ரெண்டு பாக்கெட்டு மாவு வாங்கிட்டு வந்துட்டேன்... இட்லி பொடி தொட்டு சாப்பிட்டுக்கலாமா? ம்ம்... உங்களுக்குப் பிடிக்கலைன்னா ஆபீஸ்லேயே சாப்பிடலாம்'' என்றவளின் குரல், வாக்கியத்தின் கடைசியில் உள்ளே சென்றுவிட்டது. ''ச்சே ச்சே, நீ செஞ்சுட்டேன்னா இங்கேயே சாப்பிடலாம் வா'' என அவள் கைப்பிடித்து அழைத்தான். ''நீங்க சாப்பிடுங்க பாவா. நான் வேர்வை வடிஞ்சதும் தலை பின்னிட்டு... டிரஸ் மாத்திட்டு வரேன்'' என அவள் அவனை அனுப்பிவைக்க, ஒரு தட்டில் தோசை - ஓர் ஓரமாய் ஜாம் - மறு ஓரமாய் இட்லி பொடி சகிதம் பால்கனிக்கே எடுத்து வந்து, தானும் உண்டு மனைவிக்கும் கொடுத்தான் கணவன்.

அதன் பின்னர் அலுவலகத்துக்கு தயாராகி வந்த

அனுஜா, இருவருக்கும் மதிய உணவாய் புடலங்காய் கூட்டு சாதமும், அப்பளமும் கட்டி வைக்க, கன்னத்தில் கை வைத்தவாறே அவளைப் பார்த்திருந்தான் அவளது மாற்றங்களின் நாயகன். அவனின் பாவனைகளைக் கவனிக்காமல் ''பாவா, எனக்குத் தெரிஞ்ச அளவுக்கு புடலங்காய் கூட்டு செய்திருக்கேன். வயிறு சரியில்லாம போனதுக்கு கூட்டு... ரசம்... தயிர்... கஞ்சி இந்த மாதிரி மிதமான உணவு தான் சாப்பிடணுமாம். அதனால இந்த வாரம் முழுசா கூட்டு, ரசம் இப்படியே செய்து தரேன் சரியா? ஏதாவது நல்லா இல்லைன்னா சொல்லுங்க. சும்மா.... நான் செய்துட்டேனேன்னு ஒண்ணும் சொல்லாம இருக்காதீங்க. நீங்க சொன்னாத்தான் என்னால மாத்திக்க முடியும்... என்ன சரியா? நெட்ல இந்த சமையல் புக் பத்தி நல்ல கமெண்ட்ஸ் தான் சொல்லியிருக்காங்க... அதைப் பார்த்து தான் செய்தேன்... அதனால ஓரளவு சாப்பிடுற மாதிரி தான் இருக்கும்ன்னு நினைக்கிறேன்... ம்ம்... நீங்க தான் மதியம் சாப்பிடப் போறீங்களே! பார்க்கலாம்'' என்றவள், மூடியிட்ட ஓர் டம்ளரில் மோரை ஊற்றி வைத்துவிட்டு ''ஒரு வாரத்திற்கு மட்டும் நடுநடுல மோர் குடிச்சுக்கோங்க... டாக்டர் சொன்னாரில்லையா?'' எனக் கூறியபோது, தன் உடல் நலக் குறைவு தான் அவளை அதிரடியாய் சமையலில் இறங்கவைத்திருக்கிறது என்பது உறுதியானது.

அப்போதைக்கு ஒன்றும் சொல்லாமல் தலையை ஆட்டிவைத்தவன், அலுவலகம் செல்லும் வழியில் ''அஜு, எனக்கு உடம்பு சரியில்லைன்னதும் பயந்துட்டியா கண்ணம்மா? நான் நல்லாகிட்டேன்டா. இனிமேல் ஒண்ணும் பிரச்சனையே இல்லை... நாம எப்பவும் போல கேண்டீன்லேயே சாப்பிட்டுக்கலாம்...'' என்ற வாக்



கியத்தை அவன் முடிக்கவில்லை, ''ஏன் பாவா என் சாப்பாடை சாப்பிட இவ்வளவு பயப்படுறீங்க? நான் என்ன அவ்வளவு மோசமா?'' என இடையிட்டாள் மனைவி.

அந்த இடைவெட்டலில் கேலியோ, கெஞ்சலோ, ஆசையோ துளியும் இருக்கவில்லை; மாறாக ஏமாற்றமும், வருத்தமும் கூடவே கண்ணீரும் நிறைந்துவிட ''ஹே அஜு! எதுக்குடா இந்த அழுகை? உனக்கு என்ன பிடிக்குதோ அதை செய்! உனக்குக் கஷ்டமா இருக்குமேன்னு தான் சொன்னேன்.... சமையல் செய்றது உனக்குப் பிடிச்சிருக்குன்னா எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. சொல்லப்போனா சந்தோசம் தான்.... பொண்டாட்டி கையால சாப்பிடக் கசக்குமா என்ன?'' என உடனே அவள் இஷ்டத்திற்கு வளைந்து கொடுத்தான் - சந்தோஷமாக, கூடவே சிறு சந்தேகமாகவும்.

அவனது அந்த சந்தேகமும் அன்று மாலையே தீர்ந்தது; ஆனால் தீர்க்கப்பட்டப்போது மனம் வலியாய் வலித்துப் போனது.

என்றும் போல் அன்றும் நிஷாந்திற்கு வேலை சற்றே அதிகமாகிவிட, அவனை விடவும் முன்னரே வீடு வந்து சேர்ந்திருந்த அனுஜா, கணவனை மனம் முழுதும் ஓர் சந்தோஷமான எதிர்பார்ப்புடன் எதிர்கொண்டாள்.

அவளின் குண்டு மல்லி கருவிழிகள் இரண்டும் விரிந்து மலர்ந்ததில், சந்தோஷமெனும் நறுமணம் அவள் முகம் முழுதும் அப்பியிருக்க, விரிந்த கண்களுக்கு ஈடாய் உதடுகளும் தாமரை இதழ்களாய்

நிஷாந்தை சுண்டி இழுக்க, அதை கண்டுகொண்ட பாவையோ "ம்ஹூம். முதல்ல போய் கை - கால் கழு விட்டு வாங்க. உங்களுக்கு ஸ்பெஷல்-லா ஒண்ணு செய்து வைத்திருக்கேன்" எனக் கண் சிமிட்டினாள்.

"என்னதுடா?" என அவன் ஆர்வமே உருவாய் பறக்க, "நீங்க முகம் கழுவிட்டு வாங்களேன்... நான் சொல் றேன்" என அவன் முதுகில் கைவைத்து, படுக்கைய றைக்குள் தள்ளிவிட்டவள், ஒரே ஓட்டமாய் சமைய லறைக்குள் புகுந்து கொண்டாள். அவனே மின்னல் வேகத்தில் முகம் கழுவிக் கொண்டிருக்க, அதையும் மீறி "சீக்கிரம் வாங்க பாவா... எவ்வளவு நேரம்?" என இரண்டு முறை அவனை விரட்டி, துரிதமாய் வரவைத் தாள் அவனின் அன்பு மனைவி.

"என்னடி? எதுக்கு இவ்வளவு பரபரப்பு? என்ன செஞ்சு வச்சிருக்கே? ஏதும் ஸ்வீட் கீட் செய்தியா?" என ஆயிரம் கேள்விகளுக்கு நடுவே உடை மாற்றி வெளியே வந்தவனின் கைப்பிடித்து, உணவு மேசைக்கு இட்டுச் சென்றவள், அவன் கைகளில் கொடுத்தது அரிசி நொய் யில் செய்த கஞ்சி, 'இதுக்கா இந்த ஆர்ப்பாட்டம்?' என்பது போல் நிஷாந்த் நோக்க, "இதுக்கு மட்டுமல்ல" என்பது போல் ஓர் சிறு கிண்ணத்தில் பருப்பு துகை யலை வைத்து அவன் புறம் நகர்த்திய அனுஜாவின் கண்களில் ஆர்வம் வண்டிக்கணக்காய் வழிந்தது.

"கவிகிட்ட கேட்டு... புக்-ல படிச்சு... உங்களுக்குப் பிடிச்ச பருப்பு துகையல் செய்திருக்கேன். எப்படி இருக் குன்னு சொல்லுங்க? அத்தை செய்ற மாதிரி கொஞ்ச மாவது இருக்கா? அவங்ககிட்டேயே கேட்கலாம்ன்னு



தான் போன் செய்தேன்..." என்றவள் சட்டென சுதாரித்து "ச்சே ச்சே... செய்யலாம்ன்னு நினைச்சேன். அப்புறம் எதுக்கு இப்படியொரு சின்ன விஷயத்திற்கு அவங்களை தொந்தரவு செய்யணும்ன்னு விட்டுட்டேன்" என்று முடித்த போது, நிஷாந்திற்கு மண்டையில யாரோ ஓங்கி அடித்தது போல் வலித்தது!

அம்மாவிற்கு அழைத்தாளா? இவள் சொல்வது போல், அம்மா எடுக்காமல் இருந்திருக்க மாட்டார்கள்! கண்டிப்பாக எடுத்து... ஏதோ சொல்லிவிட்டார்கள்! அன்று கூட அஜூவின் கண்களில் முனுக்கெனும் முன்னா் கண்ணீர் வழிந்ததே! அவர்கள் நிச்சயம் செய்த திரு மணத்தை மறுத்த என் மீது கோபமிருப்பது நியாயம் தான்... அந்தக் கோபத்தை இவளிடம் கொட்டிவிட் டார்களோ?! அச்சோ பாவம்! - என மனைவிக்காக உரு கியவன், "சாரிடா அஜூ! அம்மா ரொம்ப திட்டிட்டாங் களா?" என்றான் மெதுவாக.

அவனது கேள்வியில் ஸ்தம்பித்துப் போய் 'அவன் தாயாரிடம் தான் பேசியதைக் கண்டுபிடித்துவிட்டானே' எனத் திணறிக் கொண்டிருந்த அனுஜா. "என் மேல இருக்க கோபத்தை எல்லாம் உன் மேல காட்டிட்டாங் களா? அவங்களுக்காக நான் சாரி கேட்டுக்கிறேன்" என கணவன் வருந்தியதும், 'ஹோ என்னைத் திட்டியதாக நினைத்துக் கொண்டிருக்கிறானா? நல்ல வேளை... அவன் எதுவும் சொல்லும் முன்னர் அவன் அம்மா பேசியதை சொல்லாமல் விட்டோமே' எனத் தன் னையே தட்டிக்கொடுத்துக் கொண்டு "அதெல்லாம் இல்லை பாவா! நான் தான் பேசுறேன்னு தெரிஞ்சதும் "தப்பு நம்பர்" ன்னு சொல்லி போனை வச்சுட்டாங்க.

நம்ம ரெண்டு வீட்டிலயும் ஒரே மாதிரி பேசி வச்சுட்டு செய்றாங்க போல! அதுவுமே நல்ல விஷயம் தானே!'' பாதி உண்மையை மட்டும் கூறி இலகுவாய் பேசி அந்தப் பேச்சை முடித்தாள்.

அவளின் சமாளிப்பில் ஏதோ உண்மை குறைவது போல் தோன்றினாலும், அதை மேலும் தோண்டித் துருவ விரும்பாமல் ''பருப்பு துகையல் ரொம்ப நல்லா இருக்குடா...அஜு!'' என்ற பாராட்டை, மனதார முன் வைத்தான் அனுஜாவின் ஆருயிர் காதலன்!

# 4

''பருப்பு துகையல் நன்றாக இருக்கிறது'' என்ற கணவனின் பாராட்டில் அனுஜாவிற்கு வானில் மிதப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது! அதை வெளிப்படுத்தும் முயற்சியாக, அவனின் கன்னத்தில் அழுத்தமாய் ஓர் முத்தம் வைத்துவிட்டு, ''தேங்க்ஸ் பாவா'' என்றாள் நிறைந்த மனதுடன்.

அந்த நாளிலிருந்து அனுஜாவின் முகத்தில் கூடுதலாய் ஓர் தெளிவு குடிவந்திருப்பது போல் நிஷாந்திற்குத் தோன்றியது! எப்போதுமே அவள் முகத்தில் ஓர் மாறாப் புன்னகை குடிகொண்டிருக்கும் என்றாலும், இப்போது அப்புன்னகையுடன் சேர்த்து ஓர் பெருமிதம், தன் கணவனுக்குத் தன் கையால் சமைத்துக் கொடுத்துவிட்ட



திருப்தி, கம்ப சூத்திரம் என எண்ணியிருந்த சமையற் கலை கை கூடிவிட்டதில் ஓர் நிம்மதி, இன்னும் இன்னும் அதில் ஜொலிக்க வேண்டும் என்ற ஆர்வம் என நல்ல உணர்வுகள் பல ஒன்றாய் சேர்ந்து அவளை அழகு தேவதையாக்கியது.

கணவன் விருப்பப்பட்ட பருப்பு துகையலையும், கூடவே அவன் உடம்பிற்கு ஏற்ப உணவு தயாரிப் பையும் செய்துவிட்டோம்; இத்துடன் நிறுத்திக்கொள் வோம் என்றில்லாமல் புதிதுபுதிதாய் எதையாவது கற்று கொண்டே இருந்தாள்.

எந்தவொரு விஷயத்தையும் ஓர் ஆர்வத்தோடு கற்றுக்கொள்ளும் அனுஜாவிற்கு, இது நாள் வரை சமையல் கலை ஓர் சுவாரஸ்யமான விஷயம் என்பது தெரிந்திருக்கவில்லை. அது தெரிந்துவிட்டப் பின்னரோ அதை விட முடியவில்லை. முதல் ஒரு வாரம் - ''கூட்டு வாரம்'' என்ற தலைப்பிடலாம் போல வகைவகையாய் கூட்டுகளுடன் நகர, அடுத்த வாரம் ''சாம்பார் வாரம்'' ஆனது! அதற்கு அடுத்த வாரமோ - ''கலவை சாத வாரம்'' அவதாரம் எடுத்தபோதும், அவளது கைவண் ணத்தில் தயாரான எதுவும் ஒரே முயற்சியில் ''ஆஹா... ஓஹோ'' என்று சுவைத்துவிடவில்லை. ஆதலால், மீண்டும் ''கூட்டு வாரம்'' ''சாம்பார் வாரம்'' என அவள் தொடங்கிவிட, நிஷாந்திற்கு ஒரே சிரிப்பாக இருந்தது.

''அஜு, நீ சமைக்கிறதில உனக்கே சந்தேகம் வந்திடு மாடா? அந்த சந்தேகத்தைத் தீர்த்துக்க தான்... ஒரே பதார்த்தத்தை திரும்ப பண்ணி ட்ரைனிங் எடுத்துக் கிறியா?'' என அவன் கேட்டுவிட, 'எல்லாமே ஒரே பதார்த்தம் இல்லை, பாவா! ஹய்யோ அப்படியா

இருந்துச்சு.... ஒரு நாள் புடலங்காய் கூட்டு. இன்னொரு நாள் சௌசௌ.... அடுத்த நாள் கத்திரிக்காய்... இப்படி தானே பாவா செய்தேன்? எல்லாம் ஒரே மாதிரி இருந்ததா?'' என்றாள் அனுஜா மிக மிக பரிதாபமாக.

அவளது தோற்றத்தில் மேலும் வெடித்துச் சிரித்த நிஷாந்த், ''சரியான அப்பாவி கண்ணம்மா நீ.... நான் என்ன சொன்னாலும் அப்படியே நம்பி, உடனே ஏதாவது ஏடாகூடமா கற்பனை செய்ய ஆரம்பிச்சிடுவே! நான் என்ன சொல்றேன்னா, வேற வேற காய் போட்டாலும் கூட்டு கூட்டு தானே? அதனால சாம்பார், குழம்பு, கூட்டுன்னு மாத்தி மாத்தி ட்ரை பண்ணுடா. நான் வேணும்னா காய் காம்பினேஷன்ல ஹெல்ப் செய்யட்டுமா?'' எனக் கேட்டு, கணவன் - மனைவி இருவருமாய் சமையலை ஒரு கை பார்த்தனர்.

இப்படியாய் நாட்கள் இனிமையாய் கழிய, ஓர் விடுமுறை தினத்தின் மாலை அனுஜாவின் கைவண்ணத்தில் பஜ்ஜியும், கேசரியும் தயாராக, தொலைக்காட்சி பெட்டியின் முன்னர் அமர்ந்து இருவருமாய் அதை உண்டுகொண்டிருந்தனர். விதவிதமான பஜ்ஜிகளில் உருளைக்கிழங்கு பஜ்ஜியை பிய்த்து வாயில் இட்ட போது ''ம்ம்... எனக்கு உருளைக்கிழங்கு பஜ்ஜி ரொம்பப் பிடிக்குமா... வீட்டில பஜ்ஜி போட்டா அப்பா தட்டில, அண்ணா தட்டில விழுற எல்லா உருளைக்கிழங்கு பஜ்ஜியும் எனக்கு வந்திடும்.... ''அனுகுட்டிக்குப் பிடிக்கும், பிடிக்கும்ன்னு'' அப்பா ஊட்டிவிட்டுட்டே இருப்பாங்க'' எனப் பிறந்த வீட்டிற்குப் பயணித்த அனுஜா, ''அப்பாகிட்ட பேசணும் போலிருக்கு....



பாவா'' என்றாள் ஏக்கமாய். இத்தனை நாட்களாய் - புதிதாய் ஒன்றை கற்பதிலும், கணவனின் பாராட்டை வஞ்சனையின்றி பெற்றதிலும், தினுதினுசாய் சமைப்பதிலும் வீட்டு எண்ணங்கள் லேசாய் புறந்தள்ளப்பட்டிருக்க, இப்போது சமையல் ஒருவாறு கைகூடிய பின்னர் மனதின் அடியில் சென்றிருந்த ஏக்கம், ஓர் சிறு உந்துதலால் மேலே மேலே கிளம்பியது!

அவளது ஏக்கம் நெஞ்சை அசைத்தபோதும், மாமனார் வீட்டிற்கு அழைத்தால் மனவேதனை தான் மிஞ்சும் என்ற எண்ணத்தில் வாளா இருந்தான் கணவன். ஆனால், அவனின் மௌனத்தை வேறு விதமாய் புரிந்து கொண்ட மனைவியோ ''உங்களுக்கும் வீட்டு ஞாபகம் வந்திடுச்சா, நிஷூ?'' என்றாள் வருத்தமாய்.

''ச்சே, ச்சே அதெல்லாம் இல்லை. இப்போ நீ வீட்டுக்குக் கூப்பிட்டா, மாமா எதுவும் கடுமையா பேசிடுவாங்களோன்னு யோசனையா இருந்தேன்'' எனத் தன் மனதை அவன் வெளிப்படுத்த, ''அதுக்காக பேசாமலே இருக்க முடியுமா, பாவா? இப்போ கூப்பிட்டுப் பார்க்கட்டா?'' என்றவள், அவன் அரைமனதாய் தலையாட்டியதும் அரவங்காட்டில் உள்ள தன் வீட்டு எண்ணை அழுத்திவிட்டு, படபடத்த மனதுடன் காத்திருந்தாள்.

ஐந்து நிமிடக் காத்திருப்பிற்குப் பின்னர் ''ஹலோ'' என்றொரு கட்டைக் குரல் கேட்க, ''அப்பா'' என்றாள் அனுஜா ஆசையாக. அவளது ஆசையான விளிப்பிற்குப் பிரதிபலிப்பாய் ''அனு'' என்ற கொஞ்சல் - தந்தை சரவணப் பாண்டியனிடமிருந்து வரும் என அவள் எதிர்பார்த்திருக்கவில்லை என்றாலும், அவளது குரல் கேட்ட மறுவினாடி, அழைப்பு துண்டிக்கப்படும் என

அவள் எதிர்பார்க்கவில்லை. எதிர்பார்த்திருக்க வேண்டுமோ? ஆறு மாதமாய் அது தானே நடந்தேறுகிறது? அந்த வெறுப்பை மாற்றுவதற்கு ஒன்றுமே செய்யாமல் ''அனு'' என்று அவர் உருக வேண்டும் என்றால் எப்படி?

கணவனின் பார்வையில், வழியத்துடித்த கண்ணீரை கட்டுக்குள் கொண்டு வந்தவள், மீண்டும் ஓர் முயற்சியை வீட்டு எண்ணிற்கு அழைத்தாள். இந்த முறை அழைப்பு எடுக்கப்பட்டதும் ''அப்பா'' என்று அழைக்காமல், ''ப்ளீஸ் அப்பா போனை கட் பண்ணிடாதீங்க. அதுக்காக நீங்க என்கிட்டே பேசணும்ன்னு இல்லை. நான் சொல்றதை மட்டும் கேளுங்கப்பா. அது போதும்! ப்ளீஸ்ஸ்ஸ்'' என்ற வாக்கியத்தை முடிப்பதற்குள் மீண்டும் ''பீப், பீப்'' என்ற ஒலியே பதிலானது. தான் வாய் ஓயாமல் பேசுவதை ரசித்துக் கேட்ட தந்தையா? என்று மனம் நொந்தது அனுஜாவிற்கு. நொந்த மனதின் வேதனையை உள்ளுக்குள்ளே வைத்திருக்கத் தெரியாத அந்த குருத்து, தன் ஒரே ஆறுதலான கணவனின் தோள்களில் சாய்ந்து விசும்பிவிட்டது!

வார்த்தைகளில் ஏதுமின்றி மௌனமொழியான அரவணைப்பில் ஆறுதல் கூறிய நிஷாந்த், அவளைத் திசைத் திருப்பும் முயற்சியாக கடற்கரை சென்றுவரலாமா என வினவினான். மறுப்பாய் தலையசைத்துவிட்டு, ''உங்க வீட்டுக்குக் கூப்பிட்டுப் பாருங்க, பாவா'' என்றாள் அனுஜா.

''வேணாம்டா. வீணா மனசுக்கு சங்கடம். அம்மா நல்லவங்க தான் என்றாலும்... தன்னோட விருப்பம் நிறைவேறாத போனதால ரொம்பவே கோபமா இருப்



பாங்க... கோபமா இருக்கும் போது, வார்த்தைகள் மேல அவங்களுக்கு கட்டுப்பாடே இருக்காதுடா. வேணாமே'' என அவன் கெஞ்ச, ''அம்மா தானே, பாவா! ப்ளீஸ் பேசுங்க'' என அவள் உந்த, வேறுவழியின்றி டெல்லியில் இருக்கும் தன் வீட்டிற்கு அழைப்பு விடுத்தான் நிஷாந்த்.

இந்த காலகட்டத்தில் தந்தை வீட்டிலிருப்பார், அப்படியிருக்கும் பட்சத்தில் அம்மாவின் வார்த்தைகளைக் கட்டுக்குள் கொண்டு வந்துவிடுவார் என்றெண்ணிய நிஷாந்தின் எண்ணத்தைப் பொய்யாக்கும் வண்ணம், தந்தை தரணிதரனுக்குப் பதிலாக தாயார் பத்மாவதியே எடுத்துவிட, அவரின் ஹலோவிற்குப் பதிலாய் நிஷாந்திற்கு வார்த்தைகளே வரவில்லை. கண்களில் கவலையுடன் தன்னையே பார்த்திருந்த மனைவி ஒரு புறம், தன் குரல் கேட்டதும் தன்னை வாட்டி எடுக்கப் போகும் தாயார் ஒருபுறம் எனத் திண்டாடிக் கொண்டிருந்த நிஷாந்த், ஒருவாராய் சுதாரித்து ''அம்மா'' என்றான் மெல்ல.

அந்த ஒரு வார்த்தையில் மகனை இனம் கண்டு கொண்ட அவனின் தாயோ ''யாருடா அம்மா? அம்மாவா என்னை நினைச்சிருந்தா என்னை மீறிக்கிட்டு போயிருப்பியா என்ன? சொந்தக்காரங்க மத்தில எங்க மானத்தை வாங்கிட்டே தானே? அப்புறம் என்ன பாசம் பொங்கி வழியுது? அம்மாவாம் அம்மா! என்னை மேல மேல கத்த வைக்காம போனை வைடா'' எனப் பெருங்குரலெடுத்து கத்திவிட்டு,

''பத்மா!'' என்ற தந்தையின் அதட்டலில், ''என்ன பத்மா?! இல்லை என்ன பத்மா? என்னை மட்டும்

அதட்ட வந்துடுறீங்க. உங்க அருமை இரண்டாவது பிள்ளை பேசுறான். அவனை நல்லா கொஞ்சுங்க. அதோட நிறுத்திக்காம வீட்டுக்கே கூப்பிட்டு உற வாடுங்க. ஆனா, அதையெல்லாம் பார்க்க நான் இங்க இருக்க மாட்டேன்'' என்றார் ஆவேசமாக.

''அம்மா, ப்ளீஸ்! உங்களை அவமானப் படுத்த ணும்ன்னு நான் எதையும் செய்யலைம்மா. திடீர்ன்னு கல்யாணம் என்றதும்.... அந்த சூழ்நிலையில... சின்னப் பிள்ளைத் தனமா நடந்துக்கிட்டேன்னு வச்சுக்கோங் கம்மா. ப்ளீஸ்'' என நிஷாந்த் விளக்க முற்பட, அதை கேட்க அவர் அங்கே இருக்கவில்லை; மாறாக தொலை பேசி நிஷாந்தின் தந்தையிடம் இடம் பெயர்ந்திருந்தது.

''நிஷாந்த்'' என்ற அவரது அழைப்பில், ''அப்பா! நீங்களாவது கொஞ்சம் சொல்லக் கூடாதா? ஆறு மாசமாகிடுச்சுப்பா. எனக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு, டாடி! அனுஜா - நீங்க நினைக்கிறதை விட ரொம்ப நல்ல பொண்ணு, அவகிட்ட ஒரு தடவை... ஒரே ஒரு தடவை பேசிப்பாருங்களேன். உங்களுக்கு அவளைக் கண்டிப்பா பிடிக்கும்'' என நிஷாந்த் முடிந்தளவு விஷ யத்தைச் சொல்ல முற்பட்டான்.

''அந்தப் பொண்ணு நல்லவளா? கெட்டவளா?ன்னு எனக்குத் தெரிஞ்சுக்க வேண்டியதில்லை. நிஷாந்த்! ஒரு பொண்ணோட காதலை நீ உயர்வா நினைக் கிறதுக்காக, இன்னொரு பொண்ணோட உணர்வுகளை சுத்தமா மதிக்காம இருந்த பாரு.... அது தான் எனக்குப் பிடிக்கலை. அந்த கோபம் அடங்க கொஞ்ச நாளாகும். அப்புறம் பேசலாம்!'' என்றார் அவர் மிக நிதானமாய்.



''ஹய்யோ! நீங்களா ஏதாவது கற்பனை செய்துக்கா தீங்க டாடி! சரிதாகிட்ட போன் போட்டுக் கேளுங்க... நான் வேணும்னா அவளை கான்ஃபிரன்ஸ் பண்றேன். ரெண்டு பேரும் கேட்கலாம். அவளுக்கும் இதில பெருசா விருப்பம் இல்லை டாடி'' என அவன் கெஞ்ச, ''எதுவா இருந்தாலும் அதை நீ முன்னாடியே செய்திருக் கணும், நிஷாந்த்! கல்யாணம்ன்னு ரெண்டு வீட்டாரும் பேசி.... ரெண்டு வாரத்தில கல்யாணம் வச்சுக்கலாம் என்ற நிலைமையில இல்லை'' என்ற தரணிதரன், சற்றும் அசைந்து கொடுப்பதாய் இல்லை.

''சரிதாவை கல்யாணம் செய்துக்க ஆசைப்படு றேன்னு நான் என்னைக்காவது சொல்லியிருக்கேனா? நீங்களா ஏதாவது முடிவு செய்துட்டு... என்னோட விருப்பத்தைச் சொன்னதுதான் தப்புன்னு சொல்றீங்க?'' எனத் தன் நிலை மறந்து நிஷாந்தும் குரல் உயர்த்திவிட ''சரிதாவை கல்யாணம் செய்துக்க ஆசைப்படுறேன்னு சொல்லலை - சரி! ஆனா, வேற ஒரு பொண்ணை காதலிக்கிறேன்னு ஏன் முதல்ல சொல்லலை?'' என்றார் தரணிதரனும் விடாமல்.

''அனுஜாவைப் பத்தி கொஞ்சம் கொஞ்சமாய் அம்மா கிட்டயும் உங்ககிட்டையும் சொல்லி, சம்மதம் வாங்க லாம்ன்னு நினைச்சேன் டாடி. முதல் வாரம் பேசும்போது கூட, கல்யாணத்தைப் பத்தி எதுவுமே சொல்லாத நீங்க, அடுத்த வார இறுதில என்னை டெல்லி வரவச்சு, சரிதாக்கும் எனக்கும் கல்யாணம் செய்வதா சொன்ன போது எனக்கு வேற என்ன செய்றதுன்னே தெரியல. அதான், அங்கிள் - ஆன்ட்டி இருக்கிறதை கூட உணராம அனுஜா பத்தி சொல்லிட்டேன். அப்புறம்

என்னென்னமோ நடந்து போச்சு'' என்றான் நிஷாந்தும் விடாமல்.

''இல்லை நிஷாந்த். நீ என்னதான் வாதாடினாலும் என்னால சரிதாவோட முகத்தில... சில நிமிஷம் என்றாலும்... படர்ந்த ஏமாற்றத்தை மறக்க முடியலை போனை வைச்சிடு'' என்ற அந்த மத்திய அரசு ஊழியரிடம், ''அவளைப் பத்தி இவ்வளவு யோசிக்கிற நீங்க... என்னைப் பத்தி ஒரே ஒரு தடவை யோசிச்சுப் பாருங்க, டாடி! ப்ளீஸ்'' என்ற நிஷாந்தின் வேண்டுதல் எடுபடாமல் போய், அழைப்பு உடனே துண்டிக்கப்பட்டது.

கணவனின் மன்றாடலை கண்டிருந்த அனுஜாவோ, துண்டிக்கப்பட்ட அழைப்பை வெறித்துக் கொண்டிருந்தவனின் தோளில் கைவைத்து,

''பேசவேண்டாம்... பேசவேண்டாம்ன்னு எத்தனை தடவை சொன்னீங்க? உங்க பேச்சைக் கேட்காம ரெண்டு வீட்டுக்கும் கூப்பிட்டு, மனசை வருந்த வச்சுட்டேன் தானே! சாரி பாவா! வாங்க.... பீச்சுக்குப் போயிட்டு வரலாம்'' என்றாள் அவனைத் தேற்றும் விதமாக.

எப்போதும், அனுஜா தான் உடைந்து போவாள்; நிஷாந்த் தேற்றிக்கொண்டு வருவான். இன்றோ, தந்தையிடம் அதிக நேரம் பேசியதில் சந்தோசம் கொள்ள முடியாமல் அவரது கோபத்தால் துவண்டு போயிருந்தவனைத் தேற்றும் பொறுப்பு அனுஜாவிற்கு வந்து சேர்ந்தது.

தன்னிடமாவது தந்தை பேசினார், ஆனால் அவனின் செல்ல அஜுவின் நிலை அதை விட மோசமல்லவா?



தன்னை விட செல்லமான சூழ்நிலையில் வளர்ந்தவளுக்கு, பெற்றோரின் நிராகரிப்பு எத்தனை மனவருத்தத்தைக் கொடுக்கும் என்ற எண்ணம் தோன்றிய மறுநொடி, மனைவியைக் கூட்டிக்கொண்டு கடற்கரைக்குப் பயணப்பட்டுவிட்டான் நிஷாந்த்.

மௌன அலையாய் வீசிய அவர்களது மனவருத்தத்தை, வெள்ளி அலைகளின் அணிவகுப்பு மெல்ல மெல்ல கரைத்துக் கொண்டிருக்க, நிஷாந்தின் கைப்பேசி மெல்ல சிணுங்கியது. அதை எடுத்தவனின் குரல் ''ஹே ஆனந்த்! சொல்லுடா... எப்படி இருக்கே?'' ஆர்ப்பரித்த கடலின் சத்தத்தையும் மீறி துள்ளியது.

அந்த துள்ளலிலேயே அழைத்தது அவனின் உயிர் நண்பன் ஆனந்தபிரகாஷ் என்பதை கண்டுகொண்ட அனுஜா, கணவனின் உற்சாகத்தை ரசித்தவாறே அவர்களின் சம்பாஷணையை கேட்டிருந்தாள்.

''டேய் மாப்பிள்ளை! என் தங்கச்சி பாப்பா எப்படிடா இருக்கு? உன்னோட மிலிட்டரி ஆட்சியில கட்டுண்டு மிரண்டு போயிருக்காளா? அப்படி ஏதும் என் காதில விழுந்தது.... மகனே உதை தான்!''

''ம்ம்... பால்ய சிநேகிதன் என்னை விசாரிக்காம... இப்போ வந்த உன் தங்கச்சியை பத்தி மட்டும் விசாரிக்கிறே... பரவாயில்லை. நீ ஒரு துரோகின்னு எனக்குத் தெரிஞ்சதால... உன்னை மன்னிச்சுவிடுறேன்'' என்ற நிஷாந்த், ''எப்போ யு.எஸ்ல இருந்து வந்தே? அம்மா - அப்பா எப்படியிருக்காங்க? சென்னை வர ஐடியா இருக்கா?'' என்றான் தொடர்ச்சியாக.

''நேற்றைக்கு காலையில தான் டெல்லி வந்தேன். அம்மா - அப்பா நல்லா இருக்காங்க. உன் கூட பேச

வெயிட் பண்ணிட்டே இருக்காங்க. அப்புறம், சென்னை வரேன்... உன்னைப் பார்க்க இல்லை. அனுஜான்னு ஒரு குட்டிப் பொண்ணை எனக்கு ஒரு வருஷமா தெரியும்... அவங்களைப் பார்க்க வரேன்'' எனச் சிரித்தவனின் முதுகில் தட்ட வேண்டும் போல் இருந்தது நிஷாந்திற்கு. ஆனால், அது முடியாத காரியம் என்பதால் ''ஹே அப்படியா சரி. நீ அவங்களைப் பார்க்க வரும்போது, நானும் என்னோட மனைவியும் உன்னோட அம்மா - அப்பாவைப் பார்க்க டெல்லி வரோம். நீ அவங்களைப் பார்த்து முடிச்சதும், முடிஞ்சா டெல்லி வாயேன்'' என்றான் அமர்த்தலாக.

அதற்கு பதில் பேச முடியாமல் சிரித்துவிட்ட ஆனந்த், ''ஒரு முக்கியமான விஷயம்டா. அம்மாகிட்ட போனை கொடுக்கிறதுக்கு முன்னாடி நானே விஷயத்தைச் சொல்லிடுறேன். சரிதாக்கும் எனக்கும் கல்யாணம் முடிவாகியிருக்கு. இன்னும் பத்து நாளில் கல்யாணத்தை முடிச்சுக்கிட்டு... யு.எஸ் போகணும்'' என்றான் லேசாய் படர்ந்த வெட்கத்துடன்.

அவன் கூறிய செய்தியில் சற்றே அதிர்ந்தாலும், அலையலையாய் சந்தோசம் தொற்றிக்கொள்ள ''வாழ்த்துக்கள்டா மச்சான்! எனக்கு ரொம்ப ரொம்ப சந்தோஷமா இருக்கு. நீயும் சரிதாவும் பொருத்தமா இருப்பீங்கடா'' என்றான் மனதார.

தொடர்ந்து ''என்கிட்டே முன்னாடியே சொல்லலை பார்த்தியா?'' என நண்பனாய் நிஷாந்த் லேசாய் வருத்தமும் கொள்ள, ''எல்லாம் இந்த சரிதாவால தான். நான் லவ்வை சொன்னதும் சட்டு புட்டுன்னு சரி சொல்லாம.... ஒரேடியா இழுத்து அடிச்சுட்டா. நேர்ல பார்த்து



முகத்துக்கு நேரா சம்மதம் வாங்கினதும், உன்கிட்ட தான் முதல்ல சொல்றேன்'' என்றான் ஆனந்த் விளக்கம் போல்.

ஆனால், விளக்கம், வருத்தம் எல்லாவற்றையும் கடந்து நிஷாந்தின் மனதில் நிம்மதியே குடிகொண்டிருந்தது!

நிஷாந்த், சரிதா, ஆனந்த் - மூவரும் டெல்லியில் குடிபெயர்ந்த ஒத்து வயது மத்திய அரசு பணியாளர்களின் பிள்ளைகள். ஒரு வகையில் தூரத்து சொந்தங்களாய் போன மூன்று குடும்பங்களும், நண்பர்களாகவும், பிறந்த ஊரை விட்டுத் தள்ளியிருந்ததால் ஒருவருக்கு ஒருவர் உதவியாகவும் இருக்க, மூவர் வீட்டுப் பிள்ளைகளும் ஒன்றாகவே வளர்ந்தனர்.

இவர்கள் மூவர் தவிர, நிஷாந்தின் அண்ணன் சத்யன், சரிதாவின் தங்கை சந்த்யா என்ற மற்ற இருவரும் வயதில் சற்றே மூத்தோ அல்லது குறைந்தோ இருந்ததால் நிஷாந்த் - ஆனந்த் - சரிதா ஆகிய மூவருமே நண்பர்கள் என்ற வட்டத்திற்குள் அழகாய், அம்சமாய் பொருந்திக் கொண்டனர்.

மூவருக்குள்ளும் இருந்த நட்புணர்வை ஏன் சொந்தமாய் பிணைத்துக் கொள்ளக் கூடாது என முதலில் எண்ணியது நிஷாந்தின் பெற்றோர் தான்! அந்த எண்ணத்தில் நிஷாந்த் மற்றும் சரிதாவிற்கு திருமணம் செய்யலாம் என இரு குடும்பங்களும் முடிவு செய்ததே. நிஷாந்த் - அனுஜாவின் திடீர் கல்யாணத்திற்கு வழி வகுத்தது என்றால் நிஷாந்தின் காதல் திருமணம் உறவுகள் / நட்புகள் இடையே விரிசலை ஏற்படுத்தி விட்டிருந்தது. நிஷாந்தின் குடும்பத்திற்கும், சரிதாவின்

குடும்பத்திற்கும் பேச்சு வார்த்தையில்லாமல் இருந்த வேளையில், ஆனந்தாகவே சரிதாவை விரும்புவதாய் கூறி அவனது திருமணத்திற்கு தளம் போட்டிருந்தது நிஷாந்திற்குப் பெரும் நிம்மதியாய் இருந்தது.

தந்தை சொல்வது போல், சரிதாவின் மனத்தைக் காயப்படுத்திவிட்டோமோ என்ற உறுத்தல் முழுதாய் வடிந்து மனம் நிம்மதியாய் இருந்தது. ஆனால் அந்த உறுத்தல் தந்தையின் வார்த்தைகளால் மட்டும் ஏற்பட்டிருக்கவில்லை. சரிதாவுடனான திருமணத்தை மறுத்த அன்றே, அவளிடம் விளக்கம் கூறி தான் மன்னிப்பு வேண்டியதும், "எனக்குமே இந்த கல்யாணத் தில விருப்பமில்லை நிஷான். ஆனா, இத்தனை நாள் பிரண்ட்ஸா இருந்த நாம கல்யாணம் செய்துகிட்டா லைஃப் பிரச்சனையில்லாம போகும் போல தோணுச்சு. அதான் சரி சொன்னேன். இப்போ, நீ வேற ஒரு பொண்ணை லவ் பண்றேன்னு தெரிஞ்சதும், எனக்கு சந்தோஷமா இருக்குன்னு சொல்ல முடியாது. ஆனா, வாழ்க்கையே முடிஞ்சு போன ஃபீலிங் கண்டிப்பா வரலை. ஆல் தி பெஸ்ட்!" என்ற வாழ்த்துடன் ஒதுங்கிக் கொண்டவள், அதன் பின்னர் அவன் அழைத்த வேளை களில் ஒன்றிரண்டு வார்த்தைகளோடு முடித்துக் கொள் ளவே, நிஷாந்தும் சின்ன வருத்தத்துடன் ஒதுங்கிக் கொண்டான். பல வருட நட்பில் லேசாய் விரிசல் விட்டதே அவனின் வருத்தத்திற்குக் காரணம்.

தன் நண்பர்கள் இருவரும் மணந்து கொள்வதில் மிகுந்த சந்தோசம் கொண்ட நிஷாந்த். அதை மனை வியிடமும் பகிர்ந்து அவளையும் சந்தோஷப்படுத் தினான். அவர்களது சந்தோஷத்தை அதிகரிப்பது போல்,



ஆனந்தின் பெற்றோர் தங்கள் மகனின் திருமணத்திற்குக் கண்டிப்பாக வரவேண்டும் என்ற அழைப்பை முன் வைத்தனர் என்றால், அடுத்த ஒரு மணி நேரத்தில் சரிதா அவர்களுடன் பேசினாள்.

"ஹலோ நிஷாந்த்! நான் சரிதா பேசுறேன்டா. எப்படி இருக்கே? அனு எப்படி இருக்காங்க? என்னை ஞாபகம் இருக்கா? இல்லை சம்சார சாகசத்தில பழைய பிரண்ட்ஸ் எல்லாரையும் மறந்தாச்சா?" என அவள் உற்சாக மாய் பேசவும், சற்று நேரம் பேச்சிழந்து போனான் நிஷாந்த்.

மனைவியின் உலுக்கலில் சுதாரித்து "நான் நல்லா இருக்கேன், சரிதா! நீ எப்படி இருக்கே? நான் கூப்பிட்ட போதெல்லாம் நீ தான் போன் எடுக்கலை... இப்போ என்னை சொல்றியா?" என அவன் தொடங்க, "ஹே, நான் அனு கூட பேசுறதுக்குத் தான் போன் பண்ணி னேன். உன்னோட அரட்டை அடிக்க இல்லை... அதுக்கு நானும் ஆனந்தும் நைட் பத்து மணிக்கா கூப்பிடுறோம். அனுகிட்ட கொடு.... ஆனந்த் - தங்கச்சி, தங்கச்சின்னு ஒரே உருகல். அந்த தங்கச்சியை உரசிப் பார்க்கலாம்" என அவனது தோழி முடித்தே விட்டாள். "சரி, சரி தரேன். ஆனா, ரொம்ப மிரட்டாதே! அது கொஞ்சம் அப்பாவி.... உன்னை மாதிரி வளைச்சு வளைச்சு பேசத் தெரியாது" என்ற அறிவுரையுடன் மனைவியிடம் கைப்பேசியைக் கொடுத்தவன், சிரிப்போடு பார்த்திருந்தான்.

"ஹலோ சரிதா, உங்க கல்யாணத்திற்கு என் மன மார்ந்த வாழ்த்துக்கள்!" என்ற அனுஜாவின் குரலைக் கேட்டதுமே "ஆஹா, இவ்வளவு மெதுவா பேசுவீங்களா?

சின்னப் பொண்ணு.... சின்னப்பொண்ணுன்னு ஆனந்த் சொன்னபோது, சும்மா பேச்சுக்காக சொல்றான்னு நினைச்சேன். ஆனா, குரலைக் கேட்டதும் கண்டிப்பா பாப்பா தான்னு முடிவு பண்ணிட்டேன்'' என்ற சரிதா, மேலும் முப்பது நிமிடங்கள் பேசிவிட்டு ''நிஷாந்த் இஸ் வெரி லக்கி. நீங்களும் அவனும் தான் சரியான ஜோடி. எனக்கு ஆனந்த் தான் சரி... மண்டையில தட்டிட்டே இருக்கலாம். நிஷாந்தை தட்டிவைக்கிற மாதிரி நிலைமையே வரதுனாலும்... எனக்கு அப்படி ஒரு நிலைமை வேணும்'' என்று கூறி கிளுக்கிச் சிரித்தவள், ''நிஷாந்த் மட்டுமல்ல... நீங்களும் ரொம்ப லக்கி, அனு! நிஷான் இஸ் எ ஸெல்ப் கம்போஸ்ட் பெர்சன். அன்பு வச்சுட்டா... அதை ஆர்ப்பாட்டமில்லாம வெளிய காட்டிடுவான்'' நண்பனின் புகழ் பாடிவிட்டே அழைப்பைத் துண்டித்தாள்.

இரு குடும்பத்து பெற்றோரும் நிராகரித்த நிலையில் நட்பு வட்டமும் ஒதுக்கிவிட்டதோ என்ற கவலையைப் போக்க, ஆனந்தும் சரிதாவும் அடுத்து வந்த வாரத்தில் சென்னைக்குப் பயணித்து, அவர்களின் திருமணத்திற்கு நேரில் அழைப்பு விடுத்தனர்.

நிஷாந்தின் சொந்த ஊரான கும்பகோணத்தில் நடைபெறவிருந்த திருமணத்திற்குச் செல்லும் பட்சத்தில் தன் பெற்றோரை எதிர்கொள்ள நேருமே? அதனால் பெரும் வாக்குவாதங்களும், மனவேதனைகளும் வந்து சேர்ந்துவிடுமோ? என நிஷாந்த் பயப்பட, அனுஜாவோ புகுந்த வீட்டு உறவுகளைப் பார்க்கப் போகும் குஷியில் தலைகால் புரியாமல் வானில் பறந்து கொண்டிருந்தாள்.

ஆனால், கும்பகோணத்தில் நடந்ததோ?



# 5

''ஆனந்த் அண்ணாக்கு என்ன கிஃப்ட் வாங்கலாம்? கிஃப்ட் கூப்பன் கொடுத்திடலாமா? அவங்களுக்குப் பிடிச்சதை வாங்கிடட்டும் என்ன சொல்றீங்க?''

'சரிதா அக்கா நல்லா பேசுறாங்க. எனக்கு அவங்களை ரொம்ப பிடிச்சிருக்கு... பாவா, அவங்களுக்கு வளையல்னா ரொம்ப பிடிக்குமாமே? சௌக்கார்பேட்ல நிறைய வளையல் கடையிருக்குன்னு கவி சொன்னா... அங்க போய் நாம அவங்களுக்கு வளையல் வாங்குவோமா?''

''பாவா, அத்தை - மாமா ரெண்டு பேரும் கல்யாணத்திற்கு வருவாங்க தானே?''

''நான் கல்யாணத்தன்னைக்கு பட்டுப் புடவை தானே கட்டிக்கணும்? இல்ல என்னோட பர்த்டேக்கு நீங்க வாங்கிக் கொடுத்த ஜர்தோசி வொர்க் பண்ணின புடவை கட்டிக்கவா?'' ''ம்ம்... எனக்குப் புடவை ஒழுங்காவே கட்டத் தெரியாதே! என்ன செய்றது?'' ''சுடிதார் போட்டா நல்லா இருக்காதில்ல பாவா? அத்தையும் மாமாவும் என்னை முதல்முதலா பார்க்கும் போது அழகா புடவை கட்டிக்கணும்.... இல்லையா?'' ''அத்தை மடிசார் கட்டியிருப்பாங்களா? அப்போ நானும் மடிசார் கட்டிக்கட்டுமா? நாம இன்னைக்கு சாயந்திரம் போய் வாங்கிட்டு வந்திடலாமா?'' ''மாமாக்கு என்ன ஸ்வீட்

பிடிக்கும்? அதை செஞ்சு எடுத்திட்டுப் போலாமா?'' ''ம்ம்... ஸ்வீட்டோட சேர்த்து ரெண்டு பேருக்கும் டிரஸ் எடுத்திட்டு போலாமே?'' என அவனைக் கேள்விகளால் துளைத்து எடுத்த மனைவியிடம் ''உன்னை அங்கே யாருக்குமே பிடிக்காது கண்ணம்மா'' என்று சொல்ல மனம் வரவில்லை நிஷாந்திற்கு.

மனம் கொள்ளா எதிர்பார்ப்புடன் கிளம்பும் மனைவி யின் மனதை சஞ்சலப்படுத்த விரும்பாமல், அவள் கேள்விகளுக்கு ஒழுங்காகவே பதில் கூறி, அவளைத் திருப்திப்படுத்தினான். அதிலும் அவள் புடவை உடுத்து வதற்கு எடுத்துக்கொண்ட முயற்சியைக் கண்டதும், ''கடவுளே, என் கண்மணி சங்கடப்படும்படி எதுவும் நடந்துவிடக்கூடாது'' என்ற பிரார்த்தனை அவன மனதில் முனங்கலாய் முளைத்தது. ஆனால், தானே அவள் மனதை வாட வைக்கப் போகிறோம் என்பதை அவன் அறியவில்லை!

டெல்லியில் வாழ்ந்தவர்கள் என்றாலும் கும்ப கோணத்தை பூர்வீகமாக கொண்டவர்கள் என்பதால் - தங்கள் மக்களின் திருமணத்தை கும்பகோணத்திலேயே நடத்திவிட முடிவு செய்திருந்தனர் ஆனந்த் மற்றும் சரிதாவின் குடும்பத்தினர். அதனால் திருமணத்திற்கு ஒரு வாரம் முன்னரே மணமக்களின் பெற்றோர் அங்கு சென்றுவிட, தங்கள் நட்பு வட்டத்திற்கு அழைப்பு விடுத்துவிட்டு ஆனந்தும் சரிதாவும் திருமணத்திற்கு இரு தினங்கள் இருக்கும் நிலையில் தான் ஊருக்குச் சென்றனர். அவர்களைப் பின்தொடர்ந்து - அதாவது திருமணத்திற்கு முன்தினம் தஞ்சாவூரில் வந்திறங்கி னான் - நிஷாந்த் (மனைவியுடன் தான்)



''கும்பகோணத்தில தானே கல்யாணம்? நாம ஏன் இங்கே வந்திருக்கிறோம்?'' எனக் கேள்வி கேட்ட மனைவியிடம் ''நீ தஞ்சாவூர் பெரிய கோயில் பார்த்த தில்லை தானே? வாழ்க்கையில ஒரு தடவையாவது அந்த கோவிலைப் பார்க்கணும் குட்டி. பார்த்திட்டு சாயங்காலம் போகலாம்'' எனச் சப்பைக் கட்டு கட்டி, அந்தி சாயும் நேரத்திற்குத் தான் கும்பகோணத்தை எட்டி னான், அவன்.

பின்னரும் அவர்களின் பூர்வீக வீட்டிற்குச் செல் லாமல், ஆனந்தின் வீட்டிற்கும் செல்ல முடியாமல் ஓர் தங்கும் விடுதியில் அறை எடுத்தவன். அங்கேயே குளித்துக் கிளம்பி மாப்பிள்ளை அழைப்பு நேரத்திற்கு என்றில்லாமல் அது தாண்டியே அங்கே போய் சேரும் படி பார்த்துக் கொண்டான்.

தன் பிறந்த நாளுக்கு கணவன் வாங்கிக் கொடுத்த மயில் கழுத்து வண்ண ஜர்தோசி புடவையை உடுத்திக் கொண்டு, அதற்கு ஈடாய் முத்துக்கள் பதித்த நகை செட்டை அணிந்து எழில் பாவையாய் கணவனின் கை பற்றி நடந்த அனுஜாவின் மனதிலோ பெரும் படபடப்பு.

திருமணமாகி இந்த ஆறு மாதத்தில் புகுந்த வீட்டு உறவுகள் என அவள் யாரையுமே பார்த்ததில்லை எனலாம்; அறிமுகம், அவர்களது குணாதிசயம் பற்றிய விளக்கங்கள் எல்லாமே புகைப்படம் வாயிலாகத் தான்.

தன்னைப் போல் ஓர் உறவு கூட்டத்திற்கு நடுவே வளராது. நான்கு பேர் அடங்கிய அவர்களது சிறு குடும் பம் அவளுக்கு எப்போதுமே ஓர் வியப்பை அளித் திருக்கிறது. அதிலும், ''அம்மா மனசில இருக்கிறது

பட்டு - பட்டுன்னு அப்படியே சொல்லிடுவாங்க. இதனால நிறைய பிரச்சனைகள் வந்திருந்தாலும்.... அப்பா அதை ரொம்ப நிதானமா தீர்த்து வைச்சிடுவாங்க. அப்பா தான் என்னோட ரோல் மாடல்'' என நிஷாந்த் அடிக்கடி சொல்வதை வைத்து, அவளுக்கு மாமனார் மாமியாரை பார்க்க வேண்டும் என்ற ஆவல் வெகு நாளாய் இருந்தது. நிஷாந்திடம் கேட்டால், ''கொஞ்ச நாள் போகட்டும்டா. என் மேல இருக்க கோபம் கொஞ்சம் குறையட்டும். அப்புறம் போகலாம்'' என ஒத்திப் போட்டுக் கொண்டே வந்தவன், இப்போது ஆருயிர் நண்பனின் திருமணத்தைப் புறக்கணிக்க முடியாமல் வந்தே விட்டான்.

புது உறவுகளுள் சங்கமிக்கப் போகிறோம் என்ற எதிர்பார்ப்பில் அனுஜா அங்கே வர, பத்மாவதியும் தரணிதரனும் கண்ணிலேயே படவில்லை. தன் குண்டு மல்லி கண்களை அவள் உருட்டிக் கொண்டிருக்கும் போதே, ஆனந்தின் பெற்றோர் அவர்களை வரவேற்க, சரிதாவின் தந்தை மட்டும் வந்து ''வாங்க'' என்ற வார்த்தையை வேண்டா வெறுப்பாய் உதிர்த்துவிட்டுப் போனார். அதில் சற்றே சங்கடப்பட்டு போன தம்பதியரை, இயல்பு நிலைக்குக் கொண்டு வரவென, ஆனந்தும் சரிதாவும் மனதார வரவேற்றனர்.

''டேய் ஆனந்த், பரமேஷ் அங்கிள்க்கு (சரிதாவின் அப்பா) நாங்க வந்தது இஷ்டமில்லை போலவே. வேற ஏதாவது பிரச்னை வந்திடப் போகுதுடா. நாங்க கிளம்புறோமே! நீ யு.எஸ் போறதுக்கு முன்னாடி நாம வேற எங்கேயாவது மீட் பண்ணலாம்டா'' என்றான் நிஷாந்த் சிறு சங்கடத்துடன்.



''ஹோ, நீங்க பொண்ணு வீட்டு பக்கத்திலிருந்து பத்திரிகை வச்சா தான் கல்யாணத்தில் கலந்துப்பீங்களா? நாங்கெல்லாம் உங்களுக்கு மனுசாளா தெரியலையா? என்னை பிரண்ட்ன்னு நினைச்சா இரு... இல்லைனா போயிட்டே இரு'' என ஆனந்த் கடுப்புடன் மொழிந்ததும், நிஷாந்த் மறுவார்த்தை பேசாமல் சரிதாவுடன் பேசிக் கொண்டிருந்த அனுஜாவிடம் போய் நின்று கொண்டான்.

தனக்கென்று அனுஜா வாங்கிவந்த வளையல்களை வியந்து பாராட்டிக் கொண்டிருந்த சரிதா, நிஷாந்தைக் கண்டதும் ''சாரிடா நிஷான், அப்பாக்கும் அம்மாக்கும் இன்னும் உங்க மேல இருக்க கோபம் குறையலை. என்ன தான் டெல்லில இருந்திருந்தாலும்.... அவங்களால பரந்த உள்ளத்தோட இருக்க முடியல. இன்னும் முறிஞ்சு போன ஒரு திருமணப் பேச்சு வார்த்தையைப் பத்தியே நினைக்கிறாங்க. அதனால விளைஞ்ச இந்த நல்ல புரிதலைப் பத்தியோ, ரெண்டு மனசும் ஒத்துப் போய் நடக்கிற இந்தக் கல்யாணத்தைப் பத்தியோ பெருமையா நினைக்க மாட்டேங்கிறாங்க. ப்ச். நானும் எத்தனையோ தடவை எடுத்துச் சொல்லிட்டேன்.... இப்ப என்றில்லை.... ரொம்ப நாளாவே! ஆனா, பத்மா ஆன்ட்டியும் பேசுற மாதிரி இல்லை.... அம்மாவும் இறங்கி வர மாதிரி இல்லை'' என்றாள் வருத்தமாக.

''ம்ம்... பரவாயில்லை சரிதா'' என அவளிடம் சிரித்த முகமாகவே பகிர்ந்த நிஷாந்த், தன் பின்னால் நின்றிருந்த நண்பனிடம் ''அம்மா - அப்பா வருவாங்களாடா? அஜு பயங்கர எதிர்பார்ப்போடு வந்திருக்கா. அவங்க வரலைன்னா ரொம்ப ஏமாற்றமா இருக்கும்...

பத்திரிகை கொடுத்ததா சொன்னியே? வருவாங்க தானே?'' என்றான் மெது குரலில்.

''கண்டிப்பா வருவாங்க. சரிதா வீட்டிலிருந்து கூப்பிடலை என்பது வருத்தமா இருந்தாலும்.... நானும் சரிதாவும் தனியா போய் பத்திரிகை கொடுத்திருக்கோம். அப்பாவும் அம்மாவும் கூட நேர்ல போய் கூப்பிட்டிருக்காங்க. எல்லாத்துக்கும் மேலா, ''என்னோட கல்யாணத்துக்கு மட்டும் வராம இருங்க.... நீங்க எனக்கு போட்ட சாப்பாட்டை எல்லாம் ஒரே டைம்ல வாமிட் பண்ணிடுவேன்''னு ஆன்ட்டியை மிரட்டிட்டு வந்திருக்கேன். அந்த கொடுமைக்கு கல்யாணத்திற்கே வந்திடலாம்ன்னு வந்திடுவாங்க பாரு'' என ஆனந்த் சிரிப்பு பாதி, உறுதி மீதியாக நிஷாந்தை தேற்ற, அங்கே கலகலப்பு குடிகொண்டது.

சரிதா தன் வருங்காலக் கணவனிடம் அனுஜா வாங்கி வந்திருந்த வளையல்களைக் காண்பிக்க, ''இதெல்லாம் உனக்கே நியாயமா தெரியுதா தங்கச்சி? உயிருக்கு உயிரா உன் மேல பாசத்தை காண்பிக்கிற இந்த அண்ணாச்சிக்கு ஒண்ணுமே வாங்கிட்டு வராம, உன் உயர்ந்த அண்ணனின் உயிரை வாங்க வந்திருக்கும் ரத்தக்காட்டேரிக்கு வளையலா வாங்கிட்டு வந்திருக்கிறியே? இது அடுக்குமா? என் சின்ன மனசை இப்படி சுக்கு நூறா உடைச்சிட்டியே?'' எனப் பரிதாபமாய் முகத்தை வைத்துக் கொண்டு அனுஜாவிடம் வம்பு செய்தான் அவன்.

''உங்க உடைஞ்ச மனசை ஒட்ட வைக்க கோந்து வாங்கித்தரவா அண்ணா? சரிதா பிராண்ட் கோந்து!'' என அனுஜா கிளுக்கிச் சிரிக்க, ''சூப்பர்டா அஜு!'' என



நிஷாந்த் அவள் தோள் மீது கைப்போட்டு இறுக்க, ''வாழ்க என் நாத்தனார். வளர்க அவர்களது சேவை'' எனக் கோஷமிட்டாள் சரிதா.

''உன் பாவா ட்ரைனிங் - காக்கும் சகிக்கலை'' எனத் தோளைக்குலுக்கிய ஆனந்திற்கும் சிரிப்பை அடக்க முடியவில்லை. ''ஆனாலும், அனு.... நீ இவ்வளவு சீக்கிரம் நாத்தனார் அட்டகாசத்தை ஆரம்பிச்சிருக்க வேண்டாம். இன்னும் கல்யாணமே ஆகலை.... அதுக்குள்ளே வளைகாப்புக்கு வாங்கிட்டு வர மாதிரி.... வளையல் வாங்கிட்டுவரின்னா என்ன அர்த்தம். சரிதாவைப் பத்தி என்ன நினைச்சே? நீ என்ன நினைச்சாலும் என் சதா... தங்கமாக்கும்'' என சிண்டு முடிய முற்பட,

''ஹய்யோ நான் அந்த அர்த்தத்தில வாங்கிட்டு வரலை...'' என அனுஜா அப்பாவித்தனமாய் பதில் கொடுக்க,

''சிண்டு முடியுறீங்களா'' என சரிதா அடிக்க கை ஓங்க,

''நல்லா நாலு போடு, சரிதா'' என நிஷாந்த் எடுத்துக்கொடுக்க, அங்கே சிரிப்பும் கூத்துமாய் இருந்தது.

அதன் பின்னர் மணமக்கள் இருவரையும் சடங்குகள் செய்யவென பெரியவர்கள் அழைக்கவே இளையவர்களின் கூட்டணி தற்காலிகமாய் கலைக்கப்பட்டது.

''அத்தை - மாமாவைக் காணோமே பாவா?'' என்ற அனுஜாவிடம், ''நாளைக்கு கல்யாணத்திற்கு வருவாங்களாம்'' எனப் பதில் கொடுத்த நிஷாந்த், விருந்தினருக்காக போடப்பட்டிருந்த இருக்கையில் சென்று அமர்ந்தான்.

நிஷாந்தின் பூர்வீகமும் கும்பகோணம் என்பதாலும், ஆனந்த் மற்றும் சரிதாவின் குடும்பங்கள் அவர்களுக்கு ஒருவகையில் உறவு என்பதாலும், நிஷாந்தின் உறவினர்கள் சிலர் வருகை தந்த வண்ணமிருந்தனர். அப்படி வருகை புரிந்தவர்கள், நிஷாந்தை அங்கே கண்டுவிட்டு, அவனது காதல் திருமணத்தைப் பற்றி விசாரிக்கவும் செய்தனர்.

அனுஜாவைப் பார்த்து ''இது தான் நீ கட்டிக்கிட்ட பொண்ணா? லட்சணமா தான் இருக்கா! இருந்தாலும்.... நம்ம மனுஷாலேயே பார்க்கக் கூடாதாப்பா? அம்மாக்கு சந்தோஷமா இருந்திருக்கும்... ஹ்ம்ம் எல்லாம் நேரம்!'' என ஒருவர் அலுத்துக் கொண்டார்,

''இவ தான் உன் பொண்டாட்டியா? அம்மா - அப்பா வேண்டாம்ன்னு காதல் கல்யாணம் பண்ணிண்டதா கேள்விப்பட்டேன். இந்த காலத்துப் பிள்ளைகளே இப்படித் தான்... அவா அவா மனசுக்குத் தோணினதை செய்துடுறா...'' என சிலர் சலித்துக் கொண்டனர்.

மேலும், ''கல்யாணத்துக்கு முன்னே கன்னமெல்லாம் புசு புசுன்னு இருக்குமே. இப்போ இப்படி மெலிஞ்சு போயிட்டியேடா ராஜா. உன் பொண்டாட்டி சரியா கவனிக்கிறதில்லையோ? வேலைக்கு வேற போறா போலவே? அவளுக்கு எங்கே சமைக்க நேரம் இருக்கப் போறது... இதே அம்மா சம்மதத்தோட கல்யாணம் முடிச்சிருந்தா, அம்மா வந்து சமைச்சுப் போட்டிருப்பா, ஹ்ம்ம்.''

''இதென்ன, கருவேப்பிலைக்கு குசுவம் சுத்திவிட்ட மாதிரி இத்தனை ஒல்லியா இருக்கா... டயட்ல இருக்காளா? இப்படி இருந்தா உன்னை எப்படி கவனிப்பா?''



''அவா வீட்டில இந்த கல்யாணத்திற்கு ஒத்துக்கிட்டாங்களா? தங்கமா ஓர் மாப்பிள்ளை கிடைக்க கசக்குமா என்ன? கண்டிப்பா ஒத்துக்கிட்டு இருப்பாங்க.''

''அவா மாமிசம் சாப்பிடுவாளாமே? நீயும் பழகிண்டியா? அப்படியேதும் அபச்சாரம் செய்துடாதே!'' என ஆயிரமாயிரம் அறிவுரைகளில் நிஷாந்த் பொறுமையிழந்து கொண்டிருக்க, அனுஜாவோ அழுகையின் விளிம்பில் இருந்தாள். அவளின் முகத்தைப் பார்த்த கணவனோ, இதற்கு மேல் தாங்கமாட்டாள் எனத் தோன்றிவிட, ஆனந்திடம் சொல்லிக்கொண்டு தங்கும் விடுதிக்கு வந்து சேர்ந்தான்.

அவர்கள் பேசிய எல்லாவற்றிலும் ''பாவா, கல்யாணத்திற்கு அப்புறம் ரொம்ப மெலிஞ்சு போயிட்டீங்களா? நான் ஒழுங்காவே உங்களைப் பார்த்துக்கலை... அதான் மெலிஞ்சு போயிட்டீங்க. எனக்குப் பொறுப்பே இல்லை.... இவங்கெல்லாம் உங்க சொந்தக்காரங்க... அப்பப்போ பார்த்திருப்பாங்க. அவங்களே அப்படி சொல்றாங்கன்னா... அத்தை என்ன சொல்வாங்களோ? ஹய்யோ எனக்கு பொறுப்பே இல்லை.... போச்சு...'' எனப் புலம்ப ஆரம்பித்தவளை, ''அஜு, கல்யாணத்துக்கு முன்னாடி என்ன வெயிட் இருந்தேனோ... அதே வெயிட் தான் இப்போவும் இருக்கேன். யாரோ ஏதோ சொல்றாங்கன்னா அதுக்கு போய் இந்த கவலைப்படுறே? பேசாம படு. நாளைக்கு ஆறு மணிக்கு அங்க இருக்கணும்'' என அதட்டிப் படுக்க வைத்தான்.

எப்போதும் போல் படுத்ததும் உறங்கிவிடாமல், நிஷாந்தின் உறவுகள் பேசிய ஓரோர் வார்த்தைகளையும் மனதிற்குள் ஒருமுறையும், வாய்மொழியாய் ஒரு

முறையும் அசைபோட்ட அனுஜாவை அணைத்து, அதட்டி, கொஞ்சி, கெஞ்சி, மிஞ்சி, முத்தமிட்டு சமாதானம் செய்த நிஷாந்திற்கு அடுத்த நாளை நினைத்தால் மிக மிக கலக்கமாய் இருந்தது. இன்றாவது உறவுகள்.... நாளை அவனது பெற்றோர் அல்லவா? அதிலும் சரிதாவின் குடும்பத்தினர் இன்னமும் கோபத்திலிருக்கும் பட்சத்தில் அந்த சங்கடம் வேறு அனுஜாவின் மேல் திரும்பிவிடுமோ? என மிகுந்த கலக்கமாய் இருந்தது.

மறுநாள் காலை, கலக்கத்தின் ஊடே இருவரும் திருமணத்திற்குக் கிளம்பிச் செல்ல, நேற்று போலவே வரவேற்றனர் மணமக்களின் பெற்றோர், ஹோமத்தின் முன்னே அமர்ந்திருந்த ஆனந்தும், சரிதாவும் கையசைத்து வரவேற்க, முன் வரிசையில் அமரப் போன நிஷாந்த். அங்கே அமர்ந்திருந்த பத்மாவதியையும், தரணிதரனையும் பார்த்து லேசாய் அதிர்ந்தான்.

ஆனந்த் மற்றும் சரிதாவுடன் சைகையில் பேசி விட்டுத் திரும்பிய அனுஜாவின் கண்களில் முதலில் பட்டது பத்மாவதி தான். அரக்கில் தங்க ஜரிகையிட்ட பட்டுப்புடவையும், இரட்டை வடை சங்கிலியும். அதை ஒட்டி ஓர் வைர அட்டிகையும், கைகளில் கண்ணாடி வளையல்களுடன் போட்டியிட்ட தங்க வளையல்களும், அவரது அகன்ற காதுகளில் ஜொலித்த ஒன்பது கல் வைரத்தோடும், மூக்கில் மிளிர்ந்த ஐந்து கல் மூக்குத்தியும், நெற்றியில் ஜொலித்த பெரிய குங்கும பொட்டும், எல்லாவற்றும் மேலாக அவர் முகத்தில் மிளிர்ந்த அசாத்திய நிமிர்வும், அந்த நிமிர்வு மகனைக் கண்டதும் கோபமாய் உருமாறி ஏற்கனவே தக்காளிப்பழம் போல் சிவந்திருந்தவரை மேலும் சிவப்பாக்கியிருக்க, அவரைக் கண்டு ஓர் நிமிடம் அரண்டு போனாள் அனுஜா.



அவரது வெளித்தோற்றத்தை புகைப்படத்தில் கண்டிருந்த போதும், அவரின் கோபத்தை இப்போது தானே பார்க்கிறாள், அதனால் உண்டான லேசான பதற்றத்துடன் நிஷாந்தின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டு, அவனின் முதுகு புறம் ஒண்டி நின்றாள். அது தான் அவள் செய்த தப்பு!!

மனைவியின் தொடுகையில் சுயநினைவிற்கு வந்த நிஷாந்த், ''அம்மா'' என்றான் மெல்ல. கண்களில் கனல் பறக்க பத்மாவதி எழ முற்பட, தரணிதரன் அவரின் கைப்பிடித்து அமர வைத்தார்.

தாயின் புறக்கணிப்பை ஒதுக்கிவிட்டு ''டாடி'' என மகன் மெல்ல அழைக்க, அங்கிருந்தும் ஏதும் பதில் வரவில்லை. சட்டென ''எங்களை ஆசீர்வாதம் பண்ணுங்க அம்மா, பண்ணுங்க அப்பா'' என நிஷாந்த் மனைவியுடன் காலில் விழுந்துவிட, பத்மாவதி எழுந்து விட்டார் என்றால் ''நல்... ல்லா இருங்க'' எனத் தடுமாறினார் தரணிதரன்.

''நான் கிளம்புறேன்'' என பத்மாவதி முன்னே நடந்து விட, ''பத்மா, கல்யாண வீட்டில எல்லாரும் பார்க்கிற மாதிரி என்ன இது?'' என அடக்கினார் தரணிதரன்.

''அம்மா, என்னை மன்னிச்சிடுங்கம்மா. என்னை ரெண்டு அடி கூட அடிச்சிடுங்க... இப்படி பேசாம இருக்காதீங்க. ப்ளீஸ்'' என்றான் நிஷாந்த்.

''அத்தை, அவர் மேல எந்த தப்புமில்லை. எங்க வீட்டில... அவசரமா கல்யாணம் முடிவு செய்ததால தான் உங்களை மீறி கல்யாணம் செய்துக்க வேண்டியதா போச்சு. இல்லைனா உங்க சம்மதம் வாங்கின பிறகு

தான் செய்திருப்போம்'' என அனுஜா முதன் முதலா வாய் திறக்க,

''என்ன? என் மேல இருந்த பயம் போயிடுச்சா? பயத்தை மீறி வாயில இருந்து வார்த்தையெல்லாம் வருது? என்னைப் பார்த்தா.... பூதம் மாதிரி... ரத்தக்காட்டேரி மாதிரி... ராட்சசி மாதிரி இருக்கா? என்னைப் பார்த்ததும் உன் புருஷன் மகாராசன் கையை இறுக்கப் பிடிச்சுக்கிற? எங்கம்மா ஒரு மூடம்..... கோபக்காரி.... எதுக்கு எடுத்தாலும் கத்துவாங்கன்னு சொன்னானா உன் புருஷன்? பிள்ளைங்களோட நல்லதுக்குன்னு பெத்தவங்க சொல்றதெல்லாம் வெறும் கத்தல் தானே? அப்படி கத்துற பெரியவங்க உங்களுக்கு எதுக்கு? அவங்க வேண்டாம்ன்னு தானே கல்யாணம் செய்துட்டீங்க... அப்படியே வாழ்ந்து தொலைக்க வேண்டியது தானே? எதுக்கு எங்க உயிரை வாங்குறீங்க? போங்க... என் கண் முன்னாடி நிக்காம போய்டுங்க. இப்போ நீங்க போகலை... நான் போய்டுவேன்'' என அவர் மிரட்ட, அனுஜாவிற்கு கண்ணீர் கரை புரண்டு ஓடிவிட்டது.

''கல்யாண வீட்டில வச்சு எந்த பேச்சு வார்த்தையும் வேண்டாம் நிஷாந்த். அப்புறம் பார்த்துக்கலாம். நீங்க முதல இங்கிருந்து கிளம்புங்க'' என்ற தரணிதரனிடம் ''மாமா, நாங்க...'' என அனுஜா விளக்க முற்பட, ''ப்ளீஸ் மா. உன்னை மருமகளா ஏத்துக்கிற பத்மாவும் இல்லை. ஏன் நானும் இல்லை. கொஞ்ச நாள் போகட்டும். பார்க்கலாம்'' எனக் கையெடுத்துக் கும்பிட்டு விட்டார் பெரியவர்.

அதற்கு மேல் அங்கிருக்க பிடிக்காமல், மனைவியின் கைகளைப் பிடித்து இழுத்தவாறே மேடையேறிய



நிஷாந்த், ''உன் திருமண வாழ்க்கை நிறைந்த சந்தோஷத்தோடும் நிம்மதியோடும் அமைய எங்களது வாழ்த்துக்கள்'' என நண்பனுக்கு வாழ்த்துக் கூறிய கையுடன் ''நாங்க கிளம்புறோம்டா, ஆனந்த். இங்கு சூழ்நிலை அவ்வளவா சரியில்லை. அப்புறமா பேசலாம்'' எனத் தந்தி மொழியில் விடை பெற்றான்.

அனுஜாவின் கண்களில் கலக்கத்துடன் கூடிய கண்ணீரைப் பார்த்த ஆனந்த் ஓர் தலையசைவில் விடை கொடுக்க, ''ஒரு குழந்தை பிறந்தா எல்லாம் சரியாகிடும், அனு! கவலைப்படாம போங்க'' என்றாள் சரிதா.

அவளது அதே வார்த்தைகளை ''பத்மாக்கும் சரி தரணி அண்ணனுக்கும் சரி குழந்தைங்க என்றால் ரொம்ப இஷ்டம். பேரனோ பேத்தியோ சீக்கிரமா ஒரு குழந்தையைப் பெத்து பத்மாவோட கையில கொடுத்திடுமா. அப்புறம் கோபத்துக்கும் தாபத்துக்கும் இடமே இருக்காது. கவலைப்படாம போ... இன்னும் எண்ணி பத்தே மாசத்தில நீயும் நிஷாந்தும் டெல்லியில உங்க குழந்தைக்கு புண்ணியானம் செய்வீங்க பாருங்க'' - வேறு விதமாய் படித்தனர் ஆனந்தின் பெற்றோர்.

அந்த வார்த்தைகள் அனுஜாவின் மனதில் சிறு மின்னல் கீற்றாய் நம்பிக்கையை உண்டாக்கியபோதும், கண்களில் சிறு ஏக்கத்துடன் பெற்றோரின் புறம் ஒரு முறை திரும்பிய நிஷாந்தை கண்டதும் மீண்டும் மனம் முடங்கியது.

வாடகைக்கு எடுத்திருந்த அறைக்குள் நுழைந்த மறுவினாடி, ''என்ன அனுஜா இது? எதுக்கு அம்மாவைப் பார்த்து பயந்தே? அவங்க என்ன பூதமா? பயந்ததுமில்லாம எதுக்கு என் கையைப் பிடிச்சே? முதுகு பக்கம்

வேற ஒண்டுறே? நான் என்ன உனக்கு பாதுகாப்பு அரணா? எங்கம்மா உன்னை என்ன செய்துடப் போறாங்க? ச்சை அவங்களே கோபத்தில இருக்காங்கன்னா... நீ வேற. என்ன அனுஜா? நான் எத்தனை தடவை சொல்லியிருக்கேன். அவங்க படபடன்னு பேசத் தான் செய்வாங்களே ஒழிய... பாசம்ன்னு வச்சுட்டா அவங்களை மாதிரி இல்லைன்னு. அவங்களைப் பார்த்து எதுக்கு அரண்டு போனே? அவங்க உன்னைக் கடிச்சா தின்னுடுவாங்க.. ஒழுங்கா போயிருக்க வேண்டிய பேச்சுவார்த்தை... ச்சே'' எனத் தன் கோபம் முழுதையும் மனைவியின் மேல் பொழிந்து விட்டான்.

ஏற்கனவே புகுந்த வீட்டாரின் புறக்கணிப்பால் உடைந்து போயிருந்த அனுஜாவிற்கு அன்பே உருவான கணவனின் வார்த்தைகள் பெரும் வருத்தத்தைக் கொடுக்க, குடந்தையிலிருந்து குமரிக்குப் பயணப்பட்டுக் கொண்டிருந்த அவளின் மனம் குமுறி அழுதது!

## 6

தாயின் கோபத்திற்கு தாரத்தைக் காரணமாக்கி அவள் மேல் பொங்கி விழுந்த நிஷாந்த், மனைவியின் அகலிகை போன்ற விழிகளில் அடிபட்ட வலி தெரியவும் சட்டென தன்னை மீட்டான். அங்கிருந்த படுக்கையின் மீது தொய்ந்து அமர்ந்தவன், தன் இரு கைகளால் தலையைத் தாங்கிக் கொண்டு குனிந்து தன்னை



சமன்படுத்திக் கொள்ள, அவனால் காயப்பட்டவள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

நூறு பேருக்கும் மேலாய் கூடியிருந்த திருமண மண்டபத்தில் முதன் முறையாக பார்க்கும் மாமியாரிடம் வாங்கிய திட்டும், நிதானமானவர் என்றெண்ணிய மாமனார் காட்டிய ஒதுக்கமும் அவளிடம் ஏற்படுத்தியிருந்த வலியை விட கணவன் காட்டிய கோபமே மிக மிக பெரிதாய் பட்டது.

இது நாள் வரை நிஷாந்த் அனுஜா மீது கோபம் கொண்டதே இல்லை என்று சொல்லிவிட முடியாது; கோபம் கொண்டிருக்கிறான் தான், அவளை அதட்டியிருக்கிறான் தான், சொல்பேச்சு கேட்கவில்லை என்றால் செல்லமாய் சின்னச் சின்ன அடிகள் கூட விழுந்திருக்கிறது தான்; ஆனால் அதிலிருந்தது அக்கறை, அவள் மேல் கொண்ட பாசம், எல்லாவற்றுக்கும் தன் கையை எதிர்பார்த்திராமல் அவள் சொந்தக் காலில் நிற்க வேண்டுமே என்ற ஆசை, சிறு குழந்தை செய்யும் தவறுகளைத் தண்டிக்கும் கண்டிப்பு!

இன்றோ அவன் காட்டியது முற்றுமுதலான கோபமல்லவா? தன் குடும்பத்துடன் இணைவதற்கான வாய்ப்பை அழித்துவிட்டாளே என்ற ஆதங்கம், தாயின் வெறுப்பு தன் மீது திரும்பிவிட்டதே என்ற வெறுப்பு, சுற்றியிருக்கும் சொந்தங்கள் முன்னர் தந்தை தன்னை அன்னியனாய் ஒதுக்கி வைத்ததற்கு மனைவியின் சிறுபிள்ளைத் தனமான செயல்களே காரணம் என்ற கோபம்!

ப்ச். இதற்கெல்லாம் காரணம் அவளின் சிறுபிள்ளைத் தனம்... அவன் சொல்வது போல் அவன் அன்னையைப்

பார்த்து ஏன் பயப்பட்டோம்? அவர்களும் மனிதர்கள் தானே? தலையை கொய்தா விடுவார்கள்? நூறு பேர் கூடியிருக்கும் அரங்கத்தில் அவர்களின் வார்த்தைகள் தீகங்குகள் என்றால் அதை தூண்டிய சிறு பொறி எனது மடத்தனமான அச்சம் தானே? தான் மட்டும் அப்படி குழந்தைத்தனமாய் கணவனிடம் ஒண்டாமல் இருந்திருந்தால் இந்நேரம் ஓர் சுமூகமான உறவு ஏற்பட்டிருக்குமோ? என்ற ரீதியில் எண்ணங்கள் ஓட கணவனின் முன்னே மண்டியிட்டு அமர்ந்தவள், அவன் மடியில் தலை வைத்துக்கொண்டு ''சாரி பாவா. என்னால தான்...'' எனத் தொடங்கி, இதுவரை தன் மனதில் ஓடிய அனைத்தையும் மென் குரலில், தேம்பலின் ஊடே சொல்லி முடித்தாள்.

அவளது விழிகளில் வழிந்த கண்ணீரிலேயே தன் தவறை உணர்ந்திருந்த நிஷாந்த் - இப்போது மனைவி தன் மனநிலையை ஊகித்து, தன் கோபத்திற்கான காரணத்தை - (அவளுக்கு எதிரானதே என்றாலும்) நியாயப்படுத்தவே, அவளின் குணம் கண்டு குன்றி போனான்.

எப்போதுமே பிறரது நடவடிக்கைகள் தன்னை வருத்துவதாய் இருந்தாலும் அவர்களுக்கு சாதகமாய் காரணம் தேடி, அவர்களை நியாயப்படுத்தும் மனைவியின் குணம் தெரிந்திருந்தும் அவளைத் திட்டியது மேலும்மேலும் மனதை வலிக்கச் செய்தது.

அவளது குழந்தைத்தனம் தெரிந்திருந்தும் தாய் - தந்தையிடம் அவளை இட்டுச் சென்றது தான் தானே?

போக, தாயின் குணத்தைப் பற்றி அவளிடம் எச்சரித்ததும் தான் தானே? ஓர் சின்ன நடுக்கம், புதிதாய் காணும் நபரிடம் ஏற்படும் ஒதுக்கம், தாயின் முகத்தில்



ஜொலித்த கோபத்தைக் கண்டதும் ஏற்பட்ட தடுமாற்றம் என்று அவள் தன் கையைப் பற்றியது ஓர் தப்பா?

அம்மாவிற்கு அவளைத் தெரியாது.... அதனால் அப்படி சொன்னார்கள் என்றால் அவளைப் பற்றி எனக்கு எல்லாம் தெரியும் எனப் பெருமை பீற்றிக் கொள்ளும் தானும் அல்லவா திட்டிவிட்டோம்?

அவள் தன்னிடம் ஒண்டியது தவறு என்பதால் தாய் முறுக்கிக் கொண்டார்களா? இது என்ன புது கதை... இது இல்லை என்றால் இன்னொன்று என்று வேறோர் காரணம் தேடி அவர்களை ஒதுக்கியிருக்கப் போகிறார்கள்.

எப்படியும் நடந்தேறியிருக்கும் ஒன்றிற்காக, தன்னையே நம்பி வந்த ஒருத்தியை நோகச் செய்துவிட்டோமே?

அவளின் குழந்தை மனதால் கவரப்பட்டு காதல் கொண்ட தானே அவளின் குழந்தை மனதை குற்றவாளியாக்கி அவளைத் தண்டித்துவிட்டோமே என்ற தவிப்பு நெஞ்சில் ஆறாய் ஓட, தன் மடியில் முகம் புதைத்து தான் செய்தது தான் ஹிமாலய தவறு என்பது போல் பேசிக்கொண்டிருந்த மனைவியை தூக்கித் தன் மடியில் இருத்திக்கொண்டான்.

அவனின் கழுத்தைக் கட்டிக் கொண்டு ''நாம அத்தை - மாமாவை இன்னொரு வாட்டி பார்த்திட்டு வரலாமா? நான் செஞ்சது தப்புன்னு மன்னிப்பு கேட்கட்டுமா? இல்லைன்னா நான் வரலை.... இங்கேயே இருக்கேன். நீங்க மட்டும் போய் பேசிட்டு வரீங்களா?'' என்ற மனைவியை இறுக அணைத்து.

''யாரும் எங்கேயும் போக வேண்டாம். போனதும் போதும், பேசினதும் போதும், அவமானப்பட்டதும் போதும், கிளம்பு, நம்ம வீட்டுக்குப் போகலாம்'' என்று அவன் முடித்துவிட,

அனுஜாவின் ''ஏன் பாவா? ஒரே ஒரு தடவை பேசிப் பார்க்கலாமா? என்னைப் பார்த்தாதான் அத்தைக்குக் கோபம் வரும்... நானும் தான் லூசு மாதிரி... பச் ஒழுங்கா நடந்திருக்கலாம் இல்ல பாவா? நான் தான் எல்லாத்தையும் கெடுத்துட்டேன்'' என்ற புலம்பல் ஓர் அழுத்தமான பார்வையில், அதை விட அழுத்தமான முத்தத்தில், அதையும் தாண்டி இறுக்கமான அணைப்பில், ''அம்மா எனக்கு எவ்வளவு முக்கியமோ, அதே அளவு நீயும் முக்கியம் கண்ணம்மா'' என்ற பேச்சுவார்த்தையில், எல்லாவற்றுக்கும் மகுடம் வைத்தாற்போல் ''ஐ லவ் யு, அஜூ குட்டி'' என்ற உள்ளார்ந்த காதல் வெளிப்பாட்டில் நின்றே போனது.

அடுத்து வந்த அரை மணிநேரத்தில் தங்கியிருந்த அறையைக் காலி செய்தவர்கள். சென்னைக்குப் பயணப்பட்டனர். பயணம் தொடங்கிய சில வினாடிகளிலேயே ''பாவா, அத்தைக்கு குழந்தைங்கன்னா ரொம்பப் பிடிக்குமா? பெரிய அத்தானுக்கு குழந்தைங்க இருக்க மாதிரி நீங்க சொல்லலையே? ஒரு வேளை மறந்துட்டீங்களோ?'' என அவனிடம் ஓர் கேள்வி கேட்டு, அவன் சொல்லாமல் போனதற்கு அவன் சார்பாய் இவளே ஓர் காரணமும் தேடினாள்.

அவள் கேட்ட கேள்வியை விட, அவளது பிறரை நியாயப்படுத்தும் குணமே மீண்டும் மனதிற்கு இனிமை கொடுக்க, இவளைப் போய் என்ன வார்த்தை



பேசிவிட்டார்கள் எனத் தாயின் மீது சிறு வருத்தம் தோன்றி மறைய, இன்னும் சிறிது காலத்தில் சரியாகிவிடும். அதுவும் தாய்க்குப் பிடித்த மழலையுடன் போய் இறங்கினால் உருகிவிடுவார்கள் என்ற நம்பிக்கை பிறக்க ''மறக்கலைடா. அண்ணாவும் அண்ணியும் பி.ஹெச்.டி. படிச்சிட்டு இருக்காங்க இல்ல. படிச்சு முடிச்சதும் குழந்தை பெத்துக்கலாம்ன்னு முடிவு பண்ணியிருக்காங்க'' என வெளிநாட்டில் வாழும் தன் அண்ணன் சத்யனைப் பற்றியும், அண்ணி நிர்மலாவைப் பற்றியும், அவர்கள் வருங்கால, எதிர்காலத் திட்டம் குறித்தும் கூறினான்.

''ஹோ, ஆமா இல்ல. அவங்க ரெண்டு பேரும் கண்டாக்டருக்கு லண்டன்ல படிக்கிறாங்க. இன்னும் இரண்டு வருஷத்தில அவங்க படிப்பு முடிஞ்சு, இந்தியா வந்ததும் தான் குழந்தைன்னு சொன்னீங்க... நான் தான் மறந்துட்டேன். சாரி பாவா!'' என உடனே ஒப்புக்கொண்டவள், உடனே ''அவங்களுக்கு குழந்தை பிறக்கிற வரைக்கும் நாமளும் பெத்துக்கக்கூடாதா? அச்சச்சோ, குழந்தை பிறக்காம நாம எப்படி அத்தையைப் போய் பார்க்கிறது? ஒண்ணு... ரெண்டு... அப்புறம் மூணு.... நாலு வருஷம் ஆகிடுமே பாவா?'' என அரண்டு மிரண்டு போனாள்.

அவளின் முகத்தில் விளையாட்டுத் தனம் மருந்துக்கும் இல்லாமல், நிஜமான கவலை முழுதாய் நிறைந்திருக்கவே ''அஜூ, அவங்களுக்காக நாம வெயிட் பண்ணனும்ன்னு அண்ணனும் சரி, அண்ணியும் சரி எதிர்பார்க்க மாட்டாங்க'' என்றான் நிஷாந்த் சமாதானமாக.

''ஆனா... ஆனா, அவங்களும் நம்ம கூட பேசுறதில்லையே. நாம ஒரு தடவை கூப்பிட்டபோதும் கூட... மூஞ்சில அடிச்சமாதிரி பேசலை என்றாலும் நல்லாவும் பேசலையே பாவா. நம்ம கல்யாணத்தில அவங்களுக்கு இஷ்டமில்லையா பாவா?'' என்றாள் அனுஜா மீண்டும் கேள்வியாக.

''இஷ்டமில்லை.... இஷ்டமிருக்கு என்று சொல்ல முடியாது. அப்பா - அம்மா சம்மதமில்லாம அவசர அவசரமா கல்யாணம் செய்துக்கிட்டோம்ன்னு அண்ணாக்குக் கோபம். காதலில் உறுதியா இருந்தா இன்னும் கொஞ்ச நாள் காத்திருக்கலாமே. அப்பாவும் அவங்க ஒத்துக்கலை என்றால் கல்யாணம் செய்துக்கவேண்டியது தானே! இப்போவே என்னன்னு அண்ணிக்கு வருத்தம். எல்லாத்துக்கும் மேலா நமக்கு சப்போர்ட் பண்றது தெரிஞ்சா அம்மா - அப்பா என்ன நினைப்பாங்களோ என்ற கவலை. ஆனா, இந்தியா வரும்போது கண்டிப்பா நம்மளைப் பார்க்க வருவாங்கன்னு எனக்குத் தோணுது'' என்றான் நிஷாந்த் விளக்கமாக.

அவன் கூறியதில் மனம் வாடினாலும், அதிலிருந்த உண்மையை ஒத்துக்கொள்வதில் தயக்கம் காட்டாத அனுஜாவிற்கு மீண்டும் குழந்தையிடம் வந்து சேர்ந்தது எண்ணம்.

சில நிமிட அமைதிக்குப் பின்னர், 'அப்போ நாம சீக்கிரமே குழந்தை பெத்துக்கலாம் இல்லையா பாவா? குழந்தைன்னு நம்ம வீட்டில ஓர் சின்னக்கண்ணன் வந்துட்டா... அத்தை - மாமாவும் சரி, எங்க அம்மா - அப்பாவும் சரி ஓடி வந்திடுவாங்க தானே? எங்க வீட்டிலேயும்.... அதாவது எங்க அப்பா - அம்மாக்கு நான்



ஒரே பொண்ணா.... பேரன் பிறந்தா ரொம்ப ரொம்ப சந்தோஷப்படுவாங்க. அப்பா ஊரையே கூட்டி, கடா வெட்டி, கறி சோறு போட்டிருவார்... ம்ம்... எனக்கு வேலை கிடைச்சதுக்கே என்ன மாதிரி அமளி.... துமளி பட்டது தெரியுமா. ஊரையே வளைச்சு கறி விருந்து கொடுத்தார்'' எனச் சொல்லிக் கொண்டே போனவள், ''நான் கறி சாப்பிடறதை விட்டுடுறேன் பாவா'' என்றாள் பட்டென.

அவளது குழந்தை ஆசையிலும், குழந்தை செல்வத்தால் இழந்த செல்வங்கள் அனைத்தையும் தன் வசமாக்கிக் கொள்ளும் அவளது ஆர்வத்தையும் ஓர் மென் வருடலுடன் பார்த்திருந்த நிஷாந்த், பட்டென்று வந்து விழுந்த அவளது அறிவிப்பில் திகைத்து ''ஹே, ஏன் அஜு? அதெல்லாம் வேண்டாம்டா. எனக்காக எதையும் மாத்திக்க வேண்டாம் குட்டிம்மா... உனக்கு நான் - வெஜ் சாப்பிடறது எவ்வளவு பிடிக்கும்ன்னு எனக்குத் தெரியும். அதை யாரோ ஒருத்தரோட வார்த்தைக்காக விடவேண்டாம். நீ நீயாவே இரு... எனக்கு அது தான் வேணும்'' என்று அவளை சமாதானப்படுத்தினான்.

அவனின் சமாதானத்தில் அமைதியடையாத அனுஜாவின் தன் வாதங்கள் எதுவும் எடுபடாமல், எப்போதும் போல் நிஷாந்தின் வார்த்தைகளே கடைசி வார்த்தைகளாய் முடிய, அவனை எதிர்த்துப் பேசாத அனுஜா மனதிற்குள் ஓர் தீர்மானத்திற்கு வந்தாள். கணவனிடம் மாமிசம் சாப்பிடவில்லை என்று சொன்னால் தானே ''ஏன்.... அதெல்லாம் அவசியமில்லை'' என்று வாதாடுவான்? சொல்லாமலே நிறைவேற்றலாம் என மனைவி எண்ண, கணவனோ'' உன்னை நான் அறிவேன்.

அத்தோடு என் வழிக்கு உன்னைக் கொண்டு வரும் சூட்சமம் எனக்குத் தெரியும்'' என்ற எண்ணத்துடன் அவனும் பேசாமல் இருந்தான்.

அடுத்து சில நொடிகள் மௌனம் நிலவ, மாமிசத்தை விட்டு மாமியாரிடம் தாவினாள் அனுஜா. ''அத்தைக்கு பெண் குழந்தை தான் இஷ்டமா பாவா? நீங்க ரெண்டு பேரும் பசங்களா போனதால குட்டிப்பாப்பா தான் பிடிக்கும் இல்லையா? ம்ம்... எங்க வீட்டிலேயும் பாப்பா தான் பிடிக்கும். நான் ஒரே பொண்ணா இருந்தாலும்... எனக்கும் ஒரு பொண்ணு தான் பிறக்கணும்ன்னு ஆசைப் படுவாங்க. அந்தளவுக்கு எங்க சொந்தக்காரங்க வீட்டில எல்லாருமே பசங்க தான். அதனால பொண்ணு பிறந் தாலும் சந்தோஷப்படுவாங்க. பொண்ணு பாப்பான்னா நிறைய டிரஸ் வாங்கலாம்.... நகை வாங்கலாம்... வித விதமா அழகு பார்க்கலாம் இல்ல... எல்லாருக்கும் ஒரே சந்தோஷமா இருக்கும்'' என கிருஷ்ணனிடம் இருந்து தவழ்ந்தாடும் சக்தி தேவிக்கு மாறியிருந்தன அவளின் ஆசைகள்.

அங்கே சுற்றி இங்கே சுற்றி முடிவில் ''உங்களுக்கு என்ன பாப்பா வேணும் பாவா?'' என முக்கிய கேள்விக்கு வந்து சேர்ந்தவளிடம், ''நீயே இன்னும் நிறைய வளர ணும். அதுக்குள்ளே என்னடா பாப்பா? கொஞ்ச நாள் போகட்டுமே?'' என்றானே பார்க்கலாம். அனுஜாவிற்கு சொத்தென்று ஆகிவிட்டது.

அவளின் பத்து நிமிட மௌனத்தில் அவளின் எண்ண ஓட்டங்களும், மன அலைப்புருதலும் புரிய அவன் வெறும் வாய் வார்த்தைக்காக சொன்னதே அவளை இத்தனை தூரம் பாதித்துவிட்டது என்பதை புரிந்து



கொண்ட நிஷாந்த் ''பாப்பாக்கு என்ன பேர் வைக்க லாம்டா'' என்றான் தன் சம்மதத்தை மறைமுகமாய் பறைசாற்றியபடி.

''ஹான். இப்போ தானே... என்ன அவசரம்ன்னு கேட்டீங்க? ப்ச்... போங்க பாவா..... எனக்கு ரொம்ப கஷ்டமாகிடுச்சு தெரியுமா? இன்னும் எத்தனை வருஷம் இப்படி தனியா... பெத்தவங்க ஆசியில்லாம இருக்கிற துன்னு... ச்சே' என அவனிடம் குறை கொண்டவள், ''ம்ம்... என்ன பேர் வைக்கலாம்... நாம வைக்க வேண் டாம். பெரியவங்களே வைக்கட்டும்'' என்றாள் பெருந் தன்மையாக. அவளின் ஆசைகளை இறைவனும், கணவனும் நிறைவேற்ற நாமும் பிரார்த்திப்போம்!!

காரில் ஏறி அமர்ந்து ஓர் ஐந்து நிமிட அமைதி கிடைத் தாலும் தன்னை மறந்து உறங்கிவிடும் அனுஜா, இன்று கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்திற்கும் மேலாய் புகுந்த பிறந்த வீட்டு உறவுகளுடன் தங்களை இணைக்கப் போகும் தங்கள் குழந்தையை பற்றிய தன் கற்பனை களில் உறங்காமாலிருக்க, கணவனே ''கொஞ்ச நேரம் தூங்கேன், அஜு?'' என்றான் அவளின் புருவத்தை நீவிக் கொடுத்து. நேற்று இரவும் அவனின் சொந்தங்கள் பேசிய பேச்சை எண்ணி மருகியவளின் தூக்கம் ஒழுங் காக அமையாதது அவன் அறிந்ததே அல்லவா? கூடுத லாய் இன்று பட்ட வேதனை வேறு அவளை சோர்வுற செய்திருக்கும் என அவன் எண்ண, வேதனையை விட வேதனையை விலக்கிவிடும் வரவை எண்ணி அனுஜா வின் மனம் அமைதியே அடைந்திருந்தது.

''ம்ம்... சரி'' என அவனின் வருடலுக்கும் வார்த்தைக் கும் பணிந்து அனுஜாவின் இமைகள் மெல்ல

மூடிக்கொள்ள, அவளுக்குப் பிடித்தமான ஓர் பாடலை ஓட விட்ட நிஷாந்த் மௌனமாய் வாகனத்தைச் செலுத்தினான். மனம் இன்று காலை சந்தித்த பெற்றோரைச் சுற்றியும், அவர்களின் விலகலைச் சுற்றியும் ஓடிக்கொண்டிருந்தது. யோசித்துப் பார்க்கையில் அவர்கள் மீதும் தவறிருப்பது போல் தோன்றவில்லை - இருபத்தியெட்டு ஆண்டுகள் போற்றி வளர்த்த மகனின் திருமணத்தை தங்கள் இஷ்டம் போல் நடத்த முடியவில்லையே என்ற கோபத்துடன், வந்திருந்த கல்யாணத்திற்குப் பெண் வீட்டிலிருந்து முறையான அழைப்பு வரவில்லையே என்ற ஆதங்கமும், இன்னமும் தங்கள் மீது சரிதாவின் வீட்டார் கொண்ட கோபம் குறையவில்லையே என்ற வருத்தமும் சேர்ந்துகொள்ள, அதற்கு காரணமாய் இருந்த தன் மீதும் முக்கியமாய் மருமகளின் மீதும் தங்கள் கோபத்தைக் கொட்டி விட்டனர். அவர்கள் மீறிக் கொண்டு செய்த திருமணத்திற்கு, இதைக் கூடத் தாங்கிக் கொள்ளவில்லை என்றால் எப்படி? ம்ம் கொஞ்ச காலம் தான், அஜுவின் எண்ணப்படி தங்களுக்கு ஓர் குழந்தை பிறந்து விட்டால்... என அவன் எண்ணிக் கொண்டே போக,

சட்டென விழித்தெழுந்த அவனின் மனைவியோ, ''பாவா, பாருங்களேன்... நமக்கு ஒரு பொண்ணு - ஒரு பையன்; இரட்டைக் குழந்தை பிறக்கப் போகுது'' என்றாள் கண்களில் ஒளியுடன். கண்கள் வெளியிட்ட அந்த ஒளியில் பெரும் நம்பிக்கை, நம்பிக்கையினால் முகத்தில் தோன்றிய மலர்ச்சி எனப் பார்க்கவே மிக அழகாய் இருந்தவளின் கன்னம் தொட்டு ''தூங்கலையா?'' என்றான் கணவன் மிருதுவாக.



''தூங்கிட்டு தான் இருந்தேன்... கனவு!'' என சிறு வெட்கப் புன்னகை பூத்தவள், ''குழந்தை பிறந்ததும் எல்லாரும் நம்மளை சேர்த்துப்பாங்க தானே?'' என்றாள் சிறு கலக்கத்துடன்.

அவளின் மலர்ந்த முகத்தில் வாட்டத்தின் நிழல் படிய ஆரம்பித்ததுமே, ''கண்டிப்பாடா. அதுக்கு முன்னாடியே எல்லாம் சரியாகிடும்!'' என்ற அவனின் வாக்கியம் நிறைவாகப் போகிறது என்பதை நிஷாந்த் அறியவில்லை! அதே போல், அது நடந்தேறும்போது அதை சந்தோஷமாய் ஏற்றுக் கொள்ளும் மனநிலை அவனிடம் இருக்கப்போவதில்லை என்பதையும் அவன் அறிந்திருக்க வாய்ப்பில்லை!

எது எப்படியோ? இப்போது அவனின் மனைவி ''ம்ம் சரி பாவா'' என அமைதி பெற்றதோடு, கண்களை மூடி உறங்க முயன்றாள். முயலத்தான் செய்தாளே ஒழிய அவளால் நிம்மதியாக உறங்க முடியவில்லை என்பது அவளது இமைகளின் அரவணைப்பிற்கு உட்படாமல் இங்கும் அங்குமாய் ஓடித் துடித்த முயற்குட்டி கருவிழிகளின் ஆட்டத்தில் வெளிப்பட்டது.

மனைவியின் நிம்மதியில்லா உறக்கநிலை - திருமணத்திற்கு முன்னர் கவலைகளின்றி சின்னச் சிட்டாய், உறவுகளின் அரசியாய், கட்டுக்களற்ற கன்றாய் அவள் வலம் வந்த நிலையை நிஷாந்தின் மனதிற்குள் கொண்டு வந்து, அவளை சந்தித்த நாளில் அவள் முகத்தில் படர்ந்திருந்த சந்தோசம் முதல் இன்று அவள் முகத்தில் குடிகொண்டிருக்கும் வேண்டுதல் வரை சஞ்சரிக்க வைத்தது.

அனுஜா என்ற அழகு தேவதை அவன் வாழ்வில் நுழைந்த முதல் நாள் - பெங்களூரில் அவன் பார்த்துக் கொண்டிருந்த வேளையில் சுவாரஸ்யமில்லை என்பதால் சென்னையில் அவன் திறமைக்கு தீனி போடும் விற்றுமுதல் வேலைக்கு விண்ணப்பித்து, பல வகை தேர்வுகளுக்குப் பின்னர் ''விற்று முதல் மேலாளர்'' பதவிக்குத் தேர்வாகி, சென்னையிலிருக்கும் ஓர் மென் பொருள் நிறுவனத்திற்குள் அவன் காலடி எடுத்து வைத்த நாள் தான்!

வேலைக்கான உத்தரவுடன் அந்த நிறுவனத்தின் வரவேற்பில் நின்றிருந்த தன் பின்னே வந்து நின்ற அனுஜாவை, நிஷாந்த் அப்போது கவனிக்கவில்லை. வரவேற்பாளர் கொடுத்த படிவத்தை வாங்கிக் கொண்டு ''யாரோ ஊழியர்'' என்ற எண்ணத்தில் அவன் ஒதுங்கி வழிவிட, ''ஹலோ சார், நான் இந்த கம்பெனில புதுசா வேலைக்குச் சேர வந்திருக்கேன். ஹெச். ஆர்-ரை பார்க்கணும்'' என்ற குரலில் நிஷாந்திற்கு சிரிப்பு வந்து விட்டது. ஏனென்றால், அந்தக் குரலில் அப்படி ஓர் குழந்தைத்தனம்; அவள் வேண்டுமென்றே குழந்தைத் தனமாக பேசவில்லை என்றாலும் ஓரோர் வார்த்தைக்கும் அவள் கொடுத்த அழுத்தம், இரு வார்த்தைக்கு ஊடே அவள் விட்ட இடைவெளி, மிருதுவாய் இருந்த அவளின் குரல் எனக் கேட்போர் காதுகளில் புகுந்து, மனதிற்குள் ஓர் சிரிப்பை உண்டு பண்ணும் பக்குவத்தில் இருந்தது அவளின் குரல்.

வந்த சிரிப்பை முயன்று அடக்கிக் கொண்டு நுழைவட்டைக்கான படிவத்தை அவன் நிரப்ப, அவன் அமர்ந்திருந்த சோபாவின் மறுபுறத்தில் வந்து அமர்ந்தவள்



தான் பெற்று வந்த படிவத்தின் மீது கண்களை ஒட்டியதை ஓரக் கண்ணால் பார்த்தவனுக்கு, படிவத்தில் முதலெழுத்தை எழுதுவதற்கு முன்னர் சின்னதாய் அவள் போட்ட ''உ'', ''என்னைப் போலவே'' என்ற உணர்வை ஏனோ உண்டு செய்தது.

அதன் பின்னர் ''பெயர்'' என்ற தலைப்பின் கீழ் அவள் எழுதிய ''அனுஜா சரவணப்பாண்டியன்'' வரையே அவள் மீது கவனமிருந்தது. தலையை உலுக்கி அவள் படிவத்திலிருந்து தன் படிவத்திற்குக் கவனத்தைத் திருப்பியவன் அதன் பின் அவள் பக்கம் திரும்பவில்லை.

சற்று நேரத்தில், வரவேற்பாளரின் முன்னே அவன் நின்றபோது ''அண்ணா'' என்றழைத்து அவருடன் உறவாடிக் கொண்டாடிக் கொண்டிருந்தாள். ஐந்து நிமிட இடைவேளையில் ''சார்'' ''அண்ணா'' வாகியிருந்ததை சிறு வியப்புடன் பார்த்திருந்த நிஷாந்திடம் ''நீங்க பார்க்க வேண்டிய நபர் - முதல் கட்டிடத்தின் மூன்றாம் தலத்தில் வலது பக்க இணைப்பிரிவில் மூன்றாம் எண் அறையில் இருப்பார்கள். நேராய் சென்று இடது புறம் திரும்பினால் முதல் கட்டிடம் வரும்'' என வழி கூறிய வரவேற்பாளர். அனுஜாவிடமும் அதே வழியைக் கூறி, கூடுதலாய் தங்கள் நிறுவனத்தின் வேலை அவளுக்கு நன்மை தருவதாய் அமைய வாழ்த்தும் கூறி அனுப்பினார்.

இருவரும் மனிதவள மேலாளரின் அறையை நோக்கி நடக்க, அவன் பின்னே வந்து கொண்டிருந்த அனுஜா இரண்டே எட்டில் அவனை அணுகி ''ஹலோ சார், என்

பெயர் அனுஜா சரவணப்பாண்டியன். நியூ ஜாய்னீ. நீங்க?'' என்றாள் சிநேகமாய்.

''உங்களை சந்திச்சதில் ரொம்ப சந்தோஷம் மிஸ். அனுஜா? மிஸ் தானே?'' என்றுவிட்டு, அவள் சிறு சிரிப்புடன் தலையாட்டவும் ''என் பெயர் நிஷாந்த் தரணிதரன். நானும் இன்னைக்குத் தான் வேலையில் சேர வந்திருக்கேன்'' என்றான் அதே சிநேகத்துடன்.

''ஹே, நீங்க முதல்ல எங்க வேலை பார்த்தீங்க? நான் பூனே-ல இருந்தேன்'' என மேலும் பேச்சை வளர்த்தவள் அவள் தான்.

அவன் வேலை பார்த்த நிறுவனத்தின் பெயரைச் சொன்னதும், ''வாவ், அந்தக் கம்பெனியா? எவ்ளோ பெரிய கம்பெனி? அந்த வேலையை விட்டுட்டு இங்க ஏன் சார் வந்தீங்க?'' எனக் கண்ணை உருட்டி, மூக்கைச் சுருக்கி, உதட்டைத் துருத்தி அவள் கேட்க, ''நீங்க எதுக்காக வந்தீங்க?'' என்றான் நிஷாந்த் சிரிப்புடன்.

''எனக்கு பூனே-ல இருந்து வாராவாரம் வீட்டுக்குப் போக கஷ்டமா இருந்துச்சு. அதான் ஓடி வந்துட்டேன். அப்பா வேலையே விட்டுடுன்னு சொன்னாங்க... அதுக்கு இது பரவாயில்லை தானே? வீட்டுக்கும் போய்க்கலாம்... வேலையும் பார்க்கலாம்... என்ன சொல்றீங்க?'' என பல நாள் பழகியவனிடம் பேசுவது போல் அனுஜா பேசவும் நிஷாந்திற்கு அவள் குரலைப் போலவே மனமும் குழந்தைத்தனத்தில் தோய்த்ததோ என்ற எண்ணம் எழுந்தது.

அவள் தனது பதிலுக்காக காத்திருப்பது புரிய, ''ம்ம் சரி தான்!'' என்றான் அவன் ஒப்புதலாய்.



''ம்ம்... அந்த வேலையை விட்டுட்டு வந்துட்டேனே... சரியா தான் இருக்கணும்!'' என சிரித்தவள், ''நீங்க ஏன் வந்தீங்கன்னு சொல்லவே இல்லையே?'' என்றாள் மீண்டும்.

''உங்களை மாதிரி நாலு பேரோட வம்பு பேசலாம்ன்னு தான் வந்தேன்'' என அவன் பதில் கூற, ஒரு நிமிடம் ஒரே நிமிடம் அவனை விழி விரித்துப் பார்த்தவள் ''ஹையோ சும்மா'' என்றாள் சிரிப்பும் வெட்கமுமாய்.

''ம்ம்... நான் சின்னப்பொண்ணு.... யார்கிட்ட என்ன பேசணும்ன்னு தெரியாம லூசு மாதிரி பேசிடுறேன்... என்கிட்டே வேலையை விட்ட காரணம் சொன்னா புரியாதுன்னு தானே சொல்ல மாட்டேங்கிறீங்க. அதனால பரவாயில்லை'' என அவள் பெருந்தன்மையாய் விட்டுக் கொடுக்க, ''சந்தடி சாக்கில என்னை வயசானவன்னு சொல்லிட்டீங்களே... இது நியாயமா அனுஜா?'' என அவன் வினவ, ''ச்சே ச்சே நான் அப்படி நினைக்கலை. நீங்க ஒண்ணும் வயசான மாதிரி தெரியலை. சாரி'' என மனதார ஒப்புக்கொண்டவளின் குணம் அப்போது அவன் மனதை நிறைத்துவிட்டது! அப்போது காதலால் அல்ல! இப்போது காதலால் மட்டுமே!

## 7

நிஷாந்த் - அனுஜாவின் அறிமுகம் நடந்து முடியவும் அவர்கள் பார்க்க வேண்டிய நபரின் இருக்கை வந்து

சேரவும் சரியாக இருக்கவே. தொடர்ந்த சில மணி நேரங்கள் புதிதாய் சேர்பவர்களுக்கான நடைமுறைகளில் கழிந்தது.

அவர்கள் இருவர் மட்டுமே அன்றைய தினம் வேலையில் சேர்ந்ததால் ஆறேழு மணி நேரங்கள் இழுத்தடிக்கும் முதல் நாள் நடைமுறைகள் வெகு சீக்கிரமே முடிந்துவிட, உணவு இடைவேளைக்கு முன்னரே நிஷாந்திற்கு அவனின் துறையிலிருக்கும் முக்கிய நபரை சந்திக்கும்படி உத்தரவு வந்து விட்டது. நிஷாந்தைப் போல் ஓர் குறிப்பிட்ட துறைக்கு என்று தேர்வாகி வராததால், அனுஜாவின் வேலை தளமும் இடமும் முடிவாக சிறிது காலம் பிடிக்கும் எனக் கூறிய மனிதவள மேலாளர், தற்காலிகமாய் ஓர் கணினியைக் கொடுத்து அவளை அங்கேயே உட்கார வைத்தார்.

நிஷாந்த் அவரிடம் ஓர் நன்றியோடும், அனுஜாவிடம் ஓர் ''பிறகு பார்க்கலாம்'' என்ற விடைபெறலோடு நகர ''நிஷாந்த் சார், உங்களுக்கு ஆட்சேபணை இல்லைன்னா இன்னைக்கு லஞ்ச் என் கூட சாப்பிடுறீங்களா? எனக்கு இங்க வேற யாரையும் தெரியாது. அதான்'' என்றாள் அனுஜா சிறு சங்கோஜத்துடன்.

''கண்டிப்பா. உங்க போன் நம்பர் கொடுங்க. லஞ்ச் கிளம்பும் போது கால் பண்றேன்'' என்றவன் அவளின் கைப்பேசி எண்ணை வாங்கிக் கொண்டு, தன்னதையும் அவளிடம் கொடுத்துச் சென்றான்.

ஆனால் அவனின் எண் தன் கைப்பேசியில் குடிபெயர்ந்ததையோ, மதிய உணவிற்கு அவளுடன் வருவதாக சொன்னதையோ நிஷாந்த் மறந்து போவதற்கு, அவன்



சந்தித்த விற்று முதல் அதிகாரியின் தோழமையான பேச்சும், அவரின் வார்த்தைகளில் வெளிப்பட்ட வேலையின் புதுமையும் மட்டுமே போதுமானதாய் இருந்தன.

''லஞ்ச் எடுத்திட்டு வந்திருக்கீங்களா நிஷாந்த்! ஹொவ் அபௌட் ஜாயினிங் மீ?'' என அவர் கேட்டதும், சந்தோஷமாகவே தலையாட்டியவனுக்கு அனுஜாவின் ஞாபகம் சுத்தமாக வரவில்லை. தான் செய்யப் போகும் வேலையிருக்கும் சவால்கள் பற்றிய உரையாடலுக்கு இடையே உணவை அவன் முடிக்கும் தருவாயில், அவனின் கைப்பேசி ''அதிக வேலையா? மணி இரண்டாகிவிட்டதே! சாப்பிட வருகிறீர்களா?'' என்ற குறுந்தகவலைத் தாங்கி வந்தது.

அந்த குறுஞ்செய்தியை கண்டதும் தான் ''ஆஹா, அவளிடம் உணவிற்கு அழைத்துச் செல்வதாக கூறிவிட்டு அவளை அழைக்கவே இல்லையே? அவள் இன்னும் சாப்பிடவில்லை போலிருக்கிறதே?'' என மனம் உறுத்த, உடனிருந்தவரிடம் ''ஒரு நிமிடம்'' என சொல்லிவிட்டு அனுஜாவின் எண்ணை அழுத்தினான்.

அந்தப் பக்கம் ''ஹலோ நிஷாந்த் சார், லஞ்ச் போகலாமா? எனக்கு ரொம்ப பசிக்குது'' என்ற குரல் கேட்டதும் ''சாரி அனுஜா, இங்க என் பிரண்ட் ஒருத்தரோட லஞ்ச் வரவேண்டியதா போச்சு. உங்களைக் கூப்பிட முடியலை. இப்போ வரீங்களா? நான் வெயிட் பண்றேன்'' எனத் தன் நினைவின்மைக்கு அவன் சமாதானம் தேட, ''ஹோ சாப்பிட்டாச்சா? எனக்காக நீங்க காத்திருக்க வேண்டாம். நான் பார்த்துக்கிறேன். ஒண்ணும் பிரச்சனையில்லை, தேங்க்ஸ். பாய்'' என்ற அனுஜாவின் குரலில்

கோபமிருந்ததா, வருத்தமிருந்ததா, இல்லை ரெண்டுமா என இன்றுவரை அவனால் கண்டுபிடிக்க முடிய வில்லை.

ஆனால் மறுநாள் மதிய உணவு இடைவேளையின் போது நிஷாந்த் மறக்காமல் அவளை அழைத்தபோது, ''நேற்று உன் நண்பர்களுடன் சென்றாய் தானே? இன்று எதற்கு கூப்பிடுகிறாய்?'' எனக் கேள்வி கேட்காமல், ''போலாமே'' என அவனுடன் இணைந்துகொண்ட வளிடம் ''நேற்று என்ன சாப்பிட்டீர்கள் அனுஜா?'' என அவன் கேட்க ''ம்ம்... என்ன சாப்பிட்டேன்? ஹான்... மாதுளை ஜூஸ் ஒண்ணு குடிச்சேன்'' என்றாள் சாதாரண மாக.

''சாப்பாடு ஒண்ணும் சாப்பிடலையா?'' என்ற அவ னின் கேள்விக்கு ''பேசிட்டே சாப்பிட்டா தான் என்னால சாப்பிடவே முடியும். அதான் ஜூஸ் குடிச்சுட்டேன்'' எனப் பதில் கொடுத்தவள், மேலும் அவனை வருந்த வைக்காமல் உணவு தேர்வில் ஈடுபட்டாள். அவளின் பேச்சை வைத்தும், அவளின் உணவுத்தேர்வைப் பார்த் தும் ''சரியான சாப்பாட்டு ராமியாக இருப்பாள் போலவே'' என நிஷாந்த் எண்ண, அவனின் எண்ணங்களைப் பொய்யாக்குவது போல அனுஜா உண்டதை விட உதிர்த்ததே மேலாக இருந்தது. ''பேசிட்டே சாப்பிட்டா நன்றாக சாப்பிடுவேன்'' என்றவள், பேச மட்டும் தான் செய்தாளோ என்றெண்ணும் அளவிற்கு தட்டில் கால் பங்கு கூட காலியாகவில்லை.

தட்டில் உணவை வைத்து வீணாக்குவது என்பது நிஷாந்தால் சகித்துக் கொள்ள முடியாத ஒன்று என்ப தால், மீதமிருந்த உணவுடன் அவள் எழ முற்பட்ட போது



''அனுஜா, என்கிட்டே ஓர் கெட்ட, நல்ல பழக்கம். தட்டில் வைத்த உணவை வீணாக்கினா எனக்குப் பயங்கர கோபம் வரும். நம்ம தேவைக்கேற்றதை தான் தட்டில் வச்சுக்கணும்... அதை சாப்பிட்டு முடிச்சிட ணும்ன்னு நினைக்கிறவன் நான். நானும் சரி, என் பிரண்ட்சும் சரி இதை கடைபிடிக்கணும் என்பது என் னோட எதிர்பார்ப்பு'' என அவன் முடிக்க, அனுஜா அமர்ந்து விட்டாள்.

''என்னை உங்க பிரண்ட்ன்னு சொன்னதற்கு தேங்க்ஸ். இப்போ சாப்பிட்டுடுறேன். நீங்க கொஞ்ச நேரம் பேசிட்டு இருந்தீங்கன்னா வேகமா சாப்பாடு உள்ள போய்டும்'' என்றவள் அவனின் வார்த்தைகளை நல்லவிதமாகவே எடுத்துக் கொண்டது நிஷாந்திற்கு இதம் கொடுத்தது. பலர் ''அது உன் கொள்கை. எனக்கு என்ன வந்தது?'' என முகத்தில் அடித்தது போல் பதில் கொடுத்திருப்பதைக் கண்டிருந்தவனுக்கு, ''நீ என் நண்பன், உன் கொள்கைகளை நான் மதிக்கிறேன்'' என்பது போல் அமர்ந்திருக்கும் அனுஜாவை பிடிக்க ஆரம்பித்தது.

அந்த நட்பு மேலும் சில நாட்களில் நன்றாக வேர்விட, குடும்பம், படிப்பு, வேலை, எதிர்காலத் திட்டம், பிடித் தவை, பிடிக்காதவை எனப் பலவற்றும் பரிமாறப் பட்டன. அதிலும் முதல் தடவையாக தன் குடும்பத்தைப் பற்றி அனுஜா கூறியபோது அவள் கண்களில் தெரிந்த சந்தோசம் - ஹப்பப்பா! காண கண் கோடி வேண்டும்!

''உங்க வீட்டில செதுக்கி வச்ச மாதிரி நாலு பேரா? எங்க வீட்டில எப்பவும் ஜேஜேன்னு ஆளுங்க இருந் துட்டே இருப்பாங்க... தெரியுமா? தினமுமே திரு

விழாக்கு சமைக்கிற மாதிரி சாப்பாடு சமைப்பாங்க'' என அவள் ஆரம்பித்தபோது.

''ம்ம்... அப்படி எத்தனை பேரு தான் இருக்கீங்க? கூட்டுக் குடும்பமா?'' என்றான் கேள்வியாய். ஆற்று வெள்ளமாய் தன் குடும்பத்தைப் பற்றி கூற அனுஜா விற்கு அந்த ஒரு கேள்வி போதுமானதாய் இருந்தது. ''ம்ம்... கூட்டுக் குடும்பம் தான். எங்க ஐயாவுக்கு (தாத்தாவுக்கு) மூணு பசங்க, நாலு பொண்ணுங்க. எங்க அப்பா தான் பெரியவரு. எங்க சித்தப்பா ரெண்டு பேர் குடும்பமும், எங்க குடும்பமும் ஐயா - ஆச்சி கூட ஒண்ணா தான் இருக்கோம். எங்க அத்தைங்க எல்லாரை யும் பக்கத்து பக்கத்தில தான் கட்டிக் கொடுத்திருக் கோம்.... குன்னூர், கொல்லிமலை, மேட்டுப்பாளையம், அரவங்காடு இப்படி.... அதனால அவங்களும் அடிக்கடி வந்து போயிட்டே இருப்பாங்க. எல்லார் வீட்டுப் பசங் களும் சேர்ந்தா... ஒரே கும்மாளம் தான். சூப்பரா இருக்கும்'' என அவள் ரசித்துக்கூற,

''உன் கூட பிறந்தவங்க எத்தனை பேர்?'' என்றான் நிஷாந்த் அவளைத் தூண்டிவிடும் ஆர்வத்துடன். கண் களை உருட்டி உருட்டி, கைகளை ஆட்டி ஆட்டி அவள் பேசுவதைக் கேட்க அவனுக்கு ஏனோ பிடித்திருந்தது.

''என் கூட பிறந்தவங்கன்னா யாருமே இல்லை. ஆனா, எனக்கு பத்து அண்ணா இருக்காங்க'' என்ற வளின் முகத்தில் புதிர் போட்ட பெருமை! புதிரை மேலும் துருவாமல் நிஷாந்த் அமைதியாகவே இருக்க, அவளே ''எப்படி தெரியுமா? எங்கம்மாக்கு கல்யாண மாகி பதினோரு வருஷம் புள்ளையே இல்லை.... அதுக்



குள்ளே எங்க சித்தப்பா ரெண்டு பேருக்கும் ஆளுக்கு ஒரோர் பசங்க பிறந்துட்டாங்க. அதே மாதிரி அத்தைங்க வீட்டிலேயும் எல்லாருமே பசங்க. பெரிய அத்தைக்கு மூணு பசங்க... பார்வதி அத்தைக்கு ஒரு பையன்... கருணா அத்தைக்கும் சரி சின்ன அத்தைக்கும் சரி ஆளுக்கு ரெண்டு பசங்க. எப்படி கூட்டிக் கழிச்சுப் பார்த்தா... பதினோரு கணக்கு சரியா வருதா?'' என்றாள் சிரிப்புடன்.

''அடேங்கப்பா, கேட்கிற எனக்கே கண்ணைக் கட்டுதே! அவங்களை எப்படி ஞாபகம் வச்சிருக்கே? அப்புறம்.... பத்து அண்ணா எங்கிருந்து வந்தாங்க? ரெண்டு அண்ணா தான். மித்த எல்லாரும் முறை பசங்க...'' என அவன் சிரிக்கவும், ''அதெல்லாமில்ல. அவங்க அண்ணா தான். நான் அப்படி தான் கூப்பிடு வேன்'' என அழுத்தமாய் மறுத்த அனுஜா ''இவங்க எல்லாருக்கும் அப்புறம் நான் பிறந்தேனா? எங்க ஐயாவுக்கும், ஆச்சிக்கும் ஒரே சந்தோசம். குலம் துலங்க மகாலட்சுமி பிறந்துட்டான்னு...'' ''நல்ல மனசிருக்கவங் களுக்குத் தான் பெண் பிள்ளை பிறக்குமாம்... எங்க குடும்பத்தில பெண் வாரிசு இல்லைன்னதும் எல்லாருக் கும் ஒரே கவலை.... நான் பிறந்தேனா எல்லாருக்கும் ஒரே சந்தோசம். எங்கப்பாக்கு மட்டுமில்ல... எங்க ஆச்சிக்கு... எங்க வேலு சித்தப்பாக்கு, ராசு சித்தப்பாக்கு... சித்திக்கு எல்லாருக்கும் செல்லமோ செல்லம். அம்மா தான் கண்டிப்பாங்க... அவங்களும் கண்டிக்கலைன்னா அவ்ளோ தான்!'' எனக் கையை விரித்து அபிநயம் பிடிக்கவே நிஷாந்திற்கு வேறோர் உலகத்தில் சஞ் சரிப்பது போன்ற உணர்வும்.

தன் எண்ணத்தின் தாக்கத்திலிருந்து வெளியே வந்த நிஷாந்த் ''உன் மேலேயே எல்லாரும் பாசமா இருக் காங்கன்னு உங்க அண்ணா எல்லாருக்கும் ஒரே கோபமா? உன்னை அடிச்சு... அடிச்சு வச்சிருவாங் களா?'' என்று வினவியது தான் தாமதம் ''ஹான்... அடிக்கிறதா? என்னை எல்லாரும் எப்படி பார்த்துப்பாங்க தெரியுமா? ராணி மாதிரி... நான் என்ன கேட்டாலும் வாங்கித் தருவாங்க... என்னை தனியாவே விடமாட் டாங்க... எனக்கு இன்ஜினியரிங் சீட் கிடைச்சதும் சின்ன அண்ணன் தான் அப்பாகிட்ட சொல்லி கோயம்புத்தூர்ல சேர்த்துவிட்டுச்சு... ஹாஸ்டல்ல இருந்தேன்னு தான் பேரு... வாராவாரம் ஊருக்குப் போய்டுவேன்... வீட்டில கறி சமைச்சா சித்தியும் பெரிய அண்ணனும் எடுத்திட்டு ஹாஸ்டல் வந்திடுவாங்க... மெஸ் சாப்பாட்டுக்கும் பணத்தைக் கட்டிட்டு வீட்டுச் சாப்பாடு சாப்பிட்ட ஒரே ஆள் நான் தான்னு பிரண்ட்ஸ் எல்லாரும் கேலி செய்வாங்க.... இப்பவும் படிச்சு முடிச்சதும் காம்பஸ்ல வேலை கிடைச்சு பூனேல வேலைன்னு சொன்னதும் அப்பாவும், ஆச்சியும் உன்னைய விட்டுட்டு இருக்க முடியாது... போகக்கூடாதுன்னு சொல்லிட்டாங்க. அண்ணே தான் ''அவ ஆசைக்கு வேலைக்குப் போகட்டும். இப்பவே புள்ளையைக் கட்டிக்கொடுத்து என்ன செய்யப்போறோம்ன்னு'' அடிச்சுப் பேசிடுச்சு. எங்க வீட்டில எல்லாருக்குமே என்னைப் பிடிக்கும்! ரொம்பவே பிடிக்கும்!'' என அவள் சிலிர்த்துக்கொண்டு சீறிப் பாய, ''உன்னை யாருக்குத் தான் பிடிக்காது? ஒரே நாளில் என் பிடித்ததை உனதாக்கிக்கொண்டவள் தானே!'' என்ற எண்ணம் நிஷாந்தின் மனதில் சீறிப் பாய்ந்தது!



''உங்க அண்ணன்களுக்கு பேர் இல்லையா? சின்ன அண்ணன்... பெரிய அண்ணன்... இதான் பேரா?'' என மேலும் அவன் சீண்ட, ''கிண்டல் பண்ணாதீங்க! எங்க பெரிய அண்ணன் பேரு - ரவீந்திரன். சின்ன அண்ணன் பேரு - ராகவன்'' என்றாள் அவள் பதிலாய்.

''அதென்ன அவங்களுக்கு மட்டும் ''ர''ல ஆரம்பிக்க பேரு? உனக்கு மட்டும் ''அ''- ல?'' என ஏதாவது கேட்க வேண்டுமே என அவன் கேட்க, ''உங்க அண்ணன் பேரு சத்யன் தானே? உங்களுக்கு மட்டும் ஏன் நிஷாந்த்ன்னு வச்சாங்க? சும்மா சும்மா என்னையே கேள்வி கேட்கிறீங்க? அப்புறம்... அப்புறம்... எனக்கு கோபம் வந்திடும்'' என்றவளின் குரலில் கோபத்திற்கு மாறாய் சிரிப்பே இருந்தது.

''ஹய்யோ... அம்மா... அனுஜா முகத்தில தாண்டவ மாடுற கோபத்தைப் பார்க்க பார்க்க எனக்கு அப்படியே குலையே நடுங்குதே! என்னை அடிச்சிடாதீங்க... மேடம். ப்ளீஸ் மேடம். நான் வேற எங்க வீட்டுக்கு ஒரே இரண்டாவது பிள்ளை. கொஞ்சம் தயவு பண்ணுங்க மேடம்'' என அவன் போலியாய் கெஞ்ச, ''ஹையே, போங்க'' என அவனிடம் முகம் திருப்பி முயன்றவள் அது முடியாமல் சிரித்த போது, அவளின் கைப்பேசி அழைத்தது.

அதில் மிளிர்ந்த எண்களைப் பார்த்ததும் ''ஹையா அண்ணா'' எனக் குதித்தவள், ''சொல்லு அண்ணே'' என்றாள் மிகுந்த சந்தோஷத்துடன். ''ஹோ சாப்பிட் டேனே? பிரியாணி!'', ''நீ என்ன சாப்பிட்டே?'', ''இப் போவெல்லாம் மிச்சம் வைக்காம ஒழுங்கா சாப்பிட்டுடு றேன்'', ''அதான் அன்னைக்கு சொன்னேனே...

நிஷாந்த்ன்னு ஒருத்தர், நான் வேலைக்கு சேர்ந்தன்னைக்கு அவரும் சேர்ந்தார்ன்னு. புது இடமில்ல... அதான் அவர் கூட தான் சாப்பிட வருவேன். அவருக்கு சாப்பாடு வீணாக்கினா பிடிக்காது. அதான்...'', ''ஹ்ம்ம் போ அண்ணா!'', ''ம்ம் இதோ இருக்கார். பேசுறியா?'', ''ஒரு நிமிஷம் இரு. கொடுக்கிறேன்'' என சிறு சிறு இடைவேளைக்கு நடுவே மேற்கூறிய வாக்கியங்களைப் பேசியவள், முடிவில் ''எங்க சின்ன அண்ணா.... ம்ஹ்ம்ம்ம்... ராகவன் அண்ணா உங்ககிட்ட பேசணுமாம்'' எனக் கூறி நிஷாந்திடம் கைப்பேசியை நீட்டினாள்.

''ஹலோ சார்'' என இருவரும் ஒரே நேரத்தில் பேசத் துவங்க, அங்கே நட்பாய் ஓர் சிரிப்பலை படர்ந்தது. சில நிமிட பரஸ்பர உரையாடலுக்குப் பின்னர், ''அனுவை ஒழுங்கா சாப்பிட வைக்கிற உங்களுக்கு எங்க குடும்பம் சார்பா ஓர் பூங்கொத்தும், மிகப் பெரிய நன்றியும். அவளோட சாப்பாட்டைப் பத்தி தான் இங்க எல்லாருக்குமே கவலை... அப்பாகிட்ட சண்டை போட்டு அவ ஆசைப்படி வேலைக்கு அனுப்பிட்டேனே ஒழிய எனக்குமே அவள் உடம்பை நினைச்சு ஒரே பயம். இன்னும் சின்னப்பிள்ளை தான் அவ... கூடவே இருந்து... இதை சாப்பிடு... அதை செய்... இதை செய்யாதேன்னு ஒருத்தர் சொல்லிட்டே இருக்கணும். மித்த விஷயத்தில கூட என்ன மாதிரி முடிவெடுக்கிறதுக்கு முன்னாடியும் என்கிட்டே கேட்டுடுவாளா... அதனால சரி, தப்பு சொல்றதுக்கு எனக்கு ஒரு வாய்ப்பிருக்கும். ஆனா, சாப்பாடு விஷயத்தில வழியே இல்லாம போச்சு. இப்போ உங்ககூட சாப்பிடறதால அவ உடல்நிலை நல்லா இருக்கும்ன்னு எனக்கு ஒரு நம்பிக்கை. தேங்க்ஸ்



நிஷாந்த்!!'' என ராகவன் பேசி முடித்த போது அதில் நிஜமான பாசம் நிறைந்திருப்பது நிஷாந்திற்குப் புரிந்தது.

''என்னோட கொள்கையை மதிச்சு அவ நடந்துக்கிறதுக்கு நான் தான் நன்றி சொல்லணும். ஆனா, அனுஜாவைப் பார்த்தா அடம் பிடிச்சு நினைச்சதை சாதிக்கிற ரகம் மாதிரி இல்லையே... நீங்க என்னடாவென்றால் படிப்புக்கும் வேலைக்கும் ரொம்ப போராடின மாதிரி சொல்றீங்களே?'' என அவன் தன் சந்தேகத்தைக் கேட்க,

''அனுஜா - அடம் பிடிக்கிறதா? ஹஹஅஹா... மேடம் காரியம் சாதிக்கிற அழகை நீங்க பார்க்கணுமே? எங்க ஆச்சியும், அப்பாவும் அவ போகக் கூடாதுன்னு காரணமா அடுக்குவாங்களா... இந்த மேடம் அவங்க சொல்ற காரணத்திற்கு மேலும் மேலும் காரணம் கண்டு பிடிச்சு உரம் சேர்க்குமா? இந்த ஜால்ரா வேலையெல்லாம் நல்லா பண்ணிட்டு... ''எனக்குப் பிடிச்சிருக்குப்பா!'' ''ஆச்சி, எனக்கு ஆசையா இருக்கே''ன்னு ஒரு பரிதாப லுக் விடும் பாருங்க. எங்க வீட்டுப் பெருசுங்க மனசு அப்படியே ஐஸ் மாதிரி உருகிடும். ''ரொம்ப ஆசைப்படுதே'' ன்னு அவங்க கரைஞ்சிட்டு இருக்கும் போது நாம போய் ஒண்ணு, ரெண்டு பிட்டை போட்டோம்ன்னு வைங்க. காரியம் கை கூடின மாதிரி தான்!'' என அவன் விம் போட்டு விளக்க, நிஷாந்த் வாய் விட்டு நகைத்தான்.

''என்ன சொன்னாங்க? அண்ணா என்ன சொன்னாங்க?'' என அவனைத் துளைத்து எடுத்தவளிடம் ''ரெண்டு பிரண்ட்ஸ்க்கு நடுல எவ்வளவோ இருக்கும். அதையெல்லாம் உன்கிட்ட சொல்ல முடியுமா?

அப்புறம் புரளி பேசினான் இந்த நிஷாந்த்ன்னு வரலாறு என்னைத் தப்பா பேசும் இல்ல'' என நிஷாந்த் பதிலடி கொடுக்க, ''ரொம்பத்தான். நீங்க சொல்லாட்டி போங்க.. ரெண்டு தடவை சிணுங்கினா அண்ணனே சொல்லிடும். அப்படியே இல்லைன்னாலும் வேலு சித்தப்பாகிட்ட சொல்லி விஷயத்தை வாங்கிப்பேன்'' என சாதாரணமாய் முடித்தபோதும்'' என்ன பேசினார்கள்?'' என்ற ஆர்வம் வண்டிவண்டியாய் வழிந்தது.

அடுத்த நாள் மதியம் வந்து ''நீங்களும் அண்ணனும் என்ன பேசினீங்கன்னு எனக்குத் தெரியுமே!'' என அவள் கூறியபோது, அவளின் சந்தோஷம் நிஷாந்திற்கும் தொற்றிக்கொண்டது. அதே சந்தோஷம் அன்றிரவு தன்னை அழைத்த ஆனந்திடமும் வெளிப்பட்டு விட ''என்னடா? இன்னைக்கு ஓவர் குதூகலமா சுத்திட்டு திரியுறா? பேய் ஏதும் நெஞ்சுக்குள் பாய்ஞ்சுடுச்சா?'' என நண்பன் வினவ, ''அதெல்லாமில்லையே! ஏன் கேட்கிறே?'' என்றான் நிஷாந்த் முயன்று வரவழைத்த சாதாரண குரலில்.

''ம்ம்... மந்திரிச்சு விட்ட கோழியை பிடிக்கப் போறவன் மாதிரி ஒரே குஜால்ஸா இருக்கியேன்னு தான்'' என மீண்டும் வலை விரித்தான் நண்பன். ''ம்ம்... அப்படி தான் வச்சுக்கோயேன்... உன் பாஷையில மந்திரிச்சு விட்ட கோழி ஒண்ணு என் கண் முன்னாடி நடமாடுது. ஆனா, அதை நான் பிடிப்பேனா? இல்லை.... விடுவேனா... ம்ம் தெரியலை'' என்றான் நிஷாந்த் பூடகமாய்.

''கொஞ்சமேனும் தெளிவா பேசுடா'' என ஆனந்த் பல்லைக் கடிக்க, ''நீ பேசினது தெளிவுன்னா... நான் சொன்ன பதில் தெளிவு ஸ்கொயர். போடா'' என



நிஷாந்த் வெறுப்பேற்ற, ''சரி, உன் பாஷையிலேயே மந்திருச்சு விட்ட கோழிக்கு பேர் என்ன?'' என்றான் ஆனந்த், தன் புத்திகூர்மையைத் தானே மெச்சியபடி.

''ம்ம்... உங்க ஊர்ல கோழிக்கெல்லாம் பேர் வைப்பாங்களா? போடா லூசு'' என நிஷாந்த் மீண்டும் பின்னடைய, அங்கே நண்பர்களின் வாய் யுத்தம் வெற்றிகரமாய் நடைபெற்ற போதும், மந்திரித்து விடப்பட்ட கோழியின் பெயரோ விவரமோ துளி கூட வெளிவரவில்லை. நிஷாந்திற்கே அவனின் எண்ணங்களின் மீது பிடிப்பு வரவில்லையே! அந்த பிடிப்பு அடுத்த நாளே வரும் என்பதையும் அவன் அறியவில்லை!

நிஷாந்தும் அனுஜாவும் வேலைக்குச் சேர்ந்து இரு மாதங்கள் கழிந்திருந்த நிலையில், அலுவலகம் வந்த எல்லா நாட்களிலுமே இருவரும் மதிய உணவிற்கு ஒன்றாக சென்றனர் எனக் கூற இயலாது. அனுஜாவும் திட்டப்பணியில் (ப்ராஜெக்ட்டில்) அமர்த்தப்பட்டதை தொடர்ந்து, இருவரின் சக ஊழியர்களுடன் மதிய உணவை உண்ணும் நாட்களும் வரத்தான் செய்தன. அப்படிப்பட்ட ஓர் நாளாய் அன்றைய தினம் அமைய, நிஷாந்த் அவனின் சகாக்களுடன் உணவிற்குச் செல்ல, அனுஜா அவளுடன் வேலை செய்யும் ரூபாவுடன் செல்வதாக கூறியிருந்தாள்.

உணவை முடித்துக்கொண்டு உணவகத்தை விட்டு வெளியேறிய நிஷாந்தின் கண்களில், அந்தப் பெரிய உணவகத்தின் ஓரமாய் போடப்பட்டிருந்த இருவர் அமரும் இருக்கையில் சோகமே உருவாய், கூடுதலாய் கண்களில் நீருடன் அமர்ந்திருந்த அனுஜா பட்டது

அவனின் மூளைக்கு ''ஓர் தற்செயல் நிகழ்வு'' போலிருந்தாலும், உள் மனமோ 'உணவிற்கென அந்த கூடத்திற்குள் நுழைந்தது முதல் தன் கண்களும் மனமும் அவளைத் தேடித் தவித்ததை' ஒத்துக்கொள்ளவே செய்தது!

மூளைக்கும், மனதிற்குமான போராட்டத்தை விட அவளின் சோகம் படிந்த முகம் ஏதோ செய்ய, உடனிருந் தவர்களிடம் வாயில் வந்த காரணத்தைக் கூறிவிட்டு அவளிடம் ஓடினான்.

அவனின் வரவைக் கூட கவனிக்காமல் அமர்ந்திருந் தவளின் எதிரே போய் நின்றவன், ''சாப்பிட்டியா இல் லையா? எதுக்கு இங்க உட்கார்ந்திருக்கே?'' என்றான் உரிமையாக.

''ஹான்... நிஷாந்த்!'' என அவனைப் பார்த்து ஒரு நிமிடம் விழித்தவள், ''ம்ஹூம், சாப்பிடலை. ரூபா பயங்கரமா திட்டிட்டா. எனக்கு மனசே சரியில்லை'' என்றாள் சிறு குரலில். ''மணி என்னாகுது தெரியுமா? இரண்டே முக்கால்! இந்நேரம் மீல்ஸ் கவுண்ட்டர் க்ளோஸ் செய்திருப்பாங்க. வா... சாண்ட்விச் அட்லீஸ்ட் சாப்பிடு. எழுந்திரு'' என அதே குரலில் அதட்டி, உண்ண வைத்தான்.

வாங்கிய சாண்ட்விச்-சில் பாதி காலியானதும் ''ரூபா எதுக்கு திட்டினா? ரெண்டு பேரும் ஒரே லெவல்-ல தானே இருக்கீங்க? அப்போ வேலை விஷயமாக இருக்க முடியாது... வேறென்ன விஷயம்? அவளைத் திட்ட விட்டுட்டு நீ என்ன செய்துட்டு இருந்தே?'' என்ற துருவல் போதுமானதாய் இருந்தது.



அவனிடம் ஓர் வாழ்த்தட்டையை எடுத்து நீட்டி விட்டு, அதைப் பார்த்ததும் அவனின் புருவங்களும் உதடுகளும் சுளிக்கக் காத்திருந்தவள் போல் ''இதை யார் கொடுத்தா தெரியுமா?'' என்றாள் கேள்வியாக.

''அதான் போட்டிருக்கே...'' வித் லவ்-செந்தில்''ன்னு. கீழ ஹார்ட் வேற... கருமம். யாரு இந்த செந்தில்? உன் கூட வேலை பார்க்கிறவனா?'' என்ற போது நிஷாந்தின் பற்கள் நறநறவென கடிபடுவது அவனுக்கே கேட்டது.

''ம்ம். ஆமா... என்னோட ப்ராஜெக்ட் மேட். ஆனா...'' என அவள் முடிக்கும் முன்னர், ''நீ என்ன சொன்னே? என்ன ஆனா? என் கூட பேசற மாதிரி அவன்கிட்டயும் வம்பு பேசிட்டு இருந்தியா? யாரை எந்த இடத்தில வைக்கணும்ன்னு சுத்தமா அறிவே கிடையாது. ஒரு தடவை சகஜமா பேசிட்டாபோதும்... லொடலொடன்னு எல்லாத்தையும் கொட்டிட வேண்டியது'' எனப் பொரிந்து தள்ளிவிட்டான், நிஷாந்த். அந்த நிமிடம் தன் மனமே நிஷாந்திற்கு மிக தெளிவாய் புரிந்தது! தனக்கு சொந்தமானதை பிறர் சொந்தம் கொண்டாடும் போது வரும் உரிமை உணர்வு... அந்த உரிமையின் உள்ளர்த்தம் நேசம் என்பதை உணர்ந்தான் அவன்!

ஆனால் அவனின் கோபத்திற்கு அவசியமே இல்லை என்பது போல் அமைந்தது அனுஜாவின் பதில். ''ம்ம். நான் ஒண்ணும் லொட லொடன்னு பேசமாட்டேன்'' என லேசாய் கோபம் கொண்டவள், சொல்ல வந்ததை முடித்து விடும் வேகத்தில் ''நான் என்ன சொல்ல வரேன்னு கொஞ்சம் கேளுங்க. அவன் என்னோட ப்ராஜெக்ட் மேட் தான். ஆனா, அவன் ரூபாவோட பாய்பிரண்ட்!'' என்றாளே பார்க்கலாம்.

அதை கேட்டதும் மனதின் இறுக்கம் சட்டென வடிய, வாய் விட்டு நகைத்தான் நிஷாந்த். அவனை விழியால் பார்த்திருந்த அனுஜாவைப் பார்த்து மேலும் மேலும் சிரிப்பு பொங்க "ஹோ, அவன் கார்டு கொடுத்ததும்... அதை அப்படியே ரூபாகிட்ட ஒப்பிச்சியாக்கும். அவன் மேல பாயாம... உன்னைப் பிராண்டிட்டாளா மகராசி!" என்றான் மிக மிகச் சரியாக.

அந்த சிரிப்பு - 'உன்னை நான் அறிவேன்!' என்ற இறுமாப்பில், தனக்கு சொந்தமான ஒன்று தன்னை விட்டுப்போகவில்லை என்ற நிம்மதியில், வேறு எவனும் கொத்திக்கொண்டு போய்விடும் முன்னர் தன்னை புரியவைத்துவிட வேண்டுமே என்ற பரபரப்பில், தன்னை அவள் புரிந்துகொள்ள வேண்டுமே என்ற வேண்டுதலில், மகுடம் வைத்தாற்போல் இவை எல்லாவற்றையும் வழிநடத்திய அவனின் காதலினால் மிகுந்த வசீகரத்துடன் மின்னியது!!

## 8

ரூபாவின் காதலன் - அவனின் தோழியான தன்னிடமும் காதலை சொல்லிவிட்டானே என்ற வருத்தத்திலிருந்த அனுஜாவோ, செந்திலிடம் (அதாவது ரூபாவின் காதலனிடம்) என்ன சொல்வது எனத் தெரியாமல், அவன் கொடுத்த வாழ்த்தட்டையை தன் தோழியான அவன் (முன்னால்) காதலியிடம் கொடுத்துவிட்டு,



செந்திலிடம் கேட்குமாறு கூற, ரூபாவோ அனுஜா தான் தன் காதலை அவள் பக்கம் வலைவிரித்து இழுத்து விட்டாள் என்ற ரீதியில் பேசி அனுஜாவை வருந்த வைத்துவிட்டிருந்தாள்.

தான் என்ன தப்பு செய்தோம் என்றே அறிந்திராத அனுஜாவிற்கு, ரூபாவின் பேச்சுக்கள் பெரும் வருத்தத்தை உண்டு பண்ணியிருந்த அந்த வேளையில் நிஷாந்தும் சிரிக்கவே அவளுக்குப் பெரும் வருத்தமாக இருந்தது.

"ரூபா.... என்னைத் திட்டினது உங்களுக்கு சிரிப்பா இருக்கா? எத்தனை பேர் திரும்பிப் பார்த்தாங்க தெரியுமா? செந்தில் கார்டு கொடுத்ததுக்கு நான் என்ன செய்வேன்? எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு" என அவன் சோகமே உருவாய் பதில் கொடுக்கவும் தான் நிஷாந்த் தன் சிரிப்பைக் கைவிட்டான். தோழியென்று எண்ணியவள் ஓர் பொது இடத்தில் தாறுமாறாய் பேசியது அவளை மிகவும் பாதித்து விட்டது என்பது நிஷாந்திற்குப் புரிந்தது. இவளும் தான் செந்தில் கொடுத்தான் என்பதற்காக அந்த வாழ்த்தட்டையை அவனது முன்னாள் காதலியிடமே கொடுக்கலாமா? என மனம் மீண்டும் சிரித்தாலும், அதில் நிரம்பியிருந்த அறியாத்தனத்தையும் தோழிக்கு தீங்கு இழைக்க எண்ணிய ஒருவனின் மடத்தனத்தை படம் பிடித்துக் காட்டிய பண்பும் அவளை மெச்சவே செய்தது.

"செந்தில் அவளை விட்டுட்டான்னு கோபம் போல. பாவம்! இருந்தாலும்... நான் அவளுக்கு உதவி தானே செஞ்சேன்?"- ரூபாவின் கோபத்திற்குக் காரணம்

தேடினாலும், மீண்டும் வருந்தவே செய்தது அனுஜா வின் மனம்.

''சரி விடு! தன்னோட காதல் கை நழுவி போய்டுச் சேங்கிற கடுப்பில் ரூபா கத்தியிருப்பா. அதான்... செந்திலை பத்தி ரூபாகிட்ட சொல்லிட்டே இல்ல.... இனிமேலாவது கவனமா இருப்பா. ஹ்ம்ம்... இனிமேலும் இந்த நிலைமை வராம இருக்கணுமே!!'' என அவளைத் தேற்றிவிட்டு, முடிவில் போலியாய் ஓர் பெருமூச்சு விட்டு, நலியாமல் ஓர் தூண்டில் போட்டான் நிஷாந்த்.

ஆனால் விழுந்தது தூண்டில் என்பதை உணரவும் ஓர் உள்ளுணர்வு வேண்டுமல்லவா? அது இல்லாமல் போனதால் ''ம்ம். ஆமா! இப்போ என்கிட்டே கார்ட் கொடுத்த மாதிரி வேற யார்கிட்டயும் ''ஐ லவ் யு'' சொல்லி... அவங்க சரி சொல்லிட்டா.... ரூபா பாவ மில்ல'' என அவனின் தூண்டிலுக்குள் வேறோர் மீனை நுழைக்க முயன்றவளைப் பார்த்து தலையில் அடித்துக் கொண்டான் நிஷாந்த்.

''அவன் யார்கிட்ட வேணும்னா ''ஐ லவ் யு'' சொல் லட்டும். அது அவன் தலையெழுத்து... அவனை நம்பி அவனோட ஊர் சுத்துற ரூபாவோட தலையெழுத்து! நான் கேட்கிறது... செந்தில் மாதிரி வேற யாராவது வந்து உன்கிட்ட ''ஐ லவ் யு'' சொல்லமாட்டாங்கன்னு என்ன நிச்சயம்? அப்படி சொன்னா நீ என்ன செய்வேன்னு யோசிக்கிறேன்'' என விம், சபீனா என எல்லாவற்றையும் போட்ட பின்னரே தூண்டிலையும் போட்டான்.

''ஹான்... ஆமா! நான் இப்படி யோசிக்கவே இல் லையே?! அப்படி யாராவது சொன்னா... அவனோட லவ்வர் கிட்ட சொல்லிட வேண்டியது தான். சிம்பிள்!''



என சிரித்தவளின் தலையில் ஓங்கிக் கொட்ட வேண் டும் போலிருந்தது நிஷாந்திற்கு.

''அறிவுக்கொழுந்து! அப்படியே அறிவு அருவியா வழியுது போ... அவனுக்கு லவ்வர் இல்லைன்னா என்ன செய்வே?'' என அவன் மடக்க,

''ஹான்... ஆமா! எனக்கு உன்னைப் பிடிக்கலைன்னு சொல்லிடுறேன். அப்போ ஓடிப் போய்டுவான் தானே? பிடிக்காத பெண்ணை எப்படி லவ் பண்றது? கஷ்ட மில்லையா? எப்படி நம்ம ஐடியா?'' என்றவள் பதிலும் சொல்லி, அவனின் அபிப்ராயமும் கேட்டாள். ''பிடிக் கலைன்னு சொல்லிட்டா... அவன் விட்டுட்டுப் போய்டு வானா? அதுக்கு நீ வேற யாரையாவது லவ் பண் ணின்னா... அவன் லெட்டரே கொடுக்க மாட்டானே? என்ன நான் சொல்றது?'' என அவன் தூண்டிலை வலையாக மாற்ற,

''அப்படியா? லவ் பண்றதா? ஹ்ம்ம்...'' என முகத் தைச் சுளித்து யோசித்தவள், ''நான் தான் யாரையுமே லவ் பண்ணலையே? அப்புறம் எப்படி? பொய் சொல்ல சொல்றீங்களா?'' என்றாள் யோசனையாக.

''பொய் எதுக்கு? உண்மையே பேசு!!'' என ஆரம் பித்து, ''போன நிமிஷம் வரைக்கும் லவ் பண்ணலை சரி. இந்த நிமிஷத்தில இருந்து லவ் பண்ண ஆரம் பிச்சிடேன்...'' என்றவனை இடைமறித்து... ''யாரை?'' என அவள் கேட்க, ''என்னை'' என முடித்தான் நிஷாந்த்.

''பெண்ணே, என்னைக் காதலி!!'' என நிஷாந்த் இன்னோரென வார்த்தைகளால் சொல்லவும், சற்று நேரம் அங்கே பெரும் அமைதி நிலவியது. எப்போதும்

சந்தோசம், வருத்தம், கொண்டாட்டம் என எல்லாவற்றையும் வார்த்தைகளால் வடிவமைத்துவிடும் அனுஜா, அவன் கூறிய வார்த்தைகளை உள்வாங்க முயன்று, அதில் தோற்று, தோல்வியிலிருந்து மீளும் வகை தெரியாமல் வாளா இருந்தாள்.

"என்ன மேடம் பதிலே காணோம்? கனவில என்னைக் காதலிக்க ஆரம்பிச்சுட்டீங்களா என்ன?" என அவன் கேலியாகவே தொடர, தலையை உலுக்கித் தன் நிலைக்கு வந்து சேர்ந்தாள் அனுஜா.

"ஹான்... என்ன கேட்டீங்க?" என அவள் தடுமாற, "நான் உன்னை காதலிக்கிறேன்னு சொன்னேன். நீயும் என்னைக் காதலிக்கிறியான்னு கேட்டேன்" என்றான் நிஷாந்த் அழுத்தம் திருத்தமாக. அவனுக்குத் தன் காதலை உணர்ந்த வினாடி அவளிடம் சொல்லிவிடும் துடிப்பு. பூட்டி வைத்துப் பாதுகாக்க அது என்ன தங்கமா, வைரமா? அனுபவித்து ஆழ வேண்டிய காதல் அல்லவா.... இருவருமாய் அனுபவிக்கலாமே என்ற எண்ணத்தில் அவன் கேட்டுவிட, அனுஜா தான் திணறிப் போனாள்.

அனுஜாவிற்கு யோசிக்க முடியவில்லை - இதுவரை அவளிடம் காதல் விண்ணப்பங்கள் வந்ததே இல்லை என்று சொல்ல முடியாது. கல்லூரியில் அவளது சீனியர் மாணவர்கள் மூவர், உடன் பயின்ற ஒருவன், இப்போது செந்தில் என அவளுக்கு நிறைய விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. அவர்களிடம் "எனக்கு உங்களை அந்த மாதிரி பிடிக்கவில்லை" என்றோ இல்லை அவர்களின் காதலியிடம் முறையிட்டோ(!) தப்பித்துக் கொண்டவளால் நிஷாந்திடம் அப்படி சொல்ல முடியவில்லை.



சொல்லமுடியவில்லை என்பதோடு அவனுக்கு காதலி இருக்கக்கூடாதே என்று வேறு மனம் அடித்துக் கொண்டது! அடித்துக்கொண்ட மனதின் கேள்வி - அவனைத் தான் காதலிக்கிறோமா என்றிருக்கவில்லை. அவனுக்குக் காதலி இருக்கிறாளோ என்பது தான். அப்படியிருந்தால், இதை அவளிடம் சொல்லவேண்டும் என்பது தான் மனதிற்குள் ஓடிக்கொண்டே இருந்தது. அப்படி ஒரு நிலையைத் தவிர்க்கத் தான் அவன் தன்னை காதலிக்கச் சொல்கிறான் என்பது மூளையில் இருந்தாலும், மனம் கேட்க மறுத்து "அவனின் காதலியை"யே சுற்றி வந்தது!

அதை எப்படி கேட்பது என சில நிமிடங்கள் யோசித்த அனுஜா "நீங்க யாரையாவது காதலிக்கிறீங்களா?" என்றாள் தீவிரமான முகபாவத்துடன்.

"உன்னைக் காதலிக்கிறேன்" என்று அழுத்தம் திருத்தமாய் சொல்கிறேன். அதன் பின்னர் இதென்ன கேள்வி?" எனக் குழம்பிய நிஷாந்த், "ஆமாம்" என்றான் அவளை மனதில் வைத்து. அவனின் மனதில் அவள் இருப்பது புரியாமல், மனம் வாடிய அனுஜா "ஹோ! யாரு? எங்க இருக்காங்க?" என்றதும் தான் 'ரூபா' வைப் போல் ஒருத்தியை தன் காதலி தேடுகிறாள் என்பது நிஷாந்திற்கு விளங்கியது.

"இவளுக்கு விஷயங்களைப் புரிய வைத்தே என் காலம் ஓடிவிடும் போலவே, கடவுளே!" என்றெண்ணிய நிஷாந்திற்கு சிரிப்பு தான் வந்தது.

"என் காதலி பேரு - அனுஜா. ஊர்- அரவங்காடு. அப்பா பேர் - சரவணப்பாண்டியன், அம்மா பேர் -

கஜலஷ்மி. இங்க தான் என் முன்னாடி தான் உட்கார்ந்திருக்கா. விவரம் போதுமா?'' என்றவன், ''அஜு", அஜு", எப்படிடா இப்படி யோசிக்கிறே? நான் உன்னை மட்டும் தான் காதலிக்கிறேன். நீ தான் என்னோட முதல் காதலி, நீயே கடைசி காதலியாகவும் இருக்கிறது உன் கையில தான் இருக்கு...'' என்றான் சிரிப்பும், காதலுமாய்.

அவனது ''அஜு'' புதிதாய் இனித்தாலும், அவளுக்கு அவனது காதலைப் புரிந்து கொள்ள முடியவில்லை. எப்படி? என்னிடம் என்ன இருக்கிறது? தான் அதிகம் பேசுவதாலா? என மனம் ஆயிரம் கேள்வி கேட்க, ''ஆனால், என்னை ஏன்?'' என்றால் ஒரே ஒரு கேள்வியாக. அவள் அப்படி கேட்டதும் தான், அவள் முழுதாய் குழந்தை இல்லை; குழந்தைக்குள்ளும் ஓர் குமரி இருக்கிறாள்; அவளுக்குத் தன் காதலின் தீவிரத்தைப் புரியவைக்க வேண்டும்! என்பதை உணர்ந்தான் நிஷாந்த்.

எனவே அவளுக்குத் தன் காதலைப் புரியவைத்து விடும் பொருட்டு ''இந்த கையை கொஞ்சம் பிடுச்சுக்கட்டுமா?'' என அனுஜாவிடம் அனுமதி கேட்டவன், அவள் அரைகுறையாக தலையாட்டியதும் அவளின் மெல்லிய கைகளைத் தன் கரங்களுக்குள் எடுத்துக் கொண்டான். அவனது கைகளுக்குள் இருந்த தன் கைகளைக் கண்ட அனுஜாவிற்கு, ஓர் பெரிய பறவை தன் குஞ்சுகளை சிறகுகளால் அடைக்காப்பது போல் தோன்றி, உள்ளே ஓர் கதகதப்பையும், கூடவே ஓர் குறுகுறுப்பையும், அதற்கும் மேலாய் ஓர் பாதுக்காப்பான உணர்வையும் அளித்தது.



உள்ளம் தடதடக்க அவனையே பார்த்திருந்தவளின் கண்களை நேராய் நோக்கியவன், ''அஜு", நான் எத்தனையோ பெண்களோட பழகியிருக்கேன்... ஹையோ கண்ணும் முகமும் ஏன் அப்படி போகுது... தப்பான அர்த்தத்தில இல்லை... நட்போட... பிரண்ட்சா... என்னோட க்ளோஸ் பிரண்ட்ஸ் பத்தி சொல்லியிருக்கேன் இல்லையா? ஆனந்த்... சரிதா... ஆனந்தை விட சரிதா தான் என்னோட க்ளோஸ் பிரண்ட். அதே மாதிரி என் கூட படிச்ச சில பெண்கள், வேலை பார்த்த சில பெண்கள் என நிறைய பேரோட எனக்கு நல்ல நட்பிருக்கு. உன்கிட்ட பகிர்ந்துகிட்டதை விட சரிதாகிட்ட என்னோட சொந்த விஷயம் எல்லாமே சொல்லி... சில பிரச்சனைகளுக்குத் தீர்வும் கேட்பேன். இதை ஏன் சொல்ல வரேன்னா... நான் சில பெண்களிடம் ஒரு ஆரோக்கியமான நட்புறவு வச்சிருக்கேன்னா அதுக்கு காரணம் அவங்களோட புத்தி கூர்மை, எதையுமே புதுமையான ஒரு கோணத்தில பார்க்கிற அவங்களோட எண்ணப் போக்கு. ஒரு பிரச்சனையை எளிதாய் தீர்க்கும் அவங்களோட எதார்த்தம்னு நிறைய காரணம். இதெல்லாம் ஓர் நல்ல நட்புக்கான அடித்தளமா மட்டும் தான் இருந்திருக்கு. நட்பைத் தாண்டி வேற... எதுவுமே இது நாள் வரை வந்ததில்லை...'' எனத் தன் நட்பு வட்டத்தைப் பற்றி கூறியவன், சிறு இடைவேளை விட்டு அவள் முகம் பார்த்தான்.

அங்கே மிக பெரிதாய் ஒரு புரியாத பாவனை இருக்கவே, அவளுக்குத் தன் நட்பு சித்தாந்தங்கள் புரியவில்லையோ... வேறு விதமாய் சொல்லலாம் என்ற எண்ணத்தில் மேலும் தொடர்ந்தான். ''சிம்பிளா

சொல்லணும்னா அவங்கெல்லாம் வேற எந்த பையனோட பேசினாலும் எனக்குக் கோபம் வந்ததில்லை; சொல்லப் போனா அந்த இடத்தை விட்டு ஒரு தலையசைப்போட எழுந்து போய்டுவேன். ஆனா, உன்கிட்ட... யாரும் பேசுறது என்ன... இந்த செந்தில் இப்போ என் கையில கிடைச்சா கொன்னுடும் அளவுக்குக் கோபம் வருது. அவங்களோட பேசும் போது ஏற்படும் நட்புணர்வை விட, உன்னோட பேசும் போது ஏற்படும் உரிமையுணர்வு எனக்குப் பிடிச்சிருக்கு! அந்த உரிமையுணர்வு - காதல்ன்னு நான் நினைக்கிறேன். அது எப்படி... ஏன்... எப்ப வந்ததுன்னு கேட்டா சொல்லத் தெரியலை. ஆனா, என் கையில செந்தில் கொடுத்த ''ஐ லவ் யு'' கார்டை நீ வச்சதும் எனக்கு வந்த கோபமே அது காதல் என்பதை எனக்குப் புரிய வச்சுடுச்சு. எனக்குப் புரிஞ்சதுமே... எந்த தயக்கமோ/சந்தேகமோ இல்லாம உன்கிட்ட சொல்லிட்டேன். உன்னோட இந்த குழந்தைத்தனம் மாறாம... என்னோட உயிரா என்னால உன்னைப் பார்த்துக்க முடியும். நான் சொன்னதை நீ நம்பினா... சரி சொல்லு! என்னை மாதிரி உடனே சொல்லணும்ன்னு இல்லை... கொஞ்சம் டைம் எடுத்துக்கோ'' என நீளமாய் பேசி முடித்தான்.

அவன் சொல்வதைக் குறுக்கிடாமல் கேட்டிருந்தவள், அவன் பேசி முடித்தப்பின்னரும் தன் கைகளை விடுவிக்காமல் இருப்பதை உணர்ந்து ''எனக்கு நாலு மணிக்கு ஒரு மீட்டிங் இருக்கே! அதுக்கு போகணுமே? போயிட்டு வந்து சொல்லவா?'' என்றாள் மெதுவாக.

அவளது அனுமதியில் புன்னகை மலர ''இன்னைக்கே சொல்லணும்ன்னு இல்லை. யோசிச்சு மெதுவா



சொல்லு. ரெண்டு... மூணு நாள் கழிச்சு கூட சொல்லு'' என்றான் பெருந்தன்மையாக. ஆனால் அவனின் பெருந்தன்மையை ஏற்றுக்கொள்ளாது ''அப்போ நான் ஊருக்குப் போறேனே? ஊரிலிருந்து வந்ததும் சொல்லவா?'' என மீண்டும் அவனிடமே அனுமதி கேட்டவளுக்குத் தன் காதல் புரியவில்லையோ, தான் ஒழுங்காக புரியவைக்கவில்லையோ என மனம் மருகிவிட ''நான் சொன்னது உனக்குப் புரிஞ்சதா, அஜு?'' என்றான் நிஷாந்த் மீண்டும்.

''புரியாம என்ன? எல்லாரையும் பார்க்கிற மாதிரி நீங்க என்னைப் பார்க்கலை. உங்களுக்கு நான் ஸ்பெஷல்ன்னு சொல்றீங்க. இது கூட எனக்குப் புரியாதா?'' என அவனையே திருப்பிக் கொண்டு அவள் கேட்க, ''அவளுள் குமரிக்கான மனமும் இருக்கிறது'' என்பதை மீண்டும் உறுதிசெய்தான் நிஷாந்த்; சொல்லப் போனால், தான் நீட்டி முழக்கி விளக்கியதை ஒரே வாக்கியத்தில் நச் சென்று சொல்லிவிட்டாளே... இவளைப் போய் குழந்தை என்றோமே என அவன் வருந்தக் கூடச் செய்தான் எனலாம்!

நினைத்ததை அப்படியே வார்த்தையாகவும் வெளியிட்டவன் ''சூப்பர்டா! உனக்கு எப்போ சொல்லணும்ன்னு தோணுதோ அப்போ சொல்லு...'' என்றதோடு அவளிடம் விடையும் பெற்றான். ஜம்பமாக ''எப்போது வேண்டுமானாலும் உன் சம்மதத்தைக் கூறு'' என்றுவிட்டான் தான். ஆனால், அரை நாள் கூட நிஷாந்தால் பொறுக்க முடியவில்லை. மனம் தவியாய் தவித்துப் போனது! அனுஜா தன் காதலை ஒத்துக்கொள்ள வேண்டுமே என்ற வேண்டுதல் இடைவிடாமல் அவனின்

மனதில் ஒலித்துக்கொண்டே இருந்தது! அவனது அளவு மீறிய தவிப்பைப் புரிந்து கொண்டது போல் மூன்றே நாட்களில் ஓர் மறியல் போராட்டம் நடந்தேறி அவனைக் காப்பாற்றியது!

எல்லா வாரங்களையும் போல் மேட்டுப்பாளையம் செல்லும் நீலகிரி விரைவு ரயிலில் முன்பதிவு செய் திருந்த அனுஜாவிற்கு அன்றைய தினம் ஆளுங்கட்சி யினரும் சில கூட்டணி கட்சிகளும் சேர்ந்து மறியல் நடத்துவது தெரியாது. எப்போதும் போல் வேலை முடிந்து வந்ததும் தன் பொருட்களை அடுக்கியவள், தெரிந்த ஆட்டோ ஒன்றை வரவழைத்து சென்ட்ரல் ரயில் நிலையம் போய் சேரும் வரை எந்த விதமான பிரச்சனையுமில்லை - ஒன்றே ஒன்றை தவிர - அவள் சொந்தங்கள் யாரது கைப்பேசியும் எடுக்கப்படவே இல்லை - எடுக்கப்படவில்லை என்று கூட இல்லாமல் ''தொடர்பு எல்லைக்கு வெளியே உள்ளார்'' என்ற செய்தியே அவளுக்குப் பதிலானது!

என்னவாக இருக்கும்? இந்நேரத்தில் பெய்யும் பருவ மழையோ? மழையினால் ஏற்படும் மின்சாரத்தடையும், மரங்கள் விழுவதும், நிலச்சரிவும் என அவளின் மன தினுள் ஆயிரம் கேள்விகள். கூடவே நிஷாந்திடம் என்ன பதில் சொல்வது என்ற யோசனை வேறு!

அவனிடம் ''இல்லை'' என்று சொல்லவும் மனம் வரவில்லை - அவன் மனம் நோவது ஏனோ அவளின் மனம் நோவது போலவே வலித்தது. ஆனால் அவனிடம் ''சரி'' என்று சொல்லவும் மனம் வரவில்லை - அவர்கள் சொந்தத்தில் ''காதல்'' என்பது ஓர் கெட்ட வார்த்தையல் லவா? வேற்று ஜாதியில் ஓர் திருமணத்தை கண்டிப்பாக



அனுமதிக்க மாட்டார்கள் என்று அதுவும் வருத்தமாக இருந்தது! ''இல்லை''க்கும், ''சரி''க்கும் நடுவில் தன் மனம் அவனிடம் சென்றுவிட்டதை அவள் உணர வில்லை. அப்படி சென்றதால் தானே, அவனின் வருத் தத்தைப் பற்றியும், குடும்பத்தினரின் சம்மதத்தைப் பற்றியும் யோசிக்கிறோம் என அனுஜா உணரவில்லை.

எல்லாவற்றினூடும் ரயில் நிலையம் சென்றவளின் கைப்பேசி கிணுகிணுக்க, எடுத்துக் காதில் வைத்தவ ளிடம் ''அனு குட்டி! அப்பா பேசுறேன்டா. இங்க ஒரே மழையா இருக்கு... பஸ் எல்லாம் நிறுத்தி வச்சுட்டாங்க. போன் லைனும் அறுந்து போச்சு... செல்போன் டவரும் இல்லை கண்ணு. அப்பா... நீ கிளம்பிடப் போறியேன் னுட்டு குன்னூர் வந்து பேசுறேன்... நீ இந்த வாரம் வரவேண்டாம் அனு. மழை விட்டதும் வந்துகிடலாம். இங்க வந்து தடுமாற வேண்டாம்... ஒரே சேரும் சகதி யுமா இருக்கு... நீ சென்னையிலேயே இரு... அங்க வேற ஏதோ மறியலாமே? எங்கேயும் வெளிய போகாதடா ராஜாத்தி. பார்த்து சூதானமா இருந்துக்கோ!!'' என்றார் சரவணப்பாண்டியன் வேகவேகமாக.

''ரயில்வே ஸ்டேஷன் வந்துட்டேனேபா...'' என ஆரம்பித்த மகள், அவரின் அக்கறையும் பெண் தடுமாறக் கூடாதே என்ற பதைப்பும் புரிய ''சரிப்பா. நான் ஹாஸ்டலுக்குப் போறேன். ஆச்சி, அம்மாவை கேட்டதா சொல்லுங்க. சின்ன அண்ணனை எனக்குப் பேசச் சொல்லுங்கப்பா'' என்றாள் புரிந்து கொண்டவளாய்.

''ஸ்டேஷன் வந்துட்டியோ? பார்த்து போயிடுவியா? பஸ் ஓடலைன்னு சொன்னாங்களே... எப்படி அனு குட்டி

போவே? பார்த்து போய்டு கண்ணு... அப்பா ஒரு மணி நேரம் சென்று கூப்பிடவா?'' எனப் பயந்து போனார் அந்த தந்தை.

''ஆட்டோ ஓடுதுப்பா... அதில போய்டுவேன். நீங்க கவலைப்படாதீங்க! ஒரு மணி நேரத்துக்கு நீங்க குன்னூர்ல நிக்க வேண்டாம்... வெளிச்சம் போயிடுச் சுன்னா வீட்டுக்குப் போக ரொம்ப கஷ்டமாகிடும். நீங்க கிளம்புங்கப்பா. நான் பார்த்து பத்திரமா போய்டுறேன். ஒண்ணும் பிரச்சனையில்லை'' என அவரைச் சமாதானப் படுத்தினாள் மகள்.

''இல்லை அனு குட்டி, நான் இருக்கேன்...'' என அவர் தயங்க, ''எங்க ஹாஸ்டலுக்கு வாடிக்கையா வர ஆட்டோக்கார அண்ணாவையே கூப்புட்டுக்கிறேன்பா. அவரோட போன் நம்பர் என்கிட்டே இருக்கு... நீங்க கிளம்புங்க...'' ஓர் ஐந்து நிமிடப் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் தந்தை அரவங்காடு செல்வதை உறுதிசெய்து கொண்டு ரயில் நிலையத்தை விட்டு வெளியே வந்தவள் தந்தையிடம் சொன்னது போலவே விடுதிக்கு வாடிக்கையாய் வரும் ஆட்டோக்காரர் எண்ணிற்கு அழைத்தாள்.

அவளின் அதிர்ஷ்டமோ துரதிர்ஷ்டமோ, தான் ஒரு சவாரியாக சோளிங்கநல்லூர் போய்க்கொண்டிருப்பதாக கூறியவர், வேறோர் வண்டியைப் பார்த்து விடுதிக்குச் செல்லுமாறு கூறி அழைப்பை வைத்து விட்டார்.

வேறோர் ஆட்டோவை அவள் பிடிக்க முயல, மறியல் காரணமாய் பேருந்துகள் ஓடாமல் இருந்தமையால் ஆட்டோக்களுக்குப் பெரும் திண்டாட்டமாய் இருந்தது.



இரவு கனிந்து கொண்டிருந்த அந்த வேளையில் ரயில் நிலைய வாயிலில் ஒரோர் ஆட்டோவாக அவள் நிறுத்த முயல, எல்லாவற்றிலுமே ஆட்கள் இருந்தனர். ஒரு மணி நேரப் போராட்டத்திற்குப் பின்னர், சென்னை - மேட்டுப்பாளையம் பயணச்சீட்டை விட அதிக செல வுடன் ஓர் ஆட்டோவில் ஏறி அமர்ந்தவள் சற்றே நிம்மதி யாய் இருந்த போதும், வாழ்வில் முதன் முறையாக இப்படி தனித்து மாட்டிக்கொண்டது நெஞ்சை ரயி லாக்கி, தடதடவென இதயத்துடிப்பை அதிகரித்தது.

அவளின் துடிப்பை எகிறச் செய்வது போல் மழையும் மிக வேகமாய் பெய்ய, வேளச்சேரியில் அமைந்திருக்கும் அவளின் விடுதிக்குச் செல்லும் வழியிலேயே வண் டியை நிறுத்திய வண்டியின் முதலாளி ''இதுக்கு மேல போகாதுமா. வேளச்சேரி பக்கம்.... ஒரே வெள்ளமா இருக்காம். இது வரைக்கும் வந்ததுக்கு காசைக் கொடுத் திட்டு... இறங்கிக்கோ'' என்று விட்டான்.

நன்றாக இருட்டிய அவ்வேளையில், மழையின் நடுவே எப்படி விடுதிக்குப் போவது? என்ற பயத்துடன் அவனிடம் மன்றாடிப் பார்த்த அனுஜா, ''இறங்கும் மான்னா'' என அவன் குரலை உயர்த்தவும் வேறோர் பயத்தில் சட்டென இறங்கிவிட்டாள்.

மிருட்டிய இரவும், மிரட்டிய மழையுமாய் தனித் திருந்த அனுஜாவின் கைகள் நிஷாந்தின் எண்ணை அவளையும் அறியாமல் அழுத்திவிட்டன. அந்தப்பக்கம் அழைப்பு எடுக்கப்படவும் ''நிஷாந்த்... எனக்கு... பயமா இருக்கே... இங்க ஒரே மழை.... நடுரோடுல இறக்கி விட்டுட்டார் அந்த ஆட்டோக்கார அண்ணா. இப்போ

ஹாஸ்டலுக்குப் போகணுமே... இங்க ஒரே இருட்டு...
மழை... ஆட்டோவே இல்லை...'' என விஷயத்தைத்
துண்டு துண்டாய் கூறியவள், முடிவில் தேம்ப ஆரம்
பித்து விட்டாள்.

என்ன, ஏது என்று விவரம் கேட்டு நேரத்தை வீண
டிக்காமல் ''இப்போ எங்க இருக்கே? சரியான அடை
யாளம் சொல்லு'' என விவரம் கேட்டவன், ''அஜு, அழக்
கூடாது. நான் உடனே அங்க வரேன். அது வரைக்கும்
முகத்தில பயத்தைக் காட்டாம... கொஞ்சம் தைரியமா
காட்டிக்கோ. யாருகிட்டயும் எதுவும் பேசாதே. முக்கியமா
மரத்துக்குக் கீழே நிற்காதே'' என்றான் கட்டளை குரலில்.

''ம்ம் சரி. சீக்கிரம் வந்துடுங்க. எனக்கு... எனக்குப்
பயமா இருக்கு...'' என அப்போதும் அவள் நடுங்க,
''இருபது நிமிஷத்தில அங்க இருப்பேன்'' என்றவனிடம்
போன் வைக்காம பேசிட்டே இருக்கீங்களா? இங்க
யாரோ... என்னையே பார்க்கிறாங்க'' என்றாள் கெஞ்சு
தலாய்.

''போன் பேசிட்டே பைக் ஓட்ட முடியாதுமா. மழை
வேற அடிச்சுப் பெய்யுதே. நீ ஒரு இருபது அடி தள்ளிப்
போய் நின்னுக்கோ. அங்க ஒரு பஸ் ஸ்டாப் இருக்கும்.
அங்க நில்லு. நான் வந்துடுறேன். இப்போ போனை
வைக்கிறேன்டா அஜு'' என்றவன், அவளின் ''ம்ம்''
வந்ததும் அழைப்பைத் துண்டித்துவிட்டு விரைந்தான்.
வானத்தில் வெட்டிய மின்னலின் வேகத்திற்கு ஈடு
கொடுத்த அவனது வேகத்தால் அனுஜா நின்றிருந்த
இடத்திற்குப் பதினைந்து நிமிடங்களுக்குள்ளேயே வந்து
சேர்ந்து விட்டான் நிஷாந்த்.



மழையில சொட்ட சொட்ட நனைந்தவாறே கண்
களில் மிரட்சியுடன், எந்தப் பக்கத்திலிருந்து நிஷாந்த்
வருவான் என்று தெரியாமல் நாலா பக்கமும் அலை
பாய்ந்த பார்வையுடன், குளிரில் வெளிப்படையாய்
நடுங்கிய தேகத்துடன், பொருட்கள் அடங்கிய தன்
பையை தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு எதிர்பார்ப்
பும் பயமுமாய் நின்றவளைக் கண்டதும் வண்டியை
ஓரமாய் நிறுத்திவிட்டு, அவள் நின்றிருந்த பேருந்து
நிறுத்தத்திற்கு ஓடினான் நிஷாந்த்.

அவன் இந்தப் பக்கம் வருகிறான் என்பதை அறி
யாமல் அவன் வந்ததற்கு எதிர் திசையில் பார்வையை
பதித்திருந்தவள், நிஷாந்தின் ''அஜு'' என்ற அழைப்
பைக் கேட்டதும், மின்னல் வேகத்தில குரலின் திசைக்
குத் திரும்பியவள் ''நிஷு'' என மனதின் குரலை
முத்தாய் உதிர்த்துவிட்டு, அவனின் அணைப்பிற்குள்
வேகமாய் புகுந்து கொண்டாள்.

# 9

இருவரும் தத்தம் காதலை உணர்ந்த தருணத்
திற்குப் பின்னர் அங்கே சந்தோசம் மட்டுமே நிரம்பி
யிருந்தது. தன் மனம் கவர்ந்தவளின் சம்மதம் மூன்றே
நாட்களில் கிடைத்ததில் நிஷாந்த் வானில் தான்
பறந்தான் எனலாம். காதல் என்ற உணர்வு இவ்வளவு
அழகானதாய் இருக்கும் என அவன் எண்ணவே இல்ல;
நெஞ்சம் லேசாகிப் பறப்பது போலிருந்தது.

''அஜு, அஜு'' எனக் கொஞ்சித் தள்ளியவன், அவளைத் தங்கத்தட்டில் அல்லது தங்கத்தை விட மேன்மையான தன் நெஞ்சத்தில் வைத்துத் தாங்கினான். நண்பனாய் இருக்கும் போதே அவளின் நலம் பேணியவன், இப்போது தன் மறுபாதி என்ற நிலையில் அவளைக் காலால் நடக்க விட்டதே பெரிய விஷயமாக இருந்தது!

அனுஜாவிற்கும் காதல் என்ற உணர்வும், தனக் கென்று மட்டும் ஒருவன் என்ற உணர்வும் வேறோர் புதுஉலகை அவளுக்குக் காட்டியது! இது நாள் வரை அவள் பாசத்தையும், கவனிப்பையும் அனுபவித்ததே இல்லை என்று சொல்ல முடியாத வண்ணம் அவளின் பிறந்த வீட்டில் அவளைப் பார்த்துக்கொண்ட போதும், ஓர் புது உறவு, அதிலும் அவனின் ''அஜு'' என்ற அழைப்பு தேனுண்ட வண்டைப் போல் அந்த மலரை மயக்கத்தில் ஆழ்த்தியிருந்தது.

என்ன தான் காதல் மயக்கத்தில் ஆழ்ந்திருந்த போதும், இருவரும் தத்தம் குடும்பத்தினரின் சம்மதம் பற்றி யோசிக்காமல் இருக்கவில்லை. அதிலும் அனுஜா ''எங்கள் பக்கம் காதல் கல்யாணம் என்றாலே கொலைக் குத்தம் செய்த மாதிரி பார்ப்பார்கள். அதிலும் பெண் பிள்ளை காதல் திருமணம் செய்வது என்றால் பெரும் பிரச்சனையாகிவிடும்'' எனப் பயந்து நடுங்கினாள் என்றே சொல்லலாம்.

''எங்களதில் பெண்பிள்ளைகளுக்கு இருபது வயசி லேயே கல்யாணம் முடிச்சிடுவாங்க. ஆனா, அதையும் மீறி என்னைப் படிக்க வச்சு, வேலைக்கு அனுப்பி யிருக்கங்கன்னா என் மேல வச்ச நம்பிக்கையால தான்.



இப்போ... காதல்... அதுவும் வேற ஜாதில பிறந்த உங்களை... எனக்கு நினைச்சாலே பயமா இருக்கே'' எனப் புலம்பித் தள்ளியவளிடம் நிஷாந்தின் பொறுமை யான பேச்சுக்கள் செல்லுபடியாகாத நிலையில் அவனது பொறுமை எல்லை கடந்தது.

அதன் விளைவாக ''என்னைக் காதலிச்சது பெரிய தப்பு... அப்படி தானே? இப்போ என்ன செய்யலாம்? என்னை மறந்திட்டு உன்னோட முறைப்பசங்க எட்டு பேர் இருக்காங்களே... அவங்களில் ஒருத்தரைக் கட்டிக் கோயேன்'' என முகத்தில் அடித்த மாதிரி அவன் சொல்லி விட, அனுஜாவின் விழிகள் திகைப்பில் விரிந்து, அதிர்ச்சியில் சுருங்கி, அழுகையில் மூடிக்கொண்டன.

மறுத்து ஓர் வார்த்தை பேசாமல், கண்களாலேயே தன் வேதனையைப் புரிய வைத்துவிட்ட அனுஜாவின் முகத்தை நோக்கி நீண்ட கைகளை முயன்று கட்டுக்குள் கொண்டு வந்த நிஷாந்த் தீர்க்கமாய் அவளைப் பார்த் திருந்தான். அவளின் வேதனை மனத்தைக் குடைந் தாலும், தன் வார்த்தைகளால் அவள் காயப்பட்டது புரிந்தாலும், தங்கள் காதலை எண்ணி அவள் நடுங்கு வதைப் போக்க அவனுக்கு வேறு வழி தெரியவில்லை.

''என்ன நிஷு... இப்படி சொல்றீங்க? எனக்கு எவ் வளவு கஷ்டமா இருக்கு தெரியுமா? ஒருத்தரை மனசில வச்சுக்கிட்டு இன்னொருத்தரோட எப்படி குடும்பம் நடத்துறது? ஏன் நிஷு இப்படி கேட்டீங்க? நான் என்ன அப்படி பட்டவளா?'' என அவனின் வார்த்தைகளுக்கு அவளாய் ஓர் அர்த்தம் கொண்டு, கண்களில் கண்ணீர் மல்க அனுஜா கேட்க, அவள் எடுத்துக்கொண்ட அர்த் தத்தில் நிஷாந்திற்குமே வலித்தது.

"ஹே அஜு! நான் அப்படி சொல்லலைடா. எதையும் தைரியமா எதிர்கொள்ளணும்ன்னு சொல்ல வந்தேன். நீ முடியாதுன்னு சொன்னா... உன்னைக் கையைக் காலைக் கட்டியா மணவறையில் உட்கார வைப்பாங்க? நம்ம கல்யாணம் நடக்கிறதும், நிக்கிறதும் உன்னோட தைரியத்தில தான் இருக்கு. அதுக்கு சொல்ல வந்தேன் குட்டி... ப்ளீஸ் புரிஞ்சுக்கோடா" என அவன் தான் முடிவில் மன்றாட வேண்டியிருந்தது.

அவனின் கோப வார்த்தைகளிலேயே தன் காதலில் உறுதியாய் நின்று சாதிக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டிருந்தாலும், இப்போது அவன் சொன்ன விஷயத்தில் "தான் உறுதியாய் இருக்கும் பட்சத்தில் அடித்து... மிரட்டியா கல்யாணம் செய்வார்கள்? அதுவும் பெண்ணின் மேல் பாசத்தைப் பொழியும் பெற்றோர்... தனது ஆசைகளை தான் வெளியிடும் முன்னரே நிறைவேற்றி வைத்த உறவுகள் இப்போது அவளின் ஆசைக்குக் கட்டாயம் குறுக்கே நிற்க மாட்டார்கள். முதலில் "காதலா?" என்று கொதித்தாலும்... பின்னர் பெண்ணின் ஆசை என்பதை மனதில் கொண்டு மனம் முடித்துக் கொடுத்துவிடுவார்கள்" என்றே தோன்றியது.

தங்கள் வீட்டில் தான் எதிர்ப்பு கிளம்பும், நிஷாந்த் வீட்டிலாவது நல்லபடியாக ஒத்துக்கொள்வார்களோ என்ற எதிர்பார்ப்பில் "உங்க வீட்டில ஒத்துப்பாங்களா நிஷாந்த்?" என்ற அனுஜாவிடம், "அப்பா ஒத்துப்பாங்கன்னு தோணுது. அம்மா.... ஹ்ம்ம் கொஞ்சம் கஷ்டம். ஆச்சாரம்... குலம்... கோத்திரம்ன்னு நிறைய பார்க்கிற ஆள். ஆனா... அப்பாவை வச்சு அம்மாவை சரி சொல்ல வச்சுடலாம். எங்க வீட்டில பெருசா எந்த பிரச்னையும்



இருக்காது" என எந்த நேரத்தில் கூறினானோ, அடுத்த வாரத்தின் இறுதியில் பத்மாவதியிடமிருந்து ஓர் அழைப்பு வந்து அவனைப் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது!

"நிஷான், அம்மா பேசுறேன் கண்ணா!" என இனிமையாய் ஆரம்பித்த உரையாடல், "சத்யனும், நிர்மலாவும் லண்டன்ல இருந்து வராங்க. இரண்டு வாரம் இருப்பாங்க போல...." என்ற இனிப்பான செய்தியைப் பகிர்ந்து பகிர்ந்த கையோடு "உனக்கு ஒரு சந்தோஷமான செய்தி சொல்றேன்... இத்தனை நாள் இது எங்களுக்குத் தோணலையேன்னு அம்மாவை குத்தம் சொல்லாதேடா ராஜா! நான் இப்படி யோசிக்கவே இல்லை..." எனப் புதிரில் முடிந்த போது நிஷாந்திற்கு ஒன்றுமே புரியவில்லை.

"என்னது மா?" என அவன் குழம்ப, "உனக்கும் சரிதாக்கும் கல்யாணம் பண்ணலாம்ன்னு நானும் - அப்பாவும் முடிவு பண்ணியிருக்கோம். சரிதாக்கு மாப்பிள்ளை பார்க்கிறாங்கன்னு தெரிஞ்சதும் தான்... ஒண்ணாவே வளர்ந்த உன்னையே அவளுக்குக் கேட்கலாமேன்னு தோணுச்சு. சட்டு புட்டுன்னு பரமேஸ்வரன் (சரிதாவின் பெற்றோர்) அண்ணாவைக் கேட்டோம். அவங்களுக்குப் பரம சந்தோசம்... பின்னே, உன்னை மாதிரி ஒரு மாப்பிள்ளை கிடைக்க அவங்க கொடுத்தில்ல வச்சிருக்கணும்? உடனே சரி சொல்லிட்டாங்க!! சத்யனும், நிர்மலாவும் இருக்க ரெண்டு வாரத்திலேயே கல்யாணத்தை முடிச்சிடலாம்ன்னு பார்த்தோம். என்ன கண்ணா உனக்கு சந்தோசம் தானே?" என்ற அவரின் வார்த்தைகளில் நிஷாந்த் ஸ்தம்பித்து நின்றான்.

"சம்மதம் தானே?" என்று கூடக் கேட்கவில்லையே...
சந்தோஷம் தானே?" என்கிறார்களே! அது எப்படி என்ன
கேளாமல் இப்படி ஓர் முடிவு எடுப்பார்கள்? அதுவும் என்
கல்யாண விஷயத்தில்? இரண்டு வாரத்தில் கல்யாணம்
என்பது வரை முடிவு செய்தாகிற்று. என்ன நினைத்துக்
கொண்டிருக்கிறார்கள்? அதுவும் சரிதாவை? ஓர் நல்ல
தோழியை மனைவியை? அனுஜாவின் இடத்தில்
யாரையும் வைக்கவே முடியாது என்ற நிலையில் தன்
தோழியையேவா? அஜுவை விட்டு மற்றொருவரா?
முடியவே முடியாது! எனக் கொதித்துப் போன நெஞ்
சத்துடன் தாயிடம் பதில் பேசத் துவங்கினான் மைந்தன்.

"என்னமா? நீங்களா இப்படி ஒரு முடிவு எடுத்திருக்
கீங்க? அதுவும் கல்யாணம்? என்னோட விருப்பம்னு
ஒண்ணு இல்லையா? என்னைக் கேட்காம எதுக்கு
சரிதாகிட்ட பேசினீங்க?" என அவன் பாய, "என்னடா
சத்தம் கூடுது? உனக்கு எது நல்லதுன்னு எங்களை விட
யாருக்குத் தெரியும்? சரிதாவுக்கு என்னடா குறைச்சல்...
அழகா இருக்கா... நல்லா படிச்சிருக்கா... தெரிஞ்ச
குடும்பம்... தெரிஞ்ச என்பதை விட தாயா பிள்ளையா
பழகிய குடும்பம்... தூரத்து உறவு வேற... நீயும் அவளும்
ஒண்ணா படிச்சிருக்கீங்க, பழகியிருக்கீங்க, டெல்லி
முழுசும் மூணு பேறுமா சுத்தி வந்திருக்கீங்க... ஆனந்தை
விட சரிதாகிட்ட நீ நிறைய விஷயங்கள் பகிர்ந்துக்கிறது
எனக்கே தெரியும்... அப்புறம் என்னடா? கல்யாணத்
திற்குத் தேவையான எல்லாமே கூடி வரும் போது யாரை
கேட்கணும்?" என பத்மாவதியும் சத்தத்தைக் கூட்டி
னார்.

கல்யாணத்தின் அடிப்படை நட்பல்ல; காதல் என்
பதை உணர்த்திவிடும் வேகத்துடன் அவன் தொடங்க,



பத்மாவதி அவனை முடிக்கவே விடவில்லை "என்ன
என்றாலும் வீட்டிற்கு வந்து பேசிக்கோ. நாளைக்கு
காலையில நீ இங்க இருக்கணும்" என்ற கட்டளையுடன்
போனை துண்டித்து விட்டார். அதன் பின்னர் எத்
தனையோ முறை அவன் பேச முயன்றும் வீட்டுத்
தொலைப்பேசி எடுக்கப்படவே இல்லை எடுக்கப்பட்
டாலும் பத்மாவதி பேசவில்லை.

தந்தைக்கு முயன்றால் "அம்மாவிடம் ஏன் கல்
யாணம் பேசினீங்கன்னு கேட்டியாமே? உன் கல்
யாணத்தை நாங்க பேசாம யாருடா பேசுவா? நாளைக்கு
வீட்டுக்கு வா. நேரில் பேசிக்கலாம். போன்ல சண்டை
வேண்டாம். இனிமேல் கூப்பிடாதே!" என அழைப்பை
வைத்த தந்தையை மீறி நிஷாந்தால் மீண்டும் அழைக்க
முடியவில்லை.

அனுஜாவின் மேல் தான் கொண்ட காதலை ஆனந்
திடம் பகிர்ந்துகொண்டிருந்தவன், அவர்கள் இருவருக்
குள்ளும் ஓர் அண்ணன் - தங்கை பாசம் உருவாவதை
சந்தோஷத்துடனே கண்டிருந்த போதும் சரிதாவிடம்
சொல்லாமல் விட்டதற்கு காரணம் - அவளுக்குக் காதல்
மீது அவ்வளவு பிடிப்பில்லை. அவளின் கல்லூரி தோழி
ஒருத்தி. காதலினால் பட்ட கஷ்டத்தைக் கண்டிருந்த
வளுக்கு பெற்றோர் பார்த்து செய்யும் திருமணம் தான்
உயர்ந்தது என்ற எண்ணம். அதனால் சரிதாவை நேரில்
சந்தித்து, அதுவும் அனுஜாவைக் கையோடு கூட்டிச்
சென்று பேசினால், காதலின் மீதிருக்கும் வெறுப்பு
குறைகிறதோ இல்லையோ அனுஜாவின் மேலுள்ள
விருப்பு கூடி அவளை சந்தோஷப்படுத்திவிடும் என
அவன் எண்ணியிருக்க, ஆனந்தும் அதையே

வழிமொழிந்ததால் சரிதாவிற்கு நிஷாந்தின் காதல் விஷயம் தெரியாமலிருந்தது.

திருமணம் என்று பேச்சு எழுந்துவிட்ட இந்த நிலையில் தான் செய்தது (அதாவது சரிதாவிடம் தன் காதலைப் பற்றி கோடி காட்டாமல் விட்டது) தப்போ என்று மனம் கிடந்து அடித்துக்கொள்ள, டெல்லியில் இருக்கும் பெருந்தலைகளை எப்படி சமாளிக்கப் போகிறோம் என்ற யோசனையுடன் டெல்லிக்குப் பறந்தான் நிஷாந்த்.

இரண்டு விமானங்களில் இடம் கிடைக்காமல் மூன்றாவது விமானத்தைப் பிடித்து டெல்லி வந்து சேர்ந்தவன், அவனின் பெற்றோருடன் சேர்த்து சரிதாவின் குடும்பத்தை அங்கே எதிர்பார்க்கவில்லை.

வீட்டினுள் அவன் நுழைந்ததும் ''இதோ வந்துட்டான் உங்க மாப்பிள்ளை... வாங்க மாப்பிள்ளை சார்!!'' என வரவேற்ற பத்மாவதி, மகனின் அங்க அசைவுகளைக் கவனத்துடன் ஆராய்ந்தார்.

இது நாள் வரை நிஷாந்த் வீட்டிற்கு அடங்கிய பிள்ளை தான். அவன் மட்டுமல்ல - அவனின் அண்ணனும் தான். அவரது பிள்ளைகள் இருவருமே பத்மாவதிக்குப் பிடிக்காத காரியங்களை ''இல்லை நான் செய்தே தீருவேன்!'' என்று முழு மூச்சாக எதிர்த்தவர்கள் இல்லை; அத்தோடு தரணிதரனுக்கும் அதில் உடன்பாடில்லை என்று தெரிந்து விட்டால் ''பச்... என்னம்மா?!'' என்ற புலம்பலோ எரிச்சலோ சிறிதுமில்லாமல் அந்த காரியங்களில் இறங்க மாட்டார்கள். இந்தக் குணத்தால் நண்பர்கள், உடன் பணிபுரிவோர், சொந்தங்கள் என பிறரது



கேலிக்கு ஆளாகியபோதும் ''நம்மை பெற்றவர்கள் - அவர்களுக்குத் தெரியாத நல்லதா?'' என சத்யன் ஒதுங்கிக்கொண்டால், ''யோசித்துப் பார்த்தா எனக்கும் அப்பா சொல்றதுதான் சரின்னு பட்டுது. இப்படி ஒரு கோணத்தில நாம ஏன் யோசிக்காம போனோம்ன்னு நான் யோசிச்சிட்டு இருக்கேன்'' என நிஷாந்த் அதில் ஓர் நல்லதைப் படித்துக் கொள்வான்.

அப்படி இருக்கையில் தங்கள் முடிவு செய்த திருமணத்தை மகன் முழு மூச்சாய் எதிர்ப்பான் என பத்மாவதி எண்ணிவிடவில்லை. அவனுக்கு வேலையிடத்தில் எதாவது பிரச்சனையாக இருந்தது. அதை திருமணப் பேச்செடுத்த தாய் மீது காட்டிவிட்டானோ என்ற எண்ணத்தில் இருந்தவரால் மகனுக்கு இந்தத் திருமணத்தில் இஷ்டமில்லை என்பதை ஒத்துக்கொள்ள முடியவில்லை. அந்த எண்ணத்திலேயே இருந்தவருக்கு மகனின் மனநிலையை தெளிவாய் அறிந்து கொள்ள வேண்டிய தாய் இருந்தது - அதுவும் சரிதாவின் பெற்றோர் வந்திருக்கும் இவ்வேளையில் நேற்று பேசியது போல் மகன் திருமணத்தில் நாட்டமில்லை என்பது போல் பேசிவிடக் கூடாதே என்ற பதிப்பில், தங்கள் செல்லப் புதல்வனின் எண்ண ஓட்டத்தைக் கண்காணிக்கவே பத்மாவதி அப்படி ஓர் வரவேற்பை முன் வைத்தது; ஆனால் அதுவே வினையாகியும் போனது!

திடீர் கல்யாணப்பேச்சு, அனுஜாவின் ''உங்க அம்மா ஒத்துப்பாங்களா நிஷூ?'' என்ற பரிதாபக் குரல், அத்துடன் சேர்த்து அவளுக்கு வந்திருந்த லேசான காய்ச்சல், அந்த நேரத்தில் அவளுடன் இருக்க முடியவில்லையே என்ற வருத்தம். பெற்றோரின் கை பொம்மையாக தான்

மாறிவிட்ட உணர்வு, அவன் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்கும் பொறுமை கூட இல்லாத அவர் களின் கோபம், தோழி என்று எண்ணியவளை மணம் பேசியிருக்கிறார்களே என்ற எரிச்சல், எல்லாவற்றுக்கும் மகுடம் சூட்டுவது போல் வீட்டிற்குள் நுழைந்ததும் காதில் விழுந்த "மாப்பிள்ளை" என்ற அழைப்பு அவனைக் கோபத்தின் உச்சிக்குக் கொண்டு சென்றது.

சரிதாவின் குடும்பத்தார் முன்னிலையில் கோபத் தைக் காட்ட விரும்பாமல் "அம்மா!" என அவன் அதட்ட, "புதுசா மாப்பிள்ளைன்னு கூப்பிட்ட அவனுக்கு ஒரு மாதிரி இருக்கு போல...." என சப்பைக் கட்டுக் கட்டிய தாயிடம் பல்லைக் கடித்த நிஷாந்தை மேலும் கோபமூட்டுவது போல், சமையலறையிலிருந்து வந்த சரிதாவின் தாயார் "வாங்க மாப்பிள்ளை" என்றுவிட்டார்.

இது நாள் வரை "நிஷாந்த்" என்று தானே அழைத் தார்கள்? இன்று என்ன கேடு வந்தது இவர்களுக்கு என்ற உள்ளக்கொதிப்பு "நான் யாருக்கும் மாப்பிள்ளை இல்லை. சாரி ஆன்ட்டி, நான் சரிதாவை ஒரு நல்ல பிரண்ட்டா தான் பார்க்கிறேன். மனைவியாய் இல்லை!! இந்த கல்யாணப்பேச்சை விடுங்க... எனக்கு இந்த கல்யாணத் தில் துளியும் விருப்பமில்லை" என்றான் தலையை அழுந்த கோதியவாறே.

"என்னது?" என அவர்கள் அதிர, "என்ன நிஷாந்த்? நிதானிச்சு பேசு!" என அதட்டினார் தரணிதரன்.

"என்ன தரணி? என்ன நடக்குது இங்க? எங்களைக் கூப்பிட்டு வச்சு அவமானப் படுத்துறீங்களா?" என்ற ரீதியில் சரிதாவின் தந்தை பேச, "அவளை மனைவியாய் பார்க்கலைன்னா வேற யாரையும் பார்க்கிறியோ?" என



பத்மாவதி கோபத்தில் குரல் உயர்த்த, "ஆமாம்" என்று விட்டான் மகன்.

"என்னது? வேற ஒரு பெண்ணைக் காதலிக் கிறாயா?" என்ற பத்மாவதியின் குரலில் "என் பையனா?" என்ற அதிர்ச்சி மட்டுமே முழுதாய் நிரம்பியிருந்தது. நிஷாந்தின் தாய் - தந்தைக்கும் அது செய்தி தான் என்பது புரியாத சரிதாவின் பெற்றோரோ தங்கள் பெண்ணை வலிய வந்து கேட்டவர்களே தங்களை அவமானப் படுத்திவிட்டனர் என்ற ஆத்திரத்தில் தரணிதரனையும், பத்மாவதியையும் சாரமாரியாக திட்டிவிட்டே தங்கள் வீடு நோக்கிச் சென்றனர்.

இது நாள் வரை நட்பாய் பழகிய ஓர் குடும்பத்தினர் முன்னர் அவமானப்படுத்திய மகனிடம் பத்மாவதி வேறெதுவும் பேசவில்லை - "என் கண் முன்னாடி நிற்காதேடா. நீ காதலிக்கிறியே ஒரு கழுதை அவளைக் கட்டிக்கிட்டு எங்கேயோ போய் தொலை. இந்த வீட்டு வாசப்படி மிதிச்சியோ.... காலை ஒடிச்சிடுவேன்" எனத் தன் பெற்ற பாசம் தீர கத்திய கடைசி வார்த்தையைத் தவிர!

வேறோர் தருணத்தில் நிஷாந்தின் காதலை ஏற் றிருக்க கூடிய அவனின் தந்தையோ, ஓர் பெண்ணின் மனதில் கல்யாண ஆசையை வளர்த்துவிட்டு இப்போது இல்லை என்று விட்டானே என்ற வருத்தத்தில் "எங் களுக்கு ரொம்ப நல்ல பேர் எடுத்துக்கொடுத்துவிட்டாய் நிஷாந்த்! இப்படி ஒரு சுயநலத்தை உன்கிட்ட நான் எதிர் பார்க்கலை" என்பதோடு அவனுக்கு விடை கொடுத் தார்.

அதன் பின்னர் அவனின் எந்தவிதமான மன்றாடலும் அங்கே செல்லுபடியாகவில்லை. ஒரு நிலைக்கு மேல் நிஷாந்திற்கும் தன்மானம் தலை தூக்கிப் பேயாய் ஆடிவிட, தலையை சிலுப்பிக் கொண்டு சென்னை வந்து சேர்ந்தவன் தான் டெல்லி பக்கம் தலை வைக் கவே இல்லை.

அவனே பெற்றோரின் சம்மதம் கிடைக்கவில்லை என்ற வருத்தத்தில் இருந்தான் என்றால் அனுஜாவோ ''ஹையோ! சரிதா அக்காக்கு எவ்வளவு வருத்தமா இருந்திருக்கும். பாவம்...'', ''என்னால தான்.... அத்தை - மாமாக்கும் சரிதாக்கா அப்பா - அம்மாக்கும் சண்டை வந்திடுச்சு'', ''நீங்க திடீர்ன்னு காதலிக்கிறேன்னு சொன் னதும் மாமாக்குப் பெரிய ஷாக்கா இருந்திருக்கும் இல்ல'', ''சரிதாக்கா ரொம்ப வருத்தமா பேசினாங்களா?!'' என ஆயிரம் கேள்வி கேட்டு அவனின் வருத்தத்தைப் புறம் தள்ளி, அவனின் பெற்றோர் மற்றும் தோழியின் வருத்தத்தைப் பெரிதாய் பேசினாள்.

ஏற்கனவே தாயின் கோபம், தந்தையின் ஒதுக்கம், தோழியின் சுருக்கமான பேச்சுவார்த்தை, ''நீ என்னை வேண்டாம் என்று சொன்னதில் எனக்கு உயிர் போகும் வலி ஏற்படவில்லை என்றாலும் வருத்தமில்லை என்று விட முடியாது'' என்ற போது தன்னை நிராகரித்துவிட் டானே என்ற வலி இருந்ததோ என்ற உறுத்தல் என நொந்து போயிருந்த நிஷாந்திற்கு அனுஜாவின் வார்த் தைகள் ரசிக்கவில்லை.

''அப்பா வருத்தப்படுவாங்க... அம்மா கோபப்படு வாங்க.... சரிதா கஷ்டப்படுவா... இதையெல்லாம் தீர்க் கணும்ன்னா ஒரே ஒரு வழியிருக்கு. நீ என்னை



மறுக்கிறது! நானும் உன்னோட காதலை மறந்துட்டு அம்மா சொல்ற பெண்ணைக் கல்யாணம் செய்துக் கிறது?? செய்துக்கட்டுமா? சும்மா புரியாம பேசாதே அனுஜா. எரிச்சலா வருது! எல்லாரோட கஷ்டத்தையும் பார்க்கிற உன்னால என்னோட மனசைப் புரிஞ்சுக்க முடியாதா? எரிச்சல் மூட்டுறே அனுஜா...'' என்றவனின் வார்த்தைகள் அனுஜாவை ''சாரி நிஷு'' என மென் குரலில் சொல்லவைத்து, அதன் பின்னர் வாயை இறுக மூட வைத்தது.

அவளின் மன்னிப்பும், மௌனமும் தேவைக்கும் அதிக மாய் நீடிக்கவே ''ஹே அஜு! எல்லாரோட எதிர்ப்பையும் சந்திச்ச அப்புறம் எனக்கு உன்னை கல்யாணம் பண் ணிக்கப் போறோம்கிறது சந்தோஷத்தைத் தான் கொடுக் குது? இத்தனை வருத்தத்துக்கு நடுல நீயும் என்னைக் கஷ்டப்படுத்தாதே அஜு'' என லேசாய் கொஞ்சியதும் தான் அனுஜாவிற்கு நிம்மதியாய் இருந்தது. கூடவே இவனின் சந்தோஷம் என் சிரிப்பில்... அதை நான் காப்பாற்ற வேண்டும் என்று உறுதிமொழி நெஞ்சில் புகுந்தது!

அந்த உறுதிமொழியுடனே அடுத்துவந்த வாரம் ஊருக்குச் சென்றவள், முதலில் சம்மதம் கிடைக்கும் என்று நினைத்த ராகவனிடம் தன் காதல் விஷயத்தைப் பகிர, அவன் தான் வில்லனாகிப் போனான்.

அவனுக்குத் தன் செல்லத் தங்கையை மயக்கி நிஷாந்த் கைக்குள் போட்டுக் கொண்டான். உலகமறியா தங்கையும் அவன் சிரித்துச் சிரித்து பேசுவதை வைத்து மயங்கிவிட்டாள்.

காதல் - கல்யாணம் என்று அவன் தூபம் போட, இவள் இங்கே வந்து உளறுகிறாள் என்றே எண்ணினான். அதை அப்படியே அவன் வார்த்தைகளால் வெளியிட, என்றுமில்லா திருநாளாய் அனுஜாவிற்கு கோபம் வந்துவிட்டது.

அப்போது கூட ''அண்ணா, நீ எனக்கு நல்லதுன்னு நினைச்சு ஏதோ ஏதோ பேசுறே! நிஷாந்த் அப்படியில்லை. ரொம்ப நல்லவர்! என்னை நல்லா வச்சுப்பார் அண்ணா, நீ கவலைப்படாதே! நீ தான் அவரோட பேசியிருக்கியே? அவரோட பேசிட்டு... ரொம்ப நல்ல வரா இருக்கார்ன்னு சொன்னே தானே? அப்புறம் இப்போ என்ன இப்படி பேசுறே? மாத்தி... மாத்தி பேசாதே!'' என்றவளிடம் ''பிரண்ட் என்பது வேற... காதல்/ கல்யாணம் என்பது வேற. பெரியப்பாவுக்குத் தெரிஞ்சது அவ்வளவு தான்?!! ஒத்த புள்ளைன்னு கூட பார்க்காம வெட்டிப் போட்டிருவார். சும்மா எதையாவது உளறிட்டு இருக்காதே!'' என முடித்தே விட்டான் அண்ணன்காரன். அவனுக்குத் தங்கை ஓர் சிறு பிள்ளை. தன் வாழ்க்கையை முடிவு செய்யும் பக்குவம் அவளுக்கு வரவே இல்லை என்ற எண்ணம் மிக மிக கடினமான நெஞ்சில் பதிந்து போயிருந்தது.

''இல்லை. நான் உளறலை. நான் அவரைத் தான் கல்யாணம் கட்டிப்பேன். எனக்காக அவரோட குடும்பத்தையே விட்டுட்டு வந்திருக்கார் தெரியுமா? என்னைக் காதலிக்கிறேன்னு சொன்னதால அவங்க வீட்டில ரொம்ப திட்டிட்டாங்க. அவங்களை மீறி எனக்காக வந்திருக்கார். நான் அவரைத் தான் கல்யாணம் கட்டிப்பேன்'' என அவள் பெருமையாகவும், உறுதியாகவும் கூற அதுவே வினையானது.



''என்னது? உன்னை வேண்டாம்ன்னு சொன்னாங்களா? அதை பெருமையா வேற சொல்லிக்கிற உன்னை என்ன செய்றது? கருமம்... இப்போ உனக்காக பெத்து வளர்த்த அப்பா - அம்மாவை விட்டவன், வேற ஒருத்திக்காக உன்னை விடமாட்டான்னு என்ன நிச்சயம்?'' என அவளைத் திருப்பிக் கொண்டு கேள்வி கேட்ட மூத்தவன், ''அவனை மாதிரி எங்களை மீறி கிட்டு போகலாம்ன்னு நினைக்காதே! நிச்சயம் நல்லா இருக்க மாட்டே'' என்றவன் அவளின் வேறெந்த வார்த்தையையும் மதிக்கவில்லை.

இவனின் எண்ணப்போக்கு தான் இப்படி இருக்கிறது - தாய் தந்தையிடம் பேசலாம் என்றெண்ணி அவர்களிடம் பேசியது பெரும் வினையில் முடிந்தது. அவள் காதலை சொல்லியது தான் தாமதம் - ஏதோ பெரிய கொலை குத்தம் செய்துவிட்டார் போல் பொங்கி எழுந்த சரவணப்பாண்டியன், இது வரை ஓர் சுடு சொல் கேட்டிராத மகளுக்கு ஊரை விட்டுச் செல்லும் அனுமதியை மறுத்தார். அப்போதும் மகளின் மீது பெரும் துவேசம் எழுந்துவிடவில்லை என்பது மகளின் வெளியுலகத் தொடர்புகளை அவர் அறுக்காமல் இருந்ததிலேயே புரிந்தது! மகள் தன்னை மீறி ஒருவனைக் காதலிக்கிறாள் என்பது அவரின் பாசத்திற்கு மட்டுமல்லாது மனதிற்கும் பெரும் இழுக்காய் அமைந்து போனது. இது நாள் வரை, தந்தையின் சொல் படி நடந்த மகள், அவருக்குப் பிடிக்காது என்று தெரிந்தும் வேற்றாளான நிஷாந்தைக் காதலிக்கிறேன் என்றதில் அவருக்கு ஓர் உரிமைக் கோபம்; கூடவே அவரது மானம், குடும்ப கௌரவம்,

அரவங்காட்டில் பெரிய குடும்பம் என்ற நிலையில் இருக்கும் அவர்களின் மரியாதை, எல்லாவற்றையும் விட வேற்று ஜாதியில் திருமணம் ஆகியவை அடி நெஞ்சு வரை கசப்பை சுரக்க வைத்தது! இவையெல்லாம் ஒன்று கூடி, ஓவியமாய் வளர்த்த மகளின் மீது கோபத்தைக் காட்ட வைத்தது!

தந்தையின் மறு பதிப்பான அவளின் தாயோ "உன்னைப் படிக்க அனுப்பியதற்கு எங்களுக்கு நல்ல ஒரு தண்டனை கொடுத்துட்டே ரொம்ப சந்தோசம்... இனிமேல் வீட்டை விட்டு நகர்ந்தே நடக்கிறதே வேற!" எனத் தன் பங்கிற்கு வைத்து தீர்த்தார்.

அவள் முகம் சுளித்தாலே நெஞ்சம் பதறியவர், அவள் அழுது கரைந்த போதும் தனிமையில் மருகினாரே ஒழிய, அவளின் எண்ணத்திற்கு ஒத்துக்கொள்ள வில்லை. "அனு குட்டி, உன்னைத் திட்டறதுக்கு அப்பாக்கு மனசே வர மாட்டேங்குதுடா. அப்பா சொல்றதை தயவு செஞ்சு கேளு கண்ணு... அந்த பையன் வேண்டாம்... நம்ம ஜாதிலேயே நல்ல பையனா, படிச்சவனா, உனக்கு ஏற்றவனா பார்த்து கட்டி வைக்கிறேன் கண்ணு. அப்பா சொல்றதைக் கேளுடா.... என் ராஜாத்தி இல்லை" என அவர் கொஞ்சியதற்குப் பதிலாய்,

"அப்பா, வேற பையன்.... வேற பையன் சொல்லாதீங்கப்பா! எனக்கு மனசே கூசுது. நீங்க வேற என்ன சொன்னாலும் கேட்கிறேன். இது மட்டும்பா... எனக்காக... நிஷாந்த் ரொம்ப நல்லவங்கப்பா. நிறைய படிச்சிருக்காங்க... பார்க்க நல்லா இருப்பாங்க... போட்டோ இருக்கு... பார்க்கிறீங்களா? நான் அவங்களையே கல்யாணம் செய்துக்கிறேன்பா. இப்போ உடனே



வேண்டாம்... கொஞ்ச நாள் கழிச்சு கூட சம்மதம் சொன்னா போதும்" என மன்றாடிய மகளை வெறித்துப் பார்த்தார் தந்தை.

"நீ... இப்படியெல்லாம் சொன்னா சரி வரமாட்டே. நம்ம குல சாமி கோவில்ல வச்சு பொன்னன் முன்னிலையில் பேசிக்கலாம்! உன் புத்தியை எப்படி தெளிய வைக்கிறதுன்னு எனக்குத் தெரியும்!" என்றதோடு அவர் நகர, அனுஜா அரண்டு விட்டாள்.

அவர்களின் குல தெய்வமான பொன்னன் (அய்யனாரின் மறுவடிவம்) முன்னே நிற்கவைத்து, தந்தை என்ன மாதிரி பேசுவாரோ? போற்றி வளர்த்த தந்தை, பேணி வளர்த்த பாசத்தைக் காட்டி நிஷாந்தின் மீது தான் காதலை விலைபேசி விடுவாரோ? பாசத்தின் கட்டாயத்தினால் காதலை இழந்துவிடுவோமா? என்ற பயம் அவளை அப்பிக்கொண்டது! அங்கே கூட்டிச் சென்று உறவுகள் அனைவரும் தன்னை கட்டாயப்படுத்தி விட்டால்? ஹையோ நிஷாந்த்! அவனின்றி எப்படி வாழ்வது? என மனம் பதைத்துப் போன அனுஜா, நிஷாந்திற்கு தகவல் கூறி அடுத்த நாள் காலை அவர்கள் கோவிலுக்குச் செல்வதற்கு முன்னர் தன் வீட்டில் வந்து பேசுமாறு கூறினாள்.

"நீ என்னை விரும்பலைன்னு சொன்னா தானே அனுஜா பிரச்சனை? யாரு என்ன சொன்னாலும் உன்னோட முடிவில உறுதியா இரு!" என அவன் எவ்வளவோ கூறியும், "இல்லை... நீங்க வாங்க... எனக்குப் பயமா இருக்கு... நீங்க வந்திடுங்க" எனத் தானும் பயந்து, அவனையும் பயப்படுத்தி "சரி... சரி! அழ ஆரம்பிக்காதே! நாளைக்கு வந்துடுறேன். தைரியமா இரு. உங்க

அப்பாகிட்ட தைரியமா பேசு!'' என அவன் உறுதி கொடுத்ததும் தான் விட்டாள்.

அந்த உறுதி, அடுத்த நாள் வீட்டிலிருந்த அனை வரும் குல சாமி கோவிலுக்கு என்று கிளம்பிய போது தீர்க்கமாகத் தான் இருந்தது. ஆனால் கோவிலுக்கு வரமாட்டேன் என்றவளை ''நீ எதை கேட்டு நான் இல்லைன்னு சொல்லியிருக்கேன்? இப்போ நான் கேட்கிற ஒண்ணே ஒண்ணை உன்னால செய்ய முடியாதா?'' என்ற வார்த்தைகளால் கலங்கவைத்து அங்கே கூட்டிச் சென்றபோது லேசாய் அசைந்தது. அப்போதும் தான் நிஷாந்தை மறந்து விடுவதாக தெய்வத்தின் முன்னிலையில் சொன்னால் தானே பிரச்னை... அவன் சொல்வது போல் 'முடியாது' என்று தீர்மானமாய் மறுத்தால்? என மனம் தைரியமாய் தான் இருக்க முயன்றது.

கோவிலில் பூஜை முடிந்து, தெய்வ சந்நிதானத்தில் அமர்ந்திருந்த போது, தாயும் தந்தையும் அனுஜாவின் இருபுறமும் அமர்ந்திருக்க, சொந்தங்கள் அனைவரும் கூடியிருந்தனர்.

''அனு குட்டி!'' எனத் தொடங்கிய சரவணப்பாண் டியனின் கண்களில் நீர் துளிர்ந்தது, அதை துடைக்கக் கூட மறந்தவராய் நிஷாந்தை மறந்துவிடும்படி அனு ஜாவைக் கெஞ்ச ஆரம்பித்தார் தந்தை. ஆயிரம் ஆயிரம் காரணங்கள் கொண்டு அவளை மடக்கியவரால், மகளின் ''எனக்கு அவரைப் பிடிச்சிருக்குப்பா'' என்ற ஒரு காரணத்தை ஒத்துக்கொள்ள முடியவில்லை. ஒரு மணி நேரப் போராட்டத்திற்குப் பின்னர், ''முடிவா கேட் கிறேன்... என் குலத்தை ஆளும் இந்த பொன்னன் சத் தியமா உன்னோட விருப்பத்திற்கு நான் துணை



போகமாட்டேன்'' என அவர் வேகமாய் பேச, அவரின் வேகம் தொற்றியதாலோ அல்லது நிஷாந்தை மறுக் கிறாரே என்ற ஆற்றாமையாலோ அல்லது என் விருப் பத்தை மதிப்பில்லையே என்ற வருத்தத்தினாலோ அல்லது நிஷாந்த் இல்லாத வாழ்வை எண்ணிக் கூடப் பார்க்க முடியாத தீர்மானத்தினாலோ ''எங்கப்பா - அம்மா சம்மதத்தோட நான் நிஷாந்தை தான் கல்யாணம் செய்துப்பேன். இது என குல சாமி மேல சத்தியம்!!!'' என மின்னல் வேகமாய் பதில் சொல்லிவிட்டாள் அனுஜா.

தங்களின் குல தெய்வக் கோவிலில் மகள் செய்த சத்தியத்தில் அனுஜாவின் தந்தை முழுதாய் உடைந்தார். ''குல சாமி கோவில்ல... இப்படி ஓர் சத்யம் பண்ண வளை... எப்படி வீட்டுக்குள்ள சேர்க்கிறது?'' என அங்கே ஒரு சில குரல்கள் கேட்க, ''ரவீந்திரா!'' எனத் தன் தம்பி மகனைக் கூப்பிட்டவர், ''அவளை அப்படியே எங்க யாவது போய்டச்சொல்லு. இனிமேல் என் வீட்டிற்கு அவ வரக்கூடாது. எப்போ என் குல சாமி முன்னால... என்னை மீறிகிட்டு இப்படி ஓர் சத்தியத்தை செய்தாளோ அவ என் பெண்ணில்லை. போகட்டும்... அப்படியே போகட்டும்'' என்றவர் மகள் பக்கம் திரும்பக் கூட இல்லை.

''உங்க சம்மதத்தோட தான்பா கல்யாணம் செய்துப் பேன். அப்படித் தான் சத்தியம் செய்திருக்கேன். அப்பா... ப்ளீஸ்பா... புரிஞ்சுக்கோங்க!'' என அனுஜா என்ன கெஞ்சியும் அவளைப் பெற்றவர் அசையவில்லை.

பார்த்தே இராத, அதுவும் அறிந்து சில தினங்களே ஆனா நிஷாந்தின் பெற்றோர் மற்றும் அவனின் தோழி,

அவர்களையும் தாண்டி தோழியின் பெற்றோர் எனப் பலருக்காக வருத்தப்பட்ட அனுஜாவின் மனம் இப்போது தன் சொந்தங்களின் புறக்கணிப்பில் அவர்களுக்குத் தான் ஏற்படுத்தி வைத்திருக்கும் நோவை எண்ணி எண்ணி மருகியது. அதற்காக ஆனமட்டும் அவள் மன்னிப்பு கேட்டப்போதும் அவர்கள் யாரும் அனுஜாவின் வார்த்தைகளை ஏற்பதாய் இல்லை. வீட்டின் அரசரான சரவணப்பாண்டியனின் வார்த்தைகளை மீறவும் யாருக்கும் தைரியம் வரவில்லை. ஆகவே, சொந்தங்களின் அரவணைப்பில் வளர்ந்த மகளைக் குலத் தெய்வத்தின் அரவணைப்பில் விட்டுவிட்டு அனைவரும் வீடு போக எத்தனித்தனர்.

அவள் தனியே இருப்பது தெய்வத்திற்கே பொறுக்கவில்லை என்பது போல், அனுஜாவின் கிளம்பும் வேளையில் நிஷாந்த் அங்கே வந்து சேர்ந்தான். பெரும் இறுக்கத்துடன் தென்பட்ட சரவணப்பாண்டியனிடம் தன் வருங்கால மனைவி கெஞ்சிக் கூத்தாடுவதைக் கண்டு நிஷாந்த் மனம் கொதித்தான் என்றால், தங்கள் பெண்ணைத் தேடி தங்களின் ஊருக்கே வந்துவிட்ட நிஷாந்தைக் கண்டு அனுஜாவின் சொந்தங்கள் முக்கியமாய் ராகவன் மனம் கொதிக்க, அங்கே ஓர் பிரிவேற்றம் அரங்கேறியது: உயிர் வரைச் சென்று அனுஜாவை நோகடித்த பிரிவேற்றம்!!

அனுஜாவின் கெஞ்சல், கதறல், மன்னிப்பு, போராட்டம், காலில் விழுதல், மன்றாடல் என எதுவுமே வேலை செய்யாமல் போன நிலையில், நிஷாந்தின் பேச்சை அங்கே யாரும் கேட்பதாய் கூட இல்லை. பல மணி



நேரப் போராட்டங்களுக்குப் பின்னர், அனுஜாவை அழைத்துக் கொண்டு சென்னை வந்து சேர்ந்தான் நிஷாந்த்.

அடுத்து சில நாட்களிலேயே அவனை சிங்கப்பூர் போகச் சொல்லி அலுவலகம் பரிந்துரைக்க, குடும்பத்தினரின் நிராகரிப்பால் பெரிதும் துவண்டிருந்த அனுஜாவைத் தனியே விட மனமின்றி அவளை உடனடியாய் மணந்து கொண்டவன், தன் மனைவி என்ற அந்தஸ்துடன் சிங்கப்பூருக்கு பயணமானான்.

அனுஜாவைப் பார்த்த அன்று அவளின் முகத்தில் தவழ்ந்த சந்தோஷமும், கவலையற்ற தன்மையும் தன்னுடன் நடந்த கல்யாணத்தினால் தொலைந்து விட்டனவோ? குழந்தையாய் இருந்த ஒருத்தியை அவசரப்பட்டு மனைவியாகி அவளின் குழந்தை மனத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய் அழிக்கிறோமோ என்ற வருத்தத்துடன் நிஷாந்தின் எண்ணங்கள் பயணிக்க, அவர்களின் கும்பகோணம் - சென்னை பயணமும் இனிதே முடிந்திருந்தது!

# 10

நிஷாந்தின் கார் சென்னையை அடைந்த நேரத்தில், இரவு கனிந்து கொண்டிருந்தமையால் நேராக வீட்டிற்குச் செல்லாமல் அருகிலிருக்கும் ஓர் உயர்தர உணவகத்திற்கு வண்டியைச் செலுத்தினான் நிஷாந்த். அவன்

வண்டியை நிறுத்தியது கூட தெரியாமல் அயர்ந்து உறங்கும் அனுஜாவைச் செல்லமாய் சீராட்டியபோதும், இந்த அயர்ந்த உறக்கம் சற்று நேரமாய் தானே நிகழ்ந்திருக்கிறது. இதற்கு முன்னர் உறக்கம் பிடிக்காமல் அவள் அலைப்புருவதை வருந்த வருந்தப் பார்த்துக் கொண்டிருந்தோமே என்ற எண்ணம் அவனை வாட வைத்தது. சில மாதங்கள் முன்னென்றால், கிளம்பிய நேரம் தொட்டு அவளின் உறக்கம் அயர்ந்த உறக்கமாக அல்லவா இருந்திருக்கும்? என மேலும் சங்கடமே மனதில் புகுந்தது.

"என் காதலினால் தான் அவளுக்குத் துன்பம்" என்ற சங்கடம், தன் உலுக்கலினால் விழித்த அனுஜா "என்ன பாவா? ஹோட்டலுக்கா வந்திருக்கீங்க? வீட்டுக்குப் போய்டலாம்" எனத் தூக்கம் மறையாத குரலில் சொல்லவும் கோபமாய் கூர்மை பெற்று "வீட்டுக்குப் போய்?" எனத் துண்டு கேள்வியாய் நின்றது.

அக்கேள்வியில் மறைந்திருந்த கோபத்தை உணராத அனுஜாவோ "வீட்டுக்குப் போய் உப்புமா செய்து தரேன். வெளிய சாப்பிட்டா உங்க உடம்பு கெட்டுடும். இப்பவே ரொம்ப மெலிந்து போயிட்டீங்க..." எனக் கூறி, அவன் வண்டியை வீட்டிற்குத் திருப்புவதற்காக காத்திருந்தாள்.

தன் உணர்வுகளின் வார்த்தைகளை மனதில் வைத்து மறுகிக்கொண்டு தான் வீட்டிற்குப் போக வேண்டும் என்கிறாள் என்பதை உணர்ந்துவிட்டதால் தான் நிஷாந்திற்குக் கோபமே உண்டானது. இப்போது அவனது எண்ணத்தை மனைவி உறுதிசெய்யவும், கூடுதலாய் அதை அவன் ஆமோதித்து வீட்டிற்குச் செல்வான்



என்ற அவளது எண்ணம் நிஷாந்தின் கோபத்தை அதிகரித்தது.

அதன் விளைவாக "அனுஜா, நாம நமக்காக வாழறோம். வேற யாருக்காகவோ... அவங்களோட வார்த்தைக்காகவோ நாம வாழலை. இனிமேல் அவங்க சொன்னாங்க.. இவங்க சொன்னாங்க.. அது எங்க அப்பா - அம்மாவா இருந்தாலும் சரி, உன் அப்பா - அம்மாவா இருந்தாலும் சரி.... ஏதாவது மடத்தனம் செய்துட்டு இருக்காதே! அந்த நேரத்தில நமக்கு எது சரின்னு படுதோ அதை செய்துடணும். சும்மா மத்தவங்க வார்த்தைக்காக உன்னை வருத்திக்கிற வேலை இனி செய்யக்கூடாது சொல்லிட்டேன். மரியாதையா வண்டியை விட்டு இறங்கி வா! இங்க தான் நமக்கு ராத்திரி சாப்பாடு! ம்ம் இறங்கு!" என இறுகிய குரலில் கட்டளையிட்டுவிட்டு இறங்கியவன், விறுவிறுவென உணவகத்தின் உள்ளே சென்று விட்டான்.

அவனது கோபத்தில் அரண்டு போன அனுஜாவிற்கு, அவனது வார்த்தைகளில் பொதிந்திருந்த அக்கறை இனித்தப் போதும், புகுந்த வீட்டினரின் குற்றத்தை (அதாவது கணவனை ஒழுங்காக கவனிக்கவில்லை என்ற குற்றத்தை) சீர் செய்ய முடியவில்லையே என்ற வருத்தம் மேலோங்கியது! அவர்கள் குற்றம் சுமத்த, கணவன் அவர்களின் குற்றத்தைக் குற்றமே இல்லை என்பது போல் நெற்றிக்கண் திறந்து அவளைத் திட்ட, இருவருக்கும் இடையே அல்லாடிய அல்லிக்கொடி, கொண்டவனின் மார்பில் சாய்ந்து ஆறுதல் தேடும் தாகத்துடன் உணவகத்தின் உள்ளே சென்றது.

அங்கே உணவுப்பட்டியலின் மீது கண்ணாய் இருந்த நிஷாந்தின் எதிரே போய் அமர்ந்த அனுஜாவை, நிமிர்ந்து பார்த்த அவளது கணவன் ''என்ன மேடம்? கோபமா? உனக்காக இடம் விட்டு நகர்ந்து உட்கார்ந்திருந்தா... நீங்க பாட்டுக்கு எதிர் சீட்ல உட்காறீங்க?'' என்றான் புருவத்தை லேசாக உயர்த்தி; கூடவே உதட்டோரம் விளைந்த மென் சிரிப்பு வேறு!

கணவனின் சிரிப்பில் மனைவியின் வருத்தம் மறைந்தோட ''எனக்குக் கோபமே இல்ல... உங்களுக்குத் தானே என் மேல கோபம்? கோபம் போயிடுச்சா பாவா?'' என்றாள் அவனருகே அமர்ந்தவாறே.

''அதானே? அஜுக்காவது கோபம் வரதாவது? அப்படி ஏதாவது நடந்துட்டா உலகம் அழிந்திடாது?'' எனக் கேலி செய்தவன், ''எனக்காக உன்னை நீ வருத்திக்காம இருந்தாலே எனக்குக் கோபம் வராது!'' என்றான் ஆத்மார்த்தமாய்.

''உங்களுக்குச் செய்றதில எனக்கு ஒன்றும் கஷ்டமில்லை. சந்தோசம் தான். என் புருஷனை நான் நல்லா பார்த்துக்கிறேன் என்ற சந்தோசம் தான். இதை... நான் வேற யாருக்காகவும் செய்யல. எனக்கே தோணுது... கல்யாணம் ஆயாச்சு, சீக்கிரமே குழந்தையும் பிறக்கப் போகுது, குழந்தை பிறந்ததும் அத்தை - மாமா நம்ம கூட வந்திருக்கப் போறாங்க, அம்மா - அப்பாவும் வரப் போக இருப்பாங்க, அப்படியிருக்கும் போது நான் பொறுப்பா இருக்கணும் தானே?'' என அவள் பேசிய போது, ஏனோ நிஷாந்திற்கு சிரிப்பு தான் வந்தது.

என்ன காரணத்தினாலோ அவனால் அனுஜாவை ஓர் குழந்தைக்குத் தாயாய், ஓர் குடும்பத் தலைவியாய்



கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. அவளின் மனம் அந்த நிலைக்கு இன்னும் முதிரவில்லை என்பது கணவனை அவனின் கணிப்பு. காலையில் தாயின் கோபத்திற்காக தீர்வை குழந்தை தோன்றியபோதும், குழந்தையை சுமக்கும் பக்குவம் அனுஜாவிற்கு வரவில்லையோ? அம்மாவின் ஆனால் அவனின் கணிப்பை அவன் சிரிப்பினூடே வெளியிட்ட போது அனுஜா கலங்கித் தவித்துப் போனாள்.

''நீ இன்னும் சின்ன பேபி தான்டா. உனக்கே ஒரு பேபி வேணுமா? எனக்குச் சிரிப்பா வருது அஜு! இன்னும் கொஞ்ச காலம் பொறுக்கலாமா? ஜஸ்ட் இன்னொரு ஆறு மாசம்?'' என அவன் இயல்பாய் வினவ,

''ஹய்யோ? இன்னும் ஆறு மாசமா? அதுக்கு அப்புறம் ஒரு பத்து மாசம்... அப்புறம் தான் எல்லாரும் நம்மளைப் பார்க்க வருவாங்க. அது வரைக்கும் அவங்களைப் பார்க்காம நமக்கும் வருத்தம். நம்மளைப் பார்க்காம அவங்களுக்கும் மனக்கஷ்டம். இதெல்லாம் வேண்டாம் பாவா... நாம சீக்கிரமே... ஹ்ம்ம் உடனே குழந்தை பெத்துக்கணும்'' என்ற அனுஜாவின் குரல் அதிர்ச்சியில் ஆரம்பித்து, வருத்தத்திற்குத் தாவி, பிடிவாதத்தில் முடிந்துவிட்டிருந்தது.

''ஓகே டா. ஓகே டா. இப்போதைக்கு இதை மறந்துட்டு... நிம்மதியா சாப்பிடு'' என அவளைத் தோளோடு சேர்த்து அணைத்துக்கொண்ட கணவன், உணவின் பக்கம் அவளின் கவனத்தைத் திருப்ப முயன்றான். ஆனால், அவனின் முயற்சி வெற்றி தான் பெறவில்லை.

''பாவா, உங்களுக்குக் குழந்தைங்க என்றால் இஷ்டமில்லையா?''

''பொண்ணு பாப்பா கூடவா?''

''இப்போ குழந்தை வேண்டாமா? இல்லை ரொம்ப நாளுக்கு வேணாமா?''

''நான் குழந்தை பிறந்தா அதை ஒழுங்கா பார்த்துப்பேன். கவலைப்படாதீங்க!''

''அப்புறம் எப்படி நம்ம குடும்பத்தோட சேருவது?''

''எனக்குத் தனியாவே இருக்கப் பிடிக்கலை... பாவா!'' என அவனைக் குடைந்து எடுத்துவிட்டாள் மனைவி. அரை மணி நேரத்திற்கு மேலாக அவளின் புலம்பல் நீடிக்கவே,

''அஜு, பேசாம சாப்பிடுறியா இல்லையா? இப்படி புலம்பிட்டே இருந்தா உடம்பில எதுவுமே ஒட்டாது'' என்றான் நிஷாந்த் கண்டிப்புடன்.

அவனின் கண்டிப்பில் அடங்கி உணவை முடித்தப் போதும், அனுஜாவிற்கு உள்ளூர கலக்கம் மறைந்த பாடில்லை, கணவனே குடும்பத்துடன் சேர்வதற்கு எதிராய் நின்று விடுவானோ என்ற எண்ணம் அவளை மிகுந்த கலக்கத்திற்கு ஆளாக்கியிருந்தது.

இது நாள் வரை, இரு குடும்பத்து பெற்றோரை எப்படி சமாதானம் செய்வது எனத் திணறிக்கொண்டிருந்தவளுக்கு, 'குழந்தை பிறந்தால் எல்லாம் சரியாகிவிடும்'' என்ற வார்த்தைகள் பெரும் நம்பிக்கையை ஒட்டியிருந்தன. தங்களை ஆட்டிப் படைக்கும் பிரச்சனைக்கு ஓர் தீர்வு கண்ட உணர்ச்சி ஏற்பட்டிருந்தது! கூடவே சிறு பிள்ளைகள் மீது அவள் கொண்டிருந்த விருப்பமும் சேர்ந்து கொள்ள, இரு குடும்பத்திற்கும் பாலமாய் தன் பிள்ளை திகழப் போகிறது என்ற கனவில் மிதந்து கொண்டிருந்தாள் என்றே சொல்லலாம்!



குழந்தை என்று ஒன்று வந்துவிட்டதால் பெற்றோருடன் இணைந்து விடலாம் என்ற அவளின் அசைக்க முடியாத நம்பிக்கையை கணவனின் வார்த்தைகள் அசைத்துப் பார்க்கவே பெரும் கலக்கம் நெஞ்சை அரிக்கத் துவங்கியது. தன் கலக்கத்தை வெளியிட்டால் கணவன் மீண்டும் கோபம் கொள்வானோ என்ற பயத்தில், அவள் அதை தனக்குள்ளே புதைக்க வேறு பல பிரச்சனைகளுக்கு அது வித்தாகிப் போனது!

தொடர்ந்து வந்த நாட்களில் வாழ்க்கை அமைதியாகவே சென்றது: பெற்றோருக்கு செய்யும் தொலைபேசி அழைப்புகளினால் சிறு மனவேதனையை அனுஜாவின் சமையல் கலாட்டாக்களும், ஆனந்த் - சரிதாவுடன் நடந்த பேச்சு வார்த்தைகளும் ஈடுகட்ட நாட்கள் சுவாரஸ்யமாய் கூட சென்றன எனலாம். நிஷாந்தின் வேலைப்பளு அதிகரித்தால் வந்த நேரமின்மையை ஒதுக்கி விட்டால், பெற்றோரின் அரவணைப்பில்லாதது மட்டும் தான் வேதனையின் காரணமாயிற்று!

சொல்லப் போனால், அனுஜா சமையலில் ஏதாவது புதிதாக முயன்று நிஷாந்தின் வயிற்றை சோதனைக்கூடமாக்கி, அவனை எலியாக்கிய, சந்தோஷத்தில் முழுமையாக திளைத்தாள் என்றே கூற வேண்டும்!

ஒரு முறை கேக் செய்கிறேன் எனக் கூறி, அலுவலகத்திலிருந்து சீக்கிரமாகவே கிளம்பி வீடு வந்து சேர்ந்தவள், நிஷாந்த் வீட்டிற்குள் நுழையும் போது ஓர் மாவு கூட்டத்தின் ஊடே சமையலறையில் நின்றிருக்க நிஷாந்த் பயந்து போனான்.

''அஜு, என்னாச்சு? என்ன செய்றே? முதல்ல வெளிய வா?'' என அவன் வரவேற்பறையிலிருந்து கத்த,

''பாவா'' என விரிந்த சிரிப்போடு வந்த அனுஜாவின் கைகளில் பெரிதாய் ஓர் தட்டின், அதன் மீது பிரவுன் கலரில் ஓர் உருண்டையும் இருந்தன.

''என்னடி?'' என அவன் பதற, ''கேக்! சாக்லேட் கேக்!'' எனப் பெருமை பொங்க அறிவித்தவள், ''இப்போ தான் ஓவன்ல இருந்து எடுத்தேன். எடுத்துக்கோங்க'' என்றாள் மித மிஞ்சிய ஆர்வத்துடன்.

''கேக் இருக்கட்டும். இதென்ன கிச்சன் முழுசும் ஒரே புகை மூட்டமா இருக்கு?'' என அவன் கேள்வி கேட்க, ''அப்புறம் கேக் செய்றதுன்னா சும்மாவா? மைதா மாவு, சாக்கோ மாவுன்னு எத்தனை மாவு. அதெல்லாம் பறந்துடுச்சு. அதான் இப்படி இருக்கு. அதை விடுங்க. முதல்ல கேக் சாப்பிடுங்க பாவா'' என உபசரிப்பில் முடித்தாள் மனைவி.

மனைவியின் உபசரிப்பில் மகிழ்ந்து கேக்கை சுவைக்க முயன்றவனால் சுவைக்க முடியவில்லை; பிய்த்தால் தானே சுவைப்பதற்கு; அனுஜா செய்திருந்த கேக்கிலிருந்து ஒரு துண்டைக் கூட இப்படி - அப்படி நகர்த்த முடியவில்லை;

மனைவியின் முகத்தைப் பார்த்த நிஷாந்திற்கு சிரிப்பு பொத்துக்கொண்டு வந்துவிட, வயிற்றை பிடித்துக் கொண்டு சோபாவில் விழுந்தவன் ''உனக்கு எதுக்கு இந்த வேண்டாத வேலை? ஒழுங்கா வர கூட்டையும், குழம்பையும் செய்திட்டு இருக்க வேண்டியது தானே? எதுக்கு இப்படி ஒரு விஷப் பரீட்சை? இதுக்கு... மூணு மணிக்கே ஆபீஸ்ல இருந்து வேற கிளம்பியிருக்கே? அதுவுமில்லாம கிச்சனை ஓர் யுத்தக்களமா ஆக்கி



வச்சிருக்கே? ஏன்டி இந்த வேண்டாத வேலை? உனக்கு கேக் சாப்பிடணும்னா பக்கத்து பேக்கரில போய் எத்தனை வேணும்னாலும் சாப்பிட வேண்டியது தானே? ஏன் இந்தக் கொலைவெறி?'' என அவன் மேலும் மேலும் சிரிக்க, ஆழ்ந்த சிரமத்திற்கு இடையே செய்த கேக் பிய்க்கவே வராமல் கல் மாதிரி ஆனதில் வருத்தம் கொண்டிருந்த அனுஜாவிற்கு, கணவனின் வார்த்தைகளில் அழுகை பொங்கி வந்தது.

செய்த கேக்கை அப்படியே உணவு மேஜையின் மீது வைத்தவள், படுக்கையறைக்குச் சென்று படுக்கையில் விழுந்த நொடி, கண்ணீரைப் பொழிய ஆரம்பித்தாள். அனுஜாவின் தற்போதைய அழுகை நிஷாந்தை பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது!

இயல்பாக அனுஜாவிற்கு அழுகையே வராது சொல்லி விட முடியாது; ஆனந்தத்தில் அழுகை, கஷ்டத்தில் அழுகை, காதலில் அழுகை, பாசத்தில் அழுகை என அவள் கண்களில் எப்போதுமே கண்ணீர் தயாராய் இருக்கும் என்றாலும், ஓர் கேலிக்கு அவள் அழுது அவன் பார்த்ததில்லை.

கேலியால் அவளைத் திணறடிக்கும் போது சின்னதாய் வெட்கப் புன்னகை பூத்து, அசடு வழிவாள். இல்லையேல் ''இப்படி ஆகிவிட்டதே'' என வருத்தம் கொள்வாள். அது கூட மிக லேசான வருத்தமாய் தான் இருக்கும்! சமைக்க ஆரம்பித்ததிலிருந்து, அவள் செய்யும் பதார்த்தங்கள் நன்றாகவே இருந்தாலும் ''இந்த டிஷ் நல்லா இருக்கா, பாவா? நல்லா இல்லைன்னா தயங்காம சொல்லுங்க... நான் மாத்திக்கிறேன்'' எனத் திரும்பத் திரும்பக் கேட்டு அவனை நச்சரிப்பவள்,

இன்று அப்படியொரு கேலியில் ஏன் உடைந்து அழுதால் என்பது புரியாமல் படுக்கையறைக்குள் வேகமாய் நுழைந்தான் நிஷாந்த்.

"ஹே அஜு! சாரிடா. உன்னை அழவைக்கணும்ன்னு சொல்லலைம்மா. சும்மா விளையாட்டுக்கு..." என அவன் செய்த சமாதானத்தால், அனுஜாவின் அழுகை சில மணித்துளிகளில் சிறுவிசும்பலாய் மாறியிருந்தது.

அவளது அழுகை கட்டுக்குள் வந்ததும், கொஞ்சமாய் தண்ணீர் கொடுத்து அவளின் விசும்பலை நிறுத்தியவன், அவளைத் தோளில் சாய்த்துக்கொண்டு "ஒரு கேக் சரியா வராததற்கு இந்த அழுகை அழுவாங்களா? என்னடா அஜு இது? உனக்கு கேக் சாப்பிடணும் போல இருக்கா? உனக்கு அவ்வளவா கேக் பிடிக்காதே? ஹ்ம்ம்... சரி இப்போ சாப்பிடணும் போலிருந்தா உடனே கிளம்பி வா... வெளியே போயிட்டு வரலாம்! சும்மா அழுதா எனக்குப் பிடிக்காது அஜுமா!" என லேசாய் அதட்டினான்.

"ம்ம்.... எனக்கு கேக் அவ்வளவா பிடிக்காது தான். நீங்க சரியா தான் தெரிஞ்சு வச்சிருக்கீங்க" என தேம்பலின் ஊடே அவனின் புரிதலைப் பார்த்து பெருமை கொண்டவள், "அப்புறம், எதுக்கு இப்படி அழுதே கரைகிறாய்?" எனக் கணவன் துருவவும் "ரேவந்துக்கும், ரேகாக்கும் கேக் தான்... அதுவும் சாக்லேட் கேக் தான் ரொம்பப் பிடிக்குமாம். எதிர்த்த வீட்டுல ஒரு பாப்பா இருக்காளே... அவ கூட ப்ளாக்ஃபாரஸ்ட் கேக் தான் விரும்பி சாப்பிடுவாளாம். எங்க பெரிய அண்ணா பொண்ணு வர்ஷினிக்குக் கூட கேக் தான் ரொம்ப இஷ்டம். உங்களுக்கும் கூட சாக்லேட் தானே ரொம்ப பிடிக்கும்" என்றாள் காரணம் போல.



அவர்கள் கேக்கை விரும்பி உண்பதற்கும், இவள் கேக் செய்ததற்கும் என்ன தொடர்பு என்ற குழப்பம் மனதில் எழ "அவங்க எல்லாரும் நம்ம வீட்டுக்கு சாப்பிட வராங்களா? அதுக்காக தான் செய்தியா? எப்போ வருவாங்க? அவங்க வரதுக்குள்ள நான் போய் பிரெஷ்ஷா வேற கேக் வாங்கிட்டு வந்துடுறேன்" என்றான் கணவன் தன் கணிப்பாய்.

"ம்ஹூம். அவங்க வரலையே!?" என அனுஜா விழிக்க, "அப்புறம் எதுக்குடி? எதையாவது தெளிவா பேசு. எனக்கு மண்டை காயுது?!" என்றான் நிஷாந்த் எரிச்சலாக.

அவனது எரிச்சலின் காரணமாக அனுஜாவின் கேக் செய்யும் காரணம் வெளிவந்தது. அதாகப்பட்டது - இயல்பாக குழந்தைகளுக்குப் பிடித்தது கேக். அதை இப்போதிருந்தே செய்யக் கற்றுக்கொண்டால் தான் பிள்ளை பிறந்து, அது கேக் உண்ண முற்படும் வேளையில் சிரமமின்றி செய்து கொடுக்க முடியும். இப்போது கற்று கொள்ளாமல், பிள்ளை வளரும் வரை கேக் செய்யும் முறையே அறியாமல் இருந்தால் அந்த நேரத்தில் மிகுந்த கஷ்டமாகிவிடும். என்னதான் வெளியில் வாங்கினாலும், தன் கையால் குழந்தைக்கு போய் விடக் கூடாதே என்பதால் தான் இப்போதிருந்தே அதற்கான வேலைகளில் அவள் இறங்கியிருப்பதே! குழந்தைக்காக என்று அவள் முயன்று ஒன்று தோல்வியைத் தழுவியதில் அழுகை வெடித்துக்கொண்டு வந்துவிட்டது!

இவையனைத்தையும் கண்களில் ஓர் மின்னலுடன் அனுஜா சொல்லிமுடித்தப் போது, நிஷாந்திற்கு அவளது ஆசையின் தீவிரம் புரிந்தது. ஒரு சின்ன சாப்பாட்டு

விஷயத்திற்கே குழந்தையை முன்னிறுத்தி இவ்வளவு தூரம் யோசிப்பவள், வேறு என்னென்ன கனவில் மிதக்கிறாளோ? என நெஞ்சம் துணுக்குற, "முதல் தடவை தானே அஜு? கேக் போகப் போக நல்லா செய்துடுவே!" என அவளைத் தேற்றியவன், "இது மாதிரி... குழந்தைக் குன்னு வேறென்ன செய்து வைத்திருக்கே?" என்றான் ஆராயும் நோக்கில்.

"வேறென்ன செய்றது? ஒண்ணுமில்லையே?" என அனுஜா வெள்ளையாய் மறுத்தப் போதும், கடந்த இரு மாத நிகழ்வுகளை ஒரு முறை திருப்பிப் பார்த்தான் நிஷாந்த்.

கடந்து சென்ற எண்பது நாட்களில், அவன் கவனிக் காமல் விட்ட விஷயங்கள் எனப் பெரிதாய் ஏதுமில் லாதது போலவே தோன்றினாலும், அந்த அறுபது நாட் களில் ஒரு சில நாட்கள் மட்டும் அனுஜா மிகவும் சோர்ந் திருந்தது நினைவில் வந்தது. அதை கவனித்து அவன் விசாரித்தபோதெல்லாம், மாதவிடாய் என அவள் முகம் சுளித்தது நினைவிலாடியது. மாதவிடாய் காலத்தில் அவளது சோர்வு அவன் அறிந்ததே என்றாலும், இரண்டு தடவைகளாக அந்த நேரத்து சோர்வையும் மீறி வேறெது வும் தென்பட்டதோ எனக் காதல் கணவன் மறுகிப் போனான்.

அவனின் மறுகலை உறுதி செய்து கொள்ளும் வாய்ப்பு பத்து நாட்களில் நிஷாந்திற்கு அமைந்தது!

எப்போதும் போல் காலை ஆறு மணிக்கு விழிப்பு தட்டுவதற்குப் பதிலாக, ஐந்தரைக்கே நிஷாந்திற்கு தூக்கம் களைந்துவிட, அருகில் படுத்திருக்கும் அனுஜா விற்காக கையை நீட்டினான். வார நாட்களில், சமையல்



செய்வதற்காக அவன் எழுவதற்கு அரை மணி நேரம் முன்னரே எழுந்துவிடும் அனுஜா, வார இறுதிகளில் ஏழரை மணி தாண்டி எழுந்துகொள்வது மிக மிக அபூர்வம். அந்தக் காரணத்தால் தான் ஞாயிற்றுக் கிழமை யான அன்றைய தினத்தில் நிஷாந்த் மனைவியைத் தேடியதே!

ஆனால், அவனின் அரவணைப்பிற்கு உட்படாமல் அனுஜாவின் இடம் காலியாக இருக்கவே, "அஜு..." என்ற தூக்கத்தின் ஊடே அழைத்தவன், அரைக்கண் திறந்து மனைவியிருக்கும் இடத்தை அறிய முற்பட்டான். குளியலறையிலிருந்து தண்ணீர் விழும் சத்தம் கேட் கவே, சற்று நேரத்தில் படுக்கைக்கு வந்துவிடுவாள் என்ற எண்ணத்தில் அவன் கண்ணயர, பதினைந்து நிமிடங்கள் சென்று அவன் கண் விழித்தப்போதும் அனுஜா வந்து சேரவில்லை.

இப்போது தண்ணீர் விழும் சத்தமும் கேட்காமல் போகவே, எழுந்து சென்று குளியலறைக்கதவை அவன் தட்ட, பதிலேதும் வரவில்லை. ஐந்து நிமிடத்திற்கும் மேலாக தட்டியவன், "அஜு" என்ற கொஞ்சலை "அனுஜா" என்ற அதட்டலாக மாற்றியபோது "வந்துட் டேன்" என்றாள் மனைவி, தெளிவற்ற குரலில்.

அவளது தெளிவற்ற குரல் ஏதோ விபரீதத்தை உணர்த்த, "அனுஜா, கதவைத் திற! என்னாச்சு? ஏதாவது பிரச்சனையா? எங்கயாவது விழுந்துட்டியா குட்டி? பாவா... திட்டமாட்டேன். பயப்படாம சொல்லு... டாக்டர் கிட்ட போயிட்டு வந்துடலாம்" என்றான் நிஷாந்த் கனிவும், அக்கறையும் கலந்து வினவினான். தூக்கக் கலக்கத்தில் எங்கேயும் வழுக்கி விழுந்துவிட்டாளோ?

தன்னிடம் சொன்னால் ''கண்ணைத் திறந்து கொண்டு நடக்க வேண்டும்'' எனக் கடிந்துகொள்வோம் என்ற பயத்தில் கூறாமல் இருக்கிறாளோ? எனும் எண்ணத்தினால் தான் அவன் அப்படி வினவியது. அது அவனின் கற்பனை என்று கூட சொல்லமுடியாமல், திருமணமான புதிதில் இப்படியொரு கூத்து நடந்துமிருந்தது. அதனாலேயே நிஷாந்த் அக்கறை காட்டி, இதம் பதமாய் வினவினான்.

ஆனால், அவனின் எண்ணத்திற்கு மாறாய் ''ஒண்ணுமில்லை பாவா. நீங்க படுங்க. நான் வரேன்'' என்ற அனுஜா, கதவைத் திறப்பதற்கு மேலும் பதினைந்து நிமிடங்கள் பிடித்தன. தான் வெளியே வரும் வரை, குளியலறை வாயிலிலேயே கணவன் காவல் காத்திருப்பான் என்றெண்ணியிராத அனுஜா, அவனைக் கண்டதும் வெளிப்படையாய் அதிர்ந்தாள். அவளின் வெளிப்படையான அதிர்ச்சியைத் தொடர்ந்து, தனிச்சையாக அவள் பின்புறம் கொண்டு சென்ற கைகளையும் கண்ட நிஷாந்த். மான் விழி கொண்டு மங்கையின் அதரங்கள் துடித்து துவண்டிருப்பதையும், அவளின் மான் விழிகள் மழையில் நனைந்திருப்பதையும் குறிப்பெடுத்தான்.

''கையில என்ன?'' என்ற அவனின் கேள்வியில் அனுஜாவின் கைகள் மேலும்மேலும் பின்னே செல்ல, ''என்னன்னு கேட்டேன்'' என மிக அழுத்தமான வினவலுடன், தன் பலத்தினால் அவளின் கைகளை முன்புறம் கொண்டு வந்த நிஷாந்த், மனைவி வைத்திருந்த ''கர்ப்பத்தை உறுதி செய்யும் சாதனத்தைக்'' கண்டு திகைத்துப்போனான்.



கணவனுக்கு விஷயம் தெரிந்துவிட்டது என்றதும் ''இப்போதென்ன குழந்தைக்கு அவசரம்?'' என முன் போல கடிவானோ என்ற பயம் முதலில் எழுந்தாலும், தனது தற்போதைய துன்பத்தை அவனிடம் பகிர்ந்து கொண்டால் மனப்பாரம் குறையும் எனத் தோன்றி விட்டது அனுஜாவிற்கு!

அவனின் திகைப்பை அதிர்ச்சியாக்கி அவனை உறைய வைக்கும் பொருட்டு ''இந்த தடவையும் நெகடிவ் ரிசல்ட் வந்துடுச்சு, பாவா!'' எனக் கதறிய அனுஜா அவனது தோள்களில் புதைந்து ஆறுதல் தேடினாள்.

# 11

அனுஜாவின் கைகளிலிருந்த சாதனத்தைக் கண்டதுமே திகைத்திருந்த நிஷாந்த், அவளின் ''நெகடிவ் ரிசல்ட்'' என்ற வார்த்தையை விட ''இந்த தடவையும்'' என்ற வார்த்தையில் மிகவும் அதிர்ந்து போனான்.

''இந்த முறையும்'' என்றால் இதற்கு முன்னர் எத்தனை முறை இந்த சோதனையை நிகழ்த்தியிருக்கிறாள்? அதுவும் தனக்குத் தெரியாமல்? தன்னிடம் இந்த விஷயத்தை மறைக்கும் அளவிற்கு மனைவிக்கும் தனக்கும் இடைவெளி வந்துவிட்டதா? என எண்ணங்கள் அலையென மோதியபோதும், தன் தோளில் சாய்ந்து ஆறுதல் தேடும் மனைவியின் அழுகை தான் அந்த நிமிடம் முக்கியமாய்பட்டது.

அவளை அணைத்துப் படுக்கைக்கு அழைத்து வந்தவன், மனைவியின் கண்ணீர் வடியும் வரை அவ ளின் முதுகை வருடிக் கொடுத்தவாறே காத்திருந்தான். அழுகை மறைந்து, விசும்பல் பிறந்து, அதுவும் குறைந்து, அனுஜாவின் விழிகள் கணவனை ஏக்கத்துடன் ஏறிடும் வரை நிஷாந்தின் வருடல் நிற்கவே இல்லை.

தன்னை சந்தித்த மனைவியின் விழிகளைத் தவிர்த் தவன், மெல்ல அவளை விலக்கிவிட்டு, சமையலறை நோக்கிச் செல்ல, அனுஜாவிற்குப் பயம் பிடித்துக் கொண்டது. ''இப்போதைக்கு குழந்தை வேண்டாம்... வேண்டாம்'' என அவன் கூற, தான் அதை மதிக்க வில்லை எனக் கணவன் கோபம் கொண்டிருக்கிறான் என்ற எண்ணம் வாட்டத்தை வரவைக்க, அவனை எப் படி சமாதானம் செய்வது என்று யோசனையுடன் சமைய லறை நோக்கி விரைந்தாள் அனுஜா.

அங்கே தேநீர் தயாரிக்கும் பணியில் நிஷாந்த் ஈடுபட் டிருக்க, அவன் பின்னே சென்று நின்றவள், ''பாவா'' என்றாள் மெல்ல, அதற்கு இந்த வித பதிலும், ஏன் ஓர் ''ம்ம்'' கூட இல்லாமல் போனதில் ''நீங்க சொன்னதைக் கேட்காம நான் குழந்தை பெத்துக்கொள்வதில் ரொம்ப மும்முரமா இருக்கேன்னு தானே உங்களுக்கு கோபம்? எனக்குத் தெரியும்!'' என அவனின் மனநிலையை இவளே கணிக்க, அதற்கும் பதிலேதும் பிறக்கவில்லை.

''இந்த ஒரு விஷயத்தில மட்டும் நான் சொல்றதை கேளுங்க பாவா. நான் ஒண்ணும் சின்னப் பாப்பா இல்லை... என்னால குழந்தையைப் பார்த்துக்க முடியும். இப்போ சமையல் செய்யலையா? முன்னாடி எனக்கு சப்பாத்தி கூட போடத் தெரியாது தானே? ஆனா,



இப்போ பரோட்டா கூட நல்லா போட வருதே! எல்லாம் பழக்கம் தானே நிஷு? எல்லாத்துக்கும் 'முதல் தடவை'ன்னு ஒண்ணு இருக்கும் இல்லையா? என்னால முடியாது, முடியாதுன்னு தள்ளிப் போட்டுட்டே போனா எப்போ தான் குழந்தை பெத்துக்கிறது?! ப்ளீஸ் பாவா!!!'' எனத் தன் பக்க விளக்கத்தை எடுத்துவைத்தப் போது அவளது சிந்தனைகள் சிரிப்பையும், கூடவே ஆச்சரியத்தையும் வரழைத்தன. அவள் சொல்வதில் என்ன தப்பு? என்ற எண்ணம் எழுந்தாலும், தான் கோபம் கொண்டிருப்பது அதற்காக அல்லவே?! என்ற கேள்வி நிஷாந்தை மீண்டும் வாளா இருக்கச் செய்தது.

தனது விளக்கத்திற்குப் பின்னரும் நிஷாந்த் அசை யாமலிருந்தது அனுஜாவின் மான் விழிகளில் மீண்டும் மழையைப் பொழிய வைக்க, இப்போது நிஷாந்த் பொறு மையிழந்து போனான். ''எதுக்கு அழற இப்போ? எதுக்கு எடுத்தாலும் அழுகை?! ஆ-ன்னா ஊ-ன்னா அழுகை?! அழுதா எல்லா பிரச்சனையும் தீர்ந்திடுமா? இன்னொரு தடவை நீ அழறதைப் பார்த்தேன்... இழுத்து அறைஞ் சுடுவேன் ராஸ்கல்!'' என அவன் உறும... அனுஜாவின் மனம் கண்ணீரை நிறுத்த வேண்டுமே எனப் பிரம்மப் பிரயத்தனப் பட்டப்போதும், கண்களால் சட்டென கண்ணீரை நிறுத்தமுடியவில்லை. நிறுத்துவதற்குப் பதிலாய் இன்னமும் அதிகமாய் கண்ணீர் வழிந்தோட, நிஷாந்த் மேலும் கோபமுற்றான்.

''அஜு, என்னை மேலும்மேலும் கோபப்படுத்துறே! அழுகையை நிறுத்து! நிறுத்துடி!!'' என்ற அவனது கடைசி வார்த்தை பெரும் சீற்றத்துடன் வெளிவந்தது. அந்தக் கோபத்தில் அரண்டு, கண்களை அழுந்த

துடைத்த அனுஜா, ஒரு கையால் வாயையும் மூடி விசும்பலைக் கட்டுப்படுத்த முயன்றாள். அந்தத் தோற்றம் கணவனின் சீற்றத்தை சீராக குறைத்து, "என்னடா, என்னை இப்படி திட்ட வைக்கிறே?" என்ற ஆற்றாமையுடன் அவளை வயிற்றோடு சேர்த்தணைக்க வைத்தது.

மணம் புரிந்தவனின் மனதை உணர்ந்தவள் போல் அனுஜாவின் தாய் பசுவின் மடி தேடும் கன்றாய், கணவனை இடுப்பைச் சுற்றி கை போட்டுக் கொண்டு, அவனின் வயிற்றில் இறுக முகம் புதைத்தாள். மனைவியின் ஸ்பரிசம் கொடுத்த சுகத்தை விட, மீண்டும் மீண்டும் அழுகிறாளே என்ற வருத்தமே மேலோங்க "அஜு", நீ அழறது இது தான் முதலும், கடைசியும். எனக்கு நீ அழறதைப் பார்க்க.... பார்க்க... நான் உன்னை சந்தோஷமா வச்சுக்கலை என்ற எண்ணம் வருதும்மா. உன்னை உங்க வீட்டிலிருந்து பிரிச்சுவச்சு வருத்துற மாதிரி ரொம்பவே கஷ்டமா இருக்கு!" எனத் தன் கோபத்தின் காரணத்தை எடுத்துக்கூறியவன், "என்னை நீ மனசார விரும்புறது உண்மைன்னா இனிமேல் எதுக்காகவும் அழக்கூடாதுடா!" என்றான் தீர்மானம் போல்.

"இனிமேல் அழலை" என்ற அனுஜாவின் கண்ணீர் உடனே நின்றும் விட்டது; ஆனால் அவளின் முகம் அவளது வயிற்றை விட்டு சிறிதும் அகலவில்லை.

சில வினாடி மௌனத்தின் பின்னே "நாம சீக்கிரமே குழந்தை பெத்துக்கலாம், பாவா" எனப் பழைய புராணத்திற்கு வந்து சேர்ந்த அனுஜாவை என்ன செய்வதென்றே நிஷாந்திற்குத் தெரியவில்லை.



"சரி, பெத்துக்கலாம்!" என அவன் முடித்துவிட, "அப்போ உங்களுக்கு என் மேல கோபமில்லையா? பேசாம இருந்தீங்க? உங்க பேச்சை மீறி... பிரக்னன்சி டெஸ்ட் செய்தேன்னு உங்களுக்குக் கோபமில்லையா?" என அனுஜா... விழி விரித்தாள்.

"நீ அந்த டெஸ்ட்டை பண்ணதில் எனக்குக் கோபமில்லை. அதை என்கிட்டே இருந்து மறைச்சே பார்த்தியா? அதுவும் ரெண்டு மாசமா? இப்பவும் நான் பார்க்கலைன்னா... இன்னும் எத்தனை மாசமோ? அது தான் வருத்தம். நமக்குள்ள இருந்த நெருக்கம்... குறைஞ்சுட்ட மாதிரி... ஒரு எண்ணம்" என்றவன் சிறு இடைவெளி விட்டு,

"நான் உன்கிட்ட கோபம் காண்பிக்கிறேன்னா அது உன் மேல இருக்கிற அக்கறையால தான். தேவையில்லாம உன்னை வருத்திக்கிற என்ற கோபத்தில தான். புரிஞ்சதா?" என்றான் கேள்வியாக.

அதற்கொரு தலையுருட்டல் பதிலாக வர, மென்மையாக அவளின் தலையை வருடி நெற்றியில் முத்தம் வைத்தவன், சில நிமிடங்கள் மேலும் பேசாமல் இருந்தான்.

"இப்போ என்ன? குழந்தை தான் எல்லா பிரச்சனைக்கும் தீர்வுன்னு நீ நினைக்கிறே... அப்படி தானே? சரி, உன் இஷ்டப்படியே குழந்தையை சீக்கிரமே பெத்துக்கலாம். சரியா? சந்தோஷமா?" எனத் தன் மனைவிக்காக விட்டுக்கொடுத்தவன், அவளின் கண்களில் மின்னலைக் காணவும் "இனிமேலாவது என்கிட்டே இருந்து எதையும் மறைக்காதடா... உள்ளுக்குள்ளே வச்சு நீ மட்டுமே வருத்தப்படாதே. எல்லா விஷயத்தையும் மாதிரி

குழந்தை விஷயத்தில உன்னோட எண்ணங்களைத் தயங்காம என்கிட்டே சொல்லு. சரியா? நீ வருத்தப் படுவதே எனக்குப் பிடிக்கலை என்றால் அதை தனியா மனசுக்குள்ளேயே வச்சுக்கிட்டு மருகிறது எனக்கு சுத்தமா பிடிக்கலை'' என்றான் கனிவும், கண்டிப்புமாய்.

அவனது பேச்சில் தெளிவு பிறக்க, அனுஜாவின் கண்களில் கண்ணீரின் சுவடு கூட இல்லாமல் போனது! கூடவே ''இனிமேல் உங்களுக்குத் தெரியாம எதுவும் செய்யமாட்டேன்'' என்ற வாக்குமூலமும் வந்தது.

இருவருமாய் தேநீர் அருந்திய வேலைகள் மௌன மான அணைப்பில் கரைய, ''எந்த லேடி டாக்டர்கிட்ட போனே?'' எனத் தன் விசாரணையை ஆரம்பித்தான் நிஷாந்த். கணவனின் அனுமதி கிடைத்துவிட்ட சந்தோஷத்தில், செய்த சோதனையில் சாதகமான முடிவு வராமல் போனது நெஞ்சின் பின்புறம் சென்றிருக்க, இப்போதைய அவனது விசாரணையில் மீண்டும் துக்கம் தொண்டையை அடைத்தது.

ஆனால் அடைத்த தொண்டையை அழுகையினால் கழுவும் பழக்கத்தை முயன்று கைவிட்டவள் ''லேடி டாக்டர்கிட்ட போகலை. நானே நெட்ல பார்த்து.... பக்கத்து மெடிக்கல் ஷாப்ல வாங்கிட்டு வந்தேன்'' என்றாள் அனுஜா மென்குரலில்.

''சின்னக் குழந்தைன்னு சொன்னா மட்டும் எட்டு ஊருக்குக் கோபம் வருது அனுஜா... உனக்கு! டாக்டர் கிட்ட போகாம... நீயா எதையாவது செய்து.. அதில சரியான முடிவு வரலைன்னு அழுது? தேவையா இது? அந்த கிட்-டை எப்போ, எப்படி யூஸ் பண்ணனும்ன்னு உனக்கு என்ன தெரியும்? முதல அதை யூஸ் பண்றதால



எந்த பிரச்சனையும் வராதுன்னு என்ன நிச்சயம்? அதுக்கும் மேலா... இந்த மாதிரி டெஸ்ட்ல நெகடிவ் ரிசல்ட் வந்தாலும் கர்ப்பம் உறுதியாகிக் கூட இருக்க லாம்... எதுவுமே தெரியாம, ஒரு டாக்டரோட கைடன்ஸ் இல்லாம... என்னையும் கேட்காம... அறிவுங்கிறது கொஞ்சமாவது இருக்கா இல்லையா?'' என அவன் பொரிந்ததில், ''இந்த மாதிரி டெஸ்ட்ல நெகடிவ் ரிசல்ட் வந்தாலும் கர்ப்பம் உறுதியாகிக் கூட இருக்கலாம்'' என்ற வரியைத் தவிர வேறெதுவும் அனுஜாவின் மண்டைக்குள் ஏறவே இல்லை.

''நிஜமாவா பாவா?'' என அவள் துள்ளி எழ, ''என்ன நிஜமாவா? உனக்கு அறிவில்லைங்கிறதா? நிஜம் தான்'' என்றான் நிஷாந்த் பெரும் எரிச்சலுடன்.

அவனது எரிச்சலில் லேசாய் முகம் வாடியபோதும், அனுஜா தன் காரியத்திலேயே குறியாக இருந்தாள். ''ச்சு, அதில்லை! இந்த டெஸ்ட்ல நெகடிவ் ரிசல்ட் வந் தாலும்... குழந்தையா கூட இருக்கும் இல்லையா? ஹப் பாடா... அதை எப்படி உறுதி பண்றது? வேற ஏதாவது டெஸ்ட் செய்யணுமா? லேப்-ல போய் செய்யணுமா? இல்லை வீட்டிலேயே செய்துக்கலாமா? ஹய்யோ, அதுக்கு வெறும் வயித்தில போகணுமா? டீ குடிச்சிட் டேனே?'' எனப் பல்லாயிரம் மைல்கள் தாண்டி தனது கற்பனையைப் பறக்கவிட்ட அனுஜாவின் கைப்பிடித்து நிறுத்திய நிஷாந்த் ''நான் என்ன சொல்லிட்டு இருக் கேன்? நீ எங்க போய்ட்டே? டாக்டர்கிட்ட கேட்காம எதுக்கு இந்த டெஸ்ட் பண்ணினேன்னு கேட்டேன். அதுக்கு பதில் சொல்லு'' எனத் தன் பிடியிலேயே நின்றான்.

"நெட்ல இந்த கிட்-டை பத்தி நிறைய டாக்டர்ஸ் சொல்லியிருக்காங்க. தொண்ணூறு சதவீதம் சரியான ரிசல்ட் தான் சொல்லுமாம்... ப்ச்... எனக்கு தான் எல்லா தடவையும் நெகடிவ் சொல்லிடுச்சு? ம்ம் அதை விடுங்க பாவா... வேற ஏதோ டெஸ்ட் சொன்னீங்களே? அதை செய்து பார்த்துடலாம்" என்றாள் மிக அவசரமாய்.

"டாக்டர்கிட்ட கேட்காம... எந்த டெஸ்ட்டும் பண்ற தில்லை. அதுவும் உடனே?? எதுவுமே பண்ணப் போற தில்லை!!" என முடித்த நிஷாந்த். "காலை டிபனுக்கு வெளியில வாங்கிட்டு வந்திடட்டுமா இல்லை நீ செய்றியா? நீ செய்றதா இருந்தா... எழுந்து போய் அந்த வேலையைப் பாரு" என அதட்டி, உருட்டி உள்ளே அனுப்பி வைத்தான்.

கணவனிடம் பதில் பேராத ஆதங்கத்தில் முகத்தில் சிணுங்கலைக் கொண்டு வந்து அவனிடம் கெஞ்சிப் பார்த்த அனுஜாவிற்கு, அவன் அசையப்போவதில்லை என்பது ஐந்தே நிமிடங்களில் புரிந்துவிட, வாடிய முகத்துடன் சமையலறைக்குள் சென்றாள்.

அன்று மாலை மயங்கும் வரை, அனுஜாவின் கெஞ்ச லான பார்வைக்கு நிஷாந்த் பதிலே சொல்லவில்லை. இரண்டு முறை "இன்னொரு டெஸ்ட்" என ஆரம்பித் தவள், அவனின் பார்வையில் அடங்கி வேறு வேலை களைப் பார்க்கச் சென்றாள்.

மனைவியின் முகத்தைப் பார்க்கச் சகிக்காமல், மாலை ஏழு மணியளவில் "வா, டாக்டர்கிட்ட போயிட்டு வரலாம்" என அவளை அழைத்துச் சென்றான் கணவன். அந்த மகப்பேறு மருத்துவரோ, அனுஜாவைத் தனியே



அழைத்து, மாதவிடாய் நாட்களை விசாரித்துவிட்டு "இன்னைக்கே ஏன் மா HPT டெஸ்ட் செய்தே? இன்னொரு ஐந்து நாள் கழித்து செய்து பார். அப்படியும் நெகடிவ ரிசல்ட் வந்தால்... அடுத்த நாள் வந்து லேப்-ல டெஸ்ட்டுக்குக் கொடுத்துக்கலாம்" எனக் கூறி அனுப்பி வைத்தார்.

சிறு வெட்கமும், கலக்கமுமாய் கணவனிடம் மருத் துவர் கூறியதைப் பகிர்ந்தவளின் தலையில் செல்லமாய் தட்டிய நிஷாந்த் "அதுக்குள்ளே அவசரம்! அழுகை! பரபரப்பு! இனிமேல் இது மாதிரி ஏதாவது கிறுக்குத் தனம் செய்து பாரு... கட்டி வச்சு உதைக்கிறேன்!! ஓவர் செல்லமா போச்சு!" என்றான் விரிந்த சிரிப்புடன். அவனுக்குமே மனைவியின் கலக்கம் வருத்தமாய் தான் இருந்தது. அவளின் மனது வாடும்படியாக எந்தவொரு செயலும் நிகழ்ந்துவிடக்கூடாதே... இந்த பரிசோதனை யில் முடிவு வேறாக வந்தாலும், வேறோர் பரிசோதனை யில் அவளுக்கு சாதகமான முடிவு வரும் என்ற அவளின் எதிர்பார்ப்பு பொய்த்துவிடக் கூடாதே என நெஞ்சம் பிரார்த்திக்கத்தான் செய்தது!

அவனது பிரார்த்தனைக்கு கடவுள் செவி சாய்த்ததின் பயனாக, மருத்துவர் ஓர் நம்பிக்கையிழை விட்டிருந்த போதும், கடவுள் அவர்களது பிரார்த்தனைக்கு முழுதாய் உடன்படவில்லை என்பது பரிசோதனைக்கு முன்பா கவே அனுஜாவிற்கு மாதவிடாய் வந்ததில் புரிந்தது! அந்த தினம், அனுஜாவின் விழிகளில் காதலுக்கும் பாசத்திற்கும் இடையே பெரும் போராட்டம் நடந்தது. அதாவது கணவனின் மேல் கொண்ட காதலினால் அவளது கண்கள் கண்ணீரைக் கட்டுப்படுத்த, அதற்கு

மாறாய் வாரிசின் மீது கொண்ட பாசம் அவளது கண்ணீர் நீரை சுரக்க வைத்துக்கொண்டே இருந்தது.

தன் வார்த்தையை மீறவும் முடியாமல், கண்ணீரைக் கட்டுப்படுத்தவும் முடியாமல் தவித்த மனைவியை வார்த்தையின்றி அன்பு மொழியான அரவணைப்பால் தேற்றிய நிஷாந்த் அவளை இயல்பு நிலைக்குக் கொண்டு வர வெகுவாய் போராடினான். ''அடுத்த மாதம் கண்டிப்பாக குழந்தை உறுதியாகி விடும்'' என்ற வார்த்தையை மந்திரம் போல் அவளிடம் சொல்லித் தேற்றியவன், தொடர்ந்து வந்த நாட்களில் அவளுக்கு ஓர் மாற்றத்தைக் காட்டுவதற்காக வெளியே அழைத்துச் சென்றான்.

ஆனால், அனுஜாவின் எண்ணங்கள் தங்களின் வாரிசை விட்டு அங்கே இங்கே நகர்வதாய் இல்லை என்பது அவனுக்கு வெகு சீக்கிரமே தெரியவந்தது!

திருமணத்திற்கு முன்னரும் சரி, திருமணமான புதிதிலும் சரி வெளியிடங்களுக்குச் சென்றால் அனுஜாவின் கவனத்தைக் கவர, ஆயிரமாயிரம் விஷயங்கள் இருக்கும். சிவப்பும், வெள்ளையுமாய் தொங்கும் சுடிதார் செட், கண்ணைப் பறிக்கும் தொங்கட்டான்கள், விதவிதமாய் மின்னும் ஸ்டிக்கர் பொட்டுக்கள், போடும் உடைக்கு ஏற்றார் போல் அவள் தேடி அலையும் ஹேர் கிளிப்கள், கண்களை உருட்டி அவளைக் கவரும் பொம்மைகள், காது குடையும் பஞ்சுகள் விற்கும் சிறு பையன், சாலையோரத்தில் விற்கும் மாங்காய் துண்டுகள், ''ஒரு மணி நேரத்தில் சுடிதார் ஸ்டிச்சிங்'' என்ற கூவலுடன் கைக்குள்ளும் காலுக்கும் ஓடும் வாண்டுகள், கடற்கரையில் துள்ளியாடும் அலைகள், அலைகளின் நடுவே



நிற்கையில் பெய்யும் சாரல் மழை, மழையில் நனைந்தவாறே அவள் சுவைக்கத் துடிக்கும் ஐஸ்கிரீம், பஞ்சு மிட்டாய் செய்யும் மிஷின் - என அவளைக் கவரும் விஷயங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். அப்படியிருந்த அனுஜாவா என்றிருந்தது நிஷாந்திற்கு!?

ஏனென்றால், தற்போதைய அனுஜாவின் மனம் முழுதும் குழந்தை மேலிருக்க, அவளது எண்ணங்களின் போக்கு முற்றிலுமாய் தனக்குள் ஜனிக்கவிருக்கும் சிறு உயிரை முன்னிருத்தியே இருந்தது.

''பாவா, அங்க பாருங்களேன்.... குட்டி சேர்! என்ன அழகா இருக்கில்ல!? நம்ம பாப்பாக்கு வாங்கலாமா?''

''அச்சோ, சின்ன பாவாடை/சட்டை.... அதுவும் பச்சை கலர்-ல! பொண்ணு பிறந்தா வாங்கலாம். ம்ஹூம்... பையன் பிறந்தாலும் வாங்கலாம். பொண்ணு வேஷம் போட்டு போட்டோ பிடிச்சுக்கலாம்.''

''இந்த ஷூ பாருங்க... அமுக்குனா லைட் எரியுது. பாப்பா நடக்கும்போது லைட் எரிஞ்சா அதுக்கு ஒரே குஷியா இருக்கும்! சூப்பர்!''

''ஹையோ.... குட்டிக்குக் குட்டியா ஒரு கட்டில்... பார்த்தீங்களா? நம்ம வீட்டில... அந்த சின்ன ரூமை ஒதுக்கி... இதை அங்கே போட்டுடலாமா?'' - என அவளது கண்களில் குழந்தைகளுக்கான பொருட்கள் மட்டுமே பிரதானமாய் பட்டன.

அதுமட்டுமல்லாமல் ''அந்த பாப்பாவைப் பாருங்களேன்... குண்டு, குண்டா என்ன அழகா இருக்கு? ஹையா... என்னைப் பார்த்து சிரிக்குது... ஹே குட்டி! ஆன்ட்டிகிட்ட வரியா? வா...வா!''

''இந்தப் பையனைப் பார்த்தீங்களா? பெரிய மனுஷன் மாதிரி... அவங்க அம்மா கையைப் பிடிச்சுக்கிட்டு நடக்கிறான். சமத்துச் சக்கரைக்கட்டி!''

''இன்னைக்கு ரேகா... அவங்க அம்மாவை ''மம்மி'' கூப்பிட்டாளாம். அக்கா (ரேகாவின் அம்மா) எனக்கு ஸ்வீட் கொடுத்தாங்க!''

''எதிர்த்த வீட்டுப் பாப்பா... அவங்க அப்பா வரலைன்னு வெளிய வந்து... வந்து தேடினா... பார்க்கவே அழகா இருந்தது! இந்த வயசிலேயே என்ன அறிவு பாருங்களேன்'' என ஊரார் குழந்தைகளை சீராட்டி மகிழ்ந்தாள்.

அவளது நடவடிக்கைகள் அனைத்தும் நிஷாந்தின் வேண்டுதலைப் பலமாக்கி ''எங்களுக்கு ஓர் குழந்தையைக் கொடுத்துவிடு. வாரிசென்று வந்துவிட்டால் எங்களது பெற்றோர் எங்களுடன் இணைந்து விடுவார்கள் என்பதால் நான் இதை வேண்டவில்லை. என் அஜு" குழந்தைக்காக மிகவும் ஏங்கத் தொடங்கிவிட்டாள். அவளது ஆசைகளை நிறைவேற்று'' என மனதாரப் பிரார்த்திக்க வைத்தது.

அனுஜாவின் ஆசைகளையும், நிஷாந்தின் வேண்டுதலையும் ஆட்டம் காண வைப்பது போல் தொடர்ந்த பல மாதங்களும் வாரிசுக்கான அவர்களின் எதிர்பார்ப்பு பூர்த்தியடையவில்லை! அந்த ஏமாற்றத்தைத் தாங்க முடியாத நிலையிலும், பல மாதங்கள் முன்னர் கணவன் விதித்த ''என்னைக் காதலிப்பது உண்மையெனில் அழாதே!'' என்ற கட்டளையை மீறவில்லை, அனுஜா! அதற்கு மாறாக அவளின் எண்ணங்கள், வேறோர் வகையில் வேலை செய்திருக்கின்றன என்பது நிஷாந்திற்கு வெகு தாமதமாய் புரிந்தது!



ஓர் நாள் இரவு, கணவனின் கைவளைவில் துயில் கொண்டிருந்தவள், தன்னை வருடிக்கொண்டிருந்த கணவனின் கைகளைப் பிடித்து நிறுத்தி ''பாவா, நம்ம கல்யாணத்திற்கு முன்னாடி... குலதெய்வம் கோவில்ல ஒரு சத்யம் செய்தேன்... ஞாபகம் இருக்கா?'' என்றாள் மெது குரலில்.

''அதற்கு இப்போதென்ன?'' என்பது போல் அவளைப் பார்த்தவன், ''ம்ம் நல்லா ஞாபகம் இருக்கு. என்னைத் தான் கல்யாணம் செய்துப்பேன்னு சத்யம் செய்தே!'' என்றான் காதலுடன்.

''அது மட்டுமில்லை... அப்பா - அம்மா சம்மதத் தோடன்னு சேர்த்து சொன்னேன்'' என்ற அனுஜாவின் குரல் கரகரத்துப் போயிருந்தது.

அவர்களின் சம்மதம் கிடைக்கும் முன்னரே நடந்தேறிய தங்களின் திருமணத்தை எண்ணி சற்றே வருந்தியபோதும், அந்த வருத்தத்தை மனைவிக்கும் இடம் மாற்றும் எண்ணமில்லாமல் ''ம்ம்'' என்றான் சிறு முனங்கலாய்.

''வருத்தத்தை நீங்கள் இடம் மாற்ற தேவையில்லை. நானே ஏற்கனவே வருந்திக்கொண்டு தான் இருக்கிறேன்'' என்பது போல் ''அவங்களோட சம்மதமில்லாமலே நாம கல்யாணம் பண்ணிக்கிட்டதால தான்.... நமக்கு இன்னும் குழந்தை பாக்கியம் கிடைக்கலை போல பாவா...'' என்ற அனுஜாவின் எண்ணங்கள் எந்த வகையில் பயணம் செய்திருக்கின்றன என்பது நிஷாந்திற்கு அப்போது தான் புரிந்தது.

''எதையாவது மனதில் எண்ணி குழம்பிக் கொண்டே இருக்க வேண்டுமா?'' என்ற ஆயாசத்துடன் ''அப்படி

யெல்லாம் இருக்காது அஜு! ரொம்ப யோசிச்சு உன்னையே குழப்பிக்காதே'' என்றான் கணவன்.

''ம்ஹூம். இல்லை! அதனால தான்... நாம ரெண்டு பெரும் எங்க குலசாமியைப் போய் கும்பிட்டுட்டு, மன்னிப்பு கேட்டுட்டு வந்திடலாமா?'' என அனுஜா தீர்வு காண, நிஷாந்த் துணுக்குற்றான்!

## 12

குலதெய்வம் கோவிலுக்குச் செல்ல வேண்டும் என அனுஜா கூறியதும், நிஷாந்த் துணுக்குற்றதற்குக் காரணம், சில மாதங்கள் முன்னர் தன் பெற்றோர் முன்னே பட்ட அவமானத்தை இப்போது அனுஜாவின் பெற்றோர் முன்னிலையில் படவேண்டுமா? அதை மனைவி தாங்குவாளா? என்ற சந்தேகம் தான்.

அங்கே சென்றால், அனுஜாவால் தாய் வீட்டிற்குச் செல்லாமல் இருக்க முடியாது. அப்படியே சென்றால் அவர்களின் சுடு சொற்களையும் பாராமுகத்தையும் தானே பார்க்க வேண்டும்? குழந்தை, குழந்தை என அவள் துடிக்கும் இந்த காலக் கட்டத்தில் மேலுமோர் ஒதுக்குதலை அவள் நிச்சயம் தாங்க மாட்டாள் என்றே தோன்றியது.

அதனால், அனுஜாவைத் தன்னிடமிருந்து பிரித்து அவளது முகம் பார்த்தவன் ''அஜு, நான் உனக்கு நல்லது தான் நினைப்பேன் என்ற நம்பிக்கை உனக்கு இருக்கா?'' என்றான் உணர்ச்சிகள் ஏதும் காட்டாத குரலில்.



இதென்ன கேள்வி? என்பது போல் பார்த்த அனுஜா, ''கண்டிப்பா!'' என்றாள் அழுத்தம் திருத்தமாய். கணவனின் கேள்விக்குப் பதில் கூறிவிட்டு அவனது தோள் சாய முற்பட்டவளைத் தடுத்து, தன் முகம் நோக்கியே பிடித்து வைத்தவன் ''நாம இப்போதைக்கு குன்னூர் போக வேண்டாம், அஜு! இரு... இரு, நான் சொல்லி முடிச்சிடுறேன். அங்க போனா, இன்னும் அதிகமா மனக்கஷ்டம் தான் வந்து சேரும். ஏற்கனவே எதுக்குடா கவலைப்படலாம்ன்னு நீ காத்துக்கிட்டு இருக்கே! இதில வலிய போய்.... நாம ஏன் இன்னொரு கவலையை இழுத்துக்கணும்? ப்ளீஸ் கண்ணம்மா! சாமியை கோவில்-ல தான் போய் பார்க்கணும்ன்னு என்ன இருக்கு? இங்கு நம்ம பூஜையறையிலே மனசார வேண்டிக்கோ. எல்லாம் நல்லதாவே நடக்கும்! என்னடா நான் சொல்றதைக் கேட்கிறியா?'' என்றான் கெஞ்சலாக. இந்த கெஞ்சல் அவனது வாழ்வைப் புரட்டிப் போடப் போகிறது என்பதை அவன் அறிந்திருந்தால், அனுஜாவை அவளது சொந்த பூமிக்கு அனுப்பி வைத்திருப்பானோ?

கணவனின் வார்த்தைகளில் முழுமையான சமாதானம் அடையவில்லை அனுஜா. குடும்பத்தினரைத் தூக்கி எறிந்துவிட்டு, நிஷாந்தே கதி என அவள் வந்ததால் தான் குழந்தை பாக்கியம் தள்ளிப் போகிறது என்ற எண்ணமும், தான் செய்த சத்தியத்தைக் காப்பாற்றாமல் போனதே தனக்கு வினையாக முடிகிறது என்ற வருத்தமும் குல தெய்வக் கோவில் வழிப்பாட்டை நடத்தவில்லை எனில் ஒழியாது என்பது அவளின் ஆழமான நம்பிக்கையாக மாறியிருந்தது. அந்த நம்பிக்கை பெரிதா? என் மீது கொண்ட நம்பிக்கை பெரிதா? எனக்

கொண்டவன் கேள்வி கேட்டபோது, அவளால் இரு பக்கமும் பகிர்ந்தே நிற்க முடிந்தது.

"அது பாவா..." என மறுத்துப் பேசத் துவங்கிய வளுக்குத், தனது குடும்பத்தினர் முன்னிலையில் கணவனுக்கு ஏதும் அவமானம் நிகழ்ந்துவிடுமோ? அதை எண்ணித் தான் வேண்டாம் என்கிறான் போல் என்ற எண்ணத்தோடு வேறு சில வேண்டாத எண்ணங் களுடன் சட்டென உதிக்க, "சரி" என்றதோடு கணவ னின் பேச்சை ஒத்துக்கொண்டு, படுக்கையறையை விட்டு வெளியே சென்றாள்.

ஏனோ, எனக்கு அவனது குடும்பம் முக்கியமாக படும்போது அவனுக்கு ஏன் தனது குடும்பம் வேண் டியதாய் படவில்லை? தான் அவனது பெற்றோரின் கோபத்திற்கு ஆளாகி, வருத்தம் கொண்ட போது கூட அவர்களைத் தவிர்க்க விரும்பவில்லையே? இவனா னால் தன் பெற்றோரைப் பார்க்கக் கூட அனுமதிக்க மாட்டேன் என்கிறானே? என்று அனுஜாவின் மனதில் பிறந்த கேள்விகள் தான் அந்த வேண்டாத எண்ணங் களுக்கு விதையானது. சில நிமிடங்கள் முன்னர், கண வன் மீது நம்பிக்கை இருப்பதாய் கூறிய வார்த்தைகள், சட்டென ஆட்டம் காண ஆரம்பித்தன.

இத்தனை காலம், பிறரது செயலுக்கு அவளே நல்ல விதமாய் அர்த்தம் கொண்டு அவர்களை நியாயப் படுத்தும் அவளின் குணம், இன்று ஏனோ மாறி செயல் பட்டது? உள்ளுக்குள் இருந்த வேதனையின் சாயலி னாலோ? பெரியவர்களுடன் ஒன்றாய் வாழும் பாக் கியமும் மறுக்கப்பட்ட நிலையில் தங்களுக்கென்ன ஓர் சொந்தம் புதிதாய் உருவாகும் பாக்கியமும் மறுக்கப்பட,



அனுஜாவின் எண்ணங்கள் அவளை வருத்தும் வகையி லேயே பயணம் செய்தன. அந்தப் பயணத்தின் விளை வாய் தனிமை தேடி வரவேற்பறைக்கு வந்திருந்தாள் அவள்.

அனுஜாவின் வெளிநடப்பில் திகைத்த நிஷாந்த், சில நிமிடத் தாமதத்திற்குப் பின்னர் வெளியே வந்தபோது, அனுஜா பூஜையறையில் கண்மூடி நிற்பது தெரிந்தது. தான் சொன்னதை (குலதெய்வத்தை வணங்குவதை எங்கு வேண்டுமானாலும் செய்யலாம் என்பதை) உடனே பின்பற்றும் விதமாக, பூஜையறையில் பிரார்த் தனை மேற்கொண்டிருக்கும் மனைவியைக் காண, நிஷாந்திற்கு வருத்தமாய் இருந்தது. அவளுடன் இணைந்து நின்றவன் தானும் மனமுருக வேண்டிக் கொண்டான்.

பத்து நிமிடப் பிரார்த்தனைக்குப் பின்னர், தன்னை மீறி கண்களில் வழிந்த நீரை அவசர அவசரமாக துடைத்த அனுஜா, அருகில் நின்றிருந்த கணவனைக் கண்டதும் மேலும் அழுந்த துடைத்துக்கொண்டாள். அதன் பின்னர் அந்த இரவு மௌனத்திலேயே கரைந்து விடிந்தது.

அந்த இரவின் தொடர்ச்சியாக அடுத்து வந்த சில தினங்களும் அதிக வார்த்தைகளின்றி கரைய, ஓர் வாரயிறுதியில் மருத்துவரைப் பார்த்து வரலாம் எனக் கூறி மனைவியை நிஷாந்த் அழைத்துச் சென்ற இடம் - பிரபல கருவாக்க மருத்துவமனைகளுள் ஒன்று.

"ரெண்டு பேரும் ஒரு செக்கப் செய்துக்கலாம், அஜு! ஏதாவது பிரச்சனையிருந்தா அது தீர ஏதாவது செய்ய லாம் இல்லையா? எதுவுமே செய்யாம... குழந்தை

வரலை, வரலைன்னு வருத்தப்படுறதில் என்ன புண்ணியம் சொல்லு? நாம போகப் போற ஹாஸ்பிடல் - இன்ஃபர்டிலிடிக்கு பெயர் போனதாம். அங்கே போகலாம் தானே அஜு?'' என அவன் கேட்டப்போது, அனுஜாவிற்கும் சரியென்றே பட்டது.

இது நாள் வரை, இந்த மாதம் உறுதியாகிவிடும், அடுத்த மாதம் கண்டிப்பாக நல்ல சேதி தான் என எத்தனை நாளுக்குத் தான் காத்திருப்பது. குழந்தை பெறுவதில் தங்களுக்கு ஏதாவது குறையிருக்கும் பட்சத்தில், அதை முதலில் நிவர்த்தி செய்ய வேண்டுமல்லவா? எனத் தோன்றிவிட, கணவனுடன் கிளம்பிச் சென்றாள் அனுஜா.

சில மணி நேரக் காத்திருப்பிற்குப் பின்னர், மகப்பேறு மருத்துவத்தில் பழம் தின்று கோட்டை போட்ட ஓர் பிரபல, மருத்துவரின் முன்னே அமர்ந்திருந்தனர் தம்பதியர். ஏனோ, வயதில் தன் தாயை ஒட்டியிருந்த அவரைப் பார்த்ததுமே அனுஜாவிற்குப் பிடித்து விட, அவரும் ஓர் தாயின் கனிவுடனே அனுஜாவைப் பரிசோதித்தார்.

முடிவில் இருவருக்கும் தனித்தனியாக பல பரிசோதனைகளை எழுதிக் கொடுத்தவர், அனுஜாவிடம் ''இருபத்தி மூன்று வயசில குழந்தையில்லையேன்னு நீ ஏன் இவ்வளவு கவலைப்படுறே?! இன்னும் காலமிருக்கு, வயசிருக்கு, அதுக்கும் மேலா உன்னை அன்பா பாத்துக்கிற புருஷன் இருக்கார். அப்புறம் என்ன கவலை? ஹ்ம்ம்? சியர் அப்... அனுஜா! நீ ''குழந்தை கிடைத்துவிடணும், கிடைத்துவிடணும்'' என்று மனசுக்கு நிறைய ஸ்ட்ரெஸ் கொடுக்கிற. அந்த ஸ்ட்ரெஸ்சே கூட கன்சீவ்



ஆகவிடாம செய்யலாம். சரியா? அதனால மனசை சந்தோஷமா வச்சுக்கோ... அதுவே நிறைய நல்ல விஷயங்களுக்கு வழி வகுக்கும்'' எனத் தாயின் அக்கறையுடன் பேசப்பேச, தன்னைப் பெற்றவளைப் பார்க்க வேண்டும் என்ற ஏக்கம் அனுஜாவிற்குப் பொங்கி வந்தது.

வீடு வந்து சேர்ந்ததும் ''எனக்கு அம்மாவைப் பார்க்கணும் போலிருக்கு, பாவா!'' என்றாள் அனுஜா மிகவும் பரிதாபமாய்.

நிஷாந்த் பதில் சொல்லும் முன்னர், ''என்னமோ... என்னமோ... தப்பா நடக்கப் போற மாதிரி... அம்மா மடி-ல படுத்துக்கணும் போல... எனக்குப் பயமா இருக்கு, பாவா!'' என மருண்ட விழிகளில் கலக்கம் சூழ, அவள் தவிக்கவும் ''நீ பயப்படற அளவுக்கு எதுவும் நடக்காது குட்டி! பயப்படாதேடா'' என அவளைத் தன்னிடம் இழுத்துக்கொண்டவன், தன் மடியில் அவளைத் தலை சாய்க்கச் செய்தான்.

''இல்ல... இந்த மெடிக்கல் டெஸ்ட்ல எனக்கு'ஏதோ பிரச்சனையிருக்குன்னு வரப்போகுது. எனக்குத் தோணுது பாவா... அம்மா-அப்பா மனசை சங்கடப்படுத்திட்டு வந்ததுக்கு நமக்கு தண்டனை கிடைக்கப் போகுது'' என மறுகித் தவித்துத் தான் போனாள் அனுஜா. நிஷாந்தின் எந்தவித சமாதானங்களும் செல்லுபடியாகாமல் போய், அனுஜாவின் பயத்தை மெய்ப்பிப்பது போல் அடுத்த நாள் வந்த மருத்துவ அறிக்கை - அனுஜாவிற்கு தைராய்ட் பிரச்னை இருப்பதை எடுத்துக் காட்டியது.

''தைராய்ட் பிரச்னை என்பது சகஜமாய் நிகழக் கூடிய ஒன்று! அதை பற்றி எந்த கவலையும் படத்

தேவையில்லை... மேலும், அனுஜாவிற்கு தைராய்ட்டின் அளவு சராசரிக்கும் சில சதவீதம் மட்டுமே மேலே இருப்பதால் மருந்து மாத்திரைகளிலேயே சரி செய்து விடலாம். மாத்திரைகளை ஒழுங்காக சாப்பிட்டால் மூன்றே மாதத்தில் தைராய்ட் சுரப்பி சாதாரணமாய் செயல்படத் துவங்கிவிடும். அதன் பின்னர் குழந்தை பிறப்பிற்கும் எந்த தடையுமில்லை!'' என மருத்துவர் இதம், பதமாய் எடுத்துக்கூறியபோது அனுஜாவின் வெளுத்த முகத்தில் மாற்றமேதும் இருக்கவில்லை.

மனைவியின் நிலையை உணர்ந்த நிஷாந்த், தேவையான மாத்திரைகளை எழுதி வாங்கிக்கொண்டு, மருத்துவருக்கு நன்றி தெரிவித்த கையோடு அனுஜாவை வீட்டிற்கு அழைத்து வந்தான்.

வெடித்துக் கிளம்பும் கண்ணீரை, உதட்டைக் கடித்து அடக்கிக் கொண்டிருந்த அனுஜாவைப் பார்க்க மிக கொடுமையாக இருக்க, ''அழுதிடு அஜுமா'' என்றான் கணவன், தன் மார்போடு அவளை அணைத்துக் கொண்டு. அதன் பின்னர், ஒரு வினாடி காலம் கூட தாமதிக்காமல் அனுஜா தன் அழுகையை மழையாய் பொழிய, சரியாக ஐந்து நிமிடத்தில் அவளின் கன்னம் துடைத்த கணவன் ''போதும் அழுதது! அழுகையை அடக்க நீ படர பாட்டைப் பார்க்க முடியாம தான் அழுதிடுன்னு சொன்னேன். அதுக்காக ஒரேடியா அழுது கரையாதே! ஒரு சின்ன விஷயத்திற்கு இத்தனை அழுகையா?! நிறுத்து அஜு!'' என லேசாய் அதட்ட, அனுஜாவின் கண்ணீரும் நின்றது.

''நான் பயந்த மாதிரியே நடந்திடுச்சு பார்த்தீங்களா? பெத்தவங்க மனசைக் காயப்படுத்திட்டு வந்ததால



தான்... எனக்கு இப்படி ஒரு குறை வந்துடுச்சு'' என அவள் தன் பக்கக் குற்றத்தை எடுத்து வைக்க,

''நானும் தானே எங்க அப்பா - அம்மா பேச்சை மீறி உன்னைக் கல்யாணம் செய்துகிட்டேன். அப்படிப் பார்த்தா... எனக்கும் தானே ஏதாவது குறை இருந்திருக்கணும். அப்படி இல்லையே அஜு? அப்புறம், இது ஒண்ணும் குறை இல்லை... தைராய்ட்டின் அளவு கொஞ்சமே கொஞ்சம் கூடுதலா இருக்கு. மாத்திரையை ஒழுங்கா சாப்பிட்டா சரியாகிடப் போகுது'' என அவளுக்கு சமாதானம் கூறியவன், அனுஜாவின் முகத்தில் மருப்பின் சாயல் தெரியவே,

''இன்னைக்கிருக்க மெடிக்கல் அட்வான்ஸ்மென்ட்-ல இதெல்லாம் ஒரு பெரிய விஷயமே இல்லை... அப்படியே பெருசா இருந்தாலும் பரவாயில்லை. எனக்கு நீ... உனக்கு நான்னு இருந்திட்டு போகலாம். எனக்கு நீ எப்பவுமே குழந்தை தான், அஜு!!'' என்றான் முடிவாய்.

''ஹான்... அப்புறம்.... அப்புறம்.... எப்படி... நம்ம பாரென்ட்ஸ்...'' என அனுஜா திகைத்துத் தயங்க, ''அவங்களோட குழந்தைகளுக்காக அவங்க வரணும். நம்மளோட குழந்தைக்காக இல்லை. நம்மளோட குழ்ந்தை ஒரு தூண்டுகோளா இருக்கணுமே ஒழிய... பேரன் - பேத்திக்காக மட்டுமா அவங்க நம்மளை சேர்த்துக்க வேண்டாம். புரிஞ்சதா? கொஞ்ச நாளில நம்ம காதலை அவங்க புரிஞ்சுப்பாங்க. புரிஞ்சுக்கிட்டு அவங்களே வருவாங்க'' என்றான் தீர்மானமாய்.

வெறும் வாய் வார்த்தைகளாக இல்லாமல், தன் மனதின் காதல் மிகவுற அவளைத் தேற்றிய நிஷாந்த் தொடர்ந்தும் அதன் படியே நடந்தும் கொண்டான்.

அந்த வழியில் அவன் செய்த காரியங்கள் இதோ முதலாவதாக, அனுஜா தனித்திருக்கும் நேரங்களைக் குறைத்தான். வேலை மிகுதியினால் தான் அலுவலகத் தில் தங்க வேண்டியிருந்தாலும், முன் போல அனு ஜாவை மட்டும் வீட்டிற்கு அனுப்பாமல், தன் அறைக்கு வரவழைத்து, தான் கிளம்பும் வரை அவள் அங்கேயே இருக்குமாறு பார்த்துக் கொண்டான்.

இரண்டாவதாக, கணவனுக்குத் தன் கையால் சமைத் துக் கொடுப்பதில் அனுஜாவிற்கு ஆர்வம் அதிகமிருப் பதை உணர்ந்திருந்த படியால், அவளிடம் தனக்குப் பிடித்த பதார்த்தங்களை ஒவ்வொன்றாக பட்டியலிட்டு, அதை செய்து தருமாறு கூறினான்.

மூன்றாவதாக, அவர்களது குடும்பத்தைப் பற்றிய பேச்சுவார்த்தை எழாமல் பார்த்துக்கொண்டான். அவனது கவனத்தையும் மீறி அனுஜா கவலை கொண்டால், அவளுக்கு உறுத்தாத வண்ணம் பேச்சை வேறு புறம் திருப்பினான்.

அடுத்ததாக, அவளது நண்பர்கள் வீட்டிற்கு அவளை அடிக்கடி இட்டுச் சென்றான். அதே போல் தன் அலு வலக நண்பர்களின் வீட்டு விசேஷங்கள், உடன் பயின் றோரின் திருமணம் என அவளை அழைத்துச் சென்று, புதிதுபுதிதாய் பல முகங்களை அறிமுகம் செய்தான்.

ஐந்தாவதாக, ஆனந்த் மற்றும் சரிதாவுடன் சேர்ந்து அனுஜாவிற்குத் தெரியாமல் சில பல காய்களை நகர்த்தினான். காதல் என்றாலே முகத்தைத் திருப்பிய சரிதாவிற்கு ஆனந்தின் நேசம் மிகவுற்ற கனிவு, காதலின் மகத்துவத்தை எடுத்துரைக்க, தன்னை மறுத்ததால்



குடும்பத்தை விட்டுப் பிரிந்திருக்கும் நிஷாந்திற்கும் உதவி புரிய மிகவும் ஆர்வமாய் இருந்தாள். அந்த ஆர்வத்தைப் பயன்படுத்திக்கொண்டு, பெற்றோரின் மனத்தைக் கரைக்கும் முயற்சிக்கு சரிதாவை துணைக்குச் சேர்த்துக்கொண்டான், நிஷாந்த்!

அடுத்ததாக, அனுஜாவின் சின்ன அண்ணன் - ராகவனை விட்டு, பெரிய அண்ணன் - ரவீந்திரனிடம் பேச முயன்றான்.

இன்னுமொரு முயற்சியாக, அனுஜாவை யோகா பயில வைத்து, அவளது மனதை ஒருநிலைப் படுத்த முயன்றான்.

எட்டாவதாக, அனுஜாவின் பிடித்ததைக் கேட்டறிந்து அவன் இஷ்டப்பட்ட மேற்படிப்பை, தொலைத்தூரக் கல்வியின் மூலம் படிக்கச் செய்தான்.

கடைசியாக, மருத்துவர் எழுதிக் கொடுத்த மருந்து களை மறக்காமல் மனைவிக்குப் புகட்டினான்.

கூடவே, அனுஜா நிறுத்திவைத்திருந்த அசைவம் உண்ணும் பழக்கத்தை "எனக்காக.... எனக்காக... உன் பாவாக்காக!" எனக் கூறிக் கரைத்தவன், அப்போதும் அவள் பிடிவாதமாய் இருக்க "யாரோ சொல்றாங்கன்னு நான் - வெஜ் சாப்பிடாம இருக்க நீ... நான் சொல் றேன்னு சாப்பிட மாட்டே? அப்படித்தானே? என்னை விட அவங்க தான் முக்கியமா?" என்ற கேள்வியில் முழுதாய் உடைத்தான். உடைத்ததோடு நிறுத்திக்கொள் ளாமல், அவளுக்குப் பிடித்த பதார்த்தங்களைத் தானே வாங்கி வந்தும் அவளை உண்ணச் செய்து மனம் குளிர்ந்தான்.

முக்கியமாக, மனைவிக்குப் பிடித்த இசைத் தட்டுக்கள் பலவற்றை வாங்கிக் குவித்தான். எந்நேரமும் அவ ளுக்குப் பிடித்தமான பாட்டுக்கள் ஒலித்துக்கொண்டே இருக்கும் படி பார்த்துக்கொண்டான்.

எல்லாவற்றுக்கும் ஊடே, நேரம் கிடைக்கும் போதெல்லாம் ஏதாவது வெளியூருக்கு அவளை இட்டுச் சென்றான். அங்கிருக்கும் கலைப் பொருட்களையும், சுற்றுலா மையங்களையும் மனைவி ரசிப்பதைப் பார்த்து மகிழ்ந்திருந்தான்.

இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால் - இவை யனைத்தையும் அனுஜா சந்தேகம் கொள்ளாத வண்ணம் செய்தான் என்பது தான்! அவளது குழந்தை ஆசையைக் குலைக்கிறோம் என்ற எண்ணம் அவளுக்கு வந்துவிடக் கூடாது என்பதில் மிகுந்த கவனம் காட்டினான் என்றே சொல்லலாம். அவனும் தான் குழந்தை வேண்டாம் என வில்லையே, அதை எண்ணி இன்றைய சந்தோஷத்தை, முக்கியமாய் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தைக் கெடுத்துக்கொள்கிறாளே என்ற ஆதங்கம் தானே ஒழிய வேறேதும் இல்லை.

இப்படியாக நாட்கள் கழிய, மருத்துவர் விதித்த மூன்று மாதக் கெடுவும் முடிந்து, மருத்துவப்பரிசோதனை முடிவிற்காக இருவரும் காத்திருந்த போது, முன் போல அனுஜா தவிப்பில் கரைந்துவிடவில்லை. அதற்காக திடமாக இருந்தாள் என்றும் சொல்லமுடியாமல் கண வனைக் கைகளை இறுகப் பற்றிக் கொண்டு, காத்திருந் தால் கண்கள் பிரார்த்தனை இருந்ததே தவிர, அழு கையோ மறுகலோ சிறிதும் இருக்கவில்லை.



அவளது மனநிலையை மேலும் உற்சாகப் படுத்துவது போல், தைராய்ட்டின் அளவு சரிசரிக்கு வந்திருப்பதாக வும், இனிமேல் அனுஜா தாயாவதில் எந்த பிரச்னையும் இல்லை என்றார் மருத்துவர். மனம் நிறைந்த நன்றியை அவரிடம் பகிர்ந்து விட்டு வெளியே வந்தபோது, இருவருக்கும் மனம் லேசாகிப் பறப்பது போலிருந்தது.

"அடுத்த மாசமே... என்னோட அஜு... ஒரு குட்டிப் பாப்பாவை சுமந்திட்டு இருக்கப் போறா!! சந்தோஷம் தானே?" என நிஷாந்த் கேட்க, "ரொம்ப, ரொம்ப!!!" என்ற அனுஜா, கணவனின் கைகளைப் பற்றி கொண்டு சந்தோஷ நடையிட்டாள்.

காரினுள் ஏறியதும், நித்யஸ்ரீ மகாதேவனின் அசாத் திய குரலில் "சதா சந்தோஷம் தந்திடும்..." என்ற பக்திப் பாடலை ஓடவிட்ட அனுஜாவிற்கு, அப்போதே நிஷாந் தின் மகவைத் தன்னுள் தாங்குவது போல் ஓர் பரவசம் உள்ளே ஓடி மறைந்தது. கண் மூடி அமர்ந்திருந்த மனைவியின் கேசத்தை லேசாய் கலைத்துவிட்ட நிஷாந்திற்கு மனம் நிம்மதியாய் தோய, சற்று நேரத்தில் தன் தோளில் தலை சாய்த்த மனைவியுடன் வீடு நோக்கிப் பயணப்பட்டான், அவன்.

அந்த மருத்துவமனைப் பயணத்திற்குப் பின்னர், அனுஜாவின் முகத்தில் ஓர் தெளிவு பிறந்திருப்பது வெளிப்படையாகவே தெரிந்தது. தங்களுக்கு இருந்த பிரச்சனைகள் தீர்ந்து விட்டதால், வாரிசு வருவதில் தாமதமிருக்காது என்பதே அவளை உற்சாகமாய் நட மாட வைக்க, நிஷாந்திற்கும் அவளது சந்தோஷம் தொற்றிக்கொண்டதில், சில காலமாக வீட்டில் தொலைத் திருந்த மகிழ்ச்சி ஊற்றாய் பெருகி ஓடியது.

ஆற்று நீராய் சலசலத்த அவர்களது இல்லறத்தில், சிறிதாய் ஓர் தடங்கல் போல் அடுத்து வந்த மாதமும் அனுஜா கருவுறவில்லை. பயந்தடித்து மருத்துவரிடம் ஓடினால், ''இன்னுமொரு மாதம் பார்க்கலாம். அப்படியும் குழந்தை உறுதியாகவில்லை எனில், வேறு சிகிச்சைக்குச் செல்லலாம்'' என முடித்தார் அவர்.

அனுஜா உடைந்த நம்பிக்கையோடும், நிஷாந்த் பெருத்த நம்பிக்கையோடும் அடுத்த மாதத்திற்காக காத்திருந்தனர்!

அதன் நடுவே, ஏற்கனவே கூடுதலாய் இருந்த நிஷாந்தின் வேலைப்பளு மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே சென்றது. அதற்கு முத்தாய்ப்பாய், ஐரோப்பிய மாகாணத்தில் இயங்கும் ஓர் மிகப் பெரிய வங்கி தன் மென்பொருள் உபயோகத்தை அதிகரிக்க எண்ணவே, அந்த ஒப்பந்தத்தைக் கைப்பற்ற இந்தியாவின் மென்பொருள் நிறுவனங்கள் போட்டியிட்டதில், தான் வேலை செய்யும் நிறுவனத்தின் சார்பாய் விற்றுமுதல் விண்ணப்பங்கள் தயார் செய்யும் வேலையில் அமர்த்தப்பட்டான் நிஷாந்த். அவனது திறமைக்குச் சவாலாய் அமைந்த அவ்வேலையைச் செய்வதில் நிஷாந்திற்கு மிகுந்த நாட்டமிருக்கவே, அவனது மேலதிகாரிகளும் அவனை ஊக்கப்படுத்தினர். இந்த வேலையின் காரணமாய் தான் தொலைக்கப்போவது ஓர் அரிய பொக்கிஷம் என்பதை நிஷாந்த் அறிந்த போது.... எல்லாம் கைமீறிப் போயிருந்தது!

அளவிற்கு அதிகமாக வேலை, சொற்ப நேரமே என்றாலும் சொர்க்கமாய் திகழ்ந்த வீடு, அனுஜாவின் சமையல் எனக் கடந்து போன அந்த மாதத்திலும் அனுஜாவின்



தாய்மை மலராமல் போகவே, ஏற்கனவே உடைந்த நிலையிலிருந்த அனுஜாவின் நம்பிக்கை முழுதாய் உடைந்தது.

## 13

மருத்துவரின் ஆலோசனைப்படி மூன்று மாதங்களாக மாத்திரைகளைச் சரியாக உண்டதில், தனக்கிருந்த பிரச்சனை குணமாகிவிட்டது என்ற நம்பிக்கையில் மண் விழுந்ததை எண்ணி அனுஜாவின் மனம் பதைத்துப் போனது. தனக்குக் குழந்தை பிறக்கும் வாய்ப்பே இல்லை என்ற அந்த பிஞ்சு மனம் வாடிப் போக, அது அவளது நடவடிக்கைகளில் வெளியானது.

நிஷாந்தின் வேலை அவனது நேரத்தின் முக்கால் வாசியை எடுத்துக்கொள்ள, வாடி வதங்கும் மனைவியிடம் அதிக நேரம் செலவு செய்ய முடியாமல் தவித்துப் போனான் அவன். அவளுடன் கழித்த சில மணி நேரங்களிலும் ''அஜு". நீ இவ்வளவு தூரம் மனசை வருத்திக்கிற அளவுக்கு எதுவுமே நடக்கலைடா. நமக்கு கல்யாணமாகி ரெண்டு வருஷம் கூட ஆகலை... சொல்லப்போனா உனக்கு இருபத்தைந்து வயது கூட முடியலை. அதுக்குள்ளே என்னம்மா? ச்சியர் அப்டா குட்டி... இப்படியே மூஞ்சியைத் தூக்கிவச்சிட்டு இருந்தினா... எனக்கு போர் அடிக்குதுடா, கிளம்பி வா... ரெண்டு பேரும் வெளியில ஷாப்பிங் போய் ரொம்ப

நாளாச்சே?! நீ ரொம்ப நாளா கேட்டுட்டு இருந்த முத்து செட் வாங்கித் தரேன் பாவா. ம்ம் கிளம்பு, கிளம்பு, சீக்கிரம் கிளம்பு!'' என அவளுக்குத் தார்குச்சிப் போட்டவனிடம் ''ப்ச்'' என்ற மறுப்புடன் அனுஜா அமர்ந்துவிட, ''என்ன ப்ச்? எதுக்கு இப்படி உலகமே அழிஞ்ச மாதிரி ஒரு லுக்கு கொடுக்கிற? எங்கயாவது நகைன்னு சொன்னதும் ஒரு பொண்ணு இப்படி உட்கார்ந்திருப்பாளா? அதுவும் அவளுக்குப் பிடிச்ச நகையை ஹஸ்பெண்ட்-டே வாங்கித் தாரேன்னு சொல்லும்போது... என்ன பொண்ணு நீ? கிளம்பும்மா'' எனப் பிடித்து இழுத்துக் கொண்டு சென்றான்.

நகைக் கடைக்குள் செல்லும் வரை அனுஜாவின் சோகப் பார்வையில் மாற்றமில்லை என்றாலும் கணவனின் அருகாமையை விரும்பி, அவனை ஒட்டியே அமர்ந்து கொண்டு வந்தாள். கடைக்குள் நுழைந்து, உனக்குப் பிடித்ததை எடுத்துக் கொள் என நிஷாந்த் கூறிவிட, கடை முழுதும் நகைகளின் அணிவகுப்பைக் கண்டதும் மனம் சற்றே வேறு புறம் திரும்பியது. அந்த மாற்றம் அரை மணி நேரத்தில் உற்சாகமாய் மாறிவிட, ''பாவா, எத்தனை செட் நகை எடுத்துக்கட்டும்?'' என நிஷாந்திடம் வந்து நின்றவளைச் செல்லமாய் அடித்தவன் ''எத்தனை செட்டா? அடிப்பாவி... ஒரு செட் தாண்டி! உன் புருஷன் என்ன கொள்ளையா அடிக்கிறேன்?'' என அவன் சிரிக்க, வெள்ளையாய் பிதுங்கின அவளின் உதடுகள்!

''ஒண்ணு தானா?'' என அவள் சிணுங்க, ''கடையில வச்சு என்ன பார்வை பார்க்கிற? அடி வாங்கப் போறடி''



என அவன் மயங்க, ''இப்போ கூட ஒண்ணு தானா?'' என்றால் அனுஜா குறும்புச்சிரிப்புடன்.

''ம்ம்... இப்போ கூட ஒண்ணு தான்'' என நிஷாந்த் பிடிவாதமாய் நிற்க, ''சரி ஒரு முத்து செட். கூட ஒரு ஜிமிக்கி.... ப்ளீஸ். எனக்குச் சின்ன அண்ணன் வாங்கிக் கொடுத்தது போலவே இருக்கு... அந்த ஜிமிக்கி. அது மட்டும் பாவா...'' என அவள் மேலும் கெஞ்சிய பிறகு கணவனால் மறுக்க முடியுமா என்ன? அவனது தலை தானாக சரியென ஆடியது!!

அடுத்து ஒரு மணி நேரத்தைக் கடையில் கழிக்கும்படி அனுஜாவின் தேர்வுகள் வலைவீசி நடந்தன. அந்த மாதம் தவறாமல் ''டான்'' என வந்து சேர்ந்த மாதவிடாய்க்குப் பின்னர், அனுஜாவின் முகத்தில் சிறிதாய் கூட ஓர் சிரிப்பைக் கண்டிராத நிஷாந்திற்கு, இன்றைய மகிழ்ச்சிக்கு விலையாய் அவள் ஆசைப்பட்ட அனைத்தையும் வாங்கிக் கொடுக்க ஆசை தான். ஆனால், கையிலிருக்கும் காசை எண்ணிப் பேசாமாலிருந்தான். அவள் நகை எடுக்கும் அழகை ரசித்துக் கொண்டு அமர்ந்திருந்தவனின் கைப்பேசி சிணுகிணுக்க, ஆனந்தின் எண்கள் அதில் மிளிர்ந்ததும் கூடுதல் சந்தோசத்துடன் அதை எடுத்தான்.

''என்னடா மாப்பிள்ளை? எப்படி இருக்கே? ரெண்டு வாரமா ஒரு போனைக் கூட காணோம்? சரிதா எப்படி இருக்கா?'' என உற்சாகத்தின் முழு உருவமாய் வினவிய நிஷாந்தின் குரலில் திகைத்தான் ஆனந்த்.

ஆனந்தமடைந்த ஆனந்த் ''ஹே வாழத்துக்கள்டா மாப்பிள்ளை. குட் நியூஸ் சொல்லத்தான் ரெண்டு

வாரமா கால் செய்துட்டே இருந்தியா? சாரிடா, வேலை விஷயமா கொஞ்சம் பிஸி ஆகிட்டேன்'' என்றான், நிஷாந்தின் சந்தோஷக் குரலுக்குக் குழந்தையின் வரவைக் காரணமாக்கி,

நண்பனின் கேள்வியில் ''ஹே, இல்லைடா... குட் நியூஸ் இல்ல...'' என நிஷாந்த் தடுமாற, அவனது தடுமாற்றத்தை முறையாகப் புரிந்து கொண்ட ஆனந்த் ''சாரி டா. நீ பயங்கர குஷியா பேசினியா... அதான்...'' என்றான் அவனும் அதே தடுமாற்றத்துடன்.

அங்கே சற்று நேரம் மௌனம் நிலவ, ''அனு எப்படி இருக்கா? பயங்கர அப்செட்-டா?'' என்றான் ஆனந்த் விசாரணை போல்.

''ம்ம்... என நிஷாந்த் முனங்கவும், ''என்னடா நீ? நீயே இப்படி சலிப்பா பேசினா அனு எப்படி இருப்பா? அவளோட வேதனையை நீயே ஜாஸ்தி ஆக்கிடுவே போல?'' என்றான் ஆனந்த் காட்டமாக.

''உன் தங்கச்சியை மத்தவங்க கஷ்டப்படுத்த வேண்டாம்... அவளே கஷ்டப்படுத்திப்பா. அதுவும் இந்த குழந்தை விஷயத்தில... அவளோட கற்பனையும், சிந்தனையும் எதைடா நினைச்சு நம்மளை நாமே வருத்திக்கலாம்ன்னு தான் அலையும். நீ வேற?!'' என நிஷாந்த் எரிந்து விழ.

''சாரிடா... எங்க கல்யாணத்திற்கு வந்திட்டுப் போய் தானே இவ்வளவு கஷ்டமும். இந்த சரிதா லூசு ஏதோ ஒரு வார்த்தை ''குழந்தை பிறந்தா ரெண்டு பேர் வீட்டிலேயும் சேர்த்துப்பாங்க'' ன்னு சொல்லுச்சுன்னா... அதையே பிடிச்சுக்கிட்டு அனுஜா வேதனைப்படுறது ரொம்ப கஷ்டமா இருக்கு. உனக்கும் அந்த எண்ணம் வந்திடுச்சோங்கிற பயத்தில தான் அப்படி கேட்டுட்டேன்'' என்ற ஆனந்த் வருத்தம் தோய்ந்த குரலில்.



''ஹே, நீயும் சரிதாவும் எங்களுக்கு நல்லது நினைச்சுத் தானே செய்தீங்க? தேவையில்லாம கவலைப்படாதே! அப்புறம் நீ நினைக்கிற மாதிரி... ''குழந்தை என்றதும் அப்பா - அம்மா வந்திடுவாங்கன்னு நம்பலை.... அதுவும் அஜு அதை நினைச்சு நினைச்சு வருந்தும் போது... குழந்தை பிறந்தும் அவங்க வரலைன்னா அந்த நிராகரிப்பை இவ எப்படி தாங்குவான்னு தான் பயமா இருக்கு'' என்றவன், சிறு இடைவேளை விட்டுத் தொடர்ந்தான்.

''அஜு, அதுக்காக மட்டும் வருத்தபடற மாதிரி எனக்குத் தெரியலைடா. அவளுக்கு ஒரு தாழ்வு மனப்பான்மை வந்திடுச்சு போல... அதான், அவ மன அமைதிக்காகவாவது டாக்டர் கிட்ட அடுத்த ட்ரீட் மென்ட்டுக்குப் போகணும். நாளைக்கு வரச் சொல்லி யிருக்காங்க. அதுக்கு நடுல... எனக்கு ஆபீஸ்-லையும் வேலை பிழிஞ்சு எடுக்கிறாங்க... வர இருபதாம் தேதி வேற... ஐரோப் போகச் சொல்றாங்க. கஸ்டமரோட ஃபிரஸ்ட் ப்ரோபோசல் மீட்டிங்... இவ ஒரு பக்கம் அழுதே கரையிறா... எப்படி விட்டுட்டுப் போறதுன்னு தெரியிலை?! எனக்கு சில சமயம்.... ரெண்டு பக்கக் குடும்பத்தையும் எதிர்த்து கல்யாணம் செய்துக்கிட்டது ரொம்ப தப்புன்னு தோணுதுடா... அட்லீஸ்ட் ஒருத்த ரோட சம்மதம் கிடைக்கிற வரைக்கும் வெயிட் பண்ணி யிருக்கணும். இந்த மாதிரி நேரத்தில, பெரியவங்களோட துணை எவ்வளவு முக்கியம்ன்னு இப்போ புரியுது. அஜு சோர்ந்து உட்காரும்போதெல்லாம் குழந்தைக்காக ஏங்கி உட்கார்ந்திருக்காளா? இல்லை அம்மாக்காக ஏங்கித் தவிக்கிறாள்ன்னு தெரியலை... பச்... தப்பு பண்ணிட் டேன்டா!'' என்றான் நிஷாந்த் மித மிஞ்சிய கவலையுடன்.

''ஹே நிஷாந்த்! அவளைச் சொல்லிட்டு... நீயும் தான் கவலைப்படறே? சரி... அதை விடு... வேற விஷயம்

பேசலாம். நீ ஐரோப் வரும்போது... அனுவைக் கூட்டிட்டு வாயேன்? அந்த ட்ரிப்பை முடிச்சதும்... யூ.எஸ் வந்து எங்களைப் பார்த்திட்டுப் போலாமே? என்னடா சொல்ற? உங்களுக்கும் ஒரு சேன்ஜ்ஜா இருக்கும் இல்லையா?'' என நண்பனின் கவனத்தை வெறும் புறம் திருப்பினான், ஆனந்த்.

''ம்ம்... யூ.எஸ் வரமுடியுமான்னு தெரியலை. கஸ்டமரை மீட் பண்ணதும், ப்ரோபோசல் ரிப்போர்ட் தயாரிச்சு இந்தியன் ஆபீஸ்-ல கொடுக்கணும். பார்க்கலாம்'' என நிஷாந்த் ''முடியும், முடியாது'' என ஒரு நிலைக்கு வரமுடியாதபடி ஓர் பதிலைக் கூறி முடித்ததும், ''சரி, வரதா இருந்தா முன்னாடியே சொல்லிடு. நானும் சரிதாவும் ஆபீஸ்-ல லீவ் சொல்லணும்'' என முடித்தான் ஆனந்த்.

''வீடியோ சாட் வரியா? ரொம்ப நாள் ஆச்சு... என் தங்கச்சியோட அழகு முகத்தைப் பார்த்து'' என ஆனந்த் அழைத்ததும், ''நாங்க ஷாப்பிங் வந்திருக்கோம்டா, அஜு உள்ளே பிஸியா நகை எடுத்திட்டு இருக்கா... இப்ப வரமுடியாதுன்னு நினைக்கிறேன்'' என்றான் நிஷாந்த்.

''ஹே... சூப்பர்'' என ஆனந்த் தொடங்கும் போதே ''பாவ... எங்க போயிட்டீங்க? யார் போன்ல? நான் எனக்குப் பிடிச்ச ரெண்டு செட் எடுத்து வச்சிருக்கேன்... நீங்க வந்து அதில ஒண்ணை செலக்ட் பண்ணுங்க.. வாங்க சீக்கிரம்'' என்ற இடைவெட்டலுடன் அங்கே வந்து சேர்ந்தாள் அனுஜா.

அவளது அழைப்பிற்கு இணங்காமல் ''ஆனந்த் பேசுறான்... பேசு'' எனக் கூறியவன், கைப்பேசியை மனைவியிடம் இடம் மாற்றினான். ''அண்ணா'' எனத் தொடங்கி சற்று நேரம் உரையாடியவள், ''அண்ணிகிட்ட



தாங்க...'' எனக் கூறி சரிதாவிடம் சற்று நேரம் நட்பு பாராட்டினாள். தான் வாங்கப் போகும் நகை பற்றி சற்று நேரம் அளந்து முடித்தவள், ''நீங்க எங்க வீட்டுக்கு வரும் போது... நான் உங்களை இந்த கடைக்குக் கூட்டிட்டு வரேன். டிசைன்ஸ் எல்லாமே சூப்பர்ரா இருக்கு'' என இலவசமாய் ஓர் விளம்பரப்படம் ஓட்டிவிட்டே, அழைப்பை வைத்தாள்.

அதன் பின்னர், அவள் தேர்ந்தெடுத்திருந்த முத்து நகை பெட்டகங்களுள் ஒன்றை தேர்வு செய்து முடித்தவர், அனுஜா கேட்ட ஜிமிக்கியையும் வாங்கிக் கொண்டிருக்கும் வரை அனுஜாவின் முகம் மலர்ந்தே தான் இருந்தது. பணத்தைக் கொடுத்துவிட்டு, ''அஜு, பாவா நீ கேட்டதை வாங்கிக் கொடுத்துட்டேன். நீ பாவா கேட்டதை.... வம்பு செய்யாம கொடுத்திடணும்'' என்ற சொல்லோடு திரும்பிய நிஷாந்திற்கு, அனுஜாவின் முகத்தில் மலர்ச்சி குறைந்து, வண்டிக் கணக்காய் ஏக்கம் படிந்திருப்பதைக் கண்டதும், அவள் பார்வையின் திசையில் கண்களைத் திருப்பினான்.

அவளது கண்கள் - குழந்தைகளுக்கான நகைகள் மீது நிலைத்திருப்பதைக் கண்டதும் ''இங்கேயுமா?'' என்ற அலுப்பே நிஷாந்தின் மனதை ஆக்கிரமித்தது. அதை மறைக்க முயற்சியேதும் செய்யாமல் ''அனுஜா, வீட்டுக்குப் போகலாமா?'' என்றான் அவன்.

அவனது அலுப்பையோ, எந்நேரமும் இந்த அலுப்பு கோபமாய் மாறலாம் என்றதற்கு அறிகுறியாய் வந்த ''அனுஜா'' என்ற அழைப்பையோ உணராத அனுஜா ''பாவா, பாருங்களேன்... தங்கத்தில சங்கு (பாலாடை), குட்டியூண்டு வளையல்... அழகா இருக்குதில்ல? நம்ம

பாப்பாக்கு வாங்குவோமா? உங்ககிட்ட இப்போதைக்கு பணமில்லைன்னா... என்னோட இந்த முத்து சேட்டை வேணும்னா திரும்ப கொடுத்திடலாமா? அதுக்கு பதிலா... இதை வாங்கிக்கலாம்.'' எனப் பேசிக்கொண்டே செல்ல, நிஷாந்தால் அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை.

மனதின் கோபம் கைகளில் தெறிக்க, அவளை இழுத்துக் கொண்டு வெளியே வந்தவன், ஓர் வார்த்தை கூட பேசாமல் வண்டியை வீட்டிற்குச் செலுத்தினான். ''என்ன பாவா? எதுக்கு இப்படி இழுத்திட்டு வந்தீங்க? அங்க குழந்தைங்களுக்கு நிறைய நகை...'' என ஆரம்பித்த அனுஜாவை ஓர் தீப் பார்வை பார்த்தவன், ''குழந்தை, குழந்தை, குழந்தை.... எப்போ பார்த்தாலும் என்ன புராணம் இது? புருஷன்னு ஒருத்தன் இங்க இருக்கிறது உன் கண்ணுக்குத் தெரியுதா இல்லையா? இன்னொரு தடவை... குழந்தைக்கு அது... குழந்தைக்கு இதுன்னு வாயைத் திறந்து பாரு?! ஏன்டி.... ஏன்டி.... என் உயிரை வாங்குற? குழந்தை பிறந்தா உங்க வீட்டிலையும் எங்க வீட்லையும் சேர்த்துப்பாங்கன்னு யாரோ ரெண்டு பேர் சொன்னாங்கன்னு ஒரு வருஷமா என் உயிரை வாங்கி வதைக்கிறியே? குழந்தை பிறந்திட்டு அவங்க வரலைன்னா என்ன செய்வே? நான் செத்தா அவங்க வருவாங்கன்னா என்னைக் கொன்னுடுவியா? அறிவு கெட்டவளே?! இல்லாத ஒண்ணை நினைச்சு மருகிறதை விட்டுட்டு இருக்கிற வாழ்க்கையை சந்தோஷமா வாழேன்... நீயும் வாழாம, என்னையும் வாழவிடாம... படுத்தி வைக்கிற...'' எனப் பொரிந்து தள்ளியவன், அவளது அதிர்ந்த கண்ணீரைக் கண்டதும்,



''எதுக்கு அழற இப்போ? இழுத்து அறைஞ்சுடுவேன்... இவன் சும்மா சொல்லுவான்... செய்ய மாட்டான்னு நினைக்காதே? எனக்கிருக்க ஆத்திரத்துக்கு... அடி வெளுத்துடுவேன்'' என்றான் கர்ஜனையாக. அதற்குப் பதிலாய் அனுஜாவின் அழுகை அடங்கிவிட, சிறிது நேரம் மௌனமாய் வண்டியை ஓட்டியவன் ''ஆபீஸ்ல தான் ஸ்ட்ரெஸ்... வீட்டிலேயாவது நிம்மதியா இருக்கலாம்ன்னா... அழுது வடிஞ்ச மூஞ்சியோட... உலகமே அழிஞ்ச மாதிரி இருக்க வேண்டியது. சை... சில சமயம் ஏன்டா கல்யாணம் செய்துகிட்டோம்ன்னு என்னை நினைக்க வைக்கிறே அனுஜா'' என்றான் கடித்த பற்களுக்கு இடையே! நிஷாந்திற்கு, ''சில மணி நேரங்கள் கூட குழந்தையின் நினைவின்றி இவளால் இருக்க முடியாதா? கொஞ்ச நேரம் மறந்திருக்கிறாள் என்று நினைத்தால்... திரும்பவும் ஆரம்பித்துவிட்டாள்... அதுவும் தான் ஆசையாக வாங்கிக் கொடுத்த நகையைத் திருப்பிக் கொடுத்துவிட்டு... பாலாடையாம்/வளையலாம்...?!

இவளின் மனதை நினைத்து தான் ஒவ்வொன்றையும் பார்த்து பார்த்துச் செய்தால், இவளுக்குத் தன் நினைவே சுத்தமாக இல்லை போலவே? தனக்கு அவளது நிம்மதி முக்கியம் என்பதைப் போல் அவளுக்குத் தனது சந்தோசம் முக்கியமில்லை போலவே?'' என நெஞ்சம் கொதித்தது.

தன் கொதிப்பை மறு யோசனையின்றி கணவன் கொட்டிவிட, கேட்டிருந்த மனைவியின் மனதில் சம்மட்டியால் பற்பல அடிகள் விழுந்தன. காதலிக்கும் காலத்தில் அன்பே உருவாய் இருந்த நிஷாந்தா அனுஜாவிற்கு!? காதலிக்கும் காலத்தில் மட்டுமல்லாது சில மணி

நேரங்கள் முன்பு வரையிலும் கூட அன்பே உருவாய் தானே இருந்தான் என்பதை யோசிக்க மறந்தது அஜுவின் மனது. குழந்தை பாக்கியமும் மறுக்கப்பட்ட இந்த நிலையில் பெற்றோரின் துணை தான் இல்லை என்றால், கொண்டவனின் துணையுமில்லாமல் போய் விட்டதே? என்ற எண்ணத்தின் ஊடே, "என்ன வார்த்தை சொல்லிவிட்டான்? இவன் இறந்து.... நான் உயிருடன் இருப்பேனா? இவனை விட இந்த உலகத்தில் எது பெரிது? இவனை விட என் பெற்றோர் தான் எனக்கு முக்கியம் என்று நினைத்திருந்தால் அவர்களை எதிர்த்து இவனை மணந்திருப்பேனா? என்ன வார்த்தை சொல்லி விட்டான்?" என நெஞ்சம் பதறியது.

அவனை மறுத்து ஏதேனும் கூறினால் திட்டு விழுமோ? இன்னமும் கோபப்படுவானோ? என்ற எண்ணத்தில் கண்ணீரை அடக்கிக் கொண்டு வாளா இருந்த அனுஜா, வீட்டிற்கு வந்த பின்னரும் மறந்தும் வாய் திறந் தாளில்லை. வீட்டுக்கு வந்த பின்னரும் தொடர்ந்த மனைவியின் பதில் சொல்லாத மௌனம், நிஷாந்தி தன் வார்த்தைகளை எண்ணி வருந்த வைத்தது. ஆனால், அவன் பேசியது தவறு என்று அவன் எண்ணவில்லை. அதை வேறு வார்த்தைகள் கொண்டு, சற்று மெதுவாக சொல்லியிருக்கலாமோ எனத் தோன்றியதே தவிர, அவனது எண்ணங்களில் மாற்றமிருக்கவில்லை. அந்த எண்ணத்தி னாலேயே அனுஜாவிடம் அவனாகச் சென்று பேசவில்லை.

இருவரும் தத்தம் மௌனத்தைக் கையாள, சிறிதாய் விழுந்த மன உளைச்சலைப் பெரிதாக்குவது போல் இரு தினங்கள் உருண்டோடின. இரண்டாவது நாளின் முடிவில், பால்கனியில் அமர்ந்து இருளை வெறித்துக் கொண் டிருந்த அனுஜாவின் பின்னால் வந்து நின்ற நிஷாந்



திற்கு, அவளது வெளித்தோற்றம் உள்மனதைப் படம் பிடித்துக் காட்டியதோ என்னவோ "டாக்டர். சங்கரியைப் பார்த்திட்டு வரலாமா. அஜு?" என்றான் மென் குரலில்.

முப்பது மணி நேரங்களாக கேட்டிராத "அஜு" என்ற அழைப்பு அனுஜாவை அசைத்துப் பார்க்க, அவளது மனம் "இப்போது குழந்தை பற்றி பேசுவது அவன் தானே? நானா ஹாஸ்பிடல் போகணும்ன்னு சொன் னேன்?" எனக் கேள்வி கேட்டபோதும், தலை "சரி" என்பது போல் தானாக அசைந்துவிட்டது.

நிஷாந்திற்கோ தன் கடுமையானப் பேச்சிற்கு பிராய சித்தமாக அனுஜாவின் ஆசை (குழந்தை ஆசை) நிறை வேற, தன்னாலான அனைத்தையும் செய்துவிட வேண் டும் என்று தோன்றிவிட, மனைவியின் தலையசைப்பில் பெரும் நிம்மதியுற்றதொடு இல்லாமல், தங்களுக்கு மருத்துவ ஆலோசனை வழங்கும் பெண் மருத்துவரிடம் அப்பாயின்ட்மென்ட் வாங்கினான். அடுத்த நாள் மருத்துவமனைக்குச் செல்வதை உறுதி செய்துகொண்டு படுக்கையறைக்கு வந்தவன், அங்கே அனுஜாவைக் காணாமல், மீண்டும் பால்கனி பக்கம் எட்டிப் பார்க்க, இப்போது அங்கிருந்த ஊஞ்சலில் படுத்திருந்த மனை வியைக் கண்டு மேலும் மனம் வருந்தினான்.

அவளருகே சென்று, ஊஞ்சலின் முன்னே மண்டி யிட்டு அமர்ந்தவன். அவளின் கன்னத்தை வருடி "அஜு" என்றான், மென்மையாக. அவனது தொடுகையின் பிரதி பலிப்பாக இமைகளை மலர்த்திய அனுஜாவின் கன்னத் தில் முத்தம் வைத்து "வா... உள்ள வந்து படு... பனி கொட்டுது பாரு" என்றான்.

அவனது அழைப்பிற்கு எதிர்ப்பேச்சு பேசாமல் உடனே எழுந்து கொண்ட மனைவியுடன் உறங்கச் சென்றவன், அடுத்த நாள் மருத்துவர் தரப்போகும் அதிர்ச்சியை அறியாமல் நிம்மதியாக உறங்கிப்போனான்.

அடுத்த நாள், நிஷாந்த் ''மனைவியின் மனதிற்கு அமைத்து கொடுக்கும்படியான வார்த்தைகளை மருத்துவர் கூற வேண்டுமே'' என்ற வேண்டுதலுடனும், அனுஜா ''கணவனுக்குத் தான் குழந்தையின் பேச்செடுத்தாலே கோபம் வருகிறதே? அப்புறம் எதற்கு எங்கே அழைத்து வருகிறான்?'' என்ற கேள்வியுடனும், மருத்துவரிடம் செல்ல, அவரோ அமுதென்றோ விஷமென்றோ பகுத்தறிய முடியாதபடி ஓர் விஷயத்தைக் கூறினார்.

தைராய்ட்டின் அளவு குறைந்த பின்னரும் அனுஜா கர்ப்பமாகவில்லை எனும்போது அவளது கருப்பையில் ஏதேனும் பிரச்சனை இருக்கிறதா எனக்கண்டறிய லாப்ரோஸ்கோபி எனப்படும் சிறு அறுவைசிகிச்சையை செய்யலாம் என்றார் அவர்.

அவரது வார்த்தைக்கு அனுஜாவின் முகம் அதிர்ச்சியைக் காட்டியபோதும், முன்போல வாய் திறந்து தன் வருத்தத்தையோ, பயத்தையோ அவள் வெளியிட்டாளில்லை. மனைவியின் முகத்தை ஒரு தரம் பார்த்த நிஷாந்த், அறுவை சிகிச்சை அளவிற்குச் செல்லாமல் வேறேதும் வழியிருக்கிறதா எனக் கேட்க, ''அனுஜாவோட கருப்பை, ஃபலோப்பியன் டியூப், கருப்பை சுத்தி இருக்க சுரபிகள் இதெல்லாம் சரியான முறையில இருக்கான்னு பண்ற டெஸ்ட் தான் இது. அவளோட உடல்நிலையை சந்தேகமின்றி தெளிவா புரிஞ்சுக்க நமக்கு ஒரு வழி. நீங்க நினைக்கிற அளவிற்கு இது ஒண்ணும் பெரிய



விஷயமில்லை... அரை மணி நேரத்தில் முடிஞ்சிடும்... சின்னதா ஒரே ஒரு துளை போட்டு.... அவளோட உள்ளுறுப்புக்களைப் பரிசோதனை செஞ்சிட்டு.... தையல் போட்டுட வேண்டியது தான். ஒரே நாளில் நீங்க வீட்டுக்கே போய்டலாம். ப்ளூட் டெஸ்ட், யூரின் டெஸ்ட் மாதிரி இதுவும் ஒரு டெஸ்ட். அவ்வளவு தான். பயப்படவேண்டிய அவசியமே கிடையாது!'' என்ற விளக்கத்திலேயே நிஷாந்தின் மனதை தெளியவைக்க முயன்ற மருத்துவர், அதில் வெற்றியும் கண்டார் என்பது ''சரி டாக்டர். இந்த சர்ஜரி எப்போ செய்யணும்?'' என்ற நிஷாந்தின் கேள்விலேயே புரிந்தது.

''அவளோட மாதவிடாய் நாட்களின் கணக்குப்படி வர பதினெட்டாம் தேதி இந்த டெஸ்ட்டை செய்திடணும். தள்ளிப்போடறது நல்லதில்லை'' என மருத்துவர் முடித்துவிட, 'கடவுளே, இருபதாம் தேதி நான் ஐரோப் செல்ல வேண்டுமே?' என அயர்ந்து போனான் நிஷாந்த். அதையே அவன் வார்த்தைகளாய் வெளியிட, ''ஹ்ம்ம். இந்த மாசம் விட்டா... அடுத்த மாசத்திற்கு நான் இங்க... இந்தியாவில இருக்க மாட்டேனே? என்னோட உதவியாளர் தான் இருப்பாங்க... அவங்களும் நல்லா பார்ப்பாங்க'' என யோசித்தார் மருத்துவர்.

மேலும் ''நான் முன்னாடியே சொன்ன மாதிரி... அடுத்த நாளே நீங்க வீட்டிற்குப் போய்டலாம். அதுக்கு அப்புறம் ரெண்டு நாள் ரெஸ்ட் தேவை அவ்வளவு தான். பத்திய சாப்பாடு, பெட் ரெஸ்ட் இதெல்லாம் கூட அவசியமில்லை... சோ நீங்க அனுஜாவை இங்க விட்டுட்டு தாராளமா ஐரோப் போகலாம் மிஸ்டர்-நிஷாந்த். கவலையே இல்லை'' என்றார் அவனுக்கு நம்பிக்கையூட்டும் விதமாக.

ஏற்கனவே மன உளைச்சல் மிகுந்திருக்கும் இவ் வேளையில் நம்பிக்கையான மருத்துவரின் கைகளால் பரிசோதனை மேற்கொள்வதை விட்டுவிட்டு, மேலும் வருந்துவதா எனத் தோன்றிவிட, அடுத்த வாரமே (அதாவது பதினெட்டாம் தேதியே) அறுவை சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யும்படி கூறினான் நிஷாந்த். மருத்துவர் மற்றும் மணாளன் இருவரின் பேச்சுவார்த்தைகளைக் கேட்டிருந்த அனுஜாவின் வாயிலிருந்து ஒரு முத்து கூட உதிரவில்லை, வீட்டிற்கு வந்து சேரும் வரையிலும் கூட!!

மனைவியின் முகம் பார்த்த கணவனோ ''பயமா இருக்காடா குட்டி?'' என்ற கேள்வியுடன் அவளைத் தன்னுடன் அணைத்துக் கொண்டான். அப்போதும் அனுஜாவின் சிப்பி உதடுகள் சிரிப்பை உதிர்க்காமல் இருக்க, ''டாக்டர் தான் சொன்னாங்களே.... ஒரேயொரு துளை தான் போடுவாங்களாம். அரை மணி நேரத்தில் எல்லாமே முடிஞ்சிடும்... பயப்படவே தேவையில்லைடா. பாவா கூடவே இருப்பேன்டா'' என்றான் அவளது முதுகை வருடி.

அதற்குப் பதிலாய் ஓர் தலையுருட்டலும், அழுத்தமான முகப் புதைப்பும் மட்டுமே பதிலாய் வர அனுஜாவின் உதடு மௌனவிரதத்தை விடாது கடைப்பிடித்தன. உதட்டிற்கு மாறாய் மனம், மாறி மாறி சிந்தித்து முடிவில் யோசிக்கவே முடியாமல் மரத்துப் போனது.

நிஷாந்தின் தொழில் முறைப் பயணமும், அனுஜாவின் மருத்துவமுறை பயணமும் ஒன்றோடு ஒன்று போட்டிப் போட்டுக் கொண்டு வந்து சேர, முதலாய் வந்த மருத்துவப் பயணத்தின் அனுஜா மருத்துவமனை



யில் அனுமதிக்கப்பட்டாள். வாழ்வில் முதன்முறையாக நடக்கப் போகும், அறுவை சிகிச்சையை எண்ணி உடலும், மனமும் ஒருங்கே அதிர, பதைத்துப் போயிருந்த அனுஜாவை அன்பு வார்த்தைகளால் தேற்றி சிகிச்சைக்குத் தயார் செய்தனர் அங்கிருந்த செவிலியர்.

அவர்களின் அன்பான கவனிப்பினால் அனுஜாவின் பயம் குறைந்தபோதும், ''அம்மா வரலையாமா?'' என்ற அவர்களின் கேள்வியில் அழுகை எட்டிப் பார்த்தது. அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லமுடியாமல், அருகே நின்றிருந்த கணவனை அவள் பார்க்க, ''அவங்க எங்ககூட இல்லை...'' என்றான் நிஷாந்த் முகம் இறுக.

நிஷாந்தின் பதில் அங்கிருந்த மற்றவர்களின் மனதில் என்ன மாதிரி உணர்வுகளை உண்டாக்கியதோ தெரியாது. ஆனால் அனுஜாவின் மனதில் ''என் குடும்பத்தைப் பற்றி பேசினாலே அவனுக்குப் பிடிக்கவில்லை'' என்ற உணர்வைத் தவறாமல் உண்டு பண்ணியது. மனதிலிருந்த ஆயிரமாயிரம் சஞ்சலங்களுடன் இதுவும் சேர்ந்து கொள்ள, மிகுந்த பயத்துடனே அறுவைசிகிச்சை அறைக்குச் சென்றாள் அனுஜா. அவளை உள்ளே அழைத்துச் செல்லும் முன்னர் ''உனக்கு ஒண்ணுமில்லைடா அஜு. பயப்படாம... தைரியமா போ'' என நிஷாந்த் கூற, 'எனக்கு... எனக்கு... இதில ஏதாவது பெரிய பிரச்சனைன்னா... என்னை... என்னை விட்டுட்டுப் போய்டுவீங்களா?'' என்றாள் அனுஜா, தனது ஒரு வார மனப் போராட்டத்தின் விளைவாக.

அந்த வார்த்தையில் மனம் நொந்துவிட, ''ச்சீ லூசு! பைத்தியம் மாதிரி பேசாதே அஜு.... தைரியமா போயிட்டு வா. பாவா உனக்காக வெயிட் பண்ணுவேன்'' என எந்த

நேரத்தில் கூறினானோ, அனுஜா கண் விழிக்கும் வேளையில் அவனால் அங்கே இருக்க முடியவில்லை.

ஏனென்றால், அரை மணி நேரம் எனக் கூறப் பட்ட அறுவை சிகிச்சை ஒரு மணி நேரம் தொடர, அதன் பின்னர் வெளியே வந்த மருத்துவர் ''மிஸ்டர். நிஷாந்த். அனுஜாவிற்கு கருப்பை பக்கத்தில் சின்னதா ஒரு கட்டி இருக்கு. லாப்ரோஸ்கோப்பி-ல பார்த்திட்டு அதிலேயே எடுக்க முயற்சி செய்தோம். ஆனா முடியலை. ஓபன் சர்ஜரி செய்து தான் எடுக்கணும் போல.... மேலும் இந்த கட்டி இந்தளவில இருக்கும் போதே எடுக்கிறது பெட்டர். இன்னும் கொஞ்ச நாள் போச்சுன்னா அனுஜாவோட உயிருக்கே ஆபத்தா முடியலாம்'' என சிகிச்சையின் முடிவுகளை உடனே அறிவிக்க, நிஷாந்த் அதிர்ந்து போனான்.

''எங்களுக்கு குழந்தையே வேண்டாம் டாக்டர். நானும் - அவளும் எனக்கு அவ, அவளுக்கு நான்னு வாழ்ந்துடுறோம். அவளை டிஸ்சார்ஜ் செய்துடுங்க'' எனப் பதறியவனின் தோளில் தட்டியவர் ''இது குழந்தைக்கான ட்ரீட்மென்ட் மட்டுமில்லை நிஷாந்த். அவளோட உயிரைப் பாதுகாக்கும் அறுவை சிகிச்சையும் கூட. குழந்தைக்காக என்பது இரண்டாம் பட்சம் தான்... இதை உடனடியா செய்யலை என்றால் நீங்க இவ்வளவு அன்பு வச்சிருக்க உங்க மனைவியோட உயிருக்கு ஆபத்துன்னு சொல்றேன்'' என்றார் அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி.

''ஆனா டாக்டர்... இது நாள் வரை வலி, வேதனைன்னு அவ படுத்ததே இல்லையே? நீங்க என்னடான்னா கட்டி... உயிருக்கே ஆபத்துன்னு சொல்றீங்க?



கட்டிக்கான அறிகுறியே இல்லையே டாக்டர்?'' என நிஷாந்த் மேலும் பதறினான்.

''சில பேருக்கு அப்படித் தான் இருக்கும் நிஷாந்த். சின்னதாய் இருக்கும் போது எந்தவிதமான பாதிப்பு இருக்காது... பெருசாக ஆக வலி ஜாஸ்தியாகிட்டே போகும். அந்த வேதனை அனுஜா அனுபவிக்க வேண்டாமேன்னு பார்க்கிறேன்'' என்றார் அவர் மீண்டும் ஓர் மருத்துவரின் கனிவுடன். அப்போதும் அவனின் முகம் தெளியாமலிருக்க, அனுஜாவின் கருப்பைகளைச் சுற்றி எடுக்கப் பட்ட மருத்துவப்படங்கள் அவனிடம் காட்டியவர். அவனுக்கு அந்த கட்டியைக் காட்டி மேலும் சில விளக்கங்கள் கூறி, இன்னும் ரெண்டு மூன்று மருத்துவர்களிடம் மறு ஆலேசானை வாங்கி வருமாறும், அதன் பின்னரே... அதுவும் நிஷாந்த் விருப்பப்பட்டால் அறுவை சிகிச்சை மேற்கொள்ளலாம் என்றும் கூறினார்.

அவரின் வார்த்தைகளிலேயே ''அறுவை சிகிச்சை செய்துவிடலாம்'' எனற முடிவிற்கு அரை மனதாய் வந்திருந்த நிஷாந்த். மேலும் சில மருத்துவர்களும் முன்னவரையே வழிமொழியவும் ''சரி'' என்றான். அனுஜாவிற்கு அறுவை சிகிச்சை என்ற நிலையில், ஐரோப் செல்லும் தன் பயணத்தை ரத்து செய்யுமாறு அலுவலகத்திற்கு அவன் கொடுத்த தகவல் அங்கே பெரும் புயலைக் கிளப்பியது.

அவர்களது புதிய வாடிக்கையாளரின் மென்பொருள் ஆய்விற்கு ஆயிரக்கணக்கானோர் போட்டியிட்ட நிலையில், ஐந்து நிறுவனங்களுக்கு மட்டுமே ஐரோப்பா வந்து வந்து தங்களின் நிறுவனத்தின் சார்பாக பேச வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது. அதில் நிஷாந்தின் நிறுவனமும்

ஒன்றாகிவிட, தங்களுக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பத்தைத் தயார் செய்த அலுவலர் தான் வரவேண்டும் என்பது அந்த நிறுவனத்தின் வேண்டுகோளாய் இருந்தது. அவர்களின் நிபந்தனைப்படி, நிஷாந்தின் சம்மதம் பெற்ற பின்னரே, ஐரோப்பாவிற்கு விமானப்பயணச் சீட்டு, தங்கும் வசதி, எல்லாவற்றுக்கும் மேலாக வாடிக்கையாள நிறுவனத்தின் முக்கிய தலைவருடன் நேரடி சந்திப்பு ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்திருந்தது அவனது நிறுவனம். இன்னும் ஒரு நாளில் சந்திப்பு என்ற நிலையில், நிஷாந்த் அங்கே செல்லாமலிருப்பது, முன்னூறு கோடி வருமானம் உள்ள வாடிக்கையாளரை இழப்பதற்கு சமானம் என்ற நிலையில் நிஷாந்தின் வேண்டுகோளை நிராகரித்து, அவன் ஐரோப்பா சென்றே ஆக வேண்டும் என ஆணை பிறப்பித்தது. ஆனால், ஊழியரின் சொந்த வாழ்விற்கும் முக்கியத்துவம் அளிக்கிறோம் எனக் காட்டிக்கொள்வது போல், இரண்டே நாளில் திரும்பிவிடலாம்... அதற்கு நாங்கள் உறுதி என நிஷாந்திடம் பேரம் பேசினார்கள் அவர்கள்.

தன் நிலையை மருத்துவரிடம் விளக்கிக் கூறிய நிஷாந்த், அனுஜாவின் அறுவை சிகிச்சையை மேலும் தள்ளிப் போடுமாறு கேட்டுக் கொண்டான். ஆனால் அவரோ, ''ரெண்டு நாள் தானே நிஷாந்த்? இன்னைக்கு நைட் அனுஜாவிற்கு மயக்கம் தெளிஞ்சதுமே... அவளை அடுத்த ஆபரேஷனுக்குத் தயார் பண்ணிடுவோம். நாளைக்குக் காலையில சரியா பதினோரு மணிக்கு ஆபரேஷன் செய்தா... அவ கண் முழிக்கவே நாளைக்கு நைட் ஆகிடும். அப்புறம் ஒரு நாள் முழுசும் நர்ஸ் தான் கூட இருக்கணும். மூணாவது நாள் அவ முழுசா தெளியும் போது நீங்க வந்துடப் போறீங்க? அப்புறம்



என்ன கவலை?'' என அவனை மீண்டும் சமாதானப் படுத்தினார்.

''இல்ல டாக்டர்...'' என நிஷாந்த் தொடங்க, ''சரி நீங்க போங்க. உங்க வீட்டிலிருந்தோ... அனுஜா வீட்டிலிருந்தோ யாரையாவது வரச் சொல்லுங்களேன்?! ரெண்டு நாளைக்கு எதுக்கு இத்தனை டென்ஷன்? பெரியவங்க வந்தா... உங்களை விட நல்லா பார்த்துப்பாங்களே! அனுஜாவிற்கு உங்களோட துணையை விட... ஒரு பெண்ணோட துணை தான் ரொம்ப அவசியம். அவளும் அவங்ககிட்ட தான் நெருக்கமா இருக்க நினைப்பா...'' எனப் பேசிக் கொண்டே சென்றார் அந்த மருத்துவர்.

அவரது ஒவ்வோர் வார்த்தையிலும் நிஷாந்த் துண்டு துண்டாய் அறுக்கப் பட்டான். பெற்றோரின் சம்மதமில்லாமல், அவர்களின் ஆசியில்லாமல் செய்து கொண்ட திருமணம் தப்பிலிருந்து, அனுஜாவின் சந்தோஷத்திற்குத் தான் இட்ட தீயாய் அவனைச் சுட்டது! ''இன்னும் கொஞ்ச நாள் காத்திருக்கலாமா நிஷு? நமக்கு வேற கல்யாணத்தில் இஷ்டமில்லைன்னு தெரிஞ்சுடுச்சுன்னா... அவங்களே நம்மளை சேர்த்து வச்சிடுவாங்க இல்லையா?'' எனக் கூறிய அனுஜாவின் வார்த்தைகளை மதிக்காமல், ''என்னைக் கேட்காமல் திருமணத்தை ஏற்பாடு செய்தவர்களிடம் நான் ஏன் திருமணத்திற்கு அனுமதி கேட்க வேண்டும்? அவர்கள் கேட்டார்களா? நான் ஏன் கேட்க வேண்டும்? சுயமா சிந்தித்து ஓட்டு போடும் வயது அரசாங்கம் நிர்ணயித்த பதினெட்டு வயதையும் தாண்டி பத்தாண்டுகள் ஓடிவிட்டப் பின்னர்... என் சம்மதமின்றி அவர்களுக்குப் பிடித்த பெண்ணை அவர்கள் என் துணைவியாய் நிர்ணயிக்கும் போது,

அதே செயலை நான் செய்தால் என்ன தப்பு?'' என்று நெஞ்சு நிமிர்த்தி நின்றதற்கு தண்டனையாக என் அனுஜாவை வேதனைப்பட வைத்து விட்டேனே என்று உள்ளம் நொந்தவன்.

''டாக்டர்... நாங்க ரெண்டு பேரும் வீட்டை எதிர்த்து கல்யாணம் செய்துக்கிட்டோம். ரெண்டு பேர் வீட்டி லேயும் பேச்சு வார்த்தையில்லை...'' என்றான் மென்குரலில்.

இதுவரை சமாதான வார்த்தைகள் பேசிக் கொண் டிருந்த மருத்துவரோ ''அப்பா-அம்மா சம்மதம் வாங்குற வரைக்கும் கூட பொறுக்க முடியாம காதல் உங்களை ஆட்டிப்படைச்சிருக்கு... ஹ்ம்ம்... இந்த வயசில வேகம் தேவை தான்... அதுக்காக இத்தனை நாள் வளர்த்த பெற்றோரை தூக்கியெறியவும் வேகம் தேவையே இல்லை'' எனத் தன் பங்கிற்கு ஓர் அன்பை எறிந்தார்.

தலை குனிந்து அமர்ந்திருந்த நிஷாந்தை மேலும் வருத்த விரும்பாமல் ''பரவாயில்லை நிஷாந்த். நீங்க வர வரைக்கும் ஒரு ஸ்பெஷல் நர்ஸ் போட்டு நான் பார்த் துக்கிறேன். சீக்கிரம் வரப் பாருங்க'' என அவனை அனுப்பி வைத்தார்.

மருத்துவரிடம் பேசிவிட்டு வெளியே வந்த நிஷாந் திடம் ''உங்க மனைவியை அறைக்குக் கூட்டிட்டு வந் துட்டோம். மயக்கம் தெளிய ரெண்டு மணி நேரம் ஆக லாம். போய் பாருங்க'' என அனுப்பி வைத்தார் ஓர் பணிப்பெண்.

அந்த வார்த்தைகளின் முடிவில் நிஷாந்த் அனுஜா அனுமதிக்கப பட்டிருந்த அறையிலிருந்தான். கண் மூடி மயக்கத்தில் ஆழ்ந்திருந்த மனைவியைக் காண,



கண்களில் கண்ணீர் பொங்கி வழிந்தது. ''அஜு'', ''குட்டி'', ''செல்லம்'', ''அஜும்ம்'', ''கண்ணம்மா'', ''பேபி'' என விதவிதமாய் அவளைக் கொஞ்சியவனின் கைகள், அவள் முகத்தில் நடத்திய வருடலை நிறுத்தவே இல்லை.

லேசாய் ரத்தம் படிந்த மேலாடையுடன் படுத்திருந்த மனைவியை நெஞ்சில் ரத்தம் கசிய விட்டுச் சென்றான் அந்த அன்பு கணவன்-தான் தாய்நாடு திரும்பும் போது மனைவி அங்கே இருக்கவே போவதில்லை என்பதை உணராமல்!

## 14

மனதை - மருத்துவமனையில் இருக்கும் மனைவி யிடம் விட்டு விட்டு, ஐரோப்பா கிளம்பிச் செல்லும் முன்னர் இரு வீட்டாருக்கும் தொலைப்பேசியில் அழைத் தான் நிஷாந்த்.

நிஷாந்தின் டெல்லி வீட்டு அழைப்பு மணி எடுக் கவே படவில்லை எனில் அனுஜாவின் வீட்டில் ''நான் நிஷாந்த் பேசுறேன்'' என்ற குரலைக் கேட்டதும், அழைப்பு வைக்கப்பட்டது.

''ஹய்யோ'' என்ற உணர்வுடன், அனுஜாவின் தமையன் ரவீந்தரனுக்கு முயன்றான், அனுஜாவின் மணவாளன். அவனோ அழைப்பை எடுக்காமலே கட் செய்துக் கொண்டிருக்க, எரிச்சல் மண்டியது நிஷாந்தின் மனதில். தன் எண்ணிலிருந்து வருவதால் தான் எடுக்கவில்

லையோ என்ற எண்ணத்தில், அருகிலிருந்த ஓர் பொது தொலைப்பேசியிலிருந்து முயன்றான். முதல் முறை அழைப்பு எடுக்கப்பட, ''ஹலோ ரவி, நான் நிஷாந்த் பேசுறேன். ரொம்ப முக்கியமான விஷயம்'' என அவன் பறக்க, ''எதுவா இருந்தாலும் அப்புறமா கூப்பிடுங்க'' என வார்த்தைகளை மிக மிக மெல்லிய குரலில் கூறிய ரவீந்திரன், அழைப்பைத் துண்டித்தே விட்டான். ''ஹலோ... ஹலோ... அனுஜாக்கு'' என நிஷாந்த் கத்தியது காற்றில் மட்டுமே கரைந்தது. அதன் பின்னர், ரவீந்திரனின் கைப்பேசி எண்ணிற்கு அழைத்தால் ''நீங்கள் தொடர்பு கொள்ளும் வாடிக்கையாளர் எண் சுவிட்ச் ஆப் செய்யப் பட்டுள்ளது'' என்ற குரலே வர, நிஷாந்த் மனமே இல் லாமல் தன் பயணத்தை மேற்கொள்ள ஆரம்பித்தான்.

அனுஜாவின் உடல்நிலையைக் காக்கும்படி கட வுளை வேண்டியவனின் உதடுகள் தாமாக ''விஷ்ணு சகஸ்ரநாமத்தை'' உதிர்க்க, விமானநிலையத்தை அடைந்த போது தான் ''ஆனந்த் - சரிதா'' மூலமாக தன் பெற்றோருக்குத் தகவல் சொல்லலாம் என்ற எண்ணம் உதித்தது. தாமதமின்றி அவர்களது வீட்டு எண்ணை அழுத்தியவன், அதை எடுத்த சரிதாவிடம் அனுஜாவின் அறுவை சிகிச்சை விபரங்களை ஒரே மூச்சில் சொல்லி முடித்தான்; கூடவே தன் பயணத்தின் கட்டாயத்தையும்.

''என்ன நிஷாந்த் இது? இந்த மாதிரி நேரத்தில்... தன்னந்தனியா தவிக்க விட்டுட்டு... அப்படியொரு வேலை ரொம்ப முக்கியமா? இந்த மாதிரி அவளைத் தவிக்க விடத் தான் கல்யாணம் பண்ணி அவங்க அப்பா - அம்மாகிட்ட இருந்து பிரிச்சு கூட்டிட்டு வந்தியா?'' என சரிதா முடிக்கவில்லை. ''நானே உடைஞ்சு போய்



இருக்கேன். உன் பங்கிற்கு என்னைக் குத்திக் கிழிக் காதே!'' என்ற நிஷாந்த் உடைந்து அழுதுவிட்டான்.

''நிஷான், சாரிமா. அழாதே!'' எனத் தேற்றிய சரிதா, ''நான் மட்டும் இந்தியா-ல இருந்திருந்தா உடனே அனுஜாவைப் பார்க்கப் போயிருப்பேன்... ப்ச் நடக்காத ஒன்றை பேசி என்ன செய்வது? நீ சொல்லு... இப்போ நான் என்ன செய்யணும்?'' என்றாள் தேற்றும் விதமாக.

சின்ன தயக்கத்துடன் ஆரம்பித்த நிஷாந்த், சில வினாடிகளில் தன் தேவையை சொல்லி முடித்தான். ''ஆனந்தோட அம்மா - அப்பாகிட்ட சொல்லி, அவளைப் போய் பார்த்துக்கச் சொல்ல முடியுமா? நான் கால் பண் ணினா எடுக்க மாட்டேங்கிறாங்க. என்னோட நம்பரைப் பார்த்திட்டு எங்க அம்மா தான் எடுக்கலை என்றால்... இவங்களும் அப்படி இருப்பாங்கன்னு எனக்குத் தோணலை. எங்கேயாவது வெளியே போயிருக்கலாம். வந்ததும் பேசி, சென்னை போகச் சொல்றியா? ப்ளீஸ் சரிதா... எனக்காக'' என அவன் கெஞ்ச,

''ஹே நிஷாந்த்.... நீ சொல்றதை என்னால, செய்யவே முடியாதேடா. எங்க அப்பா - அம்மா, ஆனந்தோட அப்பா - அம்மா எல்லாருமா சேர்ந்து டூர் போயிருக்காங்களே! கடவுளே!'' என சரிதா கூறவும் தான் ரெண்டு நாட் களுக்கு முன்னர் ஆனந்த் கூறியது நினைவில் வந்தது. அனுஜாவின் மருத்துவமனை பிரவேசம் அறை மறக்கச் செய்திருக்க, இப்போது சரிதா கூறவும் ''இருந்த ஒரு வழியும் மூடிவிட்டதா?'' என ஆயாசமாய் இருந்தது அவனுக்கு.

''சரி பரவாயில்லை சரிதா'' என்றான் சோர்ந்த குரலில், அந்த குரல் ஏதோ செய்ய, ''அங்கிள்கிட்ட நான் பேசிப்

பார்க்கிறேன் நிஷான். இந்த மாதிரி நேரத்தில, கண்டிப்பா அவரோட கோபம் குறையும்'' என்றான் சரிதா தைரிய மூட்டும் விதமாக.

''எனக்கு நம்பிக்கையில்லை... நீயும் தான் கிட்டத் தட்ட ஆறு மாசமா பேசுறே. சின்னதா கூட அவங்க அசைஞ்சு கொடுக்கலையே!? அவங்களையும் சொல்லி குற்றமில்லை... சரிதா! எல்லாம் நான் செய்த தப்பு... ஒரு பக்கம் அட்லீஸ்ட் சம்மதம் வாங்கியிருக்கணும். இப்படி ஒரு இக்கட்டான சூழ்நிலையில்... என்னோட அஜுவை... தனியா... சை! எனக்கு அவளை ஒரு மூணு வருஷமா தெரியுமா? அதுக்கே இப்படி வலிக்குதுன்னா... இருபத்தி யொரு வருஷமா பாசத்தை மட்டுமே காட்டி வளர்த்த அவளோட குடும்பத்திற்கு எங்க கல்யாணம் எவ்வளவு பெரிய அதிர்ச்சியா இருந்திருக்கும்?! எல்லார் மனசைக் கஷ்டப்படுத்திட்டு எங்க சந்தோஷம் தான் முக்கியம்ன்கிற மாதிரி கல்யாணம் செய்துகிட்டதுக்கு எனக்கு ரொம்ப பெரிய தண்டனை சரிதா... பட்டுத் தான் ஆகணும்'' என்ற நிஷாந்திற்கு மனம் ஆறவே இல்லை.

''ரிலாக்ஸ்டா நிஷான். நீ தான் ரெண்டு நாளில் வந்திடப் போறியே? எல்லாம் சரியாகிடும்! அனுக்கு ஒண்ணும் ஆகாது'' என அவனைத் தேற்றிய சரிதாவிற்கும் அவன் ரெண்டு நாளில் வரமுடியாமல் தவிக்கப் போவது தெரியவில்லை.

விமானத்திற்குள் ஏறியபிறகும், மின் உபகரணங் களை அணைத்து வைக்கும்படி விமானப்பணிப்பெண் நிஷாந்திடம் இருமுறை வலியுறுத்தும் வரை இரு வீட்டாருக்கும் மாறி மாறி முயன்று கொண்டிருந்தான் அவன். அவனது முயற்சி பலிக்காத நிலையில், கைப்பேசியை அணைத்துப்போட்டவனின் எண்ணங் கள் அனுஜாவிடம் சுற்றி சுற்றி வந்தன. என் மனதிற்கு இனியவள் உயிர்த்து வந்துவிட வேண்டும் என்ற பிரார்த் தனையை விடாமல் செய்தபடி, தன் பயணத்தை அவன் மேற்கொண்ட நேரத்தில் அனுஜாவை அறுவை சிகிச் சைக்காக அழைத்துச் சென்றிருந்தனர் மருத்துவர்கள்.



அறுவை சிகிச்சை அறைக்குள் நுழையும் வரை அரை மயக்கதிலிருந்த அனுஜா, தன்னை மேலும் மயக்கத்தில் ஆழ்த்துவதற்காக மருத்துவமனை ஊழியர்கள் தயார் செய்வதைப் பார்த்துவிட்டு ''இன்ன... இன்னொரு ஆபரேஷனா?'' என்றாள் ஈன சுவரத்தில்.

''சின்னதா... ஒரேயொரு ஆபரேஷன். போனது மாதிரியே தான். இதுவும் ரொம்ப ரொம்ப சின்னது'' என்ற மருத்துவர், தன் வாய் மற்றும் மூக்கை மூடும் விதமாக மாஸ்கைப் போட்டுக்கொள்ள, ''பாவா...'' என்ற அனு ஜாவின் அழைப்பு, மயக்க மருந்துடன் சேர்ந்து அவளது உணர்வுகளுக்குள் கரைந்தது.

நிஷாந்த் சுவிட்சர்லாந்த் சென்றிறங்குவதற்கும், அனுஜாவின் அறுவை சிகிச்சை முடிவடைந்து, தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு அவள் மாற்றப்படுவதற்கும் சரியாக இருந்தது. புர்னே நகரத்தில் தனக்கென ஒதுக்கப்பட்ட அறைக்குள் நுழைந்த சில நிமிடங்களில், அனுஜா அனுமதிக்கப்பட்டிருக்கும் மருத்துவமனைக்குத் தொடர்பு கொண்டு, அனுஜாவின் அறுவை சிகிச்சைப் பற்றி கேட்டறிந்தான் நிஷாந்த்.

''திருமதி.. அனுஜா நிஷாந்தா? அவங்க ஐ.சி.யூவிற்கு வந்து விட்டதா இப்போதான் தகவல் வந்தது'' என

வற்வேற்புப் பெண் ஆங்கிலத்தில் மிளற்ற, மனைவியிடம் சென்று விட மனம் துடித்தது. லாப்ரோஸ் கோபிக்கே அவளது உடம்பிலிருந்து சன்னமாய் ரத்தம் வழிந்திருந்ததே. இப்போது உடம்பைக் கிழித்துச் செய்யப்பட்டிருக்கும் இந்த சிகிச்சையினால் அவளது முத்து மேனியில் சில பல பவளக் கோடுகள் அழுத்தமாய் விழுந்திருக்குமோ என மனம் பதைத்துப் போனது.

மனம் பதைப்பை மறைக்க எந்த முயற்சியும் செய்யாமல் "இப்போ எப்படி இருக்காங்க? கண் முழிக்க எவ்வளவு நேரமாகும்? அவங்களோட பேசுறதுக்கு எனக்கு வாய்ப்பிருக்குமா?" எனக் கேள்விகளை அடுக்கினான்.

"இப்போ பேச முடியாதே சார்! அவங்க கண் விழித்ததும் லைன் கொடுக்க முயற்சி பண்றேன்" என்ற வரவேற்புப் பெண்ணிடம் வேறு விவரங்கள் சேகரிக்க முடியாமல், அழைப்பை வைத்தான் நிஷாந்த்.

அவள் சொன்ன ஐந்து மணி நேரத்தைக் கணக்கிட்டு, மீண்டும் மருத்துவமனைக்கு அழைத்தப்போது இந்தியாவில் நேரம் நடுநிசியைத் தாண்டியிருந்தது. தூக்கக் கலக்கத்தின் ஊடே எடுத்த இரவு நேர நர்ஸ் "மயக்கத்திலிருந்து அப்படியே தூங்கிட்டாங்க மிஸ்டர். நிஷாந்த். இப்போ எழுப்புறது அவ்வளவு உசிதமில்லை. அப்படியே எழுப்பினாலும் அவங்களால நடந்து வந்து உங்களோட பேசமுடியாது. ரெண்டு நாள் வரைக்கும் பெட்லே தான் இருப்பாங்க.. சோ வந்து பாருங்க. அப்படியில் லைன்னா அவங்களோட செல்போன்ல கூப்பிடுங்க" என்றார் கறாராய்.

மனம் வாடி வதங்கிவிட, நிஷாந்தால் உறங்கவே முடியவில்லை. கண் மூடிப் படுத்திருந்த அனுஜாவே



கண்ணுக்குள் வலம்வர, இந்தியாவில் இரவு என்பதையும் உணராமல் தன் வீட்டு எண்ணை அழுத்தினான். தொடர்ந்து அடித்த அழைப்பு மணியின் முடிவில் "ஹலோ...." என ஒரு குரல், தூக்கத்தில் தோய்த்து வெளிவர, "அம்மா, நிஷாந்த் பேசுறேன். ப்ளீஸ் அம்மா. போனை வச்சுடாதீங்க. அனுஜாவிற்கு உடம்பு சரியில்லை... ஹாஸ்பிடல்ல அட்மிட் பண்ணியிருக்கேன்" என வேகமாய் பேசினான் நிஷாந்த்.

"அதுக்கு என்ன இப்போ?" என்ற பத்மாவதியின் குரலில் ஒதுக்கம் இருந்தது. "ஒரு மேஜர் ஆபரேஷன் செய்திருக்கும்மா... அவளைப் பார்த்துக்க யாருமே இல்லை. அவ மட்டுமா ஹாஸ்பிடல்ல இருக்கா." என்றான் நிஷாந்த் தவிப்புடன்.

அதில் அந்த தாய் மனம் சற்றே இறங்கியபோதும், முழுதாய் உருகிவிடவில்லை. "நீ எங்க போனே?" என நறுக்குத் தெறித்தாற் போல் வந்த கேள்விக்குப் பதிலாய் தன் வேலை விஷயத்தைக் கூறியவன், "அம்மா, ப்ளீஸ்! எனக்காக அஜுவைப் போய் பார்த்துக்கோங்க...." என அவன் கெஞ்சினான்.

"நீ வெளிநாட்டுக்குப் போயிட்டே சரி... அவங்க வீட்டில யாராவது வந்து பார்க்க வேண்டியது தானே? என்னை வேண்டாம்ன்னு நினைக்கிற வீட்டிற்கு நான் எதுக்கு வரணும்?" என்றார் பத்மாவதி காட்டமாக.

"அம்மா நான் செஞ்சது தப்பு தாம்மா. தெரியாம செய்துட்டேன். தயவு செஞ்சு.. என்னை மன்னிச்சிடுங்க. அவளைப் போய் பார்த்துக்கோங்கம்மா" என்றான் நிஷாந்த், தன் தப்பிற்கு மன்னிப்பை வேண்டி.

"உனக்கொரு தேவைன்னதும் தான் எங்க ஞாபகம் வந்ததா? ஏன் அவங்க வீட்டில இந்த கெஞ்சலை

நடத்தி... அவங்களைக் கூப்பிட்டுப் பார்க்க வேண்டியது தானே? என்னால போக முடியாது'' என்ற பத்மாவதியிடம், ஐந்து நிமிடத்திற்கும் மேலாக விவாதித்த மகன், முடிவில் சோர்வுடன் அழைப்பை வைத்தான். அவனால், தாய்-தந்தையின் கோபத்தைச் சரி கட்ட முடியவில்லை. சொந்த பெற்றோரிடமே அவனது வாதங்கள் பலிக்கவில்லை எனும்போது, அனுஜாவின் வீட்டிற்கு அழைத்துப் பேச மிகுந்த தயக்கமாய் இருந்தது.

மறுநாள் காலையில் தங்கள் நிறுவனத்தின் முக்கிய வாடிக்கையாளரை நேரில் சந்திக்கப் போகும் பதட்டம் அவனை ஆட்கொள்ள, தயார் செய்து வைத்திருந்த பறையேற்றத் தொகுப்புகளைக் கவனத்துடன் எடுத்துக் கொண்டு அவர்களின் அலுவலகம் சென்றவன், அந்த சந்திப்பை வெற்றி கரமாய் முடித்ததன் அறிகுறியாக, மறுநாள் வாடிக்கையாளரின் வாடிக்கையாளர்களுடன் ஓர் சந்திப்பிற்கு அந்த நிறுவனமே ஏற்பாடு செய்திருந்தது. தங்களின் வாடிக்கையாளப் பெருந்தகைகளுக்கு, நிஷாந்தின் நிறுவனச் சேவை திருப்தியளிக்கும் பட்சத்தில், உடனடியாக ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதாக கூறினார் நிறுவன அதிகாரிகள்.

சொந்த வாழ்வில் அடித்துக் கொண்டிருக்கும் புயலுக்கு மாறாக பணித்துறையில் ஏற்பட்ட இந்த ஏறுமுகம், நிஷாந்தை சற்றே அமைதியுறச் செய்ய, அடுத்த நாளுக்குத் தேவையான கோப்புகளைத் தயார் செய்யத் துவங்கினான்.

அதே நேரத்தில், இரண்டு அறுவை சிகிச்சைகளின் விளைவாக ஐம்பது மணி நேரத்திற்கும் மேலாக மயக்கத்திலும், தூக்கத்திலும் இருந்த அனுஜா, மெல்ல கண் விழித்தாள்.



முழுதாய் திறக்காத போதும், மொட்டவிழ்வது போல மெல்ல மெல்ல படபடத்த இமைகள், தன் மனதிற்கு இனியவனைத் தேடி அலைந்தன. அவளது பார்வை வட்டத்தில் ஆள் நடமாட்டமென ஒரேயொரு செவிலிப் பெண்மணி மட்டுமிருக்க, அந்த அவசரச் சிகிச்சைப் பிரிவில் வேறு யாருமே இருக்கவில்லை என்பது ஐந்து நிமிடங்களுக்குப் பிறகே அவளுக்கு உரைத்தது.

வெளியே காத்திருக்கிறானோ என்ற எண்ணத்தில், ''நர்ஸ்'' என்றழைத்த அனுஜாவின் குரல் அவளுக்கே கேட்கவில்லை எனும்போது இருபதடி தூரத்திலிருந்த அப்பெண்மணிக்கு எங்கே கேட்டிருக்கும்? அவரிடம் அசைவே இல்லாமல் போகவும், கையை அசைத்து அவரின் கவனத்தைத் தன் புறம் திருப்ப எண்ணிய அனுஜா, தன் வலக்கரத்தைத் தூக்கமுயன்றபோது தான், அங்கே ரத்தமும், ட்ரிப்ஸும் ஒருங்கே ஏறிக் கொண்டிருப்பது அவளுக்குப் புரிந்தது.

''சின்ன ஆபரேஷன்...ஒரேயொரு துளை.... அடுத்த நாளே வீட்டிற்குச் சென்றுவிடலாம்... என்று தானே கூறினார்கள். இப்போது என்னவென்றால், ரத்தம் ஏறுகிறதே? ரத்தம் ஏறும் அளவிற்கு அவளுக்கு என்ன வாகிற்று? ஆகா, வயிற்றில் கூட ஏதோ கனமாக இருக்கிறது. பாண்டேஜ் மாதிரி கட்டியிருக்கிறார்களே.. இன்னும் சில இடங்களில் கூட பிளாஸ்டர் போட்டிருக்கிறார்கள்...என்ன விஷயம்?''

''நான் இங்கே வந்து நிஜமாகவே ஒரே நாள் தான் ஆகிறதா? அதற்குள்ளாக தனக்கு என்ன நடந்தது?''

''எல்லாம் இருக்கட்டும்... நிஷாந்த் எங்கே? ஒரு வேளை அலுவலகம் சென்றுவிட்டானா? இல்லையே,

இந்த ஆபரேஷன் முடிந்து தன்னை வீட்டில் விட்டு விட்டு அல்லவா அவன் ஐரோப் செல்கிறேன் என்றான். தன்னை இப்படியொரு நிலையில்... மருத்துவமனையில் விட்டுவிட்டு அவன் எங்கேயும் செல்ல மாட்டானே... அதிலும், "பாவா உனக்காக காத்திருப்பேன்" எனக் கையைப் பிடித்துக் கொண்டு அவன் சொன்னது எப்படி பொய்யாகும்? கண்டிப்பாக ஆகாது?!" என மனதிற்குள் ஆயிரமாயிரம் கேள்விகள் தேனீக்கள் எனப் பறந்தாட, அனுஜா மீண்டும் செவிலிப்பெண்ணின் பக்கம் முகத்தைத் திருப்பியபோது, அவரது கவனமும் அனுஜாவின் மீது திரும்பியிருந்தது.

மின்னல் வேகத்தில் அவளை நெருங்கியவர், அவளது கலங்கிய முகத்தைப் பார்த்துவிட்டு "ஒண்ணுமில் லைம்மா. நாளைக்குக் காலையில ரூம்க்குப் போய்டலாம். பயப்படாதே!" என்றார் ஆதரவாக.

அவரின் சமாதானத்திற்கு உட்படாமல் "பாவா" என்றாள் அனுஜா மெதுவாக. கண்கள் அறையைச் சுற்றி வலம் வந்தது. "பாவா-வா? யார் அது? ஹோ உன் வீட்டுக்காரரா? ஏதோ வேலை விஷயமா வெளிநாடு போயிருக்கார். நாளைக்கு ராத்திரிக்குள்ள வந்துடுவார்" என விவரம் கூறினார் அப்பெண்மணி.

அவரது பதிலில் அனுஜாவின் உடலும், மனமும் ஒருங்கே தூக்கிப்போட்டது. "என்னை விட்டுச் சென்று விட்டானா?" என்ற கேள்வியிலேயே மனம் உறைந்து விட, கண்கள் நான்கு பக்கச் சுவரையும் ஆராய்ந்தன. அங்கே அவள் தேடியது கிடைக்காமல் போக "இன் னைக்குத் தேதி என்ன?" என்றாள் பிசிர் தட்டிய குரலில்.

"மே இருபது" என்ற அவரது பதிலில் பல விஷ யங்கள் விளங்கிய போதும், தனக்கு என்ன நடந்தது என்ற கேள்விக்கு அவளுக்கு விடை கிடைக்கவில்லை.



அதை அறிந்து கொள்ளும் பொருட்டு "எனக்கு என்ன? லாப்ரோஸ்கோப்பின்னு தானே சொன்னாங்க.. அதுக்கு ரத்தம் ஏத்துவாங்களா?" என மிகப் பரிதாபமாய் அவள் வினவ, இரு குழந்தைகளுக்குத் தாயான அப் பெண்மணிக்கும் மனம் கனிந்தது. கண்களில் பயத் துடன் கேள்வி கேட்கும் அவளிடம் உண்மை சொல்ல மனம் சுணங்கியபோதும், உண்மை தெரியாவிட்டால் அவளது மனதுடன் சேர்ந்து உடலும் தேறாது என்பதை உணர்ந்தவர் போல்

"லாப்ரோஸ்கோப்பி முடிஞ்சு... அதோட ரிசல்ட்ஸ் பார்த்திட்டு... இந்த ஆபரேஷன் பண்ணியிருக்காங்க. உடனே பயந்துடாதே! இந்த ஆபரேஷன் முடிஞ்சது.. நீ வீட்டுக்குப் போன அடுத்த வருஷம்... உன் கையில ரெண்டு பாப்பா வரப் போகுது பாரு" என்றார் சிரிப்பும், சமாதானமும்.

"எதுக்கு இந்த ஆபரேஷன்? எனக்கு என்ன பிரச்சனை?" என அவரைத் துளைத்தெடுத்த அனுஜா, முழு விவரமும் சேகரித்தாள். அதன் விளைவாக, மனம் திடுக்குற்று, தனக்குப் பெரிதாய் ஏதோ நிகழ்ந்துவிட்டது போல் பதைத் துப் போனது. கூடவே கணவன் அருகில் இல்லாதது கண்ட கண்ட கற்பனைகளையும் தூண்ட, கண்களை இறுக மூடி யோசிக்க ஆரம்பித்தாள்.

பதினைந்து வயது தொடங்கியது முதலோ, அல்லது சிறு வயது தொட்டோ, எதிராளியாக இருந்தாலும் அவரின் பக்கமிருக்கும் நியாயத்தை தானே ஊகித்து, அவருக்காக வாதாடும் அனுஜாவின் வெள்ளை மனம்- இப்போதும் கணவனின் பக்கமிருக்கும் நியாயத்தைக் காண முயன்றது.

அவனது காதல், அன்பு, அக்கறை, கண்டிப்பு என்பதில் தொடங்கி அணைப்பு, முத்தம், ஆக்கிரமிப்பு ஆகியவற்றில் பயணித்து, ''குழந்தை வேண்டாம்'' என்ற அவனது வாதத்தில் வாடி, முடிவில் தன்னிடம் அவன் பேசிய கடுமையான தருணங்களில் வந்து நின்றது.

என்ன தான் அவனது கடுமையான பேச்சிற்கு- 'குழந்தை குழந்தை' என்று ஏங்கி, கணவனைத் தவிக்க விட்டதுடன் சேர்ந்து, தானும் வருந்துவது காரணமாய் பட்டபோதும், அவனது தாயார் மனதில் இடம் பிடிப்பதற்காக தானே அனுஜா இந்த குழந்தை ஆசைக்கு வித்திட்டாள்? அப்படியிருக்கையில் அவன் எப்படி கோபம் கொள்ளலாம்?

ஆனால், பெற்றோருடன் இணைவதற்காக என்று விதைக்கப்பட்ட சிறு தண்டு, இப்போது விருட்சமாய் வளர்ந்து அவளை அரிப்பதை உணரவும் தவறவில்லை அவள். மனைவியின் சந்தோஷத்தை முக்கியமென நினைப்பவனால் அவளது ஆசையை எப்படி நிராகரிக்க முடியும்?

ஹ்ம்ம். அவன் சொல்வது போல் குழந்தைக்காக என்று மட்டுமாய் அவர்கள் வரக்கூடாது, தங்களுக்காக (அதாவது அவர்களின் பிள்ளைகளுக்காக) வரவேண்டும் என்றால் இத்தனை காலம் வந்திருக்க மாட்டார்களா? அப்படியில்லை என்று தானே குழந்தையை பாலமாக்க முயல்கிறாள்? அவனுக்காக, அவனது உடல்நிலைக்காக, அவனது குடும்பத்தில் இணைவதற்காக என்று தன்னையே அவள் மாற்றிக்கொள்ளும் போது அவனது கோபம் அனுஜாவிற்கு வருத்தத்தையே அளித்தது.



மனைவியின் குழந்தை ஜெபத்தால் எரிச்சலுற்றவன் எதற்காக மருத்துவமனை அழைத்து வரவேண்டும்? அழைத்து வந்தது தான் வந்தான்.. அறுவை சிகிச்சை முடியும் வரை இருந்திருக்கலாமே? ஒரு வேளை.. ஒருவேளை... தனக்கிருக்கும் இப்பிரச்சனை தெரிந்து.. இவளுக்குக் குழந்தையே பிறக்காது என்ற முடிவிற்கு வந்துவிட்டானோ? அந்த முடிவிற்கு வந்ததால் தான் தன்னைப் பிரிந்து சென்றுவிட்டானோ? சை...சை கண்டிப்பாக இருக்காது!! என் நிஷாந்த் அப்படியெல்லாம் கிடையாது?! குழந்தை விஷயத்தில் தான் காட்டிய தீவிரத்தில் லேசாக எரிச்சலடைந்தாலும், என்னையே தூக்கியெறிய மாட்டார்; அதுவும் தன் பெற்றோரை துறந்து, நான் தான் வேண்டும் என்ற முடிவில் என்னை மணந்தவரால் அப்படி நினைக்கவே முடியாது? ஆனால், அந்த அன்பு மனதிலிருக்கும் பட்சத்தில், என்னை வார்த்தைகளால் அடிக்கும் மனம் அவருக்கு எப்படி வந்தது? வார்த்தைகளால் மட்டுமின்றி கைகளாலும் அடிப்பேன் என்றாரே? ம்ஹூம்... எதுவாக இருந்தாலும் என் நிஷு அப்படி இல்லை!- என இரு வேறு கூறாக மனம் கிடந்து அல்லாடியது.

கணவனின் புறம் இருக்கும் நியாயங்களையும், தப்புகளையும் சம பங்காய் அவள் பிரித்து வாதாடியபோதும், தன் குடும்பத்தைப் பற்றி பேசும் போது அவனிடம் காணப்பட்ட ஒதுக்கத்தையும், அவர்களைக் காணச் செல்லக் கூடாது என அவன் தடுத்ததற்கும் அவனை நியாயப்படுத்த முடியவில்லை. அவர்களின் வார்த்தைகளால் தான் காயப்படுவோம் என்ற எண்ணத்தால் என்றால் அவனது தாயாரும் திட்டத் தானே செய்தார்? அவனின் பெற்றோருக்கு ஒரு நியாயம்? என்

பெற்றோருக்கு ஒன்றா? என மனம் தாங்காமல் கேள்விகள் பிறந்து கொண்டே செல்ல, மனதின் சோர்வு உடலுக்குள் புகுந்தது.

சோர்வுடன் சேர்ந்து, ரத்தத்துடன் சேர்த்து ஏற்றப்பட்ட மருந்துகளில் தூக்கத்திற்கான மருந்து கலந்திருக்க, தன்னை மறந்த நிலையில் அனுஜா கண்ணயர்ந்தாள். ஐந்து மணி நேரத் தொடர் உறக்கத்தின் பின்னர், அவளது தூக்கம் மெலிதாய் கலைந்தபோது, கணவன் மேல் அவள் சாற்றிய குற்றங்கள் காணாமல் போய் ''அஜு'' என்ற அவனது அழைப்பிற்கும், தன் நெற்றியில் ஒற்றியெடுக்கும் அவனது அன்பு முத்தத்திற்கும் மனம் தவியாய் தவித்தது.

அந்த தவிப்பை சிறிதேனும் குறைக்கும் எண்ணத்தில் ''நர்ஸ்'' என மெல்ல அழைத்தவள், ''என்னோட செல்போன் தரீங்களா?'' என்றாள் மெல்லிய குரலில்.

''இல்ல மா. இது ஐ.சி.யூ. இங்க போன் பேசக் கூடாது. நாளைக்கு ரூம்க்குப் போனதும் பேசிக்கோ'' என முடித்த அப்பெண்மணி, வலக்கையிலிருந்த ட்ரிப்சை இடக்கைக்கு மாற்றுவதற்காக, அவளது உள்ளங்கையைத் திருப்பி, நரம்பைத் தேடினார்.

அவரது அந்த செய்கையில் அதிர்ந்து ''ம்ஹூம். என்ன செய்றீங்க? எனக்கு ட்ரிப்ஸ் வேணாம். ஊசி குத்தாதீங்க. வலிக்குமே!!'' என மிரண்டாள் அனுஜா. ''என்னம்மா இது சின்னப் பிள்ளை மாதிரி? எறும்பு கடிக்கிற மாதிரி.... சுருக்குன்னு ஒரேயொரு வலி தான்'' என அவரது வார்த்தைகளில் சமாதானம் அடையாமல், இரு தினங்கள் முன்னர் இதே போல் நரம்பில் ஊசி போடுவதற்குத் தான் பயந்ததும், அதற்கு நிஷாந்த் செய்த சமாதானத்



துடன் கூடிய முத்தமும், ''ஹய்யோ, நர்ஸ் முன்னாடி என்ன செய்றீங்க? அவங்க என்ன நினைப்பாங்க'' என அவள் தவித்ததும், ''யார் என்ன நினைச்சாலும் எனக்கு ஒண்ணுமில்லை. அஜு பயப்பட்டா எனக்குத் தாங்கலையே!'' என அவள் கன்னத்தை நிமிண்டியதும் நெஞ்சில் ஆடி அவளைத் தவிக்க வைத்தது.

''பாவா.. சீக்கிரம் வந்துடுங்க'' என அவளது பிரார்த்தனை கடவுளுக்கு எட்டாமல் போய், நிஷாந்தின் இந்தியப் பயணம் எரிமலைக் குழம்புகளின் வீழ்ச்சியால் ரத்து செய்யப்பட்டது. அங்கே அவன் துடிக்க, இங்கே இவள் துவண்டு போனாள்.

தான் வரத் தாமதமாகும் என்ற விஷயத்தை மருத்துவமனை நிர்வாகத்திற்குச் சொல்லியிருந்த நிஷாந்த், அனுஜாவிற்கென்று ஏற்பாடு செய்திருந்த சிறப்பு செவிலிப்பெண்மணியைத் தொடர்ந்து கவனித்துக்கொள்ளும் படி கேட்டுக் கொண்டான். அதன் பின்னர், மனைவியின் கைப்பேசிக்கு அழைத்தவன், அது எடுக்கப்பட்டதும் ''அஜு கண்ணா, எப்படிடா இருக்கே? மயக்கம் தெளிஞ்சிடுச்சா? இங்க எந்த ஃப்ளைட்டுமே ஓடலைடா.. ஏதோ வல்கனோ அட்டாக்காம். நான் வந்துடறேன்...குட்டி பேசும்மா. பாவா மேல கோபமா இருக்கியா? சாரிடா அஜு! ப்ளீஸ் அஜு! ப்ளீஸ்'' எனத் தன் பயணம் தாமதமாவதை அவன் எடுத்துரைக்க,

''எப்போ வருவீங்க?'' என்ற ஒற்றை கேள்வி கேட்பதற்குள் அனுஜாவின் உதடுகள் அழுகையில் பிதுங்கின.

''அழாதே அஜுமா. தையல் போட்டிருக்குடா.. அழுதா பிரிஞ்சிடும். ப்ளீஸ், சொல்றதை கேளுடா. அழாதே'' என அவன் தவிக்க,

''எப்போ வருவீங்க?'' என அதே கேள்வியை மீண்டும் கேட்டாள் மனையாள்.

''சீக்கிரமே'' என அவன் முடிப்பதற்குள், ''நாளைக்கு வந்துடுவீங்களா?'' என்றாள் அவள். ''நாளைக்கு முடியுமா தெரியலையே! கூடிய சீக்கிரம் வரப் பார்க்கிறேன்'' என்றான் அவன்.

''எப்போ-ன்னு சொல்லுங்க'' என அதிலேயே நின்ற அனுஜாவை சமாதானம் செய்யும் வழி தெரியாமல், ''அஜு, இங்க நிலைமை ரொம்ப மோசமா இருக்கு. என்னால எதையுமே நாள் குறிச்ச மாதிரி சொல்ல முடியாதுடா. ரெண்டு மூணு நாளில் சரியாகிடும்ன்னு நிறைய பேர் சொல்றாங்க. சில பேர் ஒரு வாரம் ஆகலாம்ன்னு சொல்றாங்க'' எனத் தன் உண்மை நிலையை விளக்கினான்.

''அப்போ... அப்போ.... வரமாட்டீங்களா? எனக்கு இங்க...தனியா.... யாருமே இல்லாம... அனா... அனாதை மாதிரி.. செத்துடலாம் போல'' என்ற வாக்கியத்தில் அனுஜாவின் அழுகை பெரிதாக வெடிக்க, ''அந்த வார்த்தை சொல்லாதேடி!'' என அலறினான் நிஷாந்த்.

## 15

அனுஜாவின் தனிமை காயம், நிஷாந்தை மரணக் காயமுறச் செய்ததன் விளைவாக, நடந்ததை எண்ணியெண்ணி வருந்துவதைவிட, இப்போதிருக்கும் பிரச்சனைக்கு எப்படியாவது தீர்வு கண்டே ஆக வேண்டும்



என உறுதியான முடிவிற்கு வந்து, இரு பக்கத்தாருக்கும் அழைப்பு மேல் அழைப்பு விடுத்தான்.

விடாமல் அடித்த அழைப்பின் முடிவில், தொலைப் பேசியை எடுத்த நிஷாந்தின் தந்தை,

''என்ன நிஷாந்த்? உன் நம்பரைப் பார்த்திட்டு உன் அம்மா போனை எடுக்கக் கூடாதுன்னு ஒரே ஆட்டம். நீ என்னடாவென்றால் அடிச்சிட்டே இருக்கியே? உங்க ரெண்டு பேருக்கும் நடுவில் என்னை அல்லாட விடுறீங்க!'' என்றார் எரிச்சலுடன்.

''டாடி, ப்ளீஸ் நீங்களாவது நான் சொல்றதை காது கொடுத்து கேளுங்க. அஞ்சே அஞ்சு நிமிஷம்'' என்றவன், ''அப்பா, நான் செஞ்சது ரொம்ப பெரிய தப்பு தான். ஆனா, அதை செய்யும் போது அது தப்புன்னே நான் உணரலை.... ஆமா... என்னைக் கேட்காம கல்யாணத்திற்கு ஏற்பாடு பண்ணின உங்களை எதிர்த்துகிட்டு அனுஜாவைக் கல்யாணம் செய்துகிட்டா என்னன்னு தான் தோணுச்சு. அந்த கோபத்தில, திமிர்ல நான் செஞ்ச தப்பிற்கு.... ரொம்ப பெரிய தண்டனையா நீங்களும் அம்மாவும் என்னை ரெண்டு வருஷமா ஒதுக்கி வச்சுட்டீங்க. அதுக்கு மேலா.. பெருசா ஒரு அடி வாங்கிட்டேன்பா'' என்றான் உண்மையான வருத்தத்துடன்.

மகனின் குரலிலிருந்த வருத்தமும், சோர்வும் பெற்றவரை அசைக்க, அவரையும் அறியாமல் ''என்னாச்சு கண்ணா? உன்.. வைஃபிற்கு...ஹ்ம்ம் அனுஜாவிற்கு உடம்பு முடியலைன்னு அம்மா சொன்னா. என்ன விஷயம்?'' என்றார் கரிசனமாக.

அந்த குரலில் மேலும் துன்புற்ற நிஷாந்த், 'ஆண்மகன்' என்ற தனது நிலையையும் மீறி சட்டென உடைந்து

அழுதான். "ஹே நிஷான்! என்ன ராஜா? ஆண்பிள்ளை அழலாமா? கண்ணைத் துடை. என்ன விஷயம் சொல்லு?" என அவனது அழுகையில் தந்தையின் மனம் கரைந்து போனது. விவரம் தெரிந்தது முதல், அழுகை கோழை களின் ஆயுதம் என வாதிட்ட மகன் அழுததும் தந்தை யின் மனம் உருகிப் போனதில் ஆச்சரியமேது?

பாசத்துடன் வந்த அவரது தூண்டுதல் போதுமான தாய் இருக்க, அனுஜாவின் தனந்தனி மருத்துவமனை வாசத்தைப் பற்றி ஒரே மூச்சில் சொல்லிமுடித்தவன்,

"அஜு.. எதுக்காக குழந்தை, குழந்தைன்னு தவிக்கிறா தெரியுமா? ஒரு குழந்தை பிறந்துட்டா.. நீங்களும் அம்மாவும் எங்களை அங்கீகரிப்பீங்க என்பதால் தான். குழந்தை பிறக்கிறதில தாமதமாக ஆக, எங்க உங் களுடன் சேரவே முடியாதோ என்ற பயம் அவளை ரொம் பவே பாதிச்சிடுச்சு. அந்த பாதிப்பில அவ பேச, அவ ளையே வருத்திக்கிறாளே என்ற கோபத்தில் நான் பேச...ப்ச் நிறைய மனஸ்தாபம். எல்லாத்துக்கும் மேலா, அவ துவண்டு வதங்கிப் போகும் போது அவளைத் தேற்ற தெரி யாமல் நானும் அதிகமா பேசிட்டேன்... பெரியவங்கன்னு வீட்டில இருந்திருந்தா ரெண்டு பேரையுமே தேற்றி வெளிய கொண்டு வந்திருப்பீங்க. உங்களை வருத்தப் பட வச்சுட்டு வந்ததற்கு ரொம்பவே பட்டுடோம்பா. பெரியவங்களோட ஆசீர்வாதமும், துணையும் எவ்வளவு முக்கியம்ன்னு எனக்கு இந்த நிமிஷம் புரியுது...ஆனா, என்ன செய்றது காரியம் கை மீறிப் போயிட்டுதே?!" என அவன் நீளமாய் பேசவும், அந்த தந்தைக்கு மகனின் சுய அலசலும், அதன் காரணமாய் அவன் படும் வேத னையும் நெஞ்சை அசைத்தது.

நிஷாந்தின் காதல் கல்யாணத்தை விட சரிதாவின் மனம் புண்பட்டு விட்டதே என்ற எண்ணத்தில் தான்



நிஷாந்தின் மீது கடுங்கோபத்தில் இருந்தார் தரணிதரன். ஆனால், அந்த எண்ணத்தைத் தகர்த்தெறிய, ஆனந்தும் சரிதாவும் ஒருவர் மேல் ஒருவர் கொண்டிருந்த காதல் அமைந்தது என்றால்,

"அங்கிள், என் மனசை நிஷாந்த் புண்படுத்திட் டான்னு தானே அவனிடம் பேசாமல் இருக்கிறீங்க? உங்க எண்ணத்தில தான் நானும் இருந்தேன்...ஆனா, ஆனந்த் அவனோட காதலை சொன்னபோது நிஷாந்த் அனுஜா மேலிருக்க தன்னோட காதலை சொல்லி, உனக் கும் அவனுக்குமான கல்யாணத்தை நிறுத்திவிட்டான். அப்படி இல்லாம உங்க கல்யாணம் நிச்சயிக்கப் பட் டிருந்தா, உன்கிட்ட என் காதலை சொல்லி.. நிச்சயிக்கப் பட்டிருக்கும் கல்யாணத்தை நிறுத்தி...ன்னு சொன்னான். அப்படியெதுவும் நடந்திருந்தா, நிஷாந்த் மேல நீங்க காட்டுற கோபத்தை என் மேலையும், ஆனந்த் மேலை யும் காட்டியிருப்பீங்களா அங்கிள்? நிஷாந்தை கேட்காம கல்யாணத்திற்கு ஏற்பாடு பண்ணினது நாம... அது தப்பு தானே? நம்ம தப்பை உணராம, அவனோட தப்பை மட் டுமே பேசிட்டே இருக்கிறதில என்ன தப்பு சொல்லுங்க?" என சரிதா சில மாதங்களாக வாதிட்டது, இப்போது இன் னும் வேகத்துடன் அவரைத் தாக்கியது.

அவளது பேச்சை தரணிதரனை லேசாய் அசைத்து வைத்திருந்த போதும், நிஷாந்த் அவர்களை சமாதானப் படுத்தும் முயற்சியில் சிறிதும் ஈடுபடவில்லை என் பதை அவரிடம் ஓர் ஒதுக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. இப்போதோ நிஷாந்தின் ரணப்பட்ட மனதிலிருந்து வெளியான மன்னிப்பு அவரது ஒதுக்கத்தை தகர்த்தது.

''அனுஜா வீட்டிலிருந்து யாரும் வரலையா நிஷான்?'' என அவர் கேட்க, ''என்னன்னு தெரியலைப்பா... அவங்க வீட்டு போன் உபயோகத்தில் இல்லைன்னு வருது. அவளோட அண்ணனோட போனிற்குப் போட்டா - நாட் ரீச்சபில்ன்னு வருது. அவங்க ஊர் பக்கம் - அடிக்கடி மழை, ஊதல் காற்று, நிலச்சரிவு, கரண்ட் கட், போன் லைன்-ல பிரச்சனைன்னு நிறைய இருக்கும்ன்னு அஜு சொல்லுவா. அதனால போல... எல்லாமுமா சேர்ந்து ரொம்பவே சோதிக்குதுப்பா'' என்றான் மகன் சோர்வுடன்.

''அப்போ.. அவளுக்கு யார் துணையிருக்கா?'' என்ற போது தரணிதரனின் குரல், குற்ற உணர்வில் தவித்ததோ?

ஆனால், அதை உணராத நிஷாந்தோ ''முழுநேரத்திற்கும்.. அவ கூடவே இருக்கிற மாதிரி ஒரு நர்ஸ் ஏற்பாடு செய்திருக்கேன். ஆபீஸ்ல கூட வேலை பார்க்கிற சில பேர் காலையிலும், ஆபீஸ் முடிஞ்சும் வந்து பாக்கிறாங்க. எங்களுக்கு.. அங்க சென்னைல.. அவ்வளவு பழக்கமும் இல்லை. அதோட சேர்த்து, வரவங்களும் அஜுவோடவே நிரந்தரமா இருக்க முடியாதில்லையா? சோ ரொம்ப லோன்லியா ஃபீல் பண்றா.. ரொம்ப கஷ்டமா இருக்குப்பா'' என்றான் நிஷாந்த், விளக்கமும், வருத்தமுமாக.

''இன்னும் எத்தனை நாள் ஹாஸ்பிடல்-ல இருக்கணும்? நீ எப்போ வரே?'' என தரணிதரன் மேலும் விவரம் அறிய முயல, ''ஆபரேஷன் செய்து ஐந்து நாள் ஆகிடுச்சு. ஒரு வாரத்தில் (ஏழாம் நாள்) டிஸ்சார்ஜ் செய்துடுலாம்ன்னு டாக்டர் சொன்னாங்க. நான் அதுக்குள்ளே வந்துட்டா... டிஸ்சார்ஜ் செய்து வீட்டுக்குக் கூட்டிப் போகணும்.



அப்படியில்லைன்னா... இன்னும் ரெண்டு மூணு நாள் அவளை ஹாஸ்பிடலேயே இருக்கச் சொல்ல வேண்டியது தான். நீங்க போக முடியுமா பா..?'' என முழு விவரமும் கூறிய நிஷாந்தின் குரல், யாசித்தது.

''பார்க்கிறேன் கண்ணா. அம்மாவை சமாதானப் படுத்தி அழைச்சிட்டுப் போக முயற்சி பண்றேன். அப்படியில்லைன்னா.. நான் மட்டுமாவது போறேன்'' என்ற தரணிதரனின் வாக்குறுதியில்- உறுதி ஐம்பது சதவீதமே இருந்தபோதும், நிஷாந்திற்குப் பெரும் நிம்மதியை உண்டு பண்ணியது. பல வருடப் போராட்டத்திற்குப் பின்னர், அன்பு தொனித்த ஓர் உரையாடல் அல்லவா? அதுவும், தன் அஜுவின் மேல் பிரியம் வைத்து, சென்னை செல்கிறேன் என அவர் சொன்னதே அவனை மகிழ்வித்தது-அவர் போகாத போதும்!!

''தேங்க்ஸ்பா. ரொம்ப தேங்க்ஸ் டாடி'' என உளமார நன்றி கூறியவன், ''அம்மா.. அம்மாகிட்ட தரீங்களாப்பா'' என்றான் தயக்கத்துடன். ''ஹ்ம்ம். இல்லை நிஷான்.. முதல்ல நான் பேசி அவளை சரி பண்றேன். அப்புறம் நீ பேசலாம். அம்மாக்கும் உன் மேல பாசம் தான் கண்ணா... ஜஸ்ட் தட் அவ அதை கோபமா வெளியிட்டு விடுகிறாள். அனுஜாவோட நிலையை எடுத்துச் சொன்னா, கண்டிப்பா அசைந்து கொடுப்பா. எனக்கு நம்பிக்கையிருக்கு'' என்ற தரணிதரன், மகனுக்குத் தான் கொடுத்த உறுதியை நிறைவேற்றுவதில் முனைந்தார்.

பெற்றோரிடமிருந்து கிழிந்த கோடி என்றாலும்... பசையில் கோடி ஆடிவிட்ட நிம்மதியில் அனுஜாவிற்கு முயன்றால், அவனது சரி பாதியானவள் கைப்பேசியை அணைத்து வைத்து சதி செய்தாள்.

அவளது சதியின் பின்னணி தகவல் இதோ-

ஐ.சி.யூவில் ஓர் நாள், சாதாரண அறையில் ஓர் நாள் - என இரண்டு நாட்களின் அனைத்துப் பொழுதுகளையும் படுக்கையிலேயே கழிக்க வேண்டிய நிலையிலிருந்தாள் அனுஜா- இயற்கை உபாதைகள் உட்பட!

அப்படியிருக்கையில் துணைக்கென்று யாருமில்லாதது மனதை கூறு கூறாய் அறுத்தது. தலையைத் தடவிக் கொடுக்க தந்தையையும், அவளைப் பூ போல் பார்த்துக் கொள்ள தாயையும், அவளது உடல்நிலை பார்த்து பத்தியமாய் சமைத்துக் கொடுக்க சொந்தங்களையும், ஆறுதலாய் பேச அண்ணனையும் தேடிய மனம், காதல் திருமணம் என்ற பெயரில் அவர்களைப் பிரிந்து தான் வந்தது தப்பென்று அடித்துக்கொண்டு கதறியது.

பிறந்த இடத்தின் ஆதரவுமில்லாத இந்த நேரத்தில் கொண்டவன் துணையுமில்லாமல் அல்லவா போய் விட்டது? இந்த எண்ணம் மனதில் எழுந்த வினாடி, நிஷாந்தின் அழைப்பை அனுஜாவின் கைப்பேசி தாங்கி வர, இருந்த ஏக்கத்தின் முடிவாக அவனது அழைப்பை அனுஜா எடுக்கவில்லை!

அந்த நிமிடம் அனுஜாவிற்கு நிஷாந்தின் வராமை மட்டும் தான் கண்ணில் பட்டது - அவனது காதலோ, அக்கறையோ, அணைப்போ ஏன் அவனது தப்புகள் என அனுஜா எண்ணியிருந்த எதுவுமே மனதிற்குள் நிற்கவில்லை. மாறாக, தன் காயம் பட்ட உடலையும் மனதையும் ஆற்ற அவன் இங்கில்லை என்பது தான் பெரிய விஷயமாக, பூதாகரமாக இருந்தது! தனக்கு அறுவை சிகிச்சை நடந்த நாளில் அவன் உடனில்லாது போனதை, பணி நிமித்தம் என சமாதானப்படுத்திக் கொள்ள



முடிந்தபோதும், பணி முடிந்த பின்னரும் அவன் வரவில்லை என்பது தான் அவளது ஒரே கவலையாக- ஏன் கோபமாக கூட இருந்தது!

அவளால் இயற்கையின் சீற்றத்தை ஓர் காரணமாய் ஏற்றுக் கொள்ள முடியவில்லை; அதெப்படி எல்லா விமானங்களுமே வேலை நிறுத்தம் செய்வார்கள்? வர வேண்டும் என்றால் வரலாம்?! என்ற எண்ணம் அவளை அலைக்கழித்தது. அந்த எண்ணத்திற்கு யாரை குற்றவாளியாக்குவது?-உலக விஷயங்களைப் படம் பிடித்துக் காட்டும் தொலைக்காட்சியோ, செய்தித்தாள்களையோ அவள் பார்க்காதது குற்றமா? இல்லை, கணவனின் மீது கண்மூடித் தனமாய் அவள் கொண்டிருந்த காதல் தான் குற்றமா? இல்லை, தன்னைத்தானே வருத்திக்கொள்ளும் கலையில் அவள் முதுகலை பட்டம் பெற்றிருந்தது தான் குற்றமா?

எதுவாக இருப்பினும், அனுஜாவின் நடவடிக்கைகள் நிஷாந்திற்கு எதிராக திரும்பியிருந்தது-அவளுக்கே எதிராக என்பதை அவள் உணர்ந்தாளில்லை! அந்த நடவடிக்கைகளின் உச்சக்கட்டமாக, ஓர் முட்டாள் தனமான முடிவையும் எடுத்துவைத்திருந்தாள், நிஷாந்தின் காதல் பைங்கிளி!

அதன் தொடர்ச்சியாக, இன்னும் ரெண்டு நாள் (அடுத்த நாள் மாலை) கழித்துத்தான் வீட்டிற்குச் செல்லலாம் என்ற மருத்துவரின் கூற்றை பலம் கொண்ட மட்டும் மறுத்தவள், இன்றே செல்ல வேண்டுமென்றாள்.

"உன் நல்லதுக்காக தான்மா சொல்றோம். கூட இருந்து பார்க்கன்னு யாருமே இல்லாம.. வீட்டுக்குப் போய்

என்ன செய்யப்போறே?'' என மருத்துவர் அதட்டிய போது, பிடிவாதம் அழுகையாய் மாறியது. விஷயம் நிஷாந்திற்குச் செல்ல, மருத்துவமனை அறையிலிருந்த தொலைப்பேசிக்கு அழைத்து ''அஜு, என்னடா? ஏன் இப்படி பிடிவாதம் பிடிக்கிறே? நான் வரவரைக்கும் பொறுக்கக் கூடாதா? நாளைக்கு நைட் எப்படியும் வந்துடறேன் கண்ணம்மா. அதுக்கு முன்னாடி.... அம்மா - அப்பாவும் ... அப்பா அட்லீஸ்ட் வந்திடுவாங்க... சொல்றதைக் கேளும்மா'' எனக் கெஞ்சினான்.. கணவன்.

நிஷாந்த் வந்துவிட்டால், அவள் போட்டு வைத்திருக்கும் திட்டத்திற்கு இடையூறாகிவிடுமே என்ற பதிப்பில் ''ம்ஹூம். நான் போகணும். வீட்டுக்குப் போகணும். இங்க பிடிக்கலை'' என்றவள், தொடர்ந்து வந்த அவனது சமாதானங்கள் யாவற்றையும், இதே வார்த்தைகளால் மழுங்கடித்தாள்.

முடிவில், நிஷாந்த் ''ஏன் அஜு? நான் சொல்றதைக் கேட்கவே கூடாதுன்னு ஏதாவது முடிவில இருக்கியா? நான் வரவரைக்கும் வெயிட் பண்றதில் என்ன கஷ்டம் உனக்கு?'' எனக் குரலை உயர்த்தியபோதும் ''எனக்கு வீட்டுக்குப் போகணும்'' என மீண்டும் தன் பிடியிலேயே நின்றவளின் மேல் மெலிதாய் கோபம் முளைத்தது. அவளது உடல்நிலையை மனதில் வைத்து, கோபத்தைக் கட்டுப்படுத்தியவன் ''சரி. நான் டாக்டர்கிட்ட பேசறேன்'' என்றதோடு மருத்துவரின் தனியறைக்குத் தொடர்பு கொண்டு பேசினான்.

பல நிமிடங்கள் தொடர்ந்த உரையாடலின் பின்னர் ''ஓகே நிஷாந்த். என்னால அவளை இன்னைக்கே வீட்டிற்கு அனுப்ப முடியாது. நாளைக்குக் காலையில



வேணும்னா டிஸ்சார்ஜ் பண்ண ட்ரை பண்றேன்..ஹ்ம்ம் சரி சரி, முடிஞ்சளவு டிலே பண்ண முயற்சி பண்றேன்... ஒரு மணி/ இரண்டு மணிக்கா அவளை வீட்டிற்கு அனுப்பினேன் என்றால் நீங்க ராத்திரிக்கு வீட்டிற்கு வந்திடுவீங்களா?'' என வினவியவர், அந்த பக்கம் நிஷாந்த் என்ன சொன்னானோ.

''சியூர். இப்போ அனுஜாவைப் பார்த்துக்கொள்ளும் சாந்தியையே அவளோட அனுப்பி வைக்கிறேன். அவங்ககிட்ட பேசிட்டேன்.... தொடர்ந்து ஐந்து நாளா முழு நாளும் டியூட்டி பார்த்ததால் கொஞ்சம் பெர்சனல் வேலையிருக்காம்...ஹய்யோ பதறாதீங்க நிஷாந்த்! ரெண்டு மணி நேரத்தில முடிச்சிட்டு உங்க வீட்டுக்குப் போறதா சொல்லியிருக்காங்க. சாந்தி - ரொம்ப நல்ல மாதிரி, நிஷாந்த். அனுஜாவையும் அவங்களுக்கு ரொம்ப பிடிச்சிருக்கு....கண்டிப்பா உங்க வீட்டுக்குப் போய்டு வாங்க. நீங்க கவலைப்படாதீங்க!'' என அவனிடம் விவரம் கூறி,

''உங்களால நாளைக்கு வந்திட முடியும் தானே? என்ன தான் உங்க பிரண்ட்ஸ், கூட வேலை பார்க்கிற வங்கன்னு சில விசிட்டரஸ் வந்தாலும் மனசுக்குப் பிடிச்சவங்க இருக்க மாதிரி வராது. இந்த மாதிரி நேரத்தில, உடம்பிற்குத் தேவையான பலத்தை விட மனதுக்குத் தான் அதிக பலம் தேவை. அது இருந்ததாலே சீக்கிரம் குணமாகிவிடும்'' எனக் கூறி, பொறுப்பான மருத்துவர் என நிரூபித்தார்.

''கண்டிப்பா டாக்டர்! ஃபிளைட்ஸ் நாளையிலிருந்து ஓட ஆரம்பிக்கும்ன்னு நியூஸ் கிடைச்சிருக்கு. சோ இங்கிருந்து கிளம்புற முதல் ஃபிளைட்ல இந்தியா

வந்துடுவேன். நீங்க செய்திருக்க, செய்யப் போறா எல்லா உதவிக்கும் என் மனமார்ந்த நன்றிகள் டாக்டர்'' என உணர்வுப் பூர்வமாய் பேசிவிட்டு, அழைப்பை வைத்தவனுக்கு, அனுஜாவை வெகு சீக்கிரம் பார்த்துவிடலாம் என்ற நம்பிக்கை மெல்ல துளிர்விட ஆரம்பித்தது.

அந்த நம்பிக்கையின் ஊடே, அடுத்த நாள் ஐரோப்பிலிருந்து கிளம்பும் முன்னர் தன் இல்லத்திற்குத் தொடர்பு கொண்டவனிடம் ''சாரி நிஷான். நீ சொன்னதும் உடனே கிளம்ப முடியாம உங்கம்மாவோட மல்லுக்கட்ட வேண்டியதா போச்சு. நான் மட்டுமாவது சென்னை போறேன்னு சொன்னதற்கும் ஒரே ஆர்ப்பாட்டம்... அழுகை... அவளை மதிக்கலை அது இதுன்னு அலட்டல்... வெட்டி கௌரவம். அதெல்லாத்தையும் அடக்கி, அம்மாவை ஓரளவிற்குக் கரைச்சு வச்சிருக்கேன். நாங்க ரெண்டு பேரும் நாளைக்கு மதியம் சென்னை கிளம்புறோம். ஏர் இந்தியால டிக்கெட் போட்டிருக்கேன்!'' என்ற தரணிதரன் கூறிய வார்த்தைகள், நிஷாந்தின் நெஞ்சினில் தேனைப் பாய வைத்தது.

தேனுடன் சேர்த்து பாற்கடல் அமுதமும் நெஞ்சில் பாய்ந்தது போல் அனுஜாவின் வீட்டோடும் தொடர்பு கொண்டு பேசினான் நிஷாந்த். அனுஜாவின் தமையன் ரவீந்திரனின் கைப்பேசி அதிசயமாய் நிஷாந்தின் அழைப்பை ஏற்க, தடதடத்த இதயத்தோடு காத்திருந்த நிஷாந்தை மேலும் சோதிக்காமல் ''சாரி நிஷாந்த். நீங்க கூப்பிடும் போது பெரியப்பாவை ஹாஸ்பிடல் கூட்டிட்டுப் போயிருந்தோம். அதான் எடுக்க முடியலை. அப்புறம்... இங்கே ஒரே மழை! எந்த போனுமே வொர்க் ஆகலை... குன்னூர் வந்து பேசணும் என்பதால் பேச



முடியாம போச்சு'' என்றான் ரவீந்திரன், குற்றம் செய்தவனின் குரலில்.

''ஹய்யோ பரவாயில்லை ரவி. மாமாக்கு என்ன? இப்போ எப்படி இருக்காங்க? வீட்டிற்குக் கூட்டி வந்தாச்சா? இங்க அனுஜாக்கும்... ஆப.... உடம்பு சரியில்லை'' என்றான் நிஷாந்த் பதட்டத்துடன்.

''பெரியப்பாக்கு வீசிங் பிரச்னை... எப்பவும் இருக்கிறது தான். கொஞ்ச காலமா.... அனுவைப் போகச் சொன்னதிலிருந்து மருந்து மாத்திரை ஒழுங்கா சாப்பிடாம.... அடிக்கடி வந்துடுது. இப்போ பரவாயில்லை.... அது சரி. அனுக்கு என்ன? காய்ச்சலா? சொல்றது கேட்காம.... மழையில நனைந்தாளோ?'' என அண்ணன்காரன் உருக,

''இல்ல... அது.. அது வந்து... அவளுக்கு வயித்தில கட்டி இருக்குன்னு ஸ்கேன்ல தெரிஞ்சு ஒரு ஆபரேஷன் செய்திருக்கோம்'' என ஆரம்பித்து, அனுஜாவின் தமையனிடம் முழுவிவரமும் கூறி, அவனைத் தவணை முறையில் அதிர்ச்சிக்கு உள்ளாக்கினான்.

முடிவில் ''என்ன நிஷாந்த் இது? அவளுக்கு சொந்தம் பந்தம்ன்னு நூறு பேருக்கும் மேல இங்க இருக்கும் போது...சை... நான் போன் எடுக்கலை என்றால் என்ன? யாருக்காவது.... யாராவது ஒருத்தருக்காவது தகவல் சொல்லியிருக்கலாமே... கடவுளே! இத்தனை நாளும் தனியாவா இருந்தா?! இப்பவே பெரியப்பா-பெரியம்மா கிட்ட சொல்லி, நாங்க அங்க போறோம்! பிள்ளை.. உடம்பிற்கு முடியாம படுத்திருக்கும் போது... என்ன பெரிய கௌரவம்? ஏதோ ஸ்கேன்ன்னு சொன்னீங்களே... அதுக்குப் போறதுக்கு முன்னாடி அட்லீஸ்ட்

சொல்லியிருக்கலாமே!? ப்ச்..நடந்தது நடந்திடுச்சு... நாங்க உடனே கிளம்புகிறோம். நீங்க போனை வைங்க'' என்ற அந்த அன்பு சகோதரன், நிஷாந்தின் பதிலை எதிர்பார்க்கவில்லை.

ரவீந்திரன் சொல்வது போல், நிறைய ''லாம்'' களும் ''இல்லை''களும் நிறைந்திருந்தாலும், அந்த நேரப் பதட்டத்தில் மனதில் ஓடும் எண்ணங்களையும் யோசனைகளையும் தானே செய்ய முடியும்? நாளையும் பகுத்தறிந்து வேலை செய்ய மூளை ஒன்றும் நல்ல நிலையில் இருக்கவில்லையே? அன்பானவளுக்கு என்ன ஆகிவிடுமோ என்ற பதைப்பும், எல்லா வகையிலும் எதிர்பட்ட எதிர்ப்பும், முயன்ற இடத்தில் எல்லாம் கைவிரிக்கப்பட்ட ஏமாற்றமும் நிஷாந்தை அதிகமாய் சிந்திக்கவிடவில்லை என்பதை குற்றம் சொல்வதில் பயனேது?

தற்போதாவது இருபக்க வீட்டாரும் மனம் இறங்கி வருகின்றனரே என்ற சந்தோஷத்துடன் இந்தியா வந்திறங்கிய நிஷாந்தின் வீட்டின் முன்னர், அவனது தந்தை - தாய் மற்றும் அனுஜாவின் தாயார் மற்றும் அவளது அண்ணன் நின்றிருக்க, வீடு பூட்டியிருந்தது. கண்களில் குழப்பத்துடன், அவர்களை நெருங்கியவனின் கண்களில் கைகளைப் பிசைந்த நிலையில் சாந்தி(நர்ஸ்) நின்றிருக்க, அனைவரின் முகத்திலும் பதட்டம்.

''என்னாச்சு?'' என நிஷாந்த் கேட்கவே தேவையில்லாமல் ''அனுஜாவைக் காணவில்லை'' என்ற செய்தி, அங்கே நின்றிருந்த பலராலும் அவனிடம் பகிரப்பட்டது!

அதே நேரம், ஓர் மலைக்கோவிலின் வாசலில், மழைச் சாரலின் சீறலான சப்தத்தில், வயிற்றைப் பிடித்துக் கொண்டு வலியினால் துவண்டு போன அனுஜா ''பாவா'' என்ற அழைப்புடன் மயங்கிச் சரிந்தாள்!



# 16

''அனுஜாவைக் காணவில்லை'' என்ற செய்தி, பெரும் போராட்டத்திற்குப் பின்னர் தாய்நாடு திரும்பியிருந்த நிஷாந்தின் காதுகளில் புகுந்த வினாடி அவனுக்கு உலகம் தட்டாமாலை சுற்றியது! உளம் பதற தள்ளாடியவனை, ரவீந்திரன் ஒரு புறமும், தரணிதரன் மறுபுறமும் தாங்க, ''எனக்கு ஒண்ணுமில்லை'' என்ற முணுமுணுப்புடன் அவர்களின் பிடியிலிருந்து வெளிவந்தான் அவன்.

கண்களில் பெரும் பயத்தோடு நின்றிருந்த மருத்துவமனைப் பெண்மணியிடம் விவரம் கேட்டு, அனுஜா அவர் வருவதற்குள் வீட்டை விட்டுச் சென்றதற்கு அவர் எந்த வகையிலும் பொறுப்பில்லை என்பதை விளக்கிய தோடல்லாமல், ''இதுவரை, அனுஜாவை ஓர் தாய் போல் பார்த்துக்கொண்டதற்கு மிக்க நன்றி. அவள் கிடைத்ததும் உங்களுக்குத் தகவல் சொல்கிறேன்'' எனக் கை கூப்பியவனை அனுஜாவின் தாயார் பெரும் வியப்போடு பார்த்திருந்தார்.

அவனது கோபத்திற்கு ஆளோவோம் என்ற பயத்திலிருந்த அப்பெண்மணியோ, அவனது நிதானமான பேச்சில் மேலும் உடைந்து சில பல ஆறுதல் வார்த்தைகளைக் கூறினார். ''நீங்க வெளிநாடு கிளம்புறதுக்கு முன்னாடி... அந்தப் பொண்ணை தனியா விட்டுட்டுப் போக என்ன பாடு பட்டீங்கன்னு எனக்குத் தெரியும்

தம்பி! ஆபரேஷனே வேண்டாம்.. எனக்கு அவ மட்டும் போதும்ன்னு சொன்ன நல்ல மனசு யாருக்கும் வராது... அதுவும் பிள்ளை இல்லைன்னா பொண்டாட்டியை அத்துவிட்டுட்டு வேற கல்யாணம் செய்துக்கிற இந்த காலத்தில்... உங்களை மாதிரி ஒருத்தர் புருஷனா கிடைக்க அனுஜா கொடுத்து வச்சிருக்கணும். நீங்க காட்டின உண்மையான அன்பிற்கு, அவ மேல நீங்க வச்சிருக்க காதலுக்கும் கண்டிப்பா எதிரொலி இல்லாம இருக்காது. அனுஜா வந்திடுவா! கவலைப்படாம இருங்க! அவ வந்ததும் எனக்குச் சொல்லி அனுப்புங்க. என்னால முடிஞ்ச உதவியை செய்றேன். பார்க்க ஆளில்லைன்னு முன்ன மாதிரி கலங்கவேண்டாம்... உங்க அம்மா ஸ்தானத்திலிருந்து அவளை நான் பார்த்துக்கிறேன்'' என விசனத்தின் ஊடே நிஷாந்திடம் அவர் விடை பெற்ற போது, கூடியிருந்த அனைவருமே ஒவ்வோர் மனநிலை யில் இருந்தனர்.

தொடர்ந்து, அனுஜாவின் தோழியர் வீடு, தங்களின் அலுவலக நண்பர்கள், திருமணத்திற்கு முன்னர் அவள் தங்கியிருந்த விடுதி, அலுவலகம் எனப் பல இடங்களில் தனது விசாரணையை நடத்திய நிஷாந்தின் முகம் இறுகிக் கசங்கிப் போயிருந்தது.

கடைசியாக, அவர்களது வீட்டுக் காவலாளியிடம் விவரம் கேட்டதற்கு ''நேத்திக்கு மதியம் ஒரு மணிக்கா.... கால் டாக்ஸில வந்து இறங்குச்சு தம்பி. நா தேன்.... சாமானை வீட்டுல கொண்டு போய் வச்சேன்..பிரவு, ஒரு அரை அவர் கழிஞ்சு அது மட்டுமா வந்துச்சு... ஏன்னா பாப்பான்னதுக்கு, ஒரு முக்கியமான மருந்து வாங்கணும். வாங்கிட்டு வரேன்னு போச்சு.. நா கூட வாங்கியாரேன்னு



கேட்டேன்...அதுக்கு ''இல்லைண்ணே, எங்கிட்ட மருந்துச் சீட்டில்ல. பேர் சொல்லித் தான் வாங்கணும். உங்களுக்குச் சொல்லத் தெரியாது''ன்னு சொல்லிடுச்சு தம்பி'' என்றார் அவர் விளக்கமாக.

மேலும் சில விவரங்களை அவரிடம் கேட்டவன், பக்கத்து மருந்து கடை, ஆட்டோ ஸ்டாண்ட், தாங்கள் எப்போதும் அழைக்கும் கால் டாக்ஸி எனத் தன்னால் முடிந்த மட்டும் தேடி பார்த்தான்.

முடிவில் - ''நேற்று மதியம் வீட்டை விட்டுக் கிளம்பிச் சென்றிருக்கிறாள்'' என்பது தவிர, அனுஜாவைப் பற்றி எதுவுமே தெரியாத நிலைக்குத் தள்ளப்பட்டதில் திகைத்த நிஷாந்த் அருகிலிருந்த சோபாவில் சரிந்து அமர்ந்தான். கைகளால் முகத்தைத் தாங்கியவனின் தோள்கள் குலுங்கவும், அந்த வினாடி வரை வார்த்தை யற்ற மௌனத்தில் அவனது செய்கைகளைத் தொடர்ந்த சொந்தங்களும் அவனது தவிப்பில் தவித்தனர்.

இரு வருடங்களாக மகனை யாரோ போல் ஒதுக்கி வைத்திருந்த பத்மாவதி அம்மையாரை கண் முன்னே விசித்துக் கொண்டிருந்த மகனின் நிலை சற்றே அசைக்க, சிறு தயக்கத்தின் பின்னர் மகனருகே சென்றவர், அவனது தலையை தன்னிடம் இழுத்துக் கொண்டார். முதலில் திகைத்த நிஷாந்த், தாயின் மடி தேடும் கன்றாய் அவரது வயிற்றோடு முகம் புதைத்து ''அம்மா'' என்ற கதறலில் அவரையும் அழ வைத்தான்

அவனது ''அம்மா'' என்ற அழைப்பில், அவனுக்கு ஊட்டிய பாலமுதம் மீண்டும் சுரக்க ''நிஷான்! கண்ணா! அழாதே ராஜா!'' எனத் தன்னுடன் அவனை இறுக அணைத்துத் தானும் கலங்கினார்.

''என்னால முடியலைம்மா? என்னோட முட்டாள் தனத்தால அவளைத் தொலைச்சிட்டு நிக்கிறேனே! கடவுளே! எங்க இருக்களோ!? உயிருக்கு ஆபத்தான நிலையில அவ ஹாஸ்பிடல்-ல இருக்கும்போது... வேலை தான் முக்கியம்ன்னு போன என்னைச் சொல்லணும்?! அன்னைக்கு... ''அனாதை மாதிரின்னு ''ஒரு வார்த்தை சொன்னாம்மா.. அந்த வார்த்தை சொல்ற துன்னா அவ எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கணும். ஹய்யோ அவ இல்லாம என்னால இருக்கவே முடியாதுமா.. அஜூ... என்கிட்டே வந்திடு... பேபி வந்திடு!'' என அவன் கதறித் துடிக்கவும், ரெண்டு தாயுள்ளங்களும் வெவ்வேறு வகையில் தவித்துப் போயின.

தொடர்ந்து தன் நிலை மறந்து, தங்களது திருமணத்தில் தொடங்கி, மருத்துவமனை வாசம் வரையிலும் நடந்த அனைத்தையும் பட்டியிலிட்டு, அனைத்திற்கும் தான் தான் காரணம் என்பது போல் நிஷாந்த் மறுக, மறுக, கூடியிருந்த நால்வரும் உடைந்து, உருகிப் போயினர்.

* * *

அனுஜாவின் தாயார் வரலஷ்மிக்கோ, தன் பெண்ணை அவரது உயிரை விடவும் மேலாக மதிக்கும் மனிதனையா இத்தனை நாட்கள் திட்டித் தீர்த்தோம்?

அவர் வாய் மொழியாக பேசுவது இருக்கட்டும்.. மருத்துவமனையில் அனுஜாவிற்குத் துணையிருந்த பெண் மணி பேசியதை கேட்கையில் மனம் கூனிக் குறுகுகிறதே!? அவருக்குத் தன் பெண் மீதிருக்கும் பாசமும், அவளது வாழ்வு நன்றாக அமைய வேண்டும் என்ற வேண்டுதலும் தனக்கில்லாமல் போய்விட்டதா?



''அனாதை...'' என்ற வார்த்தை சொன்னாளாமே? என் ஐயனே! அந்த வார்த்தைக்காக இந்த புள்ளை என்ன தவிப்பு தவிக்கிறது... பெற்ற நானும் அல்லவா அவளை ''அனாதை'' என்ற நிலைக்குத் தள்ளிவிட்டேன்!?

அவர் மீது தப்பு என்றால்.. என் மீதும் அல்லவா தப்பிருக்கிறது? தனக்குப் பிடித்தவனைத் திருமணம் செய்து கொண்டாள் என்பதற்காக பெண்ணை ஒதுக்கி வைத்ததில் என்ன லாபம் கண்டேன்? வரட்டுப் பிடிவாதத்தையும்.. கண்ணீரையும் தவிர!?

கணவர் தான்.. ஜாதி/குலம்/கோத்திரம் என இருந்தார்... எனக்கென்ன வந்தது?

''பிள்ளை....பிள்ளை'' என என் மகள் தவித்தப்போதெல்லாம்,அவளது தலை வருடி, ஆறுதல் கூறக் கூட இருக்கவில்லையே, அப்படி அவள் ''பிள்ளை... பிள்ளை'' என உருகுவதற்குக் கூட, நானே அல்லவா காரணமாகிப் போனேன்!? எங்களுடன் இணைவதற்காக அல்லவா... பிள்ளையை வழியாக கண்டிருக்கிறாள்! பாவி மகள்.... உன்னை நாங்கள் தவிக்க விட்டதற்குப் பழியாக எங்களை இப்படி உடைய வைத்துவிட்டாயே!'' என்று நெஞ்சம் கிடந்து அடித்து கொண்டது!

* * *

நிஷாந்தின் தலையை வருடிக் கொடுத்திருந்த பத்மாவதியின் நிலையோ வேறு மாதிரி இருந்தது- ''அனுஜா மருத்துவமனையில் இருக்கிறாள் என்ற செய்தியை கேட்டதுமே சென்னை கிளம்பி வந்திருக்க வேண்டுமோ?

அப்படியே இல்லை என்றாலும், இரண்டு தினங்கள் முன்னர் ''தயவு செய்து கிளம்பு, பத்மா!'' எனக் கணவன் கெஞ்சிய போதாவது கிளம்பியிருக்க வேண்டுமோ?

அனுஜா என்ற மூன்றாம் மனுஷியை...அதுவும் என் மகனை என்னிடமிருந்து பிரித்துச் சென்ற ஒருத்தியை நான் ஏன் பார்க்க வேண்டும் என்ற திண்ணக்கத்தில் கிளம்பாமல் இருந்தேனே.. ஆனால் அந்த மூன்றாம் மனுஷி என் மகனின் மூச்சாக அல்லவா இருக்கிறாள்?

''என்னைத் தான் எல்லாரும் மதிக்கவேண்டும்'' என்ற என் அகம்பாவத்திற்குப் பெரும் அடி விழுந்துவிட்டதே!? இரண்டு வருடம் கழித்துப் பார்க்கும் தன்னை ஒரு பொருட்டாய் கூட நினைக்காமல், 'அவளின்றி நானில்லை' என்கிறானே மகன்! அவனால் அப்படியொரு வார்த்தை சொல்ல முடிகிறது என்றால்.. அவள் மேல் எத்தனை அன்பு வைத்திருக்க வேண்டும்?

இந்த காதல் பிணைப்பை மதிக்காமல்.. சரிதாவின் குடும்பத்தார் முன்னிலையில் தனக்கு உண்டான அவமானத்தை மட்டுமே பார்த்துக்கொண்டு இருந்துவிட்டேனோ? அவன் தன்னை மதிக்கவில்லை என்று வாதாடிய தனக்கு, அவனது காதலைத்தான் மதிக்கவில்லை என்பது உறைக்கவே இல்லையே?

சரிதாவுடனான அவனது திருமணத்தை எல்லார் முன்னிலையிலும் எதிர்த்தான் தான்... ஆனால் தன் கணவன் சொல்வது போல் அவனை ஒரு வார்த்தை கூட கேட்காமல் அல்லவா அந்த கல்யாணத்தை ஏற்பாடு செய்தோம்?

ஹ்ம்ம்... அந்த நிலையில் அவனது வார்த்தைகளும், காதல் கல்யாணமும் தப்பு தான்.. தன் தப்பை உணர்ந்து அவன் மன்னிப்பு கேட்ட நிலையில்... ''நான்'' என்ற நிலையை விட்டு நான் இறங்கிவரவில்லையே?!



தன் கணவர் சொல்வது போல் ''பெரிய மனுஷத்தனம் கொஞ்சமும் இல்லாமல், ஈரம் காய்ந்த கல்லாகிவிட்டாய்!'' என்ற வாக்கியத்திற்கு ஏற்ற தாயாய் இருந்துவிட்டோமே?'' என சுய அலசலில் குன்றிப் போனார் அவர்.

* * *

இரு தாய்மாருக்கும் மாறாய் அங்கே நின்றிருந்த ரவீந்திரனின் எண்ணமோ ''ஆறு மாதங்களாய்- நிஷாந்த் பேசிய வார்த்தைகளைக் கேட்டிருந்தும், அனுஜா மேல் அவர் வைத்திருக்கும் அன்பைப் புரிந்து கொள்ளாமல் இருந்துவிட்டேனே?

ஏதோ வீட்டை எதிர்த்து திருமணம் செய்து கொண்டார்கள்.... மீண்டும் வீட்டுடன் சேர முயற்சிக்கிறார்கள் என்ற அளவில் எண்ணாமல், அவரது வார்த்தைகளுக்குக் கூடுதலாய் முக்கியத்துவம் கொடுத்து, வீட்டினருடன் பேசியிருக்க வேண்டுமோ?

பேசவில்லை என்று சொல்ல முடியாமல்.. அவர்களிடம் அனுஜாவைப் பற்றி பேசியிருக்கிறான் தான்- ''ஏதோ தப்பு செய்துவிட்டாள்! என்ன இருந்தாலும் நம் பெண்! அனுஜாவின் கணவரைப் பார்த்தாலும் நல்லவராய் தான் இருக்கிறது! போனில் மட்டுமாவது பேசலாமே!'' என்ற ரீதியில் அமைந்த பேச்சுக்களில் அழுத்தம் குறைந்திருந்ததோ? இன்னமும் அழுத்திக் கூறியிருக்க வேண்டுமோ?

அன்புகொண்டு வளர்த்தப் பெண்ணைத் தொலைத்த பின்னர் புதிதாய் ஞானோதயம் வந்து என்ன புண்ணியம்? அறியாப் பெண்ணை அறிந்தே இழந்துவிட்டோமே?'' என மனத்தைக் கிழித்தது.

* * *

அனுஜாவின் தமையன் தன் தங்கையைப் பற்றி மருகியது பத்தாது என்பது போல் தரணிதரனும் குற்ற உணர்வில் நெஞ்சம் தைத்துப் போனார்.

இரு தினங்கள் முன்னர், நிஷாந்த் ''அனுஜாவைப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று கூறியதை ''உங்கள் மருமகளுக்குப் போய் சேவை செய்யுங்கள்'' என்று எடுத்துக் கொள்ளாமல், ''என் உயிரை நானில்லாத நிலையில் நிழல் போல் பார்த்துக்கொள்ளுங்கள்'' என்று எடுத்துக் கொண்டிருக்க வேண்டுமோ?

அவளது உடல்நிலையை முன்னிறுத்தாமல், தன் மனைவியின் கல் மனம் சமாதானமடைவதை முதன்மை யாக்கியது பெரும் தப்பாகிவிட்டதே?

மரணக் காயம் அடைந்தது போல்... நிஷாந்த் உடைந்து நொறுங்குவதைக் காண முடியவில்லையே!

எந்த நிலையிலும் உடையாத மகன் இன்று சுற்றி யிருக்கும் மனிதர்களையும் மீறி அழுகிறான் என்றால் அவனது துணைவி மீது அவன் எத்தனை பிரியம் வைத்திருக்கவேண்டும்? இரண்டு வருடத் தாம்பத் தியத்தில் அவன் உண்டாக்கியிருக்கும் பிணைப்பை.. தான் தன் மனைவியிடம் உருவாக்கிக் கொள்ளவில் லையோ!? அப்படியொரு புரிதல் தங்களுக்குள் இருக்கு மெனில், ''மருமகளைப் பார்க்க வா'' எனத் தான் அழைத்த போது பத்மாவதி கிளம்பி வந்திருக்க வேண்டுமே? அவர் வராத பட்சத்தில்.. இருபது வருடங்களாய் நடந் தேறும் தாம்பத்தியத்திற்கு என்ன மதிப்பு?

இரண்டே வருடங்களில் - அவளின்றி இவனில்லை என்ற உயிர் நெருக்கம் ஏற்பட்டுப் போயிருக்கும்



இவர்களது காதலுக்கு முன்னே எனது குடும்ப வாழ்க்கை துச்சமோ? என எண்ணங்கள் பல திசைகளிலும் பறந்து, மனதைக் கனமாக்கியது!

* * *

தங்களது வேதனையை மறைத்துக் கொண்டு ''நிஷான், அனுஜா எங்கேயும் சென்றிருக்க மாட்டாள். இவ்வளவு பெரிய ஆபரேஷன் செய்திருக்கும் நிலையில்.. தொலை தூரம் பயணம் செய்திருக்க வாய்ப்பே இல்லை. பக்கத் தில் தான் எங்கேயாவது இருக்கவேண்டும். தேடலாம்.. தேடிக் கண்டு பிடிக்கலாம்'' என அவனைத் தேற்றி, அனுஜாவைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டனர்.

* * *

இங்கே அனைவரையும் தவிக்க விட்டிருந்த அனுஜா, அங்கே தானும் தவித்துத் தான் போனாள்! கணவனின் பேச்சை மீறி, அதுவும் அவன் நாட்டிலில்லாத நேரத்தில் அவனை ஏமாற்றிவிட்டு, குல தெய்வம் கோவில் வாசலில் வந்திறங்கியபோதே அடிவயிற்றில் லேசாய் வலிக்க ஆரம்பிக்க, ஊர் காக்கும் அய்யனார் முன்னர் மண்டியிட்டு ''உங்க மேல செய்த சத்தியத்தை.. மதிக் காம இருந்ததுக்குத் தான் பொன்னையா எனக்கு இந்த நிலைமை வந்திடுச்சு! என்னை மன்னிச்சிடுங்க! அப்பா- அம்மா சம்மதமில்லாம, பாவாவோட துணை யில்லாம.... அனாதை மாதிரி நான் மட்டுமா ஆஸ்பத் திரில கிடந்தேன். அங்கிருந்த ஒரொரு நிமிஷமும், நான் செய்த தப்பு தான் நெஞ்சை உறுத்திகிட்டே இருந்தது. பெத்தவங்க மனசை நோகச் செய்ததுக்குத் தான் நிஷுவோட அப்பா-அம்மாவும் சேர்க்கலை, நிஷுக்கும் என் மேல கோபம். அப்புறம்....அப்புறம்.... எனக்குப்

பிள்ளையே பிறக்கலை! எனக்கு எவ்வளவு கஷ்டமா இருக்கு தெரியுமா? எல்லாமே நான் செய்த ஒரு தப்புக்கு தண்டனை தான்! என்னை மன்னிச்சிடுங்க பொன்னையா!'' எனக் கலங்கிய மனதைக் கண்ணாடியாக்கி அவள் கதறியபோது, அடிவயிற்றிலிருந்த வலி பெரும் பிரளயமாய் கிளம்பி, அவளை நிலைகுலைய வைத்தது.

தையலிட்ட இடத்தில் லேசாய் உதிரம் கசிய ஆரம்பிக்கவும், உடம்பைப் பயம் ஆக்கிரமிக்க ''பாவா'' என்ற விளிப்புடன் மயங்கிச் சரிந்தவளின் உதவிக்கென அந்த நேரத்தில் யாருமிருக்கவில்லை.

அனுஜாவின் பிறந்து வீட்டுக் குல தெய்வமான பொன்னன் கோவிலுக்கு அனுஜா வந்து சேர்ந்தது ஓர் முன்காலை நேரம் என்பதால், அந்த மலைக்கோவில் ஆள் நடமாட்டம் இருக்கவில்லை- அதிலும் சாரல் மழைக் காரணமாக காலை வேளைகள் கூட கும்மிருட்டாய் இருக்கையில் பேருக்குக் கூட ஓர் ஆளில்லை.

மேட்டுப்பாளையத்தில் இறங்கி, பொன்னன் கோவிலுக்குச் செல்ல வேண்டும் என வாடகைக்கார் கேட்டபோதே பெரிதும் தயங்கியவர்கள், அவள் கொடுக்கிறேன் எனக் கூறிய அதிகப் பணத்திற்காக மட்டுமே அவளை அங்கு அழைத்துவந்திருந்தார். அப்படிப்பட்டவர்கள், அவள் திரும்பி வரும்வரை எப்படி இருப்பார்கள்? அதிலும், திரும்பிப் போவதைப் பற்றி அவள் ஏதும் சொல்லாத நிலையில், அவளை இறக்கிவிட்ட மறு வினாடி, மழை வலுப்பதற்கு முன்னர் ஊர் போய்ச் சேரும் அவசரத்துடன் பறந்தே விட்டனர்.

அனுஜாவின் கெட்ட நேரத்திலும் நல்ல நேரமாய், பொன்னன் கோவிலிலிருந்து இறங்கிய வாடகைக் காரை



நிறுத்தி, அதிலேறியவன் ராகவன்! வழுக்கும் மழையில் சொந்த வண்டியில் செல்வதை விட, தான் போகும் இடத்திற்குச் செல்லும் வாடகைக் காரில் செல்வது உசிதம் என்று தோன்றியதால், தனது இரு சக்கர வாகனத்தை விட்டு அதிலேறியிருந்தான் அவன். குன்னூர் தாண்டி வண்டி விரைந்து கொண்டிருக்கையில், ராகவனின் கைப்பேசியில் இருந்த சொற்ப சிக்னலின் காரணமாய், கைப்பேசி கிணுகிணுத்தது. வீட்டு எண்ணைப் பார்த்துவிட்டு, காதில் எடுத்து வைத்தவனிடம் ''ராகவா! நம்ம அனுஜா.. பொன்னன் கோவில்-ல மயங்கிக் கிடக்கலாம்டா. சாயங்காலப் பூஜைக்குப் போன பூசாரி பார்த்திட்டு, அவர் மகனை அனுப்பியிருக்காரு. இங்க பெரியப்பா... காரை எடுக்கச் சொல்லிப் பறக்கிறாங்க. நாங்க கணேஷை (அனுஜாவின் அத்தைப் பையன்களில் ஒருவன்) கூட்டுப் போறோம். உடனே வந்து சேரு!'' என அவர் தாயார் பதட்டத்துடன் பரபரக்க, அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

''அனுவா? அவள் இங்கே எங்கே வந்தாள்? ஆபரேஷன் செய்திருக்கிறது... பார்க்க ஆளில்லை என்று தானே அந்த நம்பிக்கைத் துரோகி போன் செய்திருந்தான். அவன் சொல்லுவதை நம்பிக் கொண்டு, இந்த அண்ணனும், பெரியம்மாவும் அங்கே போயாகிவிட்டதே! பிறகு, அவள் இங்கே எப்படி வர முடியும்? அப்படியென்றால், அவன் சொன்னது பொய்யா? அவன் சொன்ன பொய்யை நம்பிக் கொண்டு.. இவர்கள் வேறு உருகுகிறார்கள்?! நம் பெண்ணை நம்மை விட்டுப் பிரித்தானே படுபாவி என்ற கோபம் கொஞ்சமுமில்லாமல்... ப்ச்... அது தான் அவன் செய்த துரோகத்தை மறந்துவிட்டு உறவு கொண்டாட போயாகிவிட்டதே?

இப்போதென்ன புது கதை... அவள் பொன்னன் கோவிலில் இருக்கிறாள்... அதுவும் மயங்கி என்று?'' எனக் கோபம் தலைக்கேற, தன் தமையனின் கைப் பேசிக்கு அழைத்தவன் ''அனுஜா எங்கே? அவளைப் பார்த்திட்டியா இல்லையா?'' என்றான் எடுத்ததும்.

''டேய் ரகு, அனுவைக் காணலைடா! நாங்க இங்க வரதுக்கு முன்னாடியே.. அவ.. அவ எங்கேயோ கிளம்பி போய்ட்டா... ஆஸ்பத்திரில இருந்து வந்த பச்சை உடம்பு.. எங்கே போனாளோ!? நிஷாந்தும் நானும் தான் தேடிட்டு இருக்கோம்... நிஷாந்த் முகத்தைப் பார்க்கவே முடியலை! அந்தளவு உடைஞ்சு போய்ட்டார்... டேய், டேய்! அச்சாணியமா ஏதாவது சொல்லிடாதே! அவ ரோட தவிப்பு நிஜம்! அதை என்னால உணர முடியுது!'' என்றான் ரவீந்திரன் படபடவென. தங்கையைக் காணவில்லை என்ற விவரத்தை மட்டும் கூறியிருந் தால், அதைத் தொடர்ந்து ராகவன், நிஷாந்தை ஏசும் வார்த்தைகளைக் கேட்க வேண்டுமே என்ற பதைப்பில், நிஷாந்தின் மேல் அவனுக்கு ஏற்பட்டிருந்த மரியாதை யில், நிஷாந்தின் நிலையையும் எடுத்துக் கூறினான்.

''உன் அருமை மச்சினனை நான் ஒண்ணும் சொல் லலை! எப்படித் தான் அவனை நம்பிறியோ? அவன் சொல்றது உண்மையா இருக்கும் பட்சத்தில், உடம்புக்கு முடியாத பெண்ணை.. தன்னந்தனியா ஆஸ்பத்திரில விட்டுட்டுப் போயிருக்கான். அவனைப் போய் தலை யில தூக்கி வச்சு ஆடுறே?'' என ராகவன் எரிச்சலாய் பேசிக்கொண்டே செல்ல,

''நாமளும் தான் அவளை வேண்டாத பொருளா தூக்கி எறிஞ்சிட்டு, அவரைக் குத்தம் சொல்லிட்டு



உட்கார்ந்திருக்கோம்! அவரைப் பேச வந்துட்டான்.. இனியும் அவரைத் தான் சாடிக்கிட்டுத் திரியப் போறேன்னா... போனை வை. எங்களுக்கு நிறைய வேலையிருக்கு!'' என்றான் ரவீந்திரன் கோபத்தின் ஊடே.

''பெரிய வேலை... இங்க இருக்க அனுவை... அங்க வலை வீசித் தேடற வீர தீர வேலை!! நீங்க தான் மெச்சிக்கணும்'' என ராகவனும் கத்த, அதைக் கேட்டுக் கொண்டிருக்க ரவீந்திரன் அழைப்பை உயிர்ப்புடன் வைத்திருக்கவில்லை. ''பெரிய இவன்! தெருத் தெருவா தேடி அலைஞ்சாலும்.. அவ கிடைக்க மாட்டா! நல்லா தேடுங்க!'' என சபித்தவன், ''டிரைவர், பொன்னன் கோவிலுக்குப் போகணும். உங்களால வரமுடியுமா?'' என்றான் எரிச்சலின் ஊடே. அவனுக்குத் தங்கை மேலும், அவளது ஆருயிர் கணவன் மீதும் கடும் கோபம் தான்- இருந்தாலும், இப்போது தான் உடம்பு சரியில் லாமல் மருத்துவமனையிலிருந்துவிட்டு வந்திருக்கும் பெரியம்மாவை மேலும் நோக வைக்க மனமில்லாமல், அரவங்காடு செல்ல முடிவு செய்தான்.

''இப்போத்தான் சார் அங்கிருந்து வரேன். திரும் பவா?'' என அவர் இழுக்க, ''யாரை...யாரை இறக்கி விட்டீங்க? சின்ன வயசா.. ஒரு.. ஒரு பொண்ணையா? எங்கிருந்து?'' என அவனையுமறியாமல் குரல் நடுங் கியது ராகவனுக்கு.

''ஆமா சார். ரொம்பச் சின்னப்பெண்ணில்ல. கல் யாணமான பொண்ணு தான்.. தாலி சரடு தெரிஞ்சதே! ஆனா... மேலுக்கு முடியாதவங்க மாதிரி இருந்தாங்க'' என அவர் தனக்குத் தெரிந்த விவரங்களைக் கூற,

ராகவனுக்கு உண்மை உரைத்தது. அந்த நிமிடம் வரை, தங்களின் குடும்பத்துடன் இணைய நிஷாந்த் நடத்தும் திட்டம் என்றே எண்ணியிருந்தான்; அதற்கு அனுஜாவும் உடந்தை என்பதில் சகோதரி மீதும் அடங்காமல் கோபம் பொங்கியது! ஆனால், ''குலதெய்வம் கோவிலில் மயங்கியிருக்கிறாள்'' என்ற தாயின் வார்த்தைகளை, ''அனுஜாவிற்கு முக்கியமான அறுவை சிகிச்சை செய்திருக்காம்'' என்ற அறிவிப்புடன் கோர்த்தவன், ''மேலுக்கு முடியாதவங்க மாதிரி இருந்தாங்க'' என்பதில் அனுஜாவின் உடம்பிற்குப் பெரிதாய் (உண்மையாய்) ஏதோ என்பதை உணர்ந்தான்.

உணர்ந்த வினாடி, வண்டிக்காரரை விரட்டி, பொன்னன் கோவிலை அடைந்தபோது ''பாப்பாவைத் தேடி வந்தீங்களா தம்பி? அப்பாரும், அத்தை மவனும்.. புள்ளையை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிப்போய்ட்டாங்க. விரசா போங்க. புள்ளைக்கு ஒண்ணுமாகாது. பொன்னன் காவலா இருப்பார்....'' என விவரத்தோடு வாழ்த்தையும் கூறி அனுப்பினார், அங்கிருந்த பூசாரி.

தடதடத்த மனதுடன், குன்னூரிலிருக்கும் மருத்துவமனைக்குள் அவன் நுழைந்தபோது, அவனது குடும்பம் மொத்தமும் அங்கே கூடியிருந்தது.

அவன் வந்ததும், வார்த்தையின்றி கண்களால் அவர்கள் செய்கை செய்ய, என்னவோ ஏதோ எனப் பதறியவன், அவர்களது கண்களைத் தொடர, அங்கே அவன் கண்ட காட்சி அவனது கோபதாபங்கள் அனைத்தையும் விரட்டியடித்து, கண்ணீரால் அவனது கண்களைச் சிவக்கச் செய்தது!



சரவணப்பாண்டியன் எனும் பெரிய மனிதர், மகளின் கட்டிலருகே மண்டியிட்டு ''அனு, ராஜாத்தி! நீ எந்த தப்பும் செய்யலை!'' என அவர் உணர்வுடன் மறுக, ''சாமி, என்னை மன்னிச்சிடு! நானும் பாவாவும் பெரிய தப்பு செய்துட்டோம்! எங்களை எங்க குடும்பத்தோட சேர்த்திடு!'' என உணர்வின்றி பினாத்திக் கொண்டிருந்தாள் மகளரசி!

''பாவா.. உங்ககிட்ட சொல்லாம வந்ததுக்கு என்மேல கோபமா? நீங்களும் தானே என்னை விட்டுப் போனீங்க... அதான்.. நானும் வந்தேன். ஆனா, இப்போ வலிக்குதே! வாங்களேன்.... பாவா வாங்களேன். எனக்கு நீங்க வேணும்'' என அந்த உணர்வு மங்கிய நிலையிலும், ஆயிரம் சொந்தங்களையும் மீறி தன் கணவனை நாடிய அவளது அலைப்புறுதல் அவனை அசைத்துத் தான் பார்த்தது.

## 17

அதிகமான அலைச்சலால் உண்டான வலியும், வலியினால் ஏற்பட்ட ரத்தக் கசிவும், ரத்தக்கசிவினால் ஏற்பட்ட மயக்கமும் என சுயநினைவை இழந்த அந்த நிலையிலும், கணவனிடம் செல்ல வேண்டும் என்ற உத்வேகம் அனுஜாவை ஆட்டிப்படைத்தது. உள்ளுணர்வில் புதைந்து, உயிருடன் கலந்து, உதிரத்தில் உதித்து, நெஞ்சில் நீக்கமற நிறைந்திருக்கும் அவனது நினைவுகளை அவள் அரட்டல்களாய் வெளியிட, பார்த்திருந்த அனைவருமே உருகிப் போயினர்.

காவியமாய் ஒவியமாய் போற்றி வளர்த்தப் பெண்ணைத் தூற்றி தாரமாக்கிய துன்பத்தை, அவளது துயர் பார்த்து துடைக்க வேண்டிய துரதிர்ஷ்டத்திற்கு ஆளாக்கப்பட்டனர் அவளது பிறந்து வீட்டுப் பெருந் தகைகள்.

சொல்லின் இனியாளைக் கந்தல் துணியெனக் கண்ட சரவணப்பாண்டியன், தன் பெரிய மனிதப் போர் வையை களைந்தார். செல்ல மகளின் முன்னே மண்டி யிட்டு அமர்ந்தவர், அவளது சில்லிட்டக் கைகளை ஏந்திக் கொண்டு ''அனு குட்டி....அப்பா-டா!'' என உருகிய வார்த்தைகள் எதுவுமே அனுஜாவின் செவியி னுள் நுழையவே இல்லை!

பற்றியிருந்த அவரது கரங்களை இறுக இறுகப் பிடித்துக் கொண்டு, ''வலிக்குதே! பாவா வாங்களேன்! பாவா.. இனி மேல் அஜு தப்பே செய்ய மாட்டேன். ஒரு தடவை வாங்களேன்.. எனக்குப் பயமா இருக்கே! வலிக்குது...'' என விடாமல் புலம்பிய அனுஜாவின் முகத்தை வருடிய சரவணப்பாண்டியனுக்கு, ''பாவா'' என்ற அவளது அழைப்பு அந்த நேரத்திலும் பெரும் வியப்பையும், பெருமையையும் உண்டு பண்ணியது; இருக்காதா பின்னே? அவரது தந்தையை அவரது தாயார் அழைக்கும் அன்பு அடைமொழி அல்லவா?! தாய்க்கு நிகராய் பாசம் வைத்தப் பெண்ணரசி, தன் மன்னவனை அழைக்கும் முறையைக் கண்டு அவர் சிலாகிக்கவே செய்தார்!

அவளது உள்ளத்தினுள் கல்வெட்டாய் பதிந்திருந்த கணவனின் நினைவுகளில், அங்கே அங்கே கீறல்களாய் தாமும் இருக்கிறோம் என்பதை ''பொன்னையா,



என்னை மன்னிச்சிடு! அப்பா- அம்மா சம்மதத்தோட எங்க கல்யாணம் நடக்கும்ன்னு நான் செய்த சத்தியத்தை நான் காப்பாத்தவே இல்லை. அப்பா தான் என் கூட பேசலைன்னா.... நீயும் என்னைத் தண்டிப்பியா? வேணாமே?! எனக்கு ஏதாவது ஒண்ணுன்னா அப்பா, அம்மா, ரத்து அண்ணா, அப்புறம்.... பாவா..எல்லாரும் எவ்வளவு வருத்தப்படுவாங்க. அதனால என்னை மன்னிச்சிடு!'' என்ற புலம்பலில் அவள் வெளியிட, அது வரை ஓர் ஸ்தம்பித்த உணர்வுடன் அவளையே பார்த்திருந்த ராகவன் உடைந்தான்.

கடலென சொந்தங்கள் சூழ வளர்ந்த நிலையிலும், தாய்- தந்தைக்கு அடுத்த படியாய் தன் பெயரை உச்சரிக்கும் தங்கையை இத்தனை நாட்கள் எதிரியாய் ஒதுக்கி வைத்தோமே என நெஞ்சம் ரணமாக, ''அனுமா'' என்ற அழைப்புடன் அவளை நெருங்கிய ராகவன், அவ ளது பட்டுக் கன்னங்களை வருடி இதமூட்ட முயன்றான்.

ராகவனின் செய்கை இவ்வாறாய் இருக்க, சரவணப் பாண்டியனோ ''அனு... இங்க பாருடா கண்ணு! அப்பா உன்கூட பேசுறேன் பாரு... இனிமேல் உன்கூட பேசாம இருக்கவே மாட்டேன்டா. நீயும் அப்பா கூட பேசுடா... அப்பா தப்பு செய்துட்டேன். நீ தான் என்னை மன்னிச்சு என்னோட பேசணும்'' என ஒரு தடவையும்,

''நீ உன் சத்தியத்தைக் காப்பாத்திட்டே ராஜாத்தி! அப்பா சம்மதம் சொல்லிட்டேன்.. அப்பாவோட ஆசீர் வாதம் பரிபூரணமா உனக்கிருக்கு... அதனால செய்த சத்தியத்தை மீறிட்டோம்னு வருத்தப்படாதே அனு கண்ணா! அப்பா தான் முட்டாள்தனமா உன்னைப் படுத்திட்டேன். நீ தப்பே செய்யலைடா'' என மறு தடவையும் உருகி அவளைத் தேற்ற முயன்றார்.

பெரிய தந்தையின் புலம்பலையும், நெருப்பென சுட்டக் கன்னமும், வலியால் சுருண்ட இதழ்களும் எனத் துவண்டுப் போயிருந்த இளையவளின் வேதனையை யும் காணச் சகிக்காமல் ''டாக்டர் பாத்தாங்களா இல்லையா? வலியில துடிக்கிறவளைப் போட்டுட்டு எங்க போய்ட்டாங்க?'' என மருத்துவரை அவன் தேட,

''பெரிய டாக்டர் வந்துட்டே இருக்கார்ன்னு சொன் னாங்க. அப்பா பார்க்கப் போயிருக்கார்'' எனக் கண் ணீரின் ஊடே பதில் கூறிய ராகவனின் தாயார், தன் வயிற்றில் பிறக்காதபோதும் தன்னிடம் உயிராய் இருந்த அனுஜாவின் வேதனையைப் போக்க வழி தெரியாமல் நின்றிருந்தார்.

''எப்ப வந்து... எப்போ பார்க்கிறது? நர்ஸ் கூட இல் லாம.. என்னம்மா?'' என ராகவன் பறந்துகொண்டிருக் கும் போதே, மருத்துவர் வந்துவிட, அனுஜா அவசர சிகிச்சைப் பிரிவிற்கு அழைத்துச் செல்லப்பட, ஒரு மணி நேரக் காத்திருப்புக்குப் பின்னர் ''தையலை மீண்டும் போட்டாச்சு. ரத்தமும், ட்ரிப்ஸும் ஏத்தியிருக்கு.. கூடவே மயக்க மருந்தும்! ரெண்டு, மூணு மணி நேரம் கழிச்சு முழிச்சிடுவா!'' என அறிவித்தார் மருத்துவர். கூடவே, ''அவளைக் கொஞ்சம் கவனமா பார்த்துக்கோங்க. ஒரு கண்ணாடி பாத்திரம் மாதிரி..அலுங்காம குலுங்காம ரொம்ப கேர் எடுத்துப் பார்த்துக்கணும். ஆபரேஷன் பண்ணி ஒரே வாரத்திற்குள்ள தையல் பிரியிற அளவுக்கு அலைஞ்சிருக்கா.. இனி ஒரு தடவை இது மாதிரி நடந்தா அவ உயிருக்கே ஆபத்தா முடிஞ்சிடும்!'' -எச்சரிக்கை என்ற பெயரில் கூடியிருந்த அனைவரையுமே அதிர வைத்துவிட்டுச் சென்றார்.



மயக்கம் தெளிந்து விடும் எனக் கூறிய ரெண்டு மணிநேரத்திற்கு முன்னதாகவே மனதின் வேதனையால் அனுஜாவின் அலைப்புறல் துவங்கிவிட்டப் போதும், முழுதாய் மயக்கம் தெளியவில்லை.

''ம்ம்'' என்ற லேசான முனங்கலுடன் தனது விழிப்பைப் பிறருக்கு அவள் எடுத்துரைக்க, கண்களில் தாகத்துடன் சரவணப்பாண்டியன் அவளது முகம் பார்த்தார்! ''அனும்மா'' என்ற அவரது அழைப்பில், லேசாய் அவர் புறம் திரும்பிய அனுஜா ''அப்பா'' என்றாள். அந்த விளிப்பில்-ஆச்சரியம், அன்பு, ஏக்கம், நிம்மதி என ஓராயிரம் உணர்வுகள் சங்கமிக்க, விரிந்த புன்னகையுடன் அவரை ஏறிட்டவள் மீண்டும் மயக்கத்தில் ஆழ்ந்தாள்.

அதன் பின்னர், அவளது உறக்கம் சீராய் அமையாது போனதோடு ''பாவா'', ''பாவா'' என்ற அழைப்பும், ''வலிக்குது...'', ''ரொம்ப வலிக்குது....'', ''ட்ரிப்ஸ் வேணாம்....'', ''நரம்பில குத்தாதீங்க...'', ''பாவா , பாருங்க..நரம்பில ஊசி குத்துறாங்க'' என்ற உள் மனதின் வெளிப்பாடு களுமாய் நேரம் கழிய, முடிவில் ''பாவா'' என்ற வார்த் தையை அவள் விடவே இல்லை. ஒரு வாரமாய் அவ னிடம் பேச எண்ணிய வார்த்தைகள் அனைத்தையும் அந்த ஒரு மணி நேரத்தில் பேசித் தீர்த்துவிடுபவள் போல் பேசிக்கொண்டே சென்ற அனுஜாவிடம், அவளது 'பாவா' வை சேர்த்துவிட எண்ணி, ''ராகவா, மாப்பிள் ளைக்கு போனை போடு'' என்றார் சரவணப்பாண்டியன்.

அப்போது தான் நிஷாந்தின் ஞாபகம் ராகவனுக்கு வர, மனம் குன்றிப் போனான் அவன். இத்தனை நாட்கள், நிஷாந்தின் மீதும் தங்கையின் மீதும் வளர்த்து வைத்திருந்த கோபத்திற்கு அர்த்தமே இல்லை என்பது போல் அனுஜா

புலம்பித் தள்ளியதில், தங்கையின் ஆழ் மனது புரிந்துவிட, இவளைக் கட்டாயப்படுத்தி வேறொருவனுக்குக் கட்டி வைத்திருந்தால் காலம் முழுதும் வருந்தும் நிலையாகி இருக்குமே? என ராகவனின் நெஞ்சத்தில் சம்மட்டியாய் விழுந்தன கேள்விகள்.

பெரியவர்களின் மனம் நோகக் கூடாது என்பதற்காக, தன் இனிய தங்கையின் மனதை நோகடிக்க இருந்தோமே என மனம் வாடினான் அந்த தமையன். தங்கையின் மனது புரிந்த நிலையிலும், உணர்வற்ற நிலையிலும் தன் கணவனையே நாடும் அந்த பேதையின் நிலையைக் கண்டு நிஷாந்தின் மீது கோபம் துளிர்த்தது! இவ்வளவு அன்பாய் இருப்பவளைத் தன்னந்தனியாக தவிக்கவிட்டுச் சென்ற நிஷாந்தின் மீது சிறிதாய் இருந்த கோபத்தின் காரணமாக, தன் கைப்பேசியில் ரவீந்திரனின் எண்களை அழுத்திவிட்டுக் காத்திருந்தான்.

* * *

சென்னையிலோ, அனுஜாவின் முகவரி தெரியாமல் நிஷாந்தின் சக்தி கொஞ்சம் கொஞ்சமாய் வடிய ஆரம்பித்தது. இளவயது ஆண் பிள்ளைகள் இருவரும் அனுஜாவைத் தேடி வெளியே சென்றிருக்க, மூத்தவர்கள் மட்டுமே வீட்டில் எஞ்சி இருந்தனர்.

சம்மந்தி வீட்டுக்காரர்கள் இருக்கையில் சாதாரணமாய் உணர முடியாமல், மகளது புகுந்த வீட்டுச் சமையலறையில் ஒதுங்கி நின்றார் அனுஜாவின் தாயார்.

மனம் வேதனையில் மூழ்கியிருந்த போதும், கண்கள் அந்த அறையை வலம் வர, தன் மகளின் கைவண்ணத்தில் சிக்கென சிங்காரமாய் பராமரிக்கப்பட்ட அச்சமையல் கூடம் பளபளப்பதை ஓர் ஆச்சரியத்துடன்



கண்டார் அவர். தாய் வீட்டிலிருந்த காலங்கள் யாவும், சாப்பிடுவதற்குக் கூட சமையலறைப் பக்கம் எட்டிப் பார்க்காத பெண்ணா? என்று வியந்தார் அத்தாயார்! அரவங்காட்டில் இருக்கும் வரை, தட்டில் போட்ட உணவு அனுஜாவின் வயிற்றுக்குள் போக வேண்டுமென்றால், வீட்டுக் கூடத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் ஊஞ்சலில் அவளைத் தாலாட்டிச் சீராட்ட வேண்டியதாய் இருக்கும்.

''இன்னும் கொஞ்சம்டா.. ஒரே வாய்!'' எனத் தன் மாமியார், பதின்வயது அனுஜாவைக் கொஞ்சுவது கஜலக்ஷ்மியின் மனத்திரையில் வந்து போக, அப்பெண்ணா ஒரு குடும்பத்தின் தலைவியாய் சுடர்விடுகிறாள் என உள்ளம் சிலாகித்தது!

மேலாக பார்த்ததிலேயே மகளது நிர்வாகத்தில் பூரித்துப் போயிருந்த தாயார், ஓரோர் அறையாக திறந்து பார்த்து, அனுஜா வரிசையாக அடுக்கி வைத்திருந்த மளிகை சாமான்களையும், அவற்றின் மீது ஒட்டப்பட்டிருந்த பேர்களையும் கண்டு மெலிதாய் சிரித்தார். அவளது குண்டு குண்டு கையெழுத்தில், கொட்டை கொட்டையாய் மிளிர்ந்த எழுத்துக்களை, ஏக்கத்துடன் வருடிக்கொடுத்தவருக்குப் பெண்ணை உடனே பார்க்க வேண்டும் என்ற ஆசை மீண்டும் கிளம்பியது! ஆனால், பார்த்து சில மணி நேரங்களே ஆன மாப்பிள்ளையின் மீது அபார நம்பிக்கையும், அதை விடவும் மேலாய் ''அவர் வைத்திருக்கும் நேசத்திற்கு என் பெண்ணிடமிருந்து எதிரொலி இல்லாமல் போகிறது. கண்டிப்பாக வந்துவிடுவாள்- எங்களிடம் இல்லையென்றாலும் அவரிடம் வந்துவிடுவாள்! ஓரேயொரு விஷயம், அவளது உடல்நிலைக்கு எந்த பாதிப்பும் வந்துவிடக் கூடாது.

அவளைக் காத்து நில்!'' என்ற குரல் உள்ளிருந்து ஒலிக்க, மீண்டும் தன் பெண்ணின் அரசாங்கத்தைப் பார்வையிட்டார்.

மளிகை சாமான்களில் இருந்து, குளிர் சாதனப் பெட்டிக்குச் சென்ற அவரது பார்வை- அதன் கதவில் ஒட்டப் பட்டிருந்த சிறுசிறு காந்தப் பொம்மைகளின் நடுவே, தன் முகமே காந்தமாய் சிரிக்கும் செவ்வந்தி மலராய் மலர்ந்திருந்த மகளின் புகைப்படத்தில் நிலைத்தது. நடுங்கிய விரல்களால் அதை வருடியவரின் பார்வை வட்டத்தில், அனுஜா சேகரித்து வைத்திருந்த சமையல் குறிப்புக்கள் பட்டன.

அவற்றைக் கண்டதும், சமையல் தெரியாமல் மகள் தவித்திருப்பாளோ? கையைக் காலைச் சுட்டுக் கொண்டு சமையல் பழகினாளோ? சிறு வயதிற்கே உரிய சந்தேகங்கள் எழும்போது அவற்றை தீர்த்துக் கொள்ளும் வகை தெரியாமல் தடுமாறினாளோ? சொல்லித்தர ஆளில்லாமல் சமையல் புத்தகங்கள் வாங்கிவைத்து, அதைப் பார்த்து செய்தாளோ? சமையலுக்கே இப்படி என்றால் மற்ற விஷயங்களில் தாயின் துணியை வெகுவாய் நாடியிருப்பாளே? சின்னச் சின்ன விஷயங்களுக்கு எல்லாம்... மகளைத் தவிக்க விட்டுவிட்டோமே?! கடவுளே! தாயென்று நான் ஒருத்தி குத்துக்கல்லாய் இருக்கும்போது, என் பெண் எத்தனை துன்பம் அனுபவித்து விட்டாள்? உடல் வேதனை இருக்கட்டும்? மனதால் என்னை அவள் நாடியபோது இல்லாமல் போனேனே!- என்ற எண்ணங்கள் இடைவிடாமல் தாக்க, அப்படியே மடிந்து அமர்ந்தவருக்கு அழுகை வெடித்தது!



கஜலக்ஷ்மியின் அழுகை சத்தம் கேட்டு, வீட்டு வாசலில் நின்று மகனின் வரவை எதிர்பார்த்திருந்த நிஷாந்தின் பெற்றோர் உள்ளே விரைந்தனர். சில மணி நேரங்கள் முன்னரே அறிமுகமான அவரை நெருங்க, பத்மாவதிக்கு சிறிது தயக்கமாய் இருந்தபோதும், ஆற்றுவார் தேற்றுவாரின்றி அவர் அழுவதைப் பார்த்து ''பத்மா, அவங்களை சமாதானப் படுத்து!'' என்ற தரணிதரனின் வார்த்தைகள், பத்மாவதியை நகரவைத்தனர்.

''அழாதீங்க.. அண்... அண்ணி'' என லேசாய் திக்கிய பத்மாவதி, கஜலக்ஷ்மியின் கைகளை மென்மையாய் பற்றி எழுப்ப, அவரும் சிறு தயக்கத்தின் பின்னர் மெல்ல எழுந்தார்.

வேறு என்ன பேசுவது என்று தெரியாமல் ''அனுஜா கிடைச்சிடுவா! கவலைப்படாதீங்க!'' என தரணிதரன் தேற்ற, ''இந்தாங்க கொஞ்சம் தண்ணி குடிங்க'' என நீட்டினார் பத்மாவதி. அதன் பின்னர், அவர்கள் மூவரும் தனித்தனியாய் அமர்ந்திருக்கவில்லை.

சில நூறு நிமிடங்கள் கழித்து வீடு வந்த நிஷாந்தும், ரவீந்திரனும் சோர்வின் உச்சியில் இருக்க, நிஷாந்தின் முகம் மூன்றே மணி நேரங்களில் முப்பது வயது மூத்து தெரிந்தது!

அவனது முகமே தேடல் காய் என்பதைக் காட்டிவிட, தலையை அழுந்த கோதிக் கொண்டு அமர்ந்த மகனின் கையிலும், அவனது மச்சினன் கையிலும் எலுமிச்சை சாறைக் கொடுத்தார் பத்மாவதி.

சில பல நிமிட மௌனத்திற்குப் பின்னர், ''கவலைப் படாதீங்க மாப்பிள்ளை! எங்க பொன்னையா அனுஜாவைக் காப்பாத்துவார்!'' என கஜலக்ஷ்மி விசனத்தினூடே மொழிய, நிஷாந்தின் முகம் பிரகாசமானது!

ரவீந்திரன் புறம் திரும்பியவன் ''ரவீவீ! ஒருவேளை.. அஜூ உங்க குலதெய்வம் கோவிலுக்குப் போயிருப் பாளோ? அந்த கோவில்ல செய்த சத்தியத்தை நிறை வேற்றலை, இன்னொரு தடவை போகணும்ன்னு சொன்னா... நான் தான் அந்த நேரத்தில் அங்க வந்தா... வார்த்தை தடிச்சு, அவ மனசு சங்கடப்படும்ன்னு வேண் டாம்ன்னு சொன்னேன். அதை மனசில வச்சுட்டு.... அங்கே போயிருக்கலாம் இல்லையா? அவளோட பழைய ஹாஸ்டல், பிரண்ட்ஸ் வீடு, வேற ஹாஸ் பிடல்ன்னு சுத்தினதுக்கு... இப்படி யோசிச்சிருக்கலாமே! அஜூ, அங்க தான் போயிருக்கணும்... கண்டிப்பா....'' என அவன் உறுதியாய் பேசிக் கொண்டிருக்கும் போதே, ரவீந்தரனின் கைப்பேசி கிணுகிணுத்தது!

அந்தப் பக்கம் ''பெரியப்பா, இந்தாங்க ரவி நம்பருக் குப் போட்டிருக்கேன். பேசுங்க'' என ராகவன் நகர்ந்து விட, அழைப்பை எடுத்த பெரிய மகனிடம் ''ரவி, மாப் பிள்ளைகிட்ட கொடு'' என்றார் சரவணப்பாண்டியன் கரகரத்தகுரலில்.

''மாப்பிள்ளையா?'' என அவன் வாயைப் பிளக்க, ''ஆமாம்டா. கொடு!'' என்றார் பெரியவர்.

''நிஷாந்த்.. இந்தாங்க பெரியப்பா பேசுறாங்க'' என்ற அறிவிப்போடு, தங்கை கணவனிடம் கைப்பேசியைக் கை மாற்றியவன், வெளுத்த முகத்துடன் அச்செயலைத் தடுக்க முயன்ற கஜலக்ஷ்மியின் கைப்பிடித்து நிறுத்தி னான்.

சரவணப்பாண்டியன் தன்னிடம் பேசவேண்டும் எனக் கூறியதே நிஷாந்திற்குப் பெரும் வியப்பு தான் என்றபோது, ''மாப்பிள்ளை'' என்ற அழைப்பில் வியப்பும்,



''என்னை மன்னிச்சிடுங்க மாப்பிள்ளை'' என்ற வார்த் தைகளில் பெரும் அதிர்ச்சியும் உண்டாகின.

''என்ன மாமா... சொல்லுங்க... பெரியவங்க நீங்க... உங்களை நான்..'' என அவன் தடுமாற, ''அதெல்லாம் அப்புறம் பேசிக்கலாம் மாப்பிள்ளை. அனுஜா இங்க தான் இருக்கா... ஆஸ்பத்திரில சேர்த்திருக்கோம்... மயங்கின நிலையிலும் உங்க நினைப்புத் தான் அவளுக்கு.. சீக்கிரம் அவனது என் பெண்ணை எனக்கு மீட்டுக் கொடுங்க'' என்றவரின் குரல் அழுகையிலும் முழுதாய் தொலைந்திருந்தது.

''கடவுளே! அஜூ.. அங்க இருக்காளா? நான் நினைச் சேன்.. குல தெய்வம் கோவில்ல இருந்தாளா? நான் சொல்றதை கேட்காம...ப்ச்.. இப்போ எப்படி இருக்கா? தையல் போட்ட இடத்தில் எதுவும் பிரச்சனையில் லையே?'' என அவன் பரபரக்க,

''இல்ல.. தையல் போட்டிருந்த இடத்தில.....'' என அவர் தயங்க, ''என்ன மாமா? அஜூ நல்லா இருக்கா தானே? மாமா.. ப்ளீஸ்! தயவு செஞ்சு சொல்லுங்க... என்னால இந்த வேதனையை தாங்க முடியலை மாமா. மனசை அறுத்து வெளியே போட்ட மாதிரி வலிக்குது. அவ எனக்கு வேணும்.. ப்ளீஸ்..அஜூ எப்படி இருக்கா? அவளுக்கு ஒண்ணுமில்லையே?'' என உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நிஷாந்த் வினவ, அவனைத் தோளோடு அணைத்தார் அவனது தந்தை.

மகனை நேரில் பார்த்த பெற்றோருக்கு வேதனை என்றால், அவனது குரலை மட்டுமே கேட்ட மாமனா ருக்கு உருகித் தான் விட்டது. ''தையல் பிரிஞ்சிருக்கு ஆனா, அவ நல்லா இருக்கா. இன்னும் கொஞ்ச

நேரத்தில் முழுசா தெளிஞ்சிடுவா. நீங்க சீக்கிரமா வந்துடுங்க'' என்றார் கண்ணீருடன்.

''நாங்க உடனே வரோம்'' என்றவன், ''அம்மா, அஜு கிடைச்சுட்டா!'' என்றபோது அவனது குரலில் அழுகையையும் மீறி நிம்மதியே நிறைந்திருந்தது.

''எங்கே இருக்கிறாள்?'' என்ற செய்தியே தெரியாமல் இருப்பதை விட, அவளது இருப்பிடமும், மோசம் தான் என்றாலும் மிக மோசத்திற்குச் செல்லாத அவளது உடல்நிலையும் அவனை நிம்மதியடையவே செய்தது. அந்த நிம்மதியின் விளைவாக, சோபாவில் தொய்ந்து அமர்ந்தவனின் கண்களில் கண்ணீர் அவனையும் மீறி வழிந்தது!

மருமகள் கிடைத்ததில் அடைந்த சந்தோஷத்தை விட, மகனின் தவிப்பு குறைந்ததில் மிகுந்த சந்தோஷம் கொண்ட நிஷாந்தின் பெற்றோர் அவனது தலையை ஆதுரமாய் கோதி விட்டனர்.

மனதை ஆக்கிரமித்த முதல் உணர்வு நிம்மதியாய் இருந்தபோதும், தன்னிடம் ஒரு வார்த்தை சொல்லாமல் அனுஜா குன்னூர் வரை கிளம்பிச் சென்றது நிஷாந்தின் மனதை அறுத்தது; அதுவும் அறுவை சிகிச்சை செய்து ஒரு வாரம் கூடாத தாண்டாத இந்நிலையில், தன்னிடம் மறைத்து, பிறந்து வீடு சென்றிருக்கிறாள் என்றால்.. தன் மீதிருந்த காதல் குறைந்துவிட்டதோ? ஒரு முறை அவளை அங்கே அழைத்துச் செல்லாமல் போனதுதான்.. இப்போதும் அப்படியே செய்வேன் என்று எண்ணிவிட்டாளோ? என் மேலிருந்த நம்பிக்கையில் மண் விழுந்து,



அவளாகவே அங்கே கிளம்பிச் சென்றுவிட்டாள் இல்லையா? என மனதின் ஓரத்திலிருந்த எண்ணங்கள், விமானம் மூலமாக கோயம்புத்தூர் சென்று, கார் வழியே குன்னூரை எட்டும் போது மனதை முழுதாய் அடைந்திருந்தன.

மருத்துவமனை வாயிலிலேயே நின்றிருந்த ராகவன், நிஷாந்தின் முகம் பாராமலே ''வாங்க'' என் வரவேற்றாலும், அவனது தாய்-தந்தையரை ''வாங்க மாமா, வாங்க அத்தை. அனுஜாவுக்கு மயக்கம் இப்போ தான் தெளிஞ்சிருக்கு. வாங்க, போய் பார்க்கலாம்'' என முறையே அழைத்துச் செல்ல மறக்கவில்லை.

எட்டுக்களை வேகமாய் போட்டு அனுஜாவின் அறையை எட்டிய நிஷாந்த், அயர்வுடன் படுத்திருந்த மனைவியைக் கண்டதும் தான் இழுத்துவைத்திருந்த மூச்சை மெல்ல வெளியே விட்டான். ஒரு பக்கம் தந்தை, மறுபக்கம் சிறிய தாயார்கள், தலைபக்கதில் சிறிய தந்தை, காலடியில் அத்தைமார் என சொந்தங்கள் புடை சூழப் படுத்திருந்த அனுஜாவின் முகத்தில் அயர்வையும் மீறி மின்னல் கீற்றாய் ஓர் புன்னகை ஓடியதை, கணவன் கவனிக்காமல் இருக்கவில்லை.

அவன் பின்னே வந்து நின்ற தரணிதரன், அவனது தோள் தொட்டு விலக்கிவிட்டு உள்ளே நுழைய, அது வரை தந்தையிடமே நிலைத்திருந்த அனுஜாவின் கண்கள் வாசலில் பட்டது.

புகுந்த வீட்டுச் சொந்தங்களின் வருகை அதிர்ச்சியை கொடுத்த நிலையில், அறைவாசலில் நின்றிருந்த கணவனின் கண்களை ஊடுருவ முயன்று, அதில் தெரிந்த கோபத்தில் தலைகுனிந்தாள் அனுஜா.

அவள் மனதின் வாட்டத்தை நீடிக்க விடாமல் ''அனுஜா, எப்படிம்மா இருக்கே? எங்களையெல்லாம் இப்படி தவிக்க விட்டுட்டியே? எங்களை விடு... உங்களை ஒதுக்கி வச்சதுக்குத் தண்டனையா எடுத்துக்கிறோம். நிஷாந்த் ரொம்ப தவிச்சுப் போய்ட்டான்மா'' என்ற ஆறுதல்/ ஆதங்க வார்த்தையுடன் அவளை நெருங்கினார் தரணிதரன். அவரைப் பின் தொடர்ந்த பத்மாவதியைக் கண்டு மேலும் அதிர்ந்த அனுஜாவிற்கோ பதில் பேச முடியாத நிலை!!

அவளது அதிர்ச்சியை மேலும் கூட்டும் வண்ணம்- ''எப்படிம்மா இருக்கே? இனிமேல் எங்க போறதா இருந்தாலும்... நிஷாந்த்கிட்ட சொல்லிட்டுப் போம்மா. அவன் கூட்டிட்டுப் போவான்...உன்மேல உயிரையே வச்சிருக்கறவன் செய்ய மாட்டானா என்ன?'' என வார்த்தைகளைத் தேடித் பிடித்துப் பேசிய பத்மாவதிக்கும் பதில் சொல்ல முடியாத நிலையிலிருந்தாள் அனுஜா.

அதற்குள் அனுஜாவின் அருகே வந்திருந்த அவளது தாயார், மனதின் உடல்நலத்தைக் கண்களால் ஆராய்ந்து திருப்தி கொண்ட நிலையில், பல வருட எதிர்ப்பிற்குப் பின்னர் ஒன்று கூடியிருக்கும் புகுந்த வீட்டுச் சொந்தங்களிடம் அவளுக்கு அவப்பெயர் வந்துவிடக் கூடாது என்ற எண்ணத்தில் ''அனு.. என்ன இது சின்னபிள்ளை மாதிரி? வந்தவங்களை வாங்கன்னு கேட்கக் கூடத் தெரியாம படுத்திருக்கே?'' என மென் குரலில் அதட்டினார்.

அந்த குரலில் திகைத்துத் திரும்பிய அனுஜா, அன்னையின் முகம் பார்த்து மலர்ந்த வினாடி, அவரது கண்கள் சொல்லிய சேதியையும் ஒழுங்காக படித்து ''வாங்க மாமா, வாங்க அத்தை! நீங்க...நீங்க.... என்னைப்



பார்க்க...ம்ஹ்ம்ம்.... எங்க தப்பை மன்னிச்சு, எங்களைப் பார்க்க வந்ததில் எனக்கு ரொம்ப சந்தோசம். பாவைக்கு உங்க பேச்சைக் கேட்க முடியலைன்னு ஒரே வருத்தம்... தினம் ஒரு வாட்டி ''கொஞ்சம் காத்திருக்கணும் அஜு. அவசரப்பட்டுட்டோம்''ன்னு சொல்லுவாங்க.... ரொம்ப ரொம்ப நன்றி!'' எனப் பெரிய மனுஷியாய் நன்றியுரைத்தாள்.

''என்னம்மா இது... நன்றியெல்லாம் சொல்லிக்கிட்டு...'' எனத் தரணிதரன் தொடங்க, ''நல்லபடியா உடம்பைத் தேத்திக்கிட்டு, நீயும் உன்னோட பாவாவும் டெல்லி வாங்க. என் ஆசை தீர.. உங்களை வச்சிருந்து அனுப்புறேன்'' என அழைத்தார் பத்மாவதி.

''கண்டிப்பா அத்தை! நீங்களும் சென்னை வாங்க... உங்களை மாதிரி இல்லைன்னாலும் நானும் ஓரளவு சமைப்பேன்'' என அவள் வரவேற்றதும், ''உன்னோட கண்ணில தெரியுற குழந்தைத்தனத்திற்கும், இந்த பொறுப்புக்கும் கொஞ்சமும் ஒத்துவரலைம்மா. நீ குழந்தையாவே இரு... என் மகன் பொறுப்பா இருந்து உன்னையும், குடும்பத்தையும் பார்த்துப்பான்'' என சிரித்தார் தரணிதரன்.

அதன் பின்னர், தங்களது ஒரே பெண்ணின் மாமனார் மாமியாரைத் தகுந்த மரியாதையுடன் வீட்டிற்கு அழைத்துச் சென்ற அனுஜாவின் தாய் வீட்டினர், அவர்களுக்கு ராஜ உபச்சரணை செய்து, மனதைக் குளிர்வித்தனர்.

தரணிதரனும்-பத்மாவதியும் கிளம்பிய மறுவினாடி அனுஜாவின் பார்வை நிஷாந்தைத் தொடர, அவர்களது மௌனப்பரிபாஷையைத் தொடரவிடாமல், அனுஜாவின் தந்தை சரவணப்பாண்டியன் தன் சார்பாய் ஓர்

மன்னிப்பு படலத்தை நிஷாந்திடம் நடத்தினார். ''பெண்ணோட மனசு தான் முக்கியம்ன்னு நினைக்காம... என்னென்னவோ நினைச்சு உங்க ரெண்டு பேரையும் விலக்கி வச்சுட்டேன். நான் செய்தது தப்புன்னு உணர்வதற்கு.. என் பெண் சாகக் கிடந்தது. அந்த நிலையிலும் உங்க பெயரைச் சொல்லி... என் மண்டையில் ஓங்கி அடிச்சுட்டா. தயவு செய்து மன்னிச்சிடுங்க!'' என அவர் கைகூப்ப, ''என்ன மாமா!'' என அவரது கைகளைப் பிடித்துக் கொண்ட நிஷாந்த், ஆறுதல் வார்த்தைகளால் அவரைச் சமாதானம் செய்தான்.

சில பல நிமிடங்கள் நடந்தேறிய அந்தப் பாசப்பிணைப் பிற்குப் பின்னர், இரவு கனிந்து விட்டதால் நிஷாந்தை வீட்டிற்குச் செல்லுமாறும், அனுஜாவிற்குத் துணையாக தான் அங்கு இருப்பதாகவும் கூறினார் கஜலக்ஷ்மி.

''இல்லை. அனுஜாவோட நான் இங்க இருக்கேன்'' என நிஷாந்த் மறுக்கையிலேயே, ''இல்லை மாப்பிள்ளை... ஒரு பெண் துணை...'' எனத் துவங்கிய தாயாரை இடைமறித்த அனுஜா., ''நீங்க விட்டுக்குப் போங்கம்மா. பாவா... என்னைப் பார்த்துப்பாங்க'' என்றாள் கெஞ்சுதலாக.

கணவன்-மனைவிக்குத் தனிமை கொடுத்து அனைவரும் விலகிச் சென்றுவிட்ட பின்னரும் கூட, நிஷாந்த் அனுஜாவிடம் வரவில்லை. மாறாக, தான் எடுத்து வந்திருந்த அவளது மருத்துவ அறிக்கைகளை எடுத்துக் கொண்டு, அந்த மருத்துவமனை மருத்துவரிடம் சென்றவன், அரை மணி நேரம் சென்று திரும்பி வந்தான். அதன் பின்னரும், தான் கேட்டத் தகவல்களைச் சென்னை



மருத்துவரிடம் பகிர்ந்தவன், மனைவியின் உடல்நலம் பற்றி தீர விசாரித்தான்.

அந்த விசாரணைகள் முடியும் தருவாயில், அனுஜாவின் ''பாவா'' என்ற அழைப்பு ஈன சுவரத்தில் வெளிவர, அவளை ஒரு முறை திரும்பிப் பார்த்தவன், மேலே ஏதும் பேசாமல் உடனிருப்போருக்கென இருந்த இருக்கையில் அமர்ந்தான்.

''என்ன பாவா'' என ஏமாற்றம் முழுதாய் வெளியான குரலில் பேசிய அனுஜா, சட்டென கட்டிலை விட்டு எழ முற்படவும், மின்னல் வேகத்தில் அவளிடம் வந்து சேர்ந்த நிஷாந்த் ''சொல்றதைக் கேட்கக் கூடாதுன்னு புதுசா ஏதாவது சத்தியம் செய்திருக்கியா?'' என்றான் கடுமை நிறைந்த குரலில்.

அதற்குப் பதிலாய் அனுஜாவின் கண்களில் நீர் எட்டிப் பார்க்க, ''என்னடி அழுகை? உன் கண்ணில தண்ணி வந்தா.. நான் உன்னை நல்லா வச்சுக்கலைன்னு அர்த்தம்ன்னு சொல்லியும் அழறன்னா... நான் உன்னை நல்லா வச்சுக்கலை அப்படித்தானே? என்ன அப்படித் தானே.... அப்படியே தான். உன் மனசை நான் ஏதோ ஒரு வகையில காயப்படுத்தியதால் தானே சொல்லாம, கொள்ளாம இங்க வந்து ஆஸ்பத்திரியில படுத்திருக்கே?'' என அவன் கடியவும், அனுஜா பல்லைக் கடித்து கண்ணீரை அடக்கினாள் சட்டென எழுந்தாலும், பொங்கிப் பெருகிய கண்ணீராலும் தையல் போட்ட இடத்தில் வலி எழ, ''வலிக்குது பாவா'' என முகம் சுளித்தாள் மனையாள்.

அந்த நிமிடம் வரை இழுத்துப் பிடித்திருந்த கோபம் மூடு பனியென மறைய, ''எங்கடா? எங்க அஜுமா

வலிக்குது? தையல்போட்ட இடத்திலேயா அஜு வலிக்குது... இரு டாக்டரை கூப்பிடுறேன்'' எனத் துடித்துப் போனான் கணவன்

''ம்ஹூம். சரியாகிடும். டாக்டர் வேணாம். ப்ளீஸ்.. நீங்க என்கூட இருந்தாவே வலி சரியாகிடும்'' என்ற அனுஜா, அவனை ஆசையாய் பார்க்கவும், கணவனுக்கு உருகிவிட்டது!

''நான் என்ன உன்னை மாதிரியா? உன்னை விட்டு எங்கேயும் போக மாட்டேன்!'' என்றவனிடம் ''நீங்களும் தானே போனீங்க? எனக்கு அவ்வளவு வருத்தமா இருந்தது தெரியுமா...'' எனத் தன் துன்பத்தைப் பகிர்ந்தாள்.

''என் வேலை பற்றி தெரியாத அஜு உனக்கு?'' என அவன் துவங்கும் போதே, ''அது ரெண்டு நாள் தானே.. அப்புறமும் நீங்க வரலை தானே? எனக்கு அப்போவெல்லாம் ஒரே அழுகை அழுகையா வந்துச்சு...'' என இடையிட்ட அனுஜாவால்- ''அனாதை'' என்ற வார்த்தையை இப்போது உதிர்க்கும் எண்ணம் கூட சிறிதும் வரவில்லை.

''அங்கிருந்த நிலைமை உனக்குத் தெரியுமா? எரிமலை வெடுச்சு.. ஒரு ஃப்ளைட் கூட உடலை. எனக்கு மட்டும் அங்க இருக்கணும்ன்னு ஆசையா என்ன? அங்கிருந்த ஒரொரு நிமிஷமும்....''ஹய்யோ என்னோட அஜு.. தனியா இருக்காளே'' ன்னு மனசு கிடந்து என்ன பாடு பட்டுச்சு தெரியுமா? புரிஞ்சுக்கோ அஜு'' என நிஷாந்த் கெஞ்சும் குரலில் வற்புறுத்தவும், ''ம்ம் சரி'' என்ற அனுஜாவிற்கு முழுதாய் சமாதானம் ஆகவில்லை என்பது நிஷாந்திற்குப் புரிந்தது.



''அசுக்கு இன்னும் கோபம் குறையலைன்னு நினைக்கிறேன். நடந்ததை மாத்த முடியாதுகிறதால...இனிமேல் இது போல் நடக்காம பார்த்துக்கிறேன்னு உறுதி கொடுக்கிறேன். போதுமா? கொஞ்சமா சிரிக்கிறா பேபி?'' என அவன் கொஞ்சவும், அனுஜாவின் முகத்திலும் வெட்கச் சிரிப்பு குடிபுகுந்தது.

மனைவியின் மதி முகத்தில் வெண்பனி என சிரிப்பு படரவும், அருகில் அமர்ந்து- நெற்றி, கண்கள், கன்னம், உதடு என மென்மையாய் வருடிய நிஷாந்தின் கைகள்- அவளது அடி வயிற்றை அடைந்தபோது ''என்னம்மா பயமுறுத்திட்டே அஜு! எங்க உன்னை இழந்திடுவேனோன்னு பதறிப் போயிட்டேன். உலகமே இருண்ட மாதிரி... அப்பா - அம்மா திரும்ப வந்தப்போ கூட எனக்குன்னு எதுவுமே இல்லாத மாதிரி நெஞ்சே காலியா கிடுச்சு அஜு. இனிமேல் என்ன கோபம் என்றாலும் என்னைவிட்டுப் போகக் கூடாது சொல்லிட்டேன்! என் கூடவே இருந்து என்னோட சண்டை போட்டாலும் சரி, அடிச்சாலும் சரி, பேசாமல் இருந்தாலும் சரி... என்னை விட்டுப் போற வேலை வச்சுக்கக் கூடாது'' என்ற கணவனிடம் ''சரி'' என வேகமாய் மண்டையை ஆட்டினாள் அனுஜா.

''மண்டையை நல்லா உருட்டு. ஆனா, அதுபடி நடக்க மட்டும் செய்யாதே! கழுதை! எதுக்குடி... இவ்வளவு அவசரமா இங்க கிளம்பி வந்தே? உங்க அப்பா - அம்மாவைப் பார்க்கணும் போலிருந்தா... என்கிட்டே சொல்ல வேண்டியது தானே?. அதை விட்டுட்டு... எல்லாரையும் கலங்கடிச்சு. நல்லா நாலு சாத்து சாத்தணும்!''

என்றான் நிஷாந்த், மனைவியின் மூக்கைப் பிடித்து ஆட்டியவாறே.

''ஹையே! பொய்! நான் கேட்டப்போ...கூட்டிட்டு வந்த மாதிரியே சொல்றீங்க?'' என அவளும் சீண்ட, ''நினைச்சேன். அதை மனசில வச்சுக்கிட்டுத் தான் இந்த கிறுக்கு... குலதெய்வம் கோவிலுக்குக் கிளம்பிப் போயிருக்குன்னு'' என நிஷாந்த் பல்லைக் கடிக்க, ''சும்மா, சும்மா என்னையே திட்டாதீங்க பாவா!'' எனச் சிணுங்கினாள் அனுஜாவிற்குத் தனது எண்ணம் தப்பு என்பது புரிந்துவிட்ட நிலையில், அவனது கேலியை எப்படித் தான் மறுப்பாள் அவள்!?

அடுத்து வந்த அரை மணி நேரம், இடைப்பட்ட காலத்தில் தாங்கள் தொலைத்திருந்த மகிழ்ச்சியை மீட்கும் வகையில் சீண்டலும் சிணுங்கலும், உல்லாசமும் உற்சாகமும், நிம்மதியும் சந்தோஷமும், முத்தமும் மிச்சமுமென எனக் கழிந்தது.

அதன் பின்னரும் ''அசதியா இருக்கும் அஜூ, தூங்குடா...'' எனக் கணவன் கெஞ்ச, ''இன்னும் கொஞ்ச நேரம் பாவா.. உங்க வீட்டிலையும், எங்க வீட்டிலையும் நம்மளை சேர்த்துக்கிட்ட சந்தோஷத்தில எனக்குத் தூக்கமே வரமாட்டேங்குது!'' எனக் குழந்தையாய் சீராடினாள் அனுஜா!

''ம்ம். சொந்த பந்தம் என்று நிறைய நல்ல உள்ளங்கள் சூழ வாழ்றது எத்தனை சந்தோசம்!? நம்மளோட அவசரக்கல்யாணத்திற்குத் தண்டனையா இத்தனை நாள்... அந்த சந்தோசம் நமக்குக் கிடைக்காம போய்டுச்சு. அதுவும் நல்லதுக்குத் தான்! நாமளும் நம்ம தப்பை உணர்ந்து, உறவுகளோட அருமையை புரிஞ்சுக்கிட்டோம்



இல்லையா?'' என நிஷாந்த் புன்னகையுடன் வினவ, ''ஆம்'' என அழுத்தமாய் தலை அசைத்தாள் இல்லாள்!

## 18

அனுஜாவின் மருத்துவமனை வாசம் இரு தினங்களில் முடிவடைய, அந்த இரு தினங்கள் மட்டுமல்லாது கூடுதலாய் ஒரு தினமும் நிஷாந்தின் வீட்டினர் அரவங்காட்டிலேயே வாசம் செய்தனர். இரு வருடங்களாய் கிடைக்காத 'மாப்பிள்ளை' உபச்சரணையை இரண்டே தினங்கள் நிறைவு செய்யும் விதத்தில், விருந்து தூள் பறந்தது!

விருந்தும், மருந்தும் மூன்று நாளுக்கு என்ற கணக்கில் தரணிதரனும், பத்மாவதியும் கிளம்பினர். மருமகளிடம் விடைபெறும் போது ''அனுஜா, நீ சென்னை வந்ததும் உடனே வேலைக்குப் போக வேண்டாம். டாக்டர் சொன்ன ஒரு மாசத்துக்கும் மேலா... இன்னும் கொஞ்ச நாள் கூட ரெஸ்ட்-ல இருந்துக்கோ. அப்புறம் வேலைக்குப் போகலாம். நான் அடிக்கடி வந்து பார்த்துக்கிறேன்! ஹ்ம்ம் இன்னொன்னு... சொல்லாம கொள்ளாம இங்கே யாவது கிளம்பிப் போனேன்னு தெரிஞ்சது நல்ல நாலு சாத்துப்படி கொடுப்பேன் தெரிஞ்சுக்கோ? என்ன?'' என அக்கறையும், கண்டிப்புமாய் பத்மாவதி பேசவும், அனுஜாவின் தலை வேகவேகமாய் ஆடியது.

இதைக் கண்ட தரணிதரனும், நிஷாந்தும் கைகளால் வாயை மூடி சிரிப்பை அடக்க முயல, பத்மாவதியோ

''என்ன சிரிப்பு வேண்டிக்கிடக்கு? நீங்க ரெண்டு பேரும் தான் நான் சொல்றதைக் கேட்கிறதே இல்லை..... இவ சும்மா காட்டுக்கத்தலா கத்துவா! ஆனா, செயல்ல ஒண்ணுமிருக்காதுன்னு நினைப்பு, உங்களுக்கு! உங்களை மாதிரியில்லாம, என் சொல்பேச்சு கேட்கிறா இல்லையா.. அது சிரிப்பா தான் இருக்கும்'' என நொடித்தார்.

''அவ ஒரு பச்சைப்புள்ள, பத்மா! அதான் விவரம் தெரியாம மண்டையை ஆட்டுது. கவலையே படாதே. உன் உத்தமப்புத்திரன் அவளை சீக்கிரமே மாத்திடுவான்.

எப்படின்னு கேட்கிறியா? தலையை ஆட்டுற மாதிரி ஆட்டு அஜு... அப்புறம் நாம செய்றதை செய்துக்கலாம்.... அவங்க பேச்சை லூசுல விட்டுடுன்னு சொல்லித்தருவான் பாரேன்'' எனத் தரணிதரன் தூபம் போட,

''கிளம்புற நேரத்தில ஒரு களேபரத்தை உண்டு பண்ணாதீங்க டாடி!'' என நிஷாந்த் சிரிக்க, ''பாவா, அப்படியெல்லாம் செய்ய மாட்டாங்க அத்தை! அவங்களுக்கு உங்க மேல ரொம்ப மரியாதை!'' எனத் 'தன்னை' விட்டுத் 'தன் கணவனுக்காக' வாதாடினாள் அனுஜா.

அவளது பதிலில் நிஷாந்த் காலரைத் தூக்கிவிட்டுச் சிரிக்க, அவனது முதுகில் ஓர் அடி வைத்த பத்மாவதி ''இவனை அளவுக்கு அதிகமா நம்பாதே அனுஜா! சரியான திருகுதாளம் பிடிச்சவன்'' என மகனைப் பற்றிய புகழ் பாடிய கையோடு ''அனுஜா, உங்க ரெண்டு பேருக்கும் இன்னும் வயசிருக்கு. இன்னும் ரெண்டு மூணு வருஷம் கழிச்சு குழந்தையைப் பத்தி கவலைப்படலாம் என்ன? இப்பவே, குழந்தை கிடைக்கலை, கிடைக்



கலைன்னு மனசை வருத்திக்கிறதை விட்டே விட்டுடணும். இந்த விஷயத்தில, நான் மட்டுமில்ல உங்க மாமா, அப்பா, அம்மா, சித்தி எல்லாருமே அப்படித் தான் நினைக்கிறாங்க. அதனால கவலையெல்லாம் மூட்டைக் கட்டி வச்சுட்டு சந்தோஷமா இருங்க'' என நிறைந்த மனதுடன் வாழ்த்திவிட்டு, டெல்லி நோக்கிப் பயணப்பட்டார்.

பெண்ணின் புகுந்த வீட்டு உறவுகள் கிளம்பிய பின்னர், எங்கே மகளையும் மாப்பிள்ளை அழைத்துச் சென்றுவிடுவாரோ என்ற பதைப்பில் ''மாப்பிள்ளை, அனுக்கு உடம்பு சரியாகும் வரை... அவள் இங்கேயே இருக்கட்டுமா?'' என மெல்லக் கேட்டார் சரவணப்பாண்டியன்.

''கண்டிப்பா மாமா! எனக்கும் ஆபீஸ்-ல நிறைய வேலையிருக்கு...இப்போ ஐரோப் போயிட்டு வந்த ரிப்போர்ட், ப்ராஜெக்ட் வேலை எல்லாம் கவனிக்கணும். அதனால அனுஜா இங்கேயே இருக்கட்டும். ஒரு மாசமோ, அதுக்கு மேலவோ அவளை இங்க வச்சு.. நல்லா சீராட்டி அனுப்புங்க'' என அவன் புன்னகையுடன் சம்மதம் கூற, அங்கிருந்தோர் நெஞ்சம் முழுதும் நிறைந்தது.

மேலும் இரண்டு நாட்கள் தங்கிவிட்டு, ஊருக்குக் கிளம்புவதற்கு முன்தினம் மனைவியைத் தனிமையில் சந்தித்த நிஷாந்த், அவளைக் கை வளைவில் கொண்டு வந்து ''அஜுகுட்டிக்கு இப்பே சந்தோஷமா? ரெண்டு வீட்டோட கோபமும் குறைஞ்சு... மறைஞ்சே போச்சு! எல்லாரும் உன்னைத் தாங்கோ தாங்குன்னு தாங்குறாங்க! ஒரே ஹாப்பியா?'' என்றான் அவளது மூக்கோடு தன் உதடுகளை உறவாட வைத்தவாறே!

''ம்ம் ஹாப்பி - ஒ - ஹாப்பி! ஆனா....'' என அவள் இழுக்கவும், ''என்னடி ஆனா.. ஆவன்னா... அடுத்து என்ன?'' என்ற நிஷாந்தின் எரிச்சல் குரலுக்கு மாறாக, அவனது உதடுகள் மனைவியின் சிவந்த முகத்தை வலம் வந்தது.

''எனக்கு வயுத்தில கட்டி இருந்துச்சு இல்லையா... அதனால....நமக்குப் பாப்பா...'' என அனுஜா முடிப்பதற்குள், அவளது முதுகில் சுள்ளென ஓர் அடி விழுந்தது.

''ஒண்ணு இல்லைன்னா இன்னொண்ணு.... எதுக்காவது கவலைப்பட்டுடே இருக்கணுமா? டாக்டர் தான் சொல்லியிருக்காங்க இல்லையா.... இன்னும் மூணு மாசத்தில் நல்ல ரிசல்ட் கிடைக்கணும்ன்னு... அப்புறம் என்ன? இன்னொரு தடவை.. பிள்ளை, குழந்தை, கர்ப்பம்ன்னு வாயைத் திற... முன்ன மாதிரி பேசிட்டு இருக்க மாட்டேன். நேரா அடி தான்...'' என அவன் மிரட்ட, ''அதில்லை பாவா...'' எனத் தொடங்கிய அனுஜாவின் உதடுகளுக்கு நிஷாந்தின் உதடுகள் பூட்டாய் அமைந்ததில், குழந்தையின் ஞாபகத்தைத் தன் மனையாள் எனும் குழந்தையின் மனதிலிருந்து விரட்டியடித்தான் நிஷாந்தினுள் குடியிருந்த மன்மதன்!!

அடுத்த நாள் காலையில் அனுஜாவின் பிறந்தகத்தை விட்டு வெளியே வரும் முன்னர் ''உன் ஆசைப்படி அம்மா - அப்பாவோட எத்தனை நாள் வேணும்னாலும் இருந்திட்டு வா. அப்புறம்... பாவா அனுப்பலை... நானே போறேன்னு நீ பாட்டுக்குக் கிளம்பிடப் போறே? என்ன கிளம்புவே தானே?'' என நிஷாந்த் சீண்ட, அவனது சீண்டல் புரியாமல் மேலும் கீழுமாக தலையாட்டிய அனுஜா...''ஹ்ம்ம் போங்க பாவா!'' என இடம் வலமாக ஆட்டி முடிந்தாள்.



''எங்க போறது? கிட்டத்தட்ட ஆறு மாசத்துக்கு அப்புறம் இப்போ தான் உன் முகமே தெளிஞ்சிருக்கு... அப்படியிருக்கையில் என்னை அப்படியே கட்டி இழுக்குதே?!'' என அவள் புறம் சாய்ந்த நிஷாந்த், ''இன்னுமொரு மாசத்திற்கு நான் மட்டும் தனியா இருக்கணும்.. ஹ்ம்ம்... கல்யாணமாகி முதல் தடவையா ஒரு மாசத்துக்கும் மேலா தனியா இருக்கப்போறோம்'' என ஏக்கப் பெருமூச்சு விட்டான்.

''ம்ம். ஆமா!'' எனத் தானும் ஏங்கிய அனுஜா, ''சிம்பிள்! நீங்களும் இங்க இருந்திடுங்க பாவா.... கொடைக்கானல் போலாம்.... எனக்கு அங்க கோக்கேர்ஸ் வாக்-ல நடக்க ரொம்பப் பிடிக்கும். அதுவும் மழை சாரல்-ல நடந்தா சூப்பர்ரா இருக்கும். அப்புறம்.. குன்னூர்... கொல்லி மலை அம்மன் கோவில்.. ஹ்ம்ம்.... பூம்பாரை-ல ஒரு அருவி இருக்கு... அங்க.. ப்ளீஸ், ப்ளீஸ் இங்கேயே இருங்க பாவா'' எனச் சுலபமாய் வழி கண்டுபிடித்தாள் மனையாள்.

''உங்க சிம்பிள் சொலுஷன் பார்த்து... எனக்கு அப்படியே ஷாக் ஆகிடுச்சு'' என வடிவேல் பாணியில் நிஷாந்த் சிரிக்க, ''ஏன் நிஷு?'' என்ற அனுஜாவின் முகம் வாட்டத்தைக் காட்டினாலும், அங்கங்கே சிரிப்புப் பூக்கள் பூத்திருந்தது.

''உன்னை பெட் ரெஸ்ட்-ல இருக்கச் சொல்லியிருக்கார் டாக்டர். அது ஞாபகம் இருக்கா? ஞாபகம் இருக்க மாதிரி எனக்குத் தெரியலை... மலை ஏறலாம்.... அருவில குளிக்கலாம்ன்னு குதூகலமா திட்டம் போடறே'' என நிஷாந்த் சிரிக்க, ''உங்களுக்கு மட்டும் ஞாபகம் இருக்காக்கும். பெட் ரெஸ்ட்-ல இருக்கும்

போது.. எப்படி நாம... ஒன்... ஹய்யையோ! அம்மா கூப்பிடற மாதிரி இருக்கு நிஷு... நான் போறேன்'' எனச் சொல்ல வந்த வாக்கியத்தைப் பாதியில் முழுங்கியவள், கணவனின் கள்வன் பார்வையிலிருந்து தப்ப முயன் றாள்.

''எங்க...எங்க ஓடறே? பெட் ரெஸ்ட்-ல இருக்கும் போது... என்ன அஜுகுட்டி செய்யக் கூடாது? சொல்லு... சொல்லு.... சொன்னாத்தான் விடுவேன்'' என அவளை இறுக்கிப் பிடித்தவனின் கண்களில் விஷமம் வழிந் தோடியது!

அடுத்த இருபது நிமிடங்களில், ஒரு மாதத்திற்குப் பின்னர் நடக்கவிருக்கும் நிகழ்வுகளுக்குச் சின்ன முன்னுரை நிகழ்த்திய நிஷாந்த், அறையை விட்டு வெளியேறினான். அங்கே காத்திருந்த ரவீந்திரனுடன் கோவை செல்ல எத்தனித்தவன், மனைவியிடம் ஓர் முழு நீள அறிவுரைப் பட்டியலை வாசித்தப்பின்னரும் மன மின்றியே காரின் புறம் திரும்பினான்.

வண்டியில் ஏறும் நிலையில் கூட, ''அஜு, கவனமா இருமா. மாத்திரையை மறந்திடாம சாப்பிடு...தையல் போட்ட இடத்தில தண்ணி படமா பார்த்துக்கோ'' எனக் கவலை படர்ந்த முகத்துடன் அவன் பறைய, ''அடடா! கவலைப்படாம போங்க மாப்பிள்ளை சார்! உங்க பெண்டாட்டி என்ற வெள்ளக்கட்டியை வெயில்-ல கூட நடக்கவிடாம பார்த்துக்கிறோம்'' என சிரித்தவன், ராகவன்!!

இதுநாள் வரை, ஒன்று இரண்டு என வார்த்தைகளை எண்ணி எண்ணிப் பேசிக்கொண்டிருந்த ராகவனிட மிருந்து இப்படியொரு வார்த்தையைக் கேட்டதும்



நிஷாந்த் முகம் மலர்ந்து சிரித்தான். ''என்னோட வெள்ளக்கட்டிப் பெண்டாட்டி.. ரொம்ப ஸ்வீட்டா இருக்கான்னு அவளைக் கிள்ளி வச்சுடாதீங்க! பாவம் அவ.. வாயில்லா பூச்சி!'' என்ற நிஷாந்தின் பதிலுக்கு, ''பாரு அனு! உன்னை வெள்ளைக்கட்டி, பூச்சி....இப்படி அஃறிணை பொருளோடவே ஒப்பிடுறாங்க பாரு. ரெண்டு பேரையும் ரெண்டு அடிபோடு'' என ரவீந்திரன் தூபம் போட, ''ஆமா... இல்ல! என் சார்பா அவங்களை அடி...ஆனா, மெதுவா அடி... என்னண்ணா?'' என அவள் சிறு பெண்ணாய் குதூகலித்தாள் இளையவள்.

''அடிக்கிறது இருக்கட்டும், திருமதி. அனுஜா நிஷாந்த் அவர்களே! அதென்ன ''ஆமா இல்ல''!? ஆமாவா? இல் லையா? ஏதாவது ஒன்று சொல்லுங்க!? ஆதி காலம் தொட்டு... உங்க தங்கச்சிக்கு இந்த ''ஆமா-இல்லை''ல பெரும் குழப்பம் ரகு! அதை கொஞ்சம் தீர்த்து வச்சு அனுப்புங்களேன்'' என நிஷாந்த் மனைவியை கிண்டல் செய்யவும், ''எங்களால முடியலைன்னு தானே உங்க கிட்ட அனுப்பினோம். இப்போ நீங்களே திரும்ப எங் களைக் கேட்கிறீங்க? இது தான் உலகம் உருண்டை என்பதற்கு எடுத்துக்காட்டோ?'' என ராகவன் புருவம் உயர்த்தினான்.

இளையவர்களின் கிண்டலில் மனம் விட்டு சிரித்த பெரியவர்கள் ''சும்மா, எங்க பெண்ணைக் கேலி பண் ணாதீங்க'' எனத் தங்கள் பெண்ணைத் தாங்கியதோடு நில்லாமல் ''ஃப்ளைட்டுக்கு நேரமாச்சு மாப்பிள்ளை'' என நிஷாந்திடம் நினைவூட்டவும் மறக்கவில்லை.

''இதோ கிளம்பிட்டேன் மாமா'' என்றவன், ''ரகு, ரெண்டு நிமிஷம்... உங்க கூட பேசலாமா?'' என்றான்

ராகவனிடம். ஆமோதிப்பான தலையசைப்புடன், அவனுடன் நடந்த ராகவனின் தோளில் கை போட்டு ''என் மேல இருக்க கோபம் முழுசா போயிடுச்சா? ஹ்ம்ம் எனக்கு அப்படித் தோணலை?!'' என்றான் புன்னகை யுடன்.

''ஹ்ம்ம். கரெக்ட். எங்க வீட்டுப் பெண்ணை எங் களிடமிருந்து பிரிச்சதை என்னால இன்னும் மன்னிக்க முடியலை தான். ஆனா, அவ மேல நீங்க காட்டுற அக் கறையை என்னால நடிப்புன்னு ஒதுக்க முடியாததால்... கோபம் குறைஞ்சிருக்கு'' என்றான் ராகவனும் அதே புன்னகையுடன்.

''தேங்க்ஸ்! உங்க கோபத்தைக் குறைக்கிறதுக்காக இதை நான் சொல்லலை...ஜஸ்ட் ஒரு பிரண்ட்கிட்ட என்னோட எண்ணங்களை ஷேர் பண்ணிக்கிறேன்'' என்ற நிஷாந்த், சிறு இடைவெளிவிட்டு ''நீங்க நினைக் கிற மாதிரி... அஜுவை உங்ககிட்டிருந்து பிரிக்கும் எண் ணம் சத்தியமா கிடையாது. அதுக்காக, நீங்க எதிர்க்கும் போது அவளை விட்டுட்டுப் போற அளவு நான் தியாகி யாகவும் இருக்க விரும்பலை. அந்த நேரத்தில்... அதாவது இரண்டு வருஷத்திற்கு முன்னாடி.... எனக்கு அஜு வேணும் என்ற சுயநலம் தான் முற்றுமுதலா இருந்தது. ஆனா இப்போ..... ஒரு அஞ்சு நாள் அவளைத் தனியா விட்டுப் போனபோது என் மனசு பட்ட பாடு... ச்சே கொடுமை! அந்த வேதனை தானே நீங்களும் பட்டிருப்பீங்க என்று நினைக்க நினைக்க ரொம்ப கஷ்டமா இருந்தது. ரகு! ஐ அம் ரியல்லி சாரி! ரெண்டு வருஷமா அவ அன்பை அனுபவிச்ச எனக்கே இப்படி



இருக்குன்னா... இருபது வருஷத்திற்கு மேல கண்ணுக் குள்ள வச்சு பார்த்த உங்களுக்கு எப்படி இருந்திருக்கும் என்று எனக்கு மனசே ஆறலை. உங்களால என்னை மன்னிக்க முடியாட்டியும் பரவாயில்லை... என்னைப் புரிஞ்சுக்கிட்டாலே போதும்'' என்றான் ஆத்மார்த்த மாக.

உள்ளத்திலிருந்து வெளிப்பட்ட மன்னிப்பில் நெகிழ்ந்த ராகவன், ''நடந்து முடிந்ததை மறந்திடலாம் நிஷாந்த்! இனிமேல் நடக்கப் போறதை நல்லதா நடக்க வைக்கலாம்'' என்றான் சந்தோஷமாக, கூடவே ''உங்க மேலிருந்த கோபத்தில... நானும் சிலபல வார்த்தைகள் அதிகமா பேசியிருக்கேன்.... அனுஜா இங்கிருந்த விஷ யத்தை உங்ககிட்ட சொல்ல தாமதிச்சிருக்கேன். அதுக் கும் நீங்களும் என்னை மன்னிக்கணும்'' என்றான்.

''இப்போ தானே, நடந்து முடிந்ததை மறந்திட ணும்ன்னு சொன்னீங்க. சொல்லி ரெண்டு நிமிஷம் கூட ஆகலை.... அதுக்குள்ள நீங்களே பழசை பேசுறீங்களே?'' என நிஷாந்த் சிரிக்கையிலேயே, ''என்ன பேசுறீங்க?'' என்ற விசாரிப்புடன், அனுஜா எனும் பூனை நிஷாந்தின் பின்னே வந்து நின்றது!

''ரெண்டு பிரண்ட்ஸ்க்கு நடுவுல எவ்வளவோ இருக்கும். அதையெல்லாம் உன்கிட்ட சொல்ல முடி யுமா? அப்புறம் புரளி பேசினான் இந்த நிஷாந்த்ன்னு வரலாறு என்னைத் தப்பா பேசும் இல்ல'' என நிஷாந்த் இரண்டு வருடங்களுக்கு முன்னர் போலவே பதிலடி கொடுக்க, ''ரொம்பத்தான். நீங்க சொல்லாட்டி போங்க... ரெண்டு தடவை சிணுங்கினா அண்ணே சொல்லிடும். அப்படியே இல்லைனாலும் வேலு சித்தப்பாகிட்ட

சொல்லி விஷயத்தை வாங்கிப்பேன்'' என அப்போது போலவே சாதாரணமாய் முடித்தப்போதும் ''என்ன பேசினார்கள்?'' என்ற ஆர்வம் வண்டிவண்டியாய் வழிந்தது.

இன்னும் ரெண்டு மணி நேரத்தில் எனக்கு போன் பண்ணுவா பாருங்க....! பாவா...நீங்க என்ன பேசினீங்கன்னு சின்ன அண்ணே சொல்லிடுச்சே! அப்படின்னு! ஆனாலும் அவளுக்கு ரொம்பச் செல்லம் கொடுக்கிறீங்க ரகு'' என நிஷாந்த் ராகவனை வம்பு செய்ய, ''உங்களைவிடவா?'' என ராகவன் வியக்க, அங்கே மீண்டும் சிரிப்பலை எழுந்து ஓய்ந்ததில் சந்தோஷத்திற்குக் குறைவின்றி இருந்தது.

''உன்னை விட்டு ஒரு மாசம்... முப்பது நாட்கள்... எழநூற்றி இருபது மணி நேரங்கள் உன்னைப் பிரிந்து எப்படி இருப்பேன்?'' என ஏக்க வசனம் பேசிவிட்டுச் சென்ற நிஷாந்த், அடுத்த வார இறுதியில் மாமனார் வீட்டு வாசலில் வந்து நின்றதில் என்ன ஆச்சரியம் இருக்கமுடியும்?

கொஞ்சலும், மிஞ்சலும் நிறைந்திருந்த தாம்பத்தியத்தில் மேலும் சந்தோஷத்தைக் கூட்டும் பொருட்டு உறவுகளின் சங்கமும் நிகழ்ந்தேற, இராறு மாதங்கள் இரட்டிப்பு சந்தோஷத்துடன் மின்னல் வேகத்தில் உருண்டோடின!!

அந்த ஆறு மாதக் காலத்தில் முதல் ஒரு மாதத்தை அரவங்காட்டிலும், அடுத்த பத்து நாட்களை டெல்லியிலும் கழித்த அனுஜா, தன் வீடு திரும்பியபோதும் கூட அவளது துணைக்கென மாமியாரோ, அம்மாவோ அவளுடன் வந்திருந்தனர்.



''பிள்ளை'' என அவள் வாய் திறப்பதற்கு முன்னரே, ''இப்போ என்ன அவசரம்? கொஞ்ச காலம் போகட்டும்.... முதல்ல சத்யன் பெத்துக்கட்டும்'' என பத்மாவதியும், ''பிள்ளை வளர்க்க ஒரு பக்குவம் வேணும். அது உனக்கு வரட்டும்... பாத்துக்கலாம்'' என்று வரலக்ஷ்மியும் முடித்துவிட்ட நிலையில், மனதின் ஓரத்தில் 'பிளளை ஆசை' குறுகுறுத்த போதும் அனுஜா முன் போல துவண்டு விழவில்லை. அதற்காக, ஒரேடியாக பிள்ளையே- வேண்டாம் என்ற நிலைக்கும் போகாமல், ஆசைக்கும் - அக்கறைக்கும் நடுவே ஊஞ்சாலடிக் கொண்டு தான் இருந்தாள்.

மனைவியின் ஆசை - கணவன் அறியாததா?! மருத்துவரிடம் ஆலோசனை, இரண்டாம், மூன்றாம் தேனிலவு, அனுஜாவின் விருப்பப்படி கோவிலில் பிரார்த்தனைகள் செய்வது என அவனிருக்க, ஆறாம் மாத இறுதியில் அனுஜாவிற்குக் கர்ப்பம் உறுதியானது!!

மருத்துவர் 'குழந்தை' என்பதை உறுதி செய்துவிட்டு, ''நான் சொல்லலை... இந்த ஆபரேஷன் பண்ணின உடனே உனக்கு நல்லா ரிசல்ட் தெரியும்ன்னு? அது மட்டுமல்லாம, முன்ன மாதிரி அதிக டென்ஷன் இல்லாம, நீ ரிலாக்ஸ்டா இருந்ததால நான் நல்ல ரிசல்ட் வந்திருக்கு. ஆல் தி பெஸ்ட்!'' என வாழ்த்தினார்.

சந்தோஷத்தில் முகம் தாமரையாய் மலர, கணவனின் தோளில் தலை சாய்த்து மருத்துவரிடம் விடைபெற்ற அனுஜாவிற்கு உலகை வென்ற உணர்வு. பின்னே, உயிரைப் பணயம் வைத்தல்லவா போராடியிருக்கிறாள்?!

தங்கள் அழகிய தாம்பத்தியத்திற்கு மேலும் பொலி வூட்டும் வண்ணம் புதிதாய் வரவிருக்கும் ஓர் உறவை, இனிய மௌனத்தினால் வரவேற்றனர்.

தன் பிஞ்சு கால்களாலும், மழலைப் பேச்சாலும், உருட்டும் விழியாலும், பூவிதழ் போன்ற மேனியோடும் தங்களைப் பெருமைமிக்க பெற்றவர்கள் ஆக்கப் போகும் அந்த இளம் பிஞ்சின் ஸ்பரிசத்தை அப்போதே உணர்ந்தது போல், உடல் சிலிர்த்தாள் அனுஜா!!

கடவுள், தன்னை நம்பி ஓர் ஜீவனை உலகிற்கு அனுப்புகிறார்கள் என்பதே அவளுக்குப் பெரும் பெருமை யாக இருந்தது. அந்த ஜீவனுக்கு உயிர் கொடுத்து, உணர்விட்டு, தன் உதிரத்தை உரமாக்கி உலகிற்குக் கொடுக்கும் வேலையோடல்லாமல் தன் கண்ணின் மணி போல் போற்றி வளர்க்க வேண்டும் என்ற உத் வேகமும் ஊற்றாய் பெருகியது!

ஓர் குழந்தையின் 'தாய்' என்பதை இணைக்கவே மனம் இனிக்க, அவளது நெஞ்சமோ இயல்பிற்கு மாறாய் மூத்து சிந்தித்தது- நல்லவிதமாக தான்!

அவளாகவே நிஷாந்தை அணைத்து ''பாவா, எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்குத் தெரியுமா? என்னோட சந்தோஷத்தை.... வெறும் வார்த்தையில சொல்லிட முடியாது!'' என அவன் கன்னத்தில் எம்பி முத்தமிட்டாள்.

அவன் பேச ஆரம்பிக்கும் முன்னர், ''பாப்பா'' என்ற நியூஸ் ஆறு மாசம் முன்னாடி வந்திருந்தா நான் இந்தளவு சந்தோஷப் பட்டிருப்பேனான்னு சொல்ல முடியலை. அம்மாகிட்ட சொல்ல முடியல.... அத்தைகிட்ட ஷேர் பண்ணிக்க முடியலை. அண்ணாவோட ''ஹே அனுக்



குட்டி, கன்க்ராட்ஸ்''-சை கேட்க முடியலைன்னு ஏதோ ஒரு வகையில வருத்தம் தான் மிஞ்சியிருக்கும். இப்போ... எனக்கு அப்படியே பறக்கிற மாதிரி இருக்கு....பாவா!'' என மொழிந்த அனுஜா, அவனை இன்னுமின்னும் இறுக அணைத்தாள்.

வார்த்தைகளின்றி அவளது கூந்தலை நிஷாந்த் வருடிவிட, ''சில மாசம் முன்னே... உங்களை நான் படுத்திவச்சதை நினைச்சா எனக்கே வெட்கமா இருக்கு.. அம்மா சொல்ற மாதிரி ஒரு சின்ன ஏமாற்றத்தையே என்னால தாங்கமுடியலைன்னா எப்படி பிள்ளையை நல்லபடியா வளர்க்க முடியும்? இல்லையா? நானும் குழந்தை மாதிரி... அதுக்கு சமமா அடம் தான் பண் ணிட்டு இருந்திருப்பேன். எங்க ரெண்டு பேரையும் வச்சுக்கிட்டு உங்களுக்கு வாழ்க்கை நரகமாகியிருக்கும். அதே தொடர்ச்சியா நடந்திருந்தா உங்களையும் இழந் திருப்பேன் இல்லையா? ஹ்ம்ம்'' என்ற அனுஜா, கணவனின் மார்பில் முத்தம் வைத்து, அதன் கதகதப்பில் மயங்கி, மேலும் ஒண்டினாள்.

நிஷாந்த் பதில் சொல்லும் முன்னர் ''நீங்க என்னை விட்டுப் போவிங்கன்னு சொல்லலை. நீங்க செய்றதுக்கு நானே ஏதாவது கற்பனை பண்ணிக்கிட்டு... ஏதாவது கிறுக்குத்தனம் பண்ணியிருப்பேன்'' என அவளே நிஷாந் தின் பதிலை யூகித்து, அதற்குப் பதிலும் கூறினாள்.

''நடுல நாம அளவுக்கு அதிகமா சோகத்தை அனுப விச்சாலும்.. அது எல்லாமே ஒரு நல்லதில் தான் முடிஞ் சிருக்கு. வார்த்தையால விளக்கி நம்ம காதலைப் புரிய வைக்க வேண்டிய கட்டாயமில்லாம, நாம ஒருத்தர் மேல்

ஒருத்தர் வச்சிருக்க அன்பே அவங்களுக்கு நம்மளைப் புரிய வச்சிடுச்சு இல்லையா? புரிய வச்சதோட இல்லாம... அவங்களை நம்மளோட சேர்க்கவும் செய்துடுச்சு. எல்லா நல்ல விஷயத்திற்கும் மகுடமா நமக்கு ஒரு பாப்பா வேற பிறக்கப் போகுது! எனக்கு... ரொம்ப ரொம்ப ரொம்ப சந்தோஷமா இருக்கு....நிஷு!'' என்ற அனுஜாவைத் தனக்குள்ளே இருந்திக் கொள்பவன் போல உள்ளே உள்ளே புதைத்தான் நிஷாந்த்.

அந்த நிமிடம் வரை, பெரிய மனிதத்தன்மையுடன் பேசிக்கொண்டிருந்த அனுஜா, ''ஹய்யோ பாவா! விடுங்க! அத்தை, இன்னைக்கு...சோலே பூரி ரெசிபி சொன்னாங்க. அதை செய்து பார்க்கணும்... குட்டிப் பாப்பாக்கு ''பூரி'' தான் ரொம்ப பிடிக்கும்... எனக்குக்கூட ''பூரி''யும் கிழங்கும் ரொம்பப் பிடிக்கும். அதை கத்துக் கணும் தானே?! விடுங்க விடுங்க'' என அவனிடமிருந்து விலகி, சமையலறை நோக்கிச் சென்றாள்.

அவளது எண்ணம் சிரிப்பை மூட்ட, ''சோலே பூரி ரெசிபி சொன்ன உங்க அத்தைக்கு... நீங்க ரிடர்ன் ரெசிபி சொல்ல வேண்டாமா?'' என்றான் உள் அர்த்தத்துடன்.

''அத்தைக்கே ரிடர்ன் ரெசிபியா? அத்தைக்கே என்னை விட நிறைய தெரியும் பாவா... அவங்களுக்கு நான் என்ன சொல்றது?'' என மிகத் தீவிரமாய் யோசித்த அனுஜாவின் தலையில் தட்டி, ''அறிவுக்கொழுந்தே! பேபி பத்தின நியூஸ் சொல்ல வேண்டாமா?'' என்றான் சிரிப்புடன்.

''ஹான்... ஆமா....இல்ல. போனை போடுங்க. எல்லார்கிட்டயும் சொல்லலாம்'' எனக் குதூகலித்த மனை



வியை மனதில் நிறைவுடன் பார்த்திருந்தான் அந்த அன்பு கணவன்.

காதலை வரவாக்கியத்தில் உறவுகளின் பாசம் செலவு கணக்கிற்குப் போய்விட, தங்களது இல்லற சந்தோஷத்தை முழுதுமாய் தொலைத்துவிட்டு நஷ்டக் கணக்கில் வாழ்வை விரட்டிக் கொண்டிருந்தவர்களுக்கு, அந்த நஷ்டமே லாபமாய் மாறி செலவு கணக்கிலிருந்த உறவுகளை புத்தம்புது பொலிவுடன் வரவு கணக்கிற்கு மாற்ற, அந்த நிமிடத்திலிருந்து சந்தோஷமெனும் லாபம் மட்டுமே அவர்கள் வாழ்க்கைப் பதிவேட்டில் நிறைந்திருந்தது! இப்போது அந்த சந்தோஷ லாபத்தை இரட்டிப்பாக்க புதிதாய் ஓர் வரவும் இனிதே வந்து சேர்ந்தது!

## 19

நான்கு வருடங்களுக்குப் பிறகு

''மாமா' என்ற அதட்டலில், ராகவன் சட்டென நிற்க, அவனது தோளிலிருந்து இறங்கி, அவனைத் தள்ளிக் கொண்டு வீட்டின் முற்றத்திற்கு ஓடிய பவதாரணி, தன் காலணிகளைக் கழற்றி, அதற்குரிய இடத்தில் வைத்தாள்.

தனது முதல் மாமனின் தோளிலிருந்த சர்வேஷை 'ஹே, ஷூவைக் கழத்தி வை!'' என ஏவினாள். அதற்கு மறுபேச்சு பேசாமல் ''இறக்கி விடுங்க மாமா'' எனத் தானும் இறங்கி, ஷூவைக் கழற்றி, அதற்குரிய வைத்த

வர்களை அவர்களது தாய் வயிற்று பாட்டனார் சரவணப் பாண்டியன் உச்சி முகர்ந்தார்.

''மீசை குத்துது தாத்தா...'' என இருவரும் தத்தம் கன்னங்களைத் தடவிக் கொள்ளவும், ''நாளைக்கு எடுத்துடுறேன்டா செல்லங்களா! இன்னைக்கு ஒரு நாள் மட்டும் பொறுத்துக்கோங்கடா.... ஒரே ஒரு முத்தம்... ஒண்ணே ஒண்ணு தான்'' என ஏறக்குறைய கெஞ்சிய வரை, பெரிய மனது பண்ணி மன்னித்தனர்- அனுஜா வின் செல்வப் பெருந்தகைகள்.

''சரி, பெரிய மனுஷங்களா வீட்டுக்குள்ள போக லாமா?'' என ராகவன் வினவ, ''ஓகே போலாம். எங்க பாக்-கை கார்-லிருந்து எடுத்திட்டு வந்தாச்சா? அப்புறம் பார்பி பாக்?'' எனப் பெரிய மனுஷியாய் பெரும் நிபந் தனைகளுடன் உள்ளே வந்தமர்ந்தாள் நிஷாந்தின் இளவரசி.

''அடேங்கப்பா!'' என வரலஷ்மி கன்னத்தில் கை வைக்க, அங்கே பெரும் சிரிப்பலை எழுந்து அடங்கியது.

மூன்று வயது நிரம்பிய பவதாரணியும், சர்வேஷும் அரையாண்டு விடுமுறைக்காக தாய் வழி பாட்டனார் வீட்டிற்கு வருகை தந்திருக்கின்றனர். இது நாள் வரை பிள்ளைகளுடன் வால் பிடித்துக் கொண்டே சுற்றிவந்த அனுஜாவை, அலுவலகத்தில் ஒரு மாதத்திற்கு சிங்கப்பூர் அனுப்பி வைத்திருந்தனர்.

''பிள்ளைங்களை விட்டு எப்படி பாவா... இருக் கிறது?'' என இழுவையாய் இழுத்துக் கொண்டிருந்த வளை, ''அதென்ன? பிள்ளைங்களை விட்டுட்டு இருக்க முடியாது? என்னை விட்டுட்டு இருக்கலாமா? வரவர,



நான் ஒருத்தன் இங்க இருக்கிறதே உனக்குத் தெரிய மாட்டேங்குது..'' என சலித்துக் கொண்டவன், ''எனக்கும் ஒரு ப்ரோபோசல் மீட்டிங்-கிற்கு சிங்கப்பூர் போக வேண்டியிருக்கு. உன்னோட ப்ராஜெக்ட் டைம்-லேயே நானும் வரப்பார்க்கிறேன். நீயும் நானும் போயிட்டு வரலாம்'' என்றான் முடிவாக.

ஆனால், மனையாளோ ''அப்போ, எல்லாரும் போக லாம்! நான்.. நீங்க.... குட்டிம்மா.. தம்பு எல்லாருமே போக லாம்... பசங்க நல்லா என்ஜாய் பண்ணுவாங்க'' எனக் கண்ணை உருட்டி ஓர் வழி கண்டு பிடித்தாள் அனுஜா.

''அறிவுக்கொழுந்து! அறிவு அப்படியே அருவியா வழிஞ்சு ஓடுது போ... எப்போ தாண்டி வளர்வே நீ? நீயும் நானும் வேலைக்குப் போய்ட்டா அவங்களை யாரு பார்த்துப்பா?'' என நிஷாந்த், மூக்கைப் பிடித்து ஆட்ட, ''ஆமா...இல்ல'' என அசடு வழிந்தாள் அவனது முதல் குழந்தை.

''இன்னும் இந்த ஆமா..இல்லை-யை விடவே மாட்டியா நீ?'' என நிஷாந்த் மீண்டும் ஆரம்பிக்க, ''போங்க பாவா! எனக்கு நிறைய வேலையிருக்கு'' என அங்கிருந்து நழுவினாள்.

''என்ன பெரிய வேலை? பூரியோ, அடையோ ஏதோ ஒரு கொடுமையை பண்ற வேலை........'' என்ற நிஷாந்தின் கிண்டல் அனுஜாவின் செவிகளில் எட்டவே இல்லை!

இப்படியான ஓர் சூழலில், இருவரும் சிங்கப்பூர் கிளம்பிச் சென்றிருக்க, பிள்ளைகள் இருவரையும் இரு வழி பாட்டி-தாத்தா வீட்டிலும் பதினைந்து சதவீதம்

விடுவது என்ற முடிவின் பெயரில் பவதாரணியும், சர்வேஷும் முதலில் குன்னூர் வந்திருக்கின்றனர்.

நாட்டின் பிரதமமந்திரிக்குக் கூட அளிக்கப் படாத ஓர் வரவேற்பு, அந்த வீட்டின் இளவரசியின் இளவரசர் களுக்கு அளிக்கப் பட்டுக் கொண்டிருக்கிறது!

''கண்ணுங்களா? ராத்திரிக்கு சாப்பிட என்னடா வேணும்?'' என்ற உபசரிப்பிற்கு ''சோலா பூரி!'' என இருவரும் ஒரு சேர குரல் கொடுக்கவே வரலக்ஷ்மி முழித்தார்.

இட்லி சரி, தோசை சரி, பூரி சரி, அடை கூட சரி, சோலா பூரிக்கு எங்கே போவது? சில நிமிட யோச னைக்குப் பின்னர், பூரியை சுட்டு இருவரையும் எப்படி யாவது சமாதானம் செய்துவிடலாம் என்ற எண்ணத்தில் பூரிக்கு மாவு பிசைந்தவருக்கு அன்று தன்னை வைத்து இரு பிள்ளைகளும் காமெடி செய்யப் போவது தெரியவில்லை! பாவம், பெரியவர் இல்லையா?

சூடாக இருந்த பூரிகளைத் தட்டில் இட்டு, பிள்ளைங் களிடம் நீட்டியவரை விநோதமாய் திரும்பிப் பார்த்தனர் இருவரும்.

''அய்யே பாட்டி, இது பேரு பூரி....சோலே பூரி இல்ல...''

''டேய் சர்வோ இது பூரி இல்லைடா...பூரின்னா புஸ்ஸுன்னு உப்பியிருக்கும்...அம்மா அப்பித் தானே சுடுவா?!''

''ஆமா, ஆமா! என்ன பாட்டி இது அப்ளாம் செய்து தீங்க? சோலா பூரி தாங்க...'' என இருவரும் கண்ணை விரிக்க, கண்ணில் நீர் வரச் சிரித்த சரவணப்பாண்டியன்,



''உங்க பாட்டிக்கு அதெல்லாம் போடத் தெரியாதுடா குட்டிங்களா. நாளைக்கு நாம ஹோட்டலுக்குப் போய் சாப்பிடலாம். இப்போ...இதை சாப்பிடுங்க'' என்றார் சமாதானமாய்.

அதில் சமாதானமடைந்து ''ஹோ சோலா பூரி போடத் தெரியாதா? அம்மா நல்லா போதுவா... பெதுசா..... புஸ்ஸு புஸ்ஸுன்னு இருக்கும். அம்மா வந்ததும் உங்களுக்குச் சொல்லித் தரச் சொல்றோம்'' என்றார்களே பார்க்கலாம், ''அடிக்கழுதைகளா, நான் அவளைப் பெத்த வடா. நான் அவகிட்ட படிக்கணுமாமே'' என நொடித்தார் வரலக்ஷ்மி.

அப்போது மட்டுமல்ல, உணவு முடிந்து ''தூங்க வாருங்கள்'' என அழைத்ததற்கு, ''தூங்குறதுக்கு முன் னாடி பிரஷ் பண்ணனும். சர்வோ, பிரஷ் எடுத்திட்டு வா'' எனத் தன்னுடன் பிறந்தவனுடன் சேர்த்து, ''தாத்தா, நீங்களும் பிரஷ் பண்ணுங்க...பாட்டி நீங்களும், மாமா வாங்க....அத்தை வாங்க...சின்னப் பாட்டி வாங்க...வேலு தாத்தா வாங்க..'' என ஓர் பட்டாளத்தையே கிளப்பிக் கூட்டி வந்தனர் சிறுவர்கள் இருவரும்.

அடுத்த நாள் காலையில் கண் விழித்ததும், ''பொன் னன் சரணம்'' எனத் தங்களது குல தெய்வத்தின் பெயரை மூன்று முறை சொல்லிவிட்டு, பிள்ளைகள் எழ, அங் கிருந்த எல்லோருக்குமே பெருமிதமாக இருந்தது.

அதன் பின்னர், சரவணப்பாண்டியனும், வரலக்ஷ்மி யும் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு கொடைக் கானலை சுற்றி பார்க்கச் செல்ல (மற்றவர்கள் வேலை நிமித்தமாக செல்லவில்லை), தாயின் அரவணைப்

பும், தந்தையின் கண்டிப்புமில்லாத பிள்ளைகள் இருவரும் குதூகலித்து மகிழ்ந்தனர்.

முடிவில், ஐஸ் கிரீம் கேட்டு இருவரும் அடம் செய்ய, ''ஐஸ் கிரீம் சாப்பிட்டா அம்மா கோச்சுப்பாடா'' எனத் தயங்கினார் சரவணப்பாண்டியன்.

''அதெல்லாம் கோச்சுக்க மாட்டாங்க. ஐஸ் சரியாம் சாப்து..... உடனே சுடு தண்ணி குடுச்சிட்டா சலியே பிதிக்காது.. அம்மா சொல்லித் தந்திருக்காங்க. வாங்கித் தாங்க தாத்தா'' என இருவரும் நச்சு செய்ய, ''தானும் திங்கறது பத்தாதுன்னு பிள்ளைங்களையும் கெடுத்து வச்சிருக்கா... பாருங்க'' என வரலட்சுமிக்கு மகளின் மீது கோபம் வந்தது.

''அம்மாவைத் திட்டினா... அடிச்சிடுவோம்'' என இருவரும் ஒருசேர முறைக்க, ''உங்க அட்டூழியம் தாங்கலைப்பா சாமி!'' எனப் பாட்டியார் தான் தணிந்து போக வேண்டியதாய் இருந்தது.

மதிய உணவிற்கு அசைவ உணவகம் செல்வோமா எனக் கேட்டதற்கு, ''தரணி தாத்தா வீட்டுக்குப் போனா தான் முட்டை சாப்பித கூதாது. இங்க சாப்புலாமே... அம்மா சொன்னாளே!?'' என இருவரும் தாயின் வார்த்தையை நினைவு கூர்ந்து சரி என்றனர்.

அவர்களது ஒவ்வோர் அசைவிலும் அனுஜாவின் பங்கிருப்பதை பெருமையுடன் பார்த்திருந்த சரவணப் பாண்டியன், ''என்னமோ என் பெண்ணிற்குப் பிள்ளை வளர்க்கப் பக்குவம் பத்தாது... அது இதுன்னு சொன்னியே? இப்போ பாரு... பிள்ளை ரெண்டையும் தங்கமா



வளர்த்திருக்கா'' என மனைவியிடம் பெருமைப்படவும் மறக்கவில்லை.

''வளர்ந்துவிட்டாள்'' என்ற அடைமொழிக்கு ஆளான அனுஜாவோ, கணவனிடம் ஓர் ஐஸ்கிரீம் உண்பதற்கு சிறு பிள்ளை போல் ஓர் கெஞ்சலில் ஈடு பட்டிருந்தாள்.

''பாவா, ஒரே ஒரு ஐஸ்கிரீம். ப்ளீஸ் ப்ளீஸ்'' - என்றவளின் கைப்பிடித்து எழுப்பிய நிஷாந்த், ''இப்படி சொல்லியே மொத்தமா ஆறு ஐஸ்கிரீம் சாப்பிட்டாச்சு. இனிமேல் என்ன கெஞ்சினாலும் ஒரு ஐஸ்கிரீம் கிடையாது. இங்க வேற மழை பெய்துட்டே இருக்கு...அதோட ஐஸ்கிரீம் வேற... காய்ச்சல், சளின்னு படுத்தா என்னடி பண்றது? எழுந்து வா'' என்றான் கண்டிப்புடன்.

''அதெல்லாம் ஒண்ணுமே ஆகாது. ரெண்டு கிளாஸ் வெந்நீர் குடித்துவிடலாம்'' என்றவளின் பேச்சு அங்கே எடுபடாமல், ஐந்து நிமிடத்தில் ஹோட்டல் அறைக்குள் நின்றிருந்தனர் இருவரும்.

அப்போது பார்த்து, பத்மாவதியின் அழைப்பு வர ''அத்தே!'' என அழைத்து, அரை மணி நேரத்திற்கும் மேலாக உரையாடிய அனுஜாவிற்கு கைப்பேசியை வைக்கும் உத்தேசமோ, அதை தன்னிடம் தரும் உத்தேசமோ இல்லை என்பதை உணர்ந்த நிஷாந்த், தானே அதை அவள் காதிலிருந்து பிடுங்கினான்.

''ஹய்யோ பாவா...எவ்வளவு முக்கியமான விஷயம் பேசிட்டு இருக்கோம்'' என அனுஜா சிணுங்க, ''என்னடா வேணும் உனக்கு? அனுகிட்ட கொடு'' என அதட்டினார் பத்மாவதி.

''ரொம்பத் தான்! என்ன பேசிட்டு இருக்கீங்க? அப்படியென்ன முக்கியமான விஷயம்?'' என நிஷாந்த் கடுப்படிக்க, ''அத்தையோட பழைய பட்டு புடவை-ல எனக்கு சுடிதார் தைக்கப் போறாங்க. அதுக்கு டிசைன் முடிவு பண்றோம்'' என்ற பதிலுடன் மீண்டும் மாமியாரிடம் பேசத் துவங்கினாள் அனுஜா.

''உங்க ரெண்டு பேரோட தொல்லை தாங்க முடியாததா போச்சு. எனக்கோ எங்க அப்பாவுக்கோ போன் பில்லை ஏத்தி விடுறதே வேலை'' என்ற நிஷாந்த், அந்த உரையாடலை முடிப்பதற்கு எடுத்துக்கொண்ட வழி இதோ.

ஹோட்டல் அறையின் பால்கனியில் நின்று உரையாடிக் கொண்டிருந்த அனுஜாவின் பின்புறம் சென்று அணைத்தவன், இடுப்பை வளைத்து, கழுத்தில் முகம் புதைத்து, கன்னத்தில் ஓர் முத்தம் வைத்தான்.

அவனது அச்செயலில் திகைத்து ''ஹய்யோ!'' என அனுஜா அலற, ''என்னம்மா'' என மறுபுறம் பத்மாவதி அலறினாள்.

''ஒண்ணு... ஒண்ணுமில்லை அத்தே'' என சமாளித்தவள், தன் பலத்தைக் கூட்டிக் கணவனைத் தள்ள முயன்றாள். அது முடியாமல் போன அதே சமயம், நிஷாந்தின் அணைப்பு இறுகிக் கொண்டே சென்றது.

அவனிடம் வன்முறையை கையாள்வது உதாவது என்பதை உணர்ந்தவள் போல, முகத்தில் ஓர் அப்பாவி பார்வையை பூசிக் கொண்டு ''ப்ளீஸ்'' என்றாள் மெல்ல.

மறுப்பை ஓர் தலையசைப்புடன் அவளை அலட்சியம் செய்த நிஷாந்தின் கரங்கள், மனைவியை அள்ளிக்



கொண்டு அறைக்குள் வந்தன, கால்கள் பால்கனி கதவை மூடின.

கைப்பேசியை மூடிக் கொண்டு, ''என்ன பாவா இது? அத்தை லைன்-ல இருக்காங்க பாவா...ப்ளீஸ் ரெண்டே நிமிஷம்.. என் செல்ல பாவா தானே?!'' என அவள் கெஞ்சியது நிஷாந்தின் காதில் விழுந்தது போலவே தெரியவில்லை.

அவளைப் படுக்கையில் போட்டவன், அருகே படுக்கவும் ''அத்தே, எனக்கு... எனக்கு... நெக்டிசைன் சரியா யோசிக்க முடியலை. மெதுவா பார்த்திட்டு சொல்லவா?'' என உளறிக் கொட்டி, கிளறி மூடி, ''பசங்க இன்னும் தூங்கியிருக்க மாட்டாங்க. நீங்க கூப்பிட்டு பேசுங்க'' பிள்ளைகள் பற்றிய அவரது கேள்விக்குப் பதில் கூறி, ''குட் நைட் அத்தை, மாமாவை கேட்டதா சொல்லுங்க'' என்ற முடிவுரையோடு வைத்தாள்.

''என்ன பாவா இது? சொல்லச் சொல்ல கேட்காம.... நீங்க என்ன சின்னப்பிள்ளையா? குட்டியும், தம்புவும் கூட நான் சொல்றதை கேட்கிறாங்க..'' எனக் கோபித்துக் கொண்ட மனைவியின் முகத்தை உதடுகளால் அளந்தவாறே ''அடடா, ஓர் கவிதையே கவிதை சொல்லுது - ஆச்சரியக்குறி - இது மாதிரி ஓர் குழந்தையே என்னைக் குழந்தை என்கிறதே - ஆச்சரியக்குறி! இப்படி ஒண்ணு புதுசா கண்டுப்பிடிக்கலாம் போல?!'' என்றான் சிரிப்புடன்.

கணவனது கிண்டலை ஒதுக்கி ''பாவா..வீட்டுக்குக் கூப்பிட்டு பசங்களோட பேசுவோமா? ரெண்டு பேரும் என்ன செய்றாங்களோ?'' என விட்டு வந்த சிட்டுக்களின் நினைப்பில் ஏங்கினாள் அனுஜா.

''ரெண்டு மணி நேரம் முன்னாடி என்ன செய்தாங்களோ அதையே இப்போ செய்வாங்க. அப்படியே இல்லைனாலும்... புதுசா எதாவது செய்வாங்க. இவ ஒருத்தி!?'' என்ற நிஷாந்தின் சிடுசிடுப்பு, ஐந்தே நிமிடத்தில் மறைந்து ''அஜு, அஜு'' என்ற உருகல் வந்து சேர்ந்திருந்தது.

''குட்டி, நாம இன்னொரு குழந்தை பெத்துக்கலாமா? எனக்கு உன்னை குண்டா பார்க்கணும் போல ஒரே ஆசையா இருக்கு...'' என்றான் மனைவியைத் தன் ஆதிக்கத்திற்குள் முழுமையாக கொண்டுவந்த நிஷாந்த்.

''ஹய்யே! பவியும் சர்வோவும் சேர்ந்தே வீட்டை ரெண்டு பண்றாங்க....இதில இன்னொரு பாப்பாவா? வேண்டாம் சாமி! என்னால முடியாது!'' என வேகமாய் பதில் சொன்ன அனுஜாவை,

''அடடா, அனுஜா தானா இது? இல்ல அனுஜா தானா இது? பாப்பா வேண்டாம்ன்னு சொல்றது என்னோட அனுஜா தானா? நம்ப முடியவில்லை....நம்ப முடியவில்லை... நம்ப முடியவில்லை'' என நாடகப் பாணியில் இழுத்த நிஷாந்தை லேசாய் தட்டிய அனுஜா ''போங்க பாவா'' என்றாள் வெட்கத்துடன்.

ஓர் தாயின் அடையாளமாய் கனவும், ஓர் மனைவியின் அடையாளமாய் வெட்கமும், ஓர் மருமகளின் அடையாளமாய் பொறுப்பும், ஓர் மகளின் அடையாளமாய் பாசமும் என ஓர் கலவையாய் இருந்த மனைவியின் வெள்ளை மனதை எண்ணி பெருமிதம் கொண்டவாறே ''நீங்க வாங்க பாவா'' என மனைவியைப் போலவே பேசி அவளை இறுக அணைத்து, அழுந்த முத்தமிட்டு, தனக்குள் புதைத்துக் கொண்டான், அவளது ஆருயிர் கணவன்!

உறவு வரவாக, வாழ்வு இனித்தது!